JL

Qvbm 211, No6
No6?-12
160965

KAR OF
1914
MADRA

✠

The
# Children's Herald.

# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்" நீதி. 8: 32.

Vol. VIII. டிசம்பர், 1913. No. 12



## கிறிஸ்மஸ் கடிதம்.

என் பிரியமான பிள்ளைகளே,

பாலியர் மிஷனைச் சேர்ந்த உங்களுக்கு கிறிஸ்மஸ் கடிதம் ஒன்று எழுதும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்கள். ஆகையால் ஒரு நாளில் நீங்கள் செய்யக்கூடிய காரியங்களில் மிகவும் இன்பமான ஒரு காரியத்தைப்பற்றி உங்களுக்கு எழுத விரும்புகிறேன். நீங்கள் கர்த்தருடைய வசனத்தை ஒவ்வொரு நாளும் ஒழுங்காய் வாசிப்பதே அந்த இன்பமான காரியம்.

ஒருநாள் இரண்டு சீனப்பையன்களைப்பற்றி வாசித்தேன். சீனர் கன்வியூசியஸ் என்பவனுடைய போதனைகளில் அதிக பக்தி வைராக்கியம் உள்ளவர்கள். கன்வியூசியஸ் அநேக காரியங்களை அவர்களுக்குப் போதித்திருக்கிறான். அவைகள் எல்லாம் சீனப்பாஷையில் எழுதப்பட்ட ஒரு புஸ்தகத்தில் அடங்கியிருக்கிறது. அந்தப் பாஷையை எழுத வாசிக்கப் படிப்பது அதிகக் கஷ்டம். அப்படியிருக்க அந்த இரண்டு பையன்களும் கன்வியூசியஸ் என்பவனுடைய போதனைகளைத் தாங்களே வாசித்து அறிந்துகொள்ளும்படி அந்தப் பாஷையைப் படிக்கத் தீர்மானித்தார்கள்.

அந்த இரண்டு சிறுவரும் மிகவும் ஏழைகள். பகல் முழுதும் கஷ்டமான வேலை செய்யவேண்டியதாயிருந்தபடியால் இரவில் தான் ஏதாவது படிக்கக்கூடும். ஆனால் ஒரு விளக்கு முதலாய் வாங்கிக்கொள்ள அவர்களுக்குத் திராணியில்லை. அவர்களில் ஒருவனுடைய அறைக்குப் பக்கத்து அறையில் இன்னொரு மனுஷன் குடியிருந்தான். அந்த அறையில்

எப்போதும் விளக்கு எரிந்துகொண்டிருக்கும். அந்த வெளிச்சம் தன்னுடைய அறைக்கும் வரத்தக்கதாக இந்தப் பையன் தன் சுவரில் ஒரு துவாரம் உண்டாக்கினான். அந்தத் துவாரத்தின் வழியாய் வந்த வெளிச்சத்திலே தன் பாடங்களைப் படித்துவந்தான். அடுத்த பையன் மின்மினிப் பூச்சியைப் பிடித்து, ஒரு சிறு பாட்டலில் அடைத்துவைத்து, அந்த வெளிச்சத்திலே கஷ்டத்தோடு படித்தான்.

கன்வியூசியஸ் என்பவனுடைய போதனைகளைப் படிக்கும்படி இந்தப் பையன்கள் எவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டார்கள் என்று பாருங்கள்! நாமோ, பரிசுத்த வேதாகமத்தின் மூலமாய், தேவன் நமக்காகக் கவலைப்படுகிறார்; நம்மை நேசிக்கிறார்; நமக்கு அநேக நன்மைகளைத் தருகிறார் என்பதை வாசித்து அறிந்துகொள்ளக்கூடியவர்களாயிருக்கிறோம். அப்படியானால் எத்தனை அதிகமாய் நாம் தேவனை நேசிக்கவேண்டும்.

நீங்கள் அதிகப் பிரியத்தோடே உங்கள் வேதாகமத்தை வாசித்துவர வேண்டுமென்று விரும்பி இந்தச் சரித்திரத்தை உங்களுக்குச் சொன்னேன். உனக்கு பெற்றால் பர்மா அல்லது கொழும்பில் ஒரு சகோதரன் இருக்கிறான் என்று வைத்துக்கொள். அவனிடத்திலிருந்து உனக்கு ஒரு கடிதம் வந்தால் அதை எவ்வளவு பிரியத்தோடு வாசிப்பாய். அப்படியே உன் அன்புள்ள இரட்சகர் பரலோகத்திலிருந்து உனக்கு அனுப்பியிருக்கிற செய்தியையும் நீ பிரியத்தோடே வாசித்துவர விரும்புகிறேன். தினசரி பாகத்தை வாசிக்குமுன், அந்த நாளுக்கென்று, தேவன் உனக்கு என்ன செய்தி அனுப்புகிறார் என்பதை உனக்குக் காட்டும்படி அவரை நோக்கி ஜெபம்பண்ணு. அதுமாத்திரமல்ல, தேவன் உன்னை எப்பொழுதும் பார்க்கிறார் என்பதை மனதில் வைத்துக்கொண்டு அந்த நாள்முழுதும் நீ செய்யும் ஒவ்வொன்றையும் பயபக்தியோடு செய்.

தூத்துக்குடி,
கிறிஸ்மஸ், 1913

இப்படிக்கு,
உங்கள் பட்சமுள்ள சிநேகிதன்,
W. E. எவன்ஸ்.
வைஸ்-பிரசிடெண்டு.

## ஆயத்தம்.

ஒருநாள் மேரி வேதபாட வகுப்புமுடிந்து வீட்டுக்குவந்தாள். வகுப்பில் படித்துக்கொண்டபடி நடக்க ஆசைப்பட்டாள். கிறிஸ்துநாதரின் இரண்டாம் வருகையைப்பற்றி அன்றைக்கு அவள் படித்தாள். "என் ஆண்டவர் நினையாத நேரத்தில் வருவார்; அவர் சமூகத்தில் நான் பரிசுத்தமுள்ளவளாய்க் காணப்படவேண்டுமே" என்று அவள் அடிக்கடி தனக்குள்ளே சொல்லிக்கொண்டாள். அதுமுதல் ஏதாவது ஒரு அற்பப்பிசகு



அவளிடத்தில் காணப்பட்டால், உடனே மனங்கசந்து அழுது, தன் பாவத்தை ஆண்டவரிடம் அறிக்கையிடுவாள். எப்படியாவது தேவனுடைய சமூகத்தில் பரிசுத்தமுள்ளவளாய்ப்போக ஆசைப்பட்டாள். ஆகையால் தன்னுடைய நினைவுகளையும், வார்த்தைகளையும், செய்கைகளையும் குறித்து எப்போதும் கவலையுள்ளவளாய் நடந்துவந்தாள்.

ஒருநாள் மேரியின் அத்தை தங்கள் வீட்டுக்கு அன்றுவரப்போகிற கவர்னர்துரையைச் சந்திப்பதற்காக* ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்தாள். மேரி அவளைப்பார்த்து "மாட்சிமை தங்கிய கவர்னர்துரையைப் பார்ப்பதற்கு எவ்வளவாய் உங்களை ஆயத்தப்படுத்துகிறீர்கள்; சகல கனத்துக்கும் மகிமைக்கும் உரிய இயேசு இராஜா நினையாத நேரத்தில் வருவாரே, அவரைச் சந்திக்க என்ன ஆயத்தம் செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள். அன்பும் சமயோசிதமுமான இந்தக் கேள்வியினால் அவள் உணர்வடைந்து, இயேசுவின் பிள்ளையானாள்.

இன்னொரு நாள் மேரி லைசாள் என்ற தன் தோழியைக் கண்டாள். மேரி அவளைப் பார்த்து "உன் எஜமான் மோட்சத்துக்குப் போய்விட்டார் என்று எல்லாரும் சொல்லிக்கொள்ளுகிறார்களே, அப்படித்தானா?" என்று கேட்டாள். அதற்கு லைசாள் "எல்லாரும் அப்படித்தான் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆனால் நான் அப்படி நினைக்கிறதில்லை. ஏனென்றால் என் எஜமான் ஒரு ஊருக்குப்போகவேண்டுமானால் முந்தியே அதைப்பற்றிப் பேசுவார்; அதற்காக எத்தனையோ ஆயத்தம்பண்ணுவார்; ஆனால் மோட்சத்தைப்பற்றி அவர் ஒருவார்த்தையாவது ஒருநாளும் பேசினதில்லை; அதற்கென்று ஒரு ஆயத்தமும் செய்யவில்லை; ஆகையால் அவர் மோட்சத்துக்குப் போயிருக்கமாட்டார் என்று நினைக்கிறேன்" என்றாள்.

இதை வாசிக்கிற நேசா! இந்த அட்வெந்து நாட்களில் நீ என்ன ஆயத்தம் செய்திருக்கிறாய்?

## கிறிஸ்மஸ் விருந்து.

ஒரு பள்ளிக்கூடத்தில் இரண்டு பிள்ளைகள் படித்துவந்தார்கள். ஒருத்தி பேர் நேசம், மற்றவள் பேர் கமலம். நேசம் மிகவும் நல்ல பிள்ளை. கமலம் சற்று முரட்டுக்குணமுள்ளவள். அந்தப் பள்ளிக்கூடத்தை மேல் விசாரிக்கும் துரைசானி கிறிஸ்மஸ்தோறும் ஒருவிருந்து செய்வார்கள். அந்த விருந்துக்கு வரும்படி யாருக்குச் சீட்டுக்கொடுக்கப்படுகிறதோ, அவர்கள் மாத்திரம்தான் விருந்துக்குப் போகலாம். ஒரு கிறிஸ்மஸ் பண்டிகையன்று விருந்துக்கு வரும்படி நேசத்துக்கு ஒரு சீட்டுக்கிடைத்தது. கமலத்துக்குச் சீட்டுக்கொடுக்கப்படவில்லை. நேசம் துரைசானியிடம் கம

ந்துக்காகப் பேசினுள். "அம்மா, கமலத்துக்கும் ஒரு சீட்டுக் கொடுங்
ர். விருந்துக்கு அவளும் வந்தால் எவ்வளவாய்ச் சந்தோஷப்படுவாள்"
ன்று கெஞ்சினுள். அதற்கு துரைசானி "என் நல்லபிள்ளையே, கமலம்
ருந்துக்குவந்தால் அவளுக்கும், உனக்கும் மாத்திரமல்ல, எனக்கும்கூடச்
ந்தோஷந்தான். ஆனுல் நமது பள்ளிக்கூடத்துச் சட்டம் மிகவும் கண்
.ப்பானது. நல்ல நடக்கையும் ஒழுங்கும் உள்ள பிள்ளைகளுக்குமாத்
ரம்தான் சீட்டுக்கொடுக்கக்கூடும்., மற்றவர்களுக்கு இந்த விருந்தில் பங்
ல்லை'' என்று சொல்லிவிட்டார்கள்.

விருந்துக்கு மணி அடிக்கப்பட்டது. பிள்ளைகள் வந்து மேசையைச் சுற்றிலும் உட்கார்ந்தார்கள். ருசியுள்ள பலகாரங்களும் பழங்களும் அவர்களுக்குமுன்னே வைக்கப்பட்டது. பிள்ளைகள் அதிகச் சந்தோஷமாய்ச் சாப்பிடத் தொடங்கினுர்கள். இதோ, கமலம் அவர்கள் நடுவே உட்கார்ந்து சாப்பிடுகிறதை துரைசானி கண்டார்கள். ''என்ன கமலம்! உனக்குச் சீட்டுக் கொடுக்கவில்லையே, பின்னை நீ இங்கே எப்படி வந்தாய்?'' என்று கேட்டார்கள். "அம்மா, நேசம் தன் சீட்டை எனக்குக் கொடுத்துவிட்டாள். நான் வந்தேன்'' என்றுள்.

கமலத்தை சந்தோஷப்படுத்த நேசம் தன் சந்தோஷத்தை இழந்தாள். உன்னை வாழவைக்க தேவன் தமது ஒரே பேருன குமாரனை உனக்காகத் தந்தார். அதுதான் கிறிஸ்மஸ் ஈவு. இந்தப் பண்டிகையிலே உனக்கு அருமையான ஆராதனையும், பிரசங்கங்களும், நல்ல சாப்பாடும், துணிமணிகளும் உண்டே! தெலுங்குநாட்டிலே இப்படிப்பட்ட சந்தோஷத்தை அனுபவிக்க வழியில்லாத எத்தனையோ ஏழை, அஞ்ஞானப் பிள்ளைகள் இருக்கிறுர்கள்! அவர்களுக்கு உன்னை வெறுத்துக் கொஞ்சம் கொடுக்க மாட்டாயா?

---

Printed at the Church Mission Press, Palamcottah, for the
Tinnevelly S. P. G. Children's Mission.

THE REGISTRAR ... MADRAS.



# The Children's Herald.

# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. VIII. அக்டோபர், நவம்பர், 1913. No. 10, 11.

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்

## எட்டாவது சத்தியம்.

### 'பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன்'.

தங்கவாக்கியம்:—'*சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்*'. *பரி. யோவா*. 16, 13.

விசுவாசப்பிரமாணம் மூன்று பிரதான பங்குகள் உள்ளது. முதலாம் பாகம் பிதாவாகிய தேவனையும், இரண்டாம் பாகம் குமாரனுகிய தேவனையும், மூன்றும் பாகம் பரிசுத்த ஆவியாகிய தேவனையும்பற்றிச் சொல்லுகிறது. இப்பொழுது நாம் மூன்றும் பாகத்தைப் படிக்கப்போகிறோம். இதிலே ஐந்து சத்தியங்கள் உண்டு. திருச்சபையிலுள்ள ஐந்து உபதேசங்களைக் காட்டும்படியாக அல்ல, பரிசுத்த ஆவியின் கிரியைகள் எவையென்று கண்டு விசுவாசிக்கும்படியாக அவைகள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. பரிசுத்த கத்தோலிக் சபை பரிசுத்தாவியின் ஆளுகையைக் காட்டுகிறது. பரிசுத்தவான்களுடைய ஐக்கியம் பரிசுத்த ஆவிக்குள் விசுவாசிகளுக்குக் கிடைக்கும் சலாக்கியத்தைக் குறிக்கிறது. பாவ மன்னிப்பு பரிசுத்த ஆவியினுலே பாவிக்குக் கிடைக்கிற முதல் ஆசீர்வாதமாயிருக்கிறது. சரீர உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் பரிசுத்தமாக்குதலின் முடிவாய் அல்லது நிறைவாயிருக்கிறது. இவைகளை நாம் அந்தந்த சத்தியங்களைப் படிக்கும்போது தெளிவாய்க் கவனிக்கலாம். இப்பொழுது பரிசுத்த ஆவியைப்பற்றி மாத்திரம் கவனிப்போம்.

1. பரிசுத்த ஆவியானவர் யார்? பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த திரித்துவத்தில் ஒருவரான மெய்த்தேவன். எப்படியெனில் சிருஷ்டிப்பின் வேலையில் பரிசுத்த ஆவியும் பங்கு எடுத்துக்கொண்டதாக வாசிக்கிறோம். ஆதி. 1: 2; யோபு 26: 13. அனனியா சப்பீராள் என்பவர்கள் பரிசுத்த ஆவியினிடத்தில் அல்லது தேவனிடத்தில் பொய்சொன்னதாக பரி. பேதுரு சொல்லுகிறார். அப். 5: 1—4. பரிசுத்த ஆவியானவர் கர்த்தர் என்று 2 கொரி. 3: 17-ல் சொல்லியிருக்கிறது. நாம் பிதா குமாரன் நாமத்தில் போலவே பரிசுத்த ஆவியின் நாமத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். பரி. மத். 28: 19. அப்படியே பரிசுத்த ஆவியாகிய தேவனுடைய நாமத்தினாலும் நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம். 2 கொரி. 13: 14. 'பரிசுத்த ஆவியும் சிருஷ்டிக்கப்படாதவர், அளவிடப்படாதவர், நித்தியர், சர்வவல்லவர்' என்று பரிசுத்த அத்தனாசியஸ் விசுவாசப்பிரமாணத்தில் அறிக்கையிடுகிறோம்.

2. பரிசுத்த ஆவியானவர் எப்போது உலகத்துக்கு வந்தார்? நமதாண்டவர் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போன பத்தாம் நாளிலே பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்துக்கு வந்தார். அதற்கு முன்னும் அவர் உலகத்திலிருந்த போதிலும் அந்தநாள்தான் அவர் வெளியரங்கமாய் திருச்சபையில் வந்து இறங்கினநாள். நமது இரட்சகருடைய கட்டளைப்படி அப்போஸ்தலன்மார் எருசலேமில் ஒரு மேல்வீட்டிலே காத்திருந்தார்கள். ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். பெந்தெகொஸ்தே என்னும் பண்டிகை வந்தபோது, பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, சடுதியாய் வானத்திலிருந்து ஒரு முழக்கம் உண்டாயிற்று. உடனே அக்கினி மயமான நாவுகள்போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்கள்மேல் வந்து அமர்ந்தது. சீஷர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள். அவர்களுடைய பழைய பயம் ஓடிவிட்டது. தைரியமாய் வெளியே வந்து பிரசங்கம் பண்ணினார்கள். மூவாயிரம் பேர் மனந்திரும்பி திருச்சபையில் சேர்ந்தார்கள். அந்தநாள் முதல் பரிசுத்த ஆவியினாலே திருச்சபை வளர்ந்துகொண்டே வருகிறது. பரிசுத்த ஆவி திருச்சபையில் நிலைவரமாயிருந்து, அதை ஆண்டு நடத்தி வருகிறார்.

3. பரிசுத்த ஆவியானவர் நமக்காக என்ன செய்கிறார்? 1. நமக்கு ஜீவனைக் கொடுக்கிறார். ஏதேனிலே மனுஷன் இழந்துவிட்ட ஜீவன் கிறிஸ்துவானவர் மரித்து, உயிர்த்தெழுந்ததினாலே, மறுபடியும் நமக்குக் கிடைக்கிறது. பரிசுத்த ஞானஸ்நானத்திலே நாம் அதைப் பெற்றுக்கொள்ளுகிறோம். அந்த ஜீவனைத்தான் மறுஜனனம் என்று ஞானஸ்நான ஆராதனை முறைமையில் சொல்லியிருக்கிறது. அந்த ஜீவனை நம்மில் உண்டாக்குகிறவர் பரிசுத்த ஆவியானவரே. அதினாலேயே அவரை 'ஜீவனைக் கொடுக்கிறவருமாய்' என்று நீசேயா விசுவாசப்பிரமாணத்தில் அறிக்கையிடுகிறோம். 2. நம்மைப் பலப்படுத்துகிறார். நம் மறுஜனனத்தின் [illegible] நாள் முதல் பரிசுத்த ஆவி நம்மோடே தங்கியிருக்கிறார். பரிசுத்தமாய் நடப்பதற்கு வேண்டிய பெலனைக் கொடுக்கிறார். [illegible] போது விசேஷமாய் நாம் அந்தப் பெலனைப் பெற்றுக்கொள்ளுகிறோம். கிறிஸ்தவப் பிரதிக்கினைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய பெலன் பரிசுத்த ஆவியினாலேயே நமக்குத் தினம் தினம் கிடைக்கவேண்டும். 3 நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறார். ஞானோபதேச வினாவிடையில் என்னையும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எல்லாரையும் பரிசுத்தம் செய்கிற தேவனாகிய பரிசுத்த ஆவி என்று சொல்லுகிறோம். ஆம், நம்மைப் பரிசுத்தப்படுத்துவதே அவருடைய முக்கியவேலை. பாவ சோதனைகள் நமக்கு நேரிடும்போது நமது மனச்சாட்சியோடிருந்து நம்மை எச்சரிக்கிறார். நம்மில் பாவ உணர்வையும், உத்தம மனஸ்தாபத்தையும் உண்டாக்குகிறார். அவரே ஜெபம்பண்ண நமக்குப் போதிக்கிறார். நல்ல எண்ணங்களை நமக்குத் தருகிறார். நமது மனதைத் தெளிவாக்குகிறார். ஞான அறிவை நமக்கு ஊட்டுகிறார். பரிசுத்த வழியிலே நம்மை நடத்துகிறார். (பரிசுத்த ஆவியின் ஏழு வரங்கள் எவை என்று கண்டுபிடி).



OF THE REGISTRAR OF BOO

போதனை:—1. ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியின் பெலனுக்காக ஜெபம் பண்ணு. 2. பரிசுத்த ஆவியானவர் உன் மனச்சாட்சியோடே இருந்து சொல்லும் எல்லா ஆலோசனைக்கும் கீழ்ப்படி. 3. நீ அவருடைய ஆலோசனைக்குக் கீழ்ப்படியாமல் பாவஞ்செய்யும்போது உன்னில் தங்கியிருக்கிற பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்துகிறாய் என்பதை நினைத்துக்கொள்.

'நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்'. எபே. 4: 30.

## பரிசுத்த ஆவியின் ஏவுதலுக்குக் கீழ்ப்படி.

ஒரு தேசத்திலே ஒரு பிரபு இருந்தார், அவருக்குப் பிரியமான கண்ணாடிப் பாத்திரம் ஒன்று அவர் வீட்டில் இருந்தது. ஒருநாள் அவருடைய வேலைக்காரன் கைதவறி அந்தப் பாத்திரத்தை உடைத்துவிட்டான். அதினால் அந்தப் பிரபுவுக்கு அதிகக் கோபம் உண்டாயிற்று. வேலைக்காரன் தன் பிசகை உணர்ந்தான். எஜமானிடத்தில் மன்னிப்புக்காகக் கெஞ்சினான். எவ்வளவு கெஞ்சியும் எஜமானுக்கு மன்னிக்க மனதில்லை. கடைசியாக வேலைக்காரன் நடந்த சங்கதிகளை தன் ஊர் குருவானவருக்குச் சொன்னான். குருவானவர் அந்தப் பிரபுவிடம் வந்தார். 'உம்முடைய வேலைக்காரன் தன் தப்பிதத்துக்காக அதிகமாய்த் துக்கப்படுகிறான். ஆகையால் நீர் அவனுக்கு மன்னிக்கத்தான் வேண்டும்' என்று சொன்னார். பிரபு

சம்மதிக்கவில்லை. 'உண்மையாய்த் தன் குற்றத்தை உணருகிறவனுக்கு மன்னியாமலிருப்பது பாவம்' என்றும், 'நீர் மற்றவர்களுடைய தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாவிட்டால் உம்முடைய குற்றங்களையும் தேவன் உமக்கு மன்னிக்கமாட்டார்' என்றும் சொன்னார். 'உன் வேலைக்காரனுடைய தப்பிதங்களை மன்னித்துவிடு' என்று பரிசுத்த ஆவியானவர் ஓயாமல் அந்தப் பிரபுவின் மனதை ஏவினார். என்றாலும் அவருடைய மனம் இளகவில்லை. மன்னிக்கவே மாட்டேன் என்று சாதித்துவிட்டார்.

கடைசியாக குருவானவர் அந்தப் பிரபுவை கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போனார். இருவரும் அங்கே முழங்கால் படியிட்டார்கள். குருவானவர் கர்த்தருடைய ஜெபத்தைத் துவக்கினார். அந்தப் பிரபுவையும் தன் பிறகே சொல்லச் சொன்னார். அப்படியே குருவானவரும் பிரபுவும் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லிக்கொண்டு வந்தார்கள். 'எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல்' என்று குருவானவர் சொன்னார். ஆனால் அந்தப் பிரபு பேசாமலிருந்தார். அப்பொழுது குருவானவர் 'என்ன! பேசாமல் இருக்கிறீரே; ஏன்? என் பின்னே சொல்லிக்கொண்டு வாரும்' என்றார். இப்பொழுது தான் பிரபு பரிசுத்த ஆவியின் ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்தார். வீட்டுக்குப் போனார். தன் வேலைக்காரனைக் கூப்பிட்டார். அவன் குற்றங்களை எல்லாம் மன்னித்தார். அப்பொழுது அவர் மனது சந்தோஷமுள்ளதாயிற்று.

நீ எப்போதும் பரிசுத்த ஆவியின் ஏவுதலுக்குக் கீழ்ப்படிந்து வருகிறாயா?.

## காதுள்ளவன் கேட்கக்கடவன்.

இங்கிலாந்து தேசத்திலே ஒரு சிறு கிராமம் இருந்தது. பக்தியுள்ள ஒரு குருவானவர் அந்தச் சபையிலே யிருந்தார். அந்தச் சபையார் தங்கள் ஊர் ஆலயத்துக்கு ஒரு புது ஆர்மோனியம் வாங்கும்படி யோசித்தார்கள். வெகுநாளாய் பணஞ்சேகரித்து, கடைசியில் தாங்கள் விரும்பியபடி ஒரு பெரிய ஆர்மோனியம் ஒன்று வாங்கினார்கள். அந்த ஆர்மோனியத்தைப் பிரதிஷ்டை செய்வதற்கு ஒருநாளும் குறித்தார்கள். அந்த நாளுக்கென்று கீர்த்தியான பல பாட்டுகள் ஏற்கனவே ஆயத்தம் செய்தார்கள். ஊர் முழுவதும் அந்த நாளுக்காக ஆவலாய்க் காத்திருந்தது. ஒருநாளும் கோவிலுக்குப் போகாதவர்கள்கூட புது ஆர்மோனியத்தின் சத்தத்தைக் கேட்கிறதற்காக, அன்று ஆலயத்துக்குப் போனார்கள்.

அந்த ஊரில் சாராயம் விற்கிற ஒரு மனுஷன் இருந்தான். கடவுள் இல்லை என்பது அவன் எண்ணமாயிருந்தது. ஒருநாளும் அவன் கோவி



லுக்குப் போகிறதில்லை, வேதம் வாசிக்க அவனுக்கு மனமில்லை, ஜெபம் என்றால் என்ன என்று அவனுக்குத் தெரியாது. ஆயினும் பாட்டு என்றால் அவனுக்கு அதிகப் பிரியம். ஆகையால் அந்த நாளில் புது ஆர்மோனியத்தின் சத்தத்தைக் கேட்கிறதற்காக அவனும் கோவிலுக்குப் போக விரும்பினான். ஆனால் ஆராதனையிலாவது, பிரசங்கத்திலாவது பங்கு பெற அவனுக்கு மனமில்லை. கொஞ்சநேரம் அதைப்பற்றி யோசித்த பின், பின்வருகிறபடி தீர்மானம் செய்துகொண்டான். பாடுகிற நேரம் தவிர, மற்ற நேரங்களில் எல்லாம் தன் இரு கைகளாலும் இரண்டு காதுகளையும் அடைத்துக்கொள்ளவேண்டும் என்பதே. இந்தத் தீர்மானத்தோடு ஆலயத்துக்குப் போனான். பாட்டுத் துவக்கினார்கள். பாவ அறிக்கை ஜெபம் வந்தவுடனே காதை அடைத்துக்கொண்டான், சங்கீதங்கள் பாடப்பட்டன. காதுகளிலிருந்து கைகளை எடுத்துவிட்டான். அப்பால் குருவானவர் பாடம் வாசிக்கத்துவக்கினார், திரும்பவும் தன் காதை அடைத்துக்கொண்டான். பாடம் வாசிக்கிறபோது ஒரு சிறு ஈ பறந்துவந்து இந்தக் குடிகாரனுடைய மூக்கின் மேல் உட்கார்ந்தது. உடனே தன் வலது கையைக் காதிலிருந்து எடுத்து ஈயைத் துரத்தும்படி முகத்தில் வீசினான். அந்தச் சமயத்தில் குருவானவர் 'காதுள்ளவன் கேட்கக் கடவன்' என்ற வாக்கியத்தை வாசித்துக் கொண்டிருந்தார். அந்த வாக்கியம் அவன் செவிகளில் பட்டது. பரிசுத்த ஆவியானவர் அந்த வாக்கியத்தின் மூலமாய் அவனுடைய இருதயத்தில் கிரியை செய்யத் துவக்கினார். அப்புறம் அவன் தன் செவியை அடைத்துக்கொள்ள முடியவில்லை. சத்தியத்தை ஆராய்ந்து கண்டுபிடித்தான். குணப்பட்டு, நல்ல கிறிஸ்தவனாய் நடந்துகொண்டான்.

## உண்மை.

ஒரு ஊரில் ஒரு சமுசாரி இருந்தான். அவனுக்கு ஒரு காட்டின் பக்கத்திலே ஒரு வயல் இருந்தது. அந்தக் காட்டில் அவ்வூர் பிரபுக்கள் போய் அடிக்கடி வேட்டையாடுவதுண்டு. ஒரு நாள் ஒரு பிரபு அந்தக் காட்டில்போய் வேட்டையாடினார். அப்பொழுது ஒரு மான் அந்தக் காட்டுக்குள்ளிருந்து இந்தச் சமுசாரியின் வயலுக்குள் ஓடிற்று. அந்த வயலில் கோதுமை பயிரிட்டிருந்தது. அவை இளம் பயிராயிருந்தன. வேலைக்காரரும் குதிரைகளும், நாய்களும் அந்தப் பயிர்வழியாய் மானைத் துரத்திக் கொண்டுபோனார்கள். அதினால் அந்த வயலிலுள்ள அநேக பயிர்கள் சேதமாகிவிட்டன. அந்தச் சமுசாரி அதைக்கண்டு அதிக வருத்தப்பட்டான். தனக்கு நேரிட்ட நஷ்டத்தைப்பற்றி அந்தப் பிரபுவினிடம் போய்த் தெரிவித்தான். 'உனக்கு நேரிட்ட நஷ்டம் எவ்வளவு என்று சொல், நான்

அதை உனக்குக் கொடுத்துவிடுகிறேன்' என்று அப்பிரபு சொன்னார். அப்பொழுது அந்தச் சமுசாரி 'ஐயா, நான் என் சிநேகிதரோடு போய் அந்த வயலைப் பார்த்தபொழுது ஐந்நூறு ரூபாய்க்கு நஷ்டமிருக்கும் என்று மதிப்பிட்டோம்' என்றான். உடனே பிரபு ஐந்நூறு ரூபாய் எடுத்துவந்து, அந்தச் சமுசாரிக்குக் கொடுத்தார். சமுசாரி அதிக நன்றியறிதலோடு அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டான். சில நாள் சென்றபின் அந்தச் சமுசாரி மறுபடியும் தன் வயலைப் பார்க்கப் போனான். அது மிக நேர்த்தியாய் வளர்ந்து செழித்திருந்தது. அந்தப் பிரபுவினால் தனக்கு நஷ்டமில்லை என்று கண்டான். நஷ்ட ஈடாக தான் பெற்றுக்கொண்ட பணத்தை வைத்துக்கொள்வது சரியல்ல என்று நினைத்தான். அந்தப் பணத்தைக் கொண்டுபோய் பிரபுவினிடம் கொடுத்துவிடும்படி பரிசுத்த ஆவியானவர் அவன் மனதை எவினார். உடனே அந்தச் சமுசாரி பணத்தை எடுத்துக்கொண்டு பிரபுவினிடம் போனான். பிரபுவைப் பார்த்து 'ஐயா, என் பயிர்களைத் தங்களுடைய வேட்டைக் குதிரைகள் மிதித்தது பயிருக்குக் களையெடுத்ததுபோலிருக்கிறது. போன வருஷத்தைவிட இவ்வருஷம் பயிர் நன்றாய்ச் செழித்திருக்கிறது, எனக்கு லாபமே ஒழிய நஷ்டமில்லை. ஆகையால் நீங்கள் எனக்கு நஷ்ட ஈடாகக் கொடுத்த பணத்தைத் திரும்பக் கொண்டுவந்திருக்கிறேன்' என்றான். அந்தப் பிரபு இந்த எழைச் சமுசாரியின் உண்மையினிமித்தம் சந்தோஷப்பட்டு, அந்தப் பணத்தை வாங்கித் திரும்ப அவனுக்கே இனாமாகக் கொடுத்துவிட்டார்.

பிள்ளைகளே! நீங்களும் எப்போதும் பரிசுத்த ஆவியின் கிருபையினால் உண்மையுள்ளவர்களாய் நடக்கப் பிரயாசப்படுங்கள்.

## உல்வி.

உல்வி என்ற பையனுக்கு எட்டு வயது. அவன் தாய் ஒரு நல்ல கிறிஸ்தவள். அவள் தன் மகனை சிறு பிராயத்திலேயே நல்வழியில் நடத்தப் பிரயாசப்பட்டாள். ஒரு நாள் உல்வி தன் அத்தையோடு ஒரு ஊருக்குப் போகவேண்டியதாயிருந்தது. அவன் தேவனுக்குப் பயப்படாத ஒரு ஸ்திரீ. உல்வியும் அவன் அத்தையும் ரெயில்வழியாய்ப் பிரயாணம் செய்தார்கள். இவர்கள் எறியிருந்த வண்டிக்குள் வேறு சில பணக்காரரும் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது கந்தை உடுத்த ஒரு எழை ஸ்திரீ அங்கே வந்தாள். அவளுக்கு மூன்று பிள்ளைகளிருந்தார்கள். அவர்கள் நால்வரும் வந்து அந்த வண்டிக்குள் உட்கார்ந்தார்கள். அப்பொழுது ரெயில்வே உத்தியோகஸ்தன் ஒருவன் வந்து, கோபத்தோடு அவர்களைப் பார்த்து, 'இந்த இடம் உங்களுக்குரியதல்ல; அடுத்த வண்டிக்குப் போங்கள்' என்று கடு



கடுப்பாய்ச் சொல்லிவிட்டான். உடனே அந்த எழைகள் துக்கத்தோடு எழுந்து பக்கத்து வண்டிக்குப் போனார்கள். இதைப் பார்த்தவர்கள் எல்லாரும் சந்தோஷப்பட்டார்கள். ஆனால் உல்வி மாத்திரம் அந்த எழைகளுக்காக அனுதாபப்பட்டு அதிகமாய்த் துக்கப்பட்டான்.

சற்று நேரத்துக்குப் பின் உல்வி தன் அத்தையைப் பார்த்து 'என் கூடையிலிருக்கிற பலகாரங்களை பக்கத்து வண்டியிலிருக்கிற அந்த எழைகளுக்குக் கொண்டுபோய்க் கொடுத்து, அவர்களைச் சந்தோஷப்படுத்த விரும்புகிறேன் என்றான்'. அப்பொழுது அவள் 'என்ன, புத்தியீனம்! இந்தப் பலகாரங்களைத் தின்ன அவர்கள் தகுதியுள்ளவர்களா? இன்னும் கொஞ்ச நேரத்தில் உனக்குப் பசிக்குமே! அப்போது நீ என்னசெய்வாய்?' என்றாள். அதற்கு உல்வி 'கொஞ்ச நேரத்துக்குள் வீட்டுக்குப் போய்விடலாம், அதுமட்டும் பசியைத் தாங்கிக்கொள்ளுவேன். அந்த எழைகள் பசியாயும் கவலையாயும் இருக்கிறார்கள். எழைகளுக்கு உதவிசெய்ய வேண்டும் என்று தாயார் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது தாயார் இங்கேயிருந்தால் அதிகச் சந்தோஷமாய் எனக்கு உத்தரவு கொடுப்பார்கள்' என்றான். அப்பொழுது அவள், 'இந்தப் பையனும் இவன் தாயும் எவ்வளவு நல்லவர்கள்' என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டு, அந்தப் பையனை போகவிட்டாள். பிரியமான பிள்ளைகளே! உல்வியும் அவன் தாயும் நல்லவர்கள்தான். அவர்களை நல்லவர்களாக்கினது யார்? பரிசுத்த ஆவியானவர்தான் அவர்களை நல்லவர்களாக்கினார். நீயும் உல்வியைப் போல நல்ல பிள்ளையாய் நடக்க விரும்புகிறாயா? தினம் தினம் பரிசுத்த ஆவியின் உதவியைத் தேடிக்கொள்.

உல்வி பலகாரங்களை எடுத்துக்கொண்டுபோய் அந்த எழைகளுக்குக் கொடுத்துவிட்டுத் திரும்பினான். கொஞ்ச நேரத்துக்குள் உல்வி இறங்கவேண்டிய ஸ்டேஷன் வந்தது. உல்வியும், அவன் அத்தையும் இறங்குவதற்காக, அந்த எழைகள் இருந்த வண்டியைக் கடந்து போனார்கள். அப்பொழுதுதான் அந்த எழைகள் உல்வியின் விருந்தைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். மூத்த பையன் தாயைப் பார்த்து 'அம்மா, அந்தச் சிறு பையன் ஒரு தேவ தூதனாயிருக்கவேண்டும்' என்றான். அதற்குத் தாய் 'அப்படியல்ல, என் மகனே! அந்த நல்ல பையன் தேவ தூதனுடைய வேலையைச் செய்தான்' என்றான்.

## சோம்பல்.

ஸ்மித் என்ற பையன் பத்து வயதுள்ளவனாயிருந்தான். அவனிடத்திலிருந்த பெரிய பாவம் சோம்பல்தான். எந்த வேலையைச் செய்யவேண்

டும் என்றாலும் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லுவான். ஒரு நாள் அவன் தன் சகோதரியோடு ஒரு பெரிய மரத்தடியிலே உட்கார்ந்திருந்தான். 'யோவானுடைய காற்றாடியைப் போல எனக்கும் ஒன்று இருந்தால் நல்லது' என்று சொன்னான். அப்பொழுது அவனுடைய சகோதரி 'அப்படியானால் இப்பொழுதே நாம் ஒரு காற்றாடி செய்வோம் வா?' என்றாள். அதற்கு அவன் 'பின்னால் பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்லிவிட்டான். சாயந்தரத்திலே அவனுடைய சகோதரி அவனைப் பார்த்து 'இது நாம் கணக்குச் செய்யவேண்டிய நேரம், ஆகையால் உபாத்தியாயர் சொன்ன அந்தக் கணக்கை செய்வோம்வா' என்றாள். அதற்கு அவன் 'அது ரொம்ப வருத்தமானது, பின்னால் பார்த்துக்கொள்ளலாம்' என்றான். சற்று நேரம் பொறுத்து அவர்கள் சிறிய தகப்பனார் வந்து 'ஸ்மித் லத்தீன் பாஷை கொஞ்சம் படித்துக்கொள்வானானால் என்னுடைய ஆஸ்பத்திரியில் அவனுக்கு உயர்ந்த உத்தியோகம் பார்த்துக் கொடுப்பேன்' என்று சொன்னார். இதைக் கேட்டபோது அவனுடைய சகோதரி அவனைப் பார்த்து 'இது நல்ல சமயம், உடனே லத்தீன் படிக்கப் பிரயாசப்படு' என்றாள். அவனோ 'பின்னால் பார்த்துக்கொள்ளலாம்' என்று கடத்திவிட்டான். 50 வருஷங்களுக்குப்பின் ஸ்மித் நரைத்த கிழவனாயிருந்தான். ஆனால் அவன் நிலைமை என்ன? அவனுடைய மற்ற சகோதரர், சகோதரிகள் எல்லாம் மேலான நிலைமையிலிருந்தார்கள். அவனோ பிச்சைக்காரனாய் தெருவழியே திரிந்தலைந்தான்.

'சோம்பல் தூங்கி விழப்பண்ணும்'.

Printed at the Church Mission Press, Palamcottah, for the Tinnevelly S. P. G. Children's Mission.



The Children's Herald.

பாலர் தூதன்.

“பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.” நீதி. 8: 32.

Vol. IX ஜனவரி, 1914. No. 1

## நமதருமை பிஷப் அவர்களின் நவவருட கடிதம்.

என் பிரியமான பிள்ளைகளே!

திரும்பவும் உங்களுக்கு ஓர் நவவருட ஆசீர்வாதம் கூற சமயம் கிடைத்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன். சென்ற ஆண்டு உங்களுக்கு பாக்கியமான வருஷமாயிருந்ததென்று நம்புகிறேன். இந்நவ ஆண்டும் உங்கள் எல்லாருக்கும் அதிகப் பாக்கியமான வருஷமாயிருப்பதாக!

இந்தப் புது வருஷத்திலே நீங்கள் செய்யப்போகும் காரியங்களைப் பற்றி முழு நம்பிக்கையோடே எதிர்நோக்குகிறீர்கள். உங்கள் காலத்தை எப்படிச் செலவழிக்கலாம் என்பதைக் குறித்து ஒழுங்குகள் செய்கிறீர்கள். இந்த எண்ணங்கள் நல்லவைகள்தான். என்றாலும் உங்களுக்கு நேரிடக்கூடியவைகளெல்லாம் தேவனுடைய கரத்திலேயிருக்கிறதென்று உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். ஆகையால் நீங்கள் ஜெபத்தோடே இவ்வருஷத்தைத் தொடங்க விரும்புகிறேன். தேவனே உங்களைக் காக்கிறவர், எல்லாத் தீமையிலும் உங்களுக்குக் கேடகமாயிருக்கிறவர் அவரே, சோதனையை எதிர்க்கவும், பாவத்தை வெறுக்கவும் பெலன் கொடுக்கிறவரும் அவரே. ஆகையால் நீ செய்யவேண்டியதாவது:—

முதலாவது:—தாவீதின் ஜெபத்தை உன் சொந்த ஜெபமாக்கிக்கொள். 'தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்; நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்' என்று கேள். பெரியோரு

கேட்கிறார். நிச்சயமாகவே அவர் உன்னை ஆசீர்வதிக்கிறார். ஆனால் அவர் உன்னை ஆசீர்வதிக்கும்படி நீ அவரைநோக்கி ஜெபம்பண்ணவேண்டும். இருதயத்திலிருந்து அந்த ஜெபம் வரவேண்டும். தேவன் உனக்கு செவி கொடுக்கிறார் என்று நீ நம்பவேண்டும். உன் இருதயத்தின் விருப்பங்களை உனக்கு அருள்செய்ய அவர் ஆயத்தமாயிருக்கிறார்

இரண்டாவது:—உன்னை அவருடைய பாதுகாப்புக்குள் ஒப்புவி. உன் அவசரங்களும், உன் சங்கடங்களும் அவருக்கு நன்றாய்த் தெரியும். அப்போதைக்கப்போது உனக்கு வேண்டிய உதவியைச் செய்ய அவரால் கூடும். அவர் உன்னை சரியான வழியிலே நடத்தும்படி அவரை நோக்கிக் கெஞ்சு. உன் காலடிகள் வழுவாதபடி அவர் உன்னைத் தாங்குவார். உன்னைக் காக்கும்படி அவர் எப்போதும் உனக்கு சமீபத்தில் இருக்கிறார். பலவீனமும், மோசமும் நேரிடும்போது உன்னை ஆதரிக்கவும், காப்பாற்றவும் 'அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரமா'யிருக்கும்.

மூன்றாவது:—சுவாமிக்காக ஏதாவது வேலைசெய்யப் பிரயாசப்படு. 'ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்?' என்பதே தர்சுப் பட்டணத்து சவுல் செய்த ஜெபம். தேவனுக்காக ஏதாவது வேலைசெய்ய அவர் விரும்பினார். செய்யும்படி ஒரு பெரிய வேலையை தேவன் அவருக்குக் கொடுத்தார். 'கிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளுக்கு'ப் பிரசங்கிப்பதே அந்த வேலை. உனக்கும் அதேமாதிரி வேலை உண்டு. அது பரி. பவுலினுடையதைப்போல பெரிதும், முக்கியமுமானதாயிராதிருக்கலாம். ஆனால் அது உன் தகுதிக்கு ஏற்றதாயிருக்கும். தேவனுடைய அன்பை நீ மற்றவர்களுக்குச் சொல்லக்கூடும். இயேசுவுக்கு சாட்சியாயிருக்கக்கூடும். பாலியர் சங்கத்தின் மெம்பராக பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கப் படித்திருக்கிறாய். ஜெபம்பண்ண உனக்குத் தெரியும். ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ப் போகிறாய், மற்றவர்களை நல்ல வழியில் நடத்தவேண்டுமென்றும் போதிக்கப்பட்டிருக்கிறாய். ஆகையால் இந்த வருஷத்தில் மற்றவர்களுக்கு நன்மைசெய்ய, இயேசுவின் அன்பை மற்றவர்களுக்குச் சொல்ல, தேவன் உனக்குக் கொடுக்கும் சமயங்களை தவறவிட்டுவிடாதே. அதுவே பாக்கியமான ஒரு புது வருஷத்தை சரியான விதமாய்ச் செலவழிக்கும் மேலான முறை. ஆதலால் கர்த்தருக்கு ஊழியஞ்செய்வதில் இவ்வருஷம் உனக்கு ஆசீர்வாதமான வருஷமாயிருக்கத்தக்கதாக கர்த்தர் தாமே உன்னோடேகூட இருப்பாராக.

இப்படிக்கு,
கிறிஸ்து இயேசுவுக்குள் உன்பட்சமுள்ள சிநேகிதர்,
A. A. வில்லியம்ஸ்,
திருநெல்வேலி. மகாண பிஷப்.

1914,
ஜனுவரிமீ 1உ.

14

## 'விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்'.

ஒரு ஞாயிற்றுக்கிழமை சாயந்தரத்தில் கிரே என்ற போதகர் சோதனையைப்பற்றிப் பிரசங்கம் பண்ணினார். 'சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்' என்பதுதான் பிரசங்க வாக்கியம். திங்கட்கிழமை காலையில் ஜாக் என்ற பையன் பள்ளிக்கூடத்துக்குப் போனான். கணக்குச் செய்யவேண்டிய நேரம் வந்தது. அவன் வகுப்பில் ஒருநாளும் கணக்குச் செய்கிறதில்லை. பக்கத்திலிருந்த பையனுடைய சிலேற்றைப் பார்த்து எழுதிக்காட்டிவிடுவான். அன்றைக்கும் அவன் அப்படியே பார்த்தெழுத ஆரம்பித்தான். அப்பொழுது முந்தின நாள் கேட்ட பிரசங்கம் அவன் ஞாபகத்தில் வந்தது. என்றாலும் கணக்கு பூராவும் பார்த்தெழுதிவிட்டான். உபாத்தியாயரிடம் கொண்டுபோய்க் கணக்கைக்காட்டினான். ஆனால் மற்றவர்களை வஞ்சிக்கிறது சரியல்ல என்பதை அன்றுதான் முதல் தடவையாக அவன் உணர்ந்தான். சாயந்தரத்திலே தன் தோட்டத்தில் உட்கார்ந்து இதைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது அவனுக்கும், அவன் மனச்சாட்சிக்கும் பின்வரும் தர்க்கம் நடந்தது:—

மனச்சாட்சி—'நாளைக்கு நீ தோமாவின் கணக்கைப் பார்த்தெழுத மாட்டாய் அல்லவா'?

ஜாக். 'பார்த்தெழுதாமலிருக்க என்னால் முடியுமா'?

மனச். 'பார்த்தெழுதுவது தப்பிதம் என்று உனக்குத் தெரியுமே'!

ஜாக். 'நான் பார்த்தெழுதாவிட்டால் கணக்குத் தெரியாதவன் என்று எல்லாரும் என்னைக் கேலிபண்ணுவார்களே!'

மனச். 'தேவனால் நிந்திக்கப்படுவதிலும் மனுஷரால் நிந்திக்கப்படுவது மோசமல்ல'

ஜாக். 'பார்த்தெழுதுவதை விட்டுவிட எனக்கு மனமில்லையே'

மனச். 'விழித்திருந்து, ஜெபம்பண்ணு, அப்பொழுது சோதனையை ஜெயிக்கலாம்.

உடனே ஜாக் முழங்காலில் நின்று தேவனைநோக்கி ஜெபம்பண்ணினான். பார்த்தெழுதுவதையும், உபாத்தியாயரை வஞ்சிப்பதையும் விட்டுவிட்டான். அந்த சோதனையை ஜெயிக்க ஆண்டவர் அவனுக்குப் பெலன் கொடுத்தார். இந்தப் புது வருஷத்துக்குள் பிரவேசிக்கிற நீ சோதனைக்குட்படாதபடிக்கு எப்போதும் விழித்திருந்து ஜெபம்பண்ணுவாயா? அப்பொழுது பாவசோதனையை ஜெயிக்க உனக்கு பெலன் கிடைக்கும். இப்பொழுது ஜாக் ராஜாவின் போர்க்கப்பலிலே உத்தியோகம் செய்கிறான். தன் உலக ராஜாவுக்கும், பரம இராஜாவுக்கும் உண்மையுள்ள போர்வீரனாயிருக்கிறான்.

# அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்

## ஒன்பதாவது சத்தியம்.

'பரிசுத்த கத்தோலிக் சபையும் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் உண்டென்று விசுவாசிக்கிறேன்'.

தங்கவாக்கியம்:—'*அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்*' கொலோ. 1: 18.

*பரிசுத்த ஆவியானவரைப்பற்றி முந்தின சத்தியத்திலே படித்திருக்கிறோம். இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருந்து, ஆண்டு நடத்துகிற பரிசுத்த கத்தோலிக் சபையைப்பற்றிக் கவனிப்போம்.*

1\. *சபை என்பதின் பொருள் என்ன? சபை என்றால் கர்த்தருக்குச் சொந்தமான என்று பொருள்படும், தேவனுக்குச் சொந்தமாக அழைக்கப்பட்ட ஒரு ஜனக்கூட்டத்தை அது குறிக்கும். ஆதியில் யூதர் தேவனுடைய சொந்த ஜனங்களாக அழைக்கப்பட்டிருந்தார்கள். அப்புறம் ஆண்டவருக்கு ஊழியம் செய்யும்படி தெரிந்துகொள்ளப்பட்ட ஜனத்துக்கு கிறிஸ்தவர்கள் என்று பேர். இந்த சபை முதல் பரிசுத்த ஆவியின் பண்டிகையன்று பூலோகத்திலே ஸ்தாபிக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலன்மாருக்கு புதுப்பெலன் கொடுத்தார். மூவாயிரம் பேர் குணப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று சபையில் சேர்ந்தார்கள். இந்த சபை உண்டாகி சுமார் ஆயிரத்துதொளாயிரம் வருஷங்களாகின்றன. இந்தச் சபைக்கு தலை கிறிஸ்துவே. அவர் ஏற்படுத்தின பன்னிரண்டு அப்போஸ்தலராலும், அவர்களுடைய பின்னடியாராலும் இந்த சபை கட்டப்பட்டு வருகிறது.*

2\. *இது என் கத்தோலிக் சபை என்னப்படுகிறது? கத்தோலிக் சபை என்றால் எல்லாக் காலத்துக்கும், எல்லா ஜாதியாருக்கும், எல்லா இடத்துக்கும் பொதுவான சபை என்று அர்த்தமாகும். யூதச்சபை எல்லாக்காலத்துக்கும் அல்ல, பரிசுத்த கத்தோலிக் சபைக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டது. எல்லா ஜனங்களுக்கும் அல்ல, ஒரு ஜாதிக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது. உலக முழுதுக்கும் அல்ல, ஒரு தேசத்துக்கு மாத்திரம் ஏற்றதாயிருந்தது. ஆனால் இந்த சபையோ உலகமெங்கும் போகவும், எல்லா ஜாதிகளையும் சீஷராக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறது. பரி மாற் 16: 15. பரி. மத். 28: 19 சகல நாட்களிலும் கர்த்தர் இந்தசபையிலே தங்கியிருப்பதால் (பரி. மத். 28: 20) இது என்னாளும் நிலைத்திருக்கும். ஆகலால் இது கத்தோலிக்சபை என்னப்படுகிறது.*

3\. *இது என் பரிசுத்த கத்தோலிக் சபையென்று அழைக்கப்படுகிறது? ஏனென்றால் இது பரிசுத்தமுள்ள தேவகுமாரனுடைய சரீரமாயிருக்கிறது.*



*பரிசுத்த ஆவியானவர் இதிலே வாசமாயிருந்து, இதை ஆண்டு நடத்துகிறார். இதைச் சேர்ந்தவர்கள் பரிசுத்தத்துக்கென்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் இது பரிசுத்த கத்தோலிக் சபை என்று அழைக்கப்படுகிறது.*

4\. *சபைக்குரிய அடையாளங்கள். ஆதிச்சபை அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தது. அப். 2. 42. 1. அப்போஸ்தலருடைய உபதேசம்=அப்போஸ்தலன்மார் போதித்துவந்த சத்தியங்கள். அந்த சத்தியங்கள் பரிசுத்த வேதாகமத்திலும், விசுவாசப் பிரமாணங்களிலும் அடங்கியிருக்கின்றன. 2. அந்நியோந்நியம்=சபையின் ஒருமைப்பாடு. 3 அப்பம் பிட்குதல்=பரி. நற்கருணை. 4. ஜெபம்பண்ணுதல்=தனித்த, வெளியரங்கமான ஆராதனை. பரிசுத்த ஞானஸ்நானமும் ஒரு விசேஷித்த அடையாளம். ஆதிசபையார் ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றிருந்தபடியால் வாக்கியத்தில் அது சொல்லப்படவில்லை நமது சபையில் இந்த அடையாளங்கள் யாவும் இருக்கின்றன.*

5\. *சபையின் உத்தியோகஸ்தர். ஆதிமுதல் மூவகை உத்தியோகஸ்தர் சபையில் இருந்து வருகிறார்கள். 1. பிஷப். பரி. தீமோத்தேயு எபேசுவிலும் தீத்து கிரேத்தாவிலும் பிஷப்பாகயிருந்தார்கள். 1 தீமோ. 1.3. தீத்து 1. 5 அப்படியே மற்ற இடங்களிலும் பிஷப்புகள் இருந்தார்கள். 2. குருமார் இவர்கள் எல்லாச் சபைகளிலும் ஏற்படுத்தப்பட்டார்கள். அப். 14. 23. இவர்களுக்கு மூப்பர்கள் என்று பேர் 3. உதவி குருமார். அப். 6. 1—7 பார் அப்போஸ்தலர் காலமுதல் இந்த மூன்று உத்தியோகங்களும் தொடர்ச்சியாய் நமது சபையிலிருந்துவருகிறது.*

போதனை. 1. *நீ பரிசுத்தமாய் நடக்கும்படி இந்த சபையில் அழைக்கப்பட்டிருக்கிறாய். ஆகையால் எப்போதும் பரிசுத்தமாய் நடக்கப் பிரயாசப்படு. 2. சபையின் ஒழுங்குகளுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் அடங்கிநட.*

'உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்' 1 பேது. 1: 15.

---

# நல்ல பட்டணம்.

*பல ஆண்டுகளுக்கு முன்னே இரட்சண்யபுரி என்று ஒரு நகரம் இருந்தது. அப்பட்டணத்துக் குடிகள் மற்ற அநேக ஜனங்களைவிட அதிக பாக்கியசாலிகளாயிருந்தார்கள். ஏனென்றால் அப்பட்டணம் சகலவித நன்மைகளினாலும் நிறைந்திருந்தது. செழிப்பிலும், செல்வத்திலும் அதற்கு நிகரான நகர் எங்கும் காணப்படவில்லை. அதின் அரசன் மிகவும் நல்லவர். குடிகளுக்கு அவசரமான நன்மைகளில் ஒன்றும் குறைவைக்கமாட்*

டார். அப்பட்டணத்தின் மாட்சிமையை அறிந்தவர்கள் எல்லாரும் அதிலே வந்து குடியிருக்க விரும்பினார்கள். அவர்கள் வந்து அதிலே குடியிராதபடி ஒன்றும் தடையாயிருக்கவில்லை. யாரானாலும் வந்து தாராளமாய் வாசஞ்செய்யலாம் என்று ராஜா விளம்பரமும் செய்திருந்தார். ஆனால் அங்கு வந்து குடியேறுகிறவர்களுக்குச் சில நிபந்தனைகள் இருந்தன. அவையாவன:—

1. அரசனுக்குப் பிரியமில்லாத காரியங்களில் கொஞ்சமும் ஆசைவைக்கக்கூடாது.
2. அரசனுடைய வார்த்தைகளினெல்லாம் பூரண விசுவாசம் வைக்கவேண்டும்.
3. அரசனுடைய கட்டளைகளில் அணுவளவும் பிசகாமல் நடக்கவேண்டும்.

இந்த நிபந்தனைகளைக்கைக்கொண்டு நடப்பதாக அங்கு வாசம்பண்ண வரும் ஒவ்வொருவரும் வாக்குக்கொடுக்கவேண்டும். அப்படி வாக்குக் கொடுத்தவர்கள், அந்நகரத்தின் முகப்பிலேயிருக்கும் தெப்பக்குளத்தில் முழுகாட்டப்பட்டு, பட்டணத்துக்குள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அப்புறம் தங்கள் ஜீவகாலமெல்லாம் அந்த வாக்குகளை அவர்கள் கைக்கொண்டுவரவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு அரசன் மேலான இன்பத்தைக் கொடுப்பார். அந்த நல்ல அரசனின் அன்பை நினையாமல் நன்றிகெட்டு, தங்கள் வாக்கின்படி நடக்கக் கவலைப்படாதவர்கள் நித்திய ஆக்கினையை அடைவார்கள்.

பிரியமான பிள்ளைகளே! இந்தப்பட்டணம் திருச்சபைக்கு அடையாளமாயிருக்கிறதல்லவா? அப்பட்டணத்துக்குள் பிரவேசிக்கிறவர்கள் மூன்று நிபந்தனைகளுக்கு உள்ளடங்கினதுபோல நீயும் திருச்சபையில் சேர்க்கப்கப்பட்டபோது மூன்று பிரதிக்கினைகளைச் செய்திருக்கிறாய். சற்றே வாசிப்பை நிறுத்தி அம்மூன்று பிரதிக்கினைகளும் என்ன என்று யோசித்துப்பார். உன் வாழ் நாளெல்லாம் அவைகளின்படி நடக்கப் பிரயாசப்படு. அப்பொழுது மேலான வாழ்வைப் பெறுவாய்.

## பிரயாசப்படு

ஒரு சிறு பெண் பள்ளிக்கூடத்துக்குப் போனாள். எழுத்து எழுதிப் படிக்கவேண்டிய நேரம் வந்தது. ஒரு காப்பி புஸ்தகம் அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அதில் மேலே எழுதியிருந்த நேர்த்தியான எழுத்துக்களைப் பார்த்து எழுதும்படி அவளுக்குச்சொல்லப்பட்டது. அவ்வளவு நேர்த்தியாய் எழுதிக்கொள்ள ஒருநாளும் என்னால் முடியாது என்று அவள் நினைத்தாள். தன் பேனாவைக் கையில் எடுத்து எழுதத்துவக்கினாள். பயத்தினால் அவள் கை ஆடினது. திரும்பவும் மேலேயிருந்த எழுத்துக்களைக்



கூர்ந்து பார்த்தாள். 'நான் பிரயாசப்பட்டு எழுதிப்பார்ப்பேன்' என்று தனக்குள்ளே சொன்னாள். ஒருபாதி பக்கம் எழுதினாள். எழுத்துகளெல்லாம் கோணலாயிருந்தன. முதல் தடவையில் இதைவிட நன்றாய் எழுத முடியாதுதான். ஆனால் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பிள்ளை அவளைப் பார்த்து "ஓ, உன் எழுத்துகள் எவ்வளவு கேவலமாயிருக்கிறது" என்று சொல்லிவிட்டாள். உடனே அவளுடைய கண்கள் கண்ணீரால் நிறைந்தன. உபாத்தியாயர் தன் எழுத்துக்களைப் பார்த்தவுடன் தன்னை கோபிப்பார் என்று நினைத்து அவள் பயந்தாள். சற்றுபொறுத்து உபாத்தியாயர் அவள் எழுதுகிறதைப் பார்க்கவந்தார். அவள் நினைத்தபடி அவர் அவளைக் கோபிக்கவில்லை. புன்சிரிப்புடன் "நீ நன்றாய்ப் பிரயாசப்படுகிறாய், நான் விரும்புகிறது அதுதான்" என்றார். அவளுடைய பயமெல்லாம் பறந்துவிட்டது. திரும்பத் திரும்ப அந்த நல்ல எழுத்துக்களைக் கவனித்தாள். அதின்படியே எழுதப் பிரயாசப்பட்டாள். ஆனாலும் இன்னமும் அவள் எழுத்துக்கள் சரியாய் வரவில்லை. இங்கும் அங்கும் பல கோணல்கள் இருந்தன. மறுபடியும் உபாத்தியாயர் தன்னிடம் வருகிறதைக் கண்டாள். "ஐயா, இன்னமும் என் எழுத்துக்கள் அதிக கேவலமாய்த்தான் இருக்கின்றன" என்று அவள் உபாத்தியாயரிடம் சொன்னாள். "பரவாயில்லை, இப்பொழுதுதானே நீ எழுதப்பழகுகிறாய், இப்படியே தினம் தினம் பிரயாசப்பட்டால் உன் எழுத்துகள் நாளடைவில் மிகவும் நேர்த்தியாகிவிடும்" என்றார். அப்படியே அவள் நன்றாய்ப்பிரயாசப்பட்டு நேர்த்தியாய் எழுதக்கூடியவள் ஆனாள்.

என் நேசா! திருச்சபையில் இருக்கிற நீ பரிசுத்தமாய் நடக்கக்கடமைப்பட்டிருக்கிறாய். இயேசு சுவாமி தான் உனக்கு முன் மாதிரி நீ அவரைப் பற்றி வாசிக்கும்போது அவர் எவ்வளவு நல்லவர், பரிசுத்தமுள்ளவர் என்பதை அறிந்துகொள்ளுகிறாய். அவரைப்போல நடக்க என்னால் முடியாதே என்று தியங்குகிறாய். வாஸ்தவந்தான். நீ உடனே அவரைப்போலாகிவிட முடியாது தான். இது ஒரு நாளில் அல்லது ஒரு வருஷத்தில் நடந்துவிடுகிற காரியமல்ல; தேவ ஒத்தாசையினால் தினமும் இயேசுவைப் போல் நடக்க நீ பிரயாசப்படு, மனஞ்சலித்துப்போகாதே. கடைசியில் "அவர் இருக்கிறவண்ணமாகவே நீ அவரைத்தரிசிக்கிறதினாலே, அவருக்கு ஒப்பாவாய்."

## மேரி.

மேரி காலை ஆகாரம் சாப்பிட்டு எழுந்தாள். அவளுடைய அத்தை அவளைப்பார்த்து "மேரி, நீ. தாயாருக்கு உதவிசெய்ய இது நல்ல சமயம், அவர்கள் இராமுழுதும் தூங்கவே இல்லை. நீ போய் சற்றுநேரம் தம்பியைப்

துக்கொள்" என்றாள். மேரி ஒரு வார்த்தையும் பேசவில்லை, தொப்
எடுத்து தலையில் போட்டாள். தோட்டத்துக்குள் போனாள். புல்
மேல் காலை நீட்டி உட்கார்ந்தாள். ஆனால் ஒரு புது எண்ணம் அவள்
ில் உண்டாயிற்று. அவள் இயேசுவைப்போல நடக்கப் பிரயாசப்
டாள். ஆகையால் தன் அத்தையினுடைய வார்த்தைகள் அவள் மன
வந்துகொண்டேயிருந்தது. "உதவிசெய்ய இது நல்ல சமயம்" என்ற
்தைகளை மறந்துவிட அவளால் கூடவில்லை. தன் இருதயத்தை உயர
த்தாள் "கர்த்தாவே, நான் மற்றவர்களுக்கு நன்மைசெய்கிறவளா
க எனக்கு உதவிசெய்யும்" என்று ஜெபம்பண்ணினாள். எழுந்திருந்து
க்குள் போனாள். தாயார் சிறு பையனோடு தொந்தரவுபட்டுக்கொண்
்தார்கள். மேரி தன் விளையாட்டுச் சாமான்களை எடுத்துக்கொண்டு
ய் தன் தம்பியை விளையாட்டுக் காட்டினாள். உடனே அவன் புன்
புக்கொண்டான். "அம்மா; நான் சற்றுநேரம் தம்பியை வெளியே
ண்டு உலாத்திவிட்டு வருகிறேன்" என்று மேரி சொன்னாள். தாய்
்கு "நீ அப்படிச்செய்தால் எனக்கு அதிக உதவிதான்" என்றாள். உட
சிறு பையனுக்கு நேர்த்தியான உடுப்புகள் போட்டார்கள் "என்
கூடியவரை தம்பியை நான் பார்த்துக்கொள்ளுவேன். அதுமட்டும்
ள் தூங்கி இளைப்பாறுங்கள்" என்றாள் மேரி. "என் மகளே, நீ ஒரு
நேரம் மாத்திரம் வைத்துக்கொண்டால்போதும்" என்று தாய் நன்றி
லோடு சொன்னாள். மேரி சந்தோஷமாய் தன்தம்பியுடன் வெளியே
னாள். மேரியின் தாயும் அதிகமாய்ச் சந்தோஷப்பட்டாள். நீயும்
வர்களுக்கு உதவிசெய்ய இயேசுவின் முன் மாதிரியைப் பின்பற்று.
பொழுது உனக்கும் மற்றவர்களுக்கும் அதிக சந்தோஷமுண்டாகும்.

---

Printed at the Church Mission Press, Palamcottah, for the
Tinnevelly S. P. G. Children's Mission.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
4 - APR 1914



# Children's Herald.

# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. IX பெப்ருவரி, 1914. No. 2



## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்

### ஒன்பதாவது சத்தியம்

(தொடர்ச்சி).

'பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் உண்டென்று விசுவாசிக்கிறேன்'.

தங்கவாக்கியம்:—'*அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்*' 1 யோவா. 1: 7.

*திருச்சபையானது ஒரு பெரிய குடும்பத்துக்கு ஒப்பாயிருக்கிறது. தேவன் இந்தக் குடும்பத்துக்குத் தலைவராக இருக்கிறார். ஒரு குடும்பத்தில் இருக்கவேண்டிய முக்கிய லட்சணம் ஐக்கியமே. திருச்சபையாகிய இந்தப் பெரிய குடும்பத்திலும் 'பரிசுத்தவான்களுடைய ஐக்கியம் உண்டென்று விசுவாசிக்கிறோம்*

I. **பரிசுத்தவான்கள் யார்?** 1. *திருச்சபையைச் சேர்ந்த நாமே பரிசுத்தவான்கள். ஞானஸ்நானம் பெற்ற எல்லாக் கிறிஸ்தவர்களையும் மொத்தமாக இங்கே பரிசுத்தவான்கள் என்று சொல்லியிருக்கிறது. ஞானஸ்நானம் பெற்ற எல்லாரும் பரிசுத்தமுள்ளவர்களா? இல்லையே. போன மாசம் நாம் கவனித்தபடி அவர்கள் எல்லாரும் பரிசுத்தத்துக்கென்று அழைக்கப்பட்டிருக்கிறபடியால் மொத்தமாக பரிசுத்தவான்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அப்படியே கொரிந்து, எபேசு, பிலிப்பி, லித்தரணர் இந்த இடங்களிலிருந்த கிறிஸ்தவர்கள் எல்லாரும் மொத்தமாக பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.* (1 கொரி. 1: 2;

எபே. 1: 1; பிலி. 1: 1; அப். 9: 32) இவர்கள் எல்லாரும் பரிசுத்தவான்களாயிருந்ததில்லை. பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டிருந்தபடியால் பரிசுத்தவான்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். 2. மேலும் அப்போஸ்தலர், ஆதிச்சபைப் பிதாக்கள் முதலிய பெரியோரை நாம் பரிசுத்தவான்கள் என்று சொல்லுகிறோம். ஆம் அவர்களையும் சேர்த்துத்தான் இங்கே பரிசுத்தவான்கள் என்று சொல்லியிருக்கிறது. 3. தேவ தூதர் முதலியவர்களும் பரிசுத்தவான்களே. ஆகவே பூமியிலும், பாதீசிலும், பரலோகத்திலும் பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள். பூமியிலிருக்கும் சபை போராட்ட சபை. பாதீசிலிருப்பது எதிர்பார்க்கும் சபை. பரலோகத்திலிருப்பது வெற்றி சிறந்த சபை.

II. ஐக்கியம் என்றால் என்ன? ஐக்கியம் என்றால் ஒருமைப்பாடு அல்லது ஒற்றுமை என்று அர்த்தம். திருச்சபையிலிருக்கிற நாம் எல்லாரும் ஒரே ஞானஸ்நானத்தின் மூலமாய், ஒரே சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவாகிய ஒரு தலை நமக்கு உண்டு. நாம் ஒரே சரீரமாக, ஒருவருக்கொருவர் அவயவங்களாக இருக்கிறோம். அன்றியும் திருச்சபையில் பல பிரிவுகளும், பற்பல நிலைமையுள்ளவர்களும் இருந்தபோதிலும் எல்லாருடைய நோக்கமும் ஒன்றே. அதாவது 'கிறிஸ்துவின் மூலமாய் தேவனை மகிமைப்படுத்தவேண்டும்' என்பதே. ஆகவே பூமியிலிருக்கிற நமக்குள் ஐக்கியம் உண்டு. மேலும் பாதீசிலிருக்கிற பரிசுத்தவான்கள் விசுவாசித்து, நடந்து காட்டிப்போன நல் மாதிரியை நாமும் அறிக்கையிட்டுப் பின்பற்றுகிறபடியால் நமக்கும் பாதீசில் உள்ளவர்களுக்கும் ஐக்கியம் உண்டு. பரலோகத்திலிருக்கிற தேவதூதர் நாம் வணங்குகிற அதே கர்த்தரை வணங்குகிறார்கள். நமது வாழ்வில் சந்தோஷப்படுகிறார்கள். (பரி. லூக். 15: 10) ஆகையால் அவர்களுக்கும் நமக்கும் ஐக்கியம் உண்டு.

'தேவனே உம்மைத் துதிக்கிறோம்' என்ற கீதத்தில் தேவ தூதரும் கேருபீன்கள், சேராபீன்களும், அப்போஸ்தலராகிய மாட்சிமை பொருந்திய கூட்டமும, தீர்க்கதரிசிகளாகிய சிறப்புள்ள சங்கமும் இரத்தச்சாட்சிகளாகிய தைரியசேனையும், உலகம் எங்குமுள்ள பரிசுத்த சபையும் தேவனைத் துதிக்கிறதாகப் பாடுகிறோம். இது நமக்கு எதைக் காட்டுகிறது? தேவனைத் துதிப்பதில் பூமியிலிருக்கிற நமக்கும், பாதீசிலும், பரலோகத்திலும் இருக்கிற பரிசுத்தவான்களுக்கும் ஐக்கியம் உண்டென்று காட்டுகிறதல்லவா? ஆம், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் உண்டென்று விசுவாசிக்கிறது சரியே. இந்த ஐக்கியத்துக்கு ஊற்றும் காரணருமாயிருப்பவர் தேவனே. நம்முடைய ஐக்கியம் எல்லாப் பரிசுத்தவான்களோடும் மாத்திரமல்ல, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய திரியேக தேவனோடும் இருக்கிறது. 'எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.' 1 யோவா. 1: 3.



போதனை. பூமியிலிருக்கிற எல்லாக் கிறிஸ்தவர்களோடும் நமக்கு ஐக்கியமிருக்கிறபடியால் எல்லாரையும் நாம் நேசிக்கவேண்டும்.

'நாம்... ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது' 1 யோவா. 3: 23.

## பிரிவும், முறிவும்.

சில வருஷங்களுக்கு முன்னே வயதுசென்ற ஒரு மனிதன் இருந்தான். அவனுக்கு நாலு குமாரர் இருந்தார்கள். அவர்கள் நால்வரும் ஒருவருக்கொருவர் அடிக்கடி சண்டைசெய்துகொண்டிருப்பார்கள். தகப்பன் பல தடவைகளிலும் அவர்களுக்குப் புத்திசொல்லிப் பார்த்தான். அவர்களுடைய சச்சரவு ஓயவில்லை. அதினால் ஒரு குடும்பத்தில் இருக்கவேண்டிய சந்தோஷமும் பாக்கியமும் அந்தக்குடும்பத்தில் இருக்கவில்லை. இதைக் குறித்து தகப்பன் வெகுவாய் யோசித்து, ஒருநாள் காட்டுக்குப்போனான். ஒரு கட்டு விறகு கொண்டுவந்தான். வீட்டு முற்றத்திலே போட்டான். தன் குமாரர் நாலு பேரையும் கூப்பிட்டான். மூத்த மகனைப் பார்த்து "அப்பா, இந்த விறகுக்கட்டை இரண்டாய் ஒடிக்க உன்னால் கூடுமா?" என்று கேட்டான். அவன் தன்னால் கூடியவரை பிரயாசப்பட்டான், அதை ஒடிக்கமுடியவில்லை. அப்படியே மற்ற மூன்று பேரிடமும் கேட்டான். அவர்களும் தனித்தனியே பிரயாசப்பட்டுக் கூடாமல் உட்கார்ந்தார்கள். அப்பொழுது தகப்பன் எழுந்து அந்த விறகுக்கட்டை அவிழ்த்து, ஒவ்வொரு சுள்ளியாக எடுத்து, "இப்பொழுது முறியுங்கள்" என்றான். உடனே வெகு லேசாக அந்தக் கட்டு முழுவதையும் முறித்துவிட்டார்கள். அப்பொழுது தகப்பன் "என் பிள்ளைகளே, ஒரு குடும்பத்தின் ஐக்கியம் இந்த விறகுக்கட்டைப்போல்தான் இருக்கிறது. அவைகள் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டிருந்தபோது எவ்வளவோ பலமுள்ளவைகளாயிருந்தது. ஆனால் ஒவ்வொன்றாய்ப் பிரிக்கப்பட்டபோது அவைகளில் இருந்த பலம் போய்விட்டது. நீங்களும் அப்படியே ஒருவரில் ஒருவர் ஐக்கியமுள்ளவர்களாயிருந்தால் உங்கள் காரியம் எல்லாம் க்ஷேமமாயிருக்கும், மற்றப்படி சீக்கிரம் அழிந்துபோவீர்கள்" என்று புத்தி புகட்டினான். அதுமுதல் அந்த நால்வரும் இணைபிரியாத சிநேகிதராயிருந்தார்கள்.

பிரியமான பிள்ளைகளே, நீங்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறீர்களா? அப்பொழுது சபையில் பெரிய வல்லமை இருக்கும். பரிசுத்தவான்களின் ஐக்கியம் உண்டென்று நித்தம் நித்தம் உங்கள் வாயினால் அறிக்கையிடுகிறீர்களே. "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்." 1 யோவா. 3: 18.

## அன்பான செய்கை.

தென் ஆப்பிரிக்காவிலே ஆரஞ்சு என்று ஓர் நதி உண்டு. அதின் கரையோரத்தில் இருந்த ஒரு சிறு கிராமத்துக்கு, ஒருநாள் மாலை மயங்கும் நேரத்தில் சில மனிதர் வந்தார்கள். இவர்கள் யார்? இவர்கள் பகல் முழுவதும் பிரயாணம்பண்ணி அலுத்துப்போயிருக்கிறார்கள். அன்று காலை முதல் இவர்கள் ஒன்றும் சாப்பிடவில்லை. ஆயாசமும் சோர்பும் அதிகம். அந்த ஊரிலுள்ள ஒவ்வொரு வீடாய்ப்போய் ஏதாவது கொஞ்சம் ஆகாரம் கேட்கிறார்கள், கெஞ்சிக்கேட்கிறார்கள். கோப வார்த்தைகளையன்றி, வேறே எதுவும் கொடுப்பாரைக் காணோம். அவர்கள் என்ன செய்வார்கள்? கையில் ஒரு காசும் இல்லை. இந்தச் சமயத்தில் தேவன் தங்களுக்கு உதவி செய்யும்படி அவரை நோக்கி ஜெபிக்கிறார்கள். இவர்கள் யார்? இவர்கள் இருள்நிறைந்த அந்தக் கண்டத்திலே சுவிசேஷ ஒளிவீசப் பிரயாசப்படுகிறவர்கள். இவர்களுடைய தலைவருக்கு ராபர்ட் மோவற் என்று பேர். இவர்கள் ஜெபித்துக்கொண்டிருக்கும்போதே, ஒரு ஸ்திரீ ஒரு கூடை நிறைய ரொட்டியும் இன்னொரு பாத்திரத்தில் பாலும் கொண்டுவந்து, அவர்கள்முன்னே வைத்துவிட்டு, விரைவாய்ப் போய்விட்டாள். மறுபடியும் சற்றுபொறுத்து திரும்பவும் ரொட்டியும், பாலும் கொண்டுவந்தாள். இதற்குள்ளாக அவர்கள் ஜெபித்துமுடித்து புசிக்க ஆரம்பித்தார்கள். "நீ யார் அம்மா?" என்று ராபர்ட் அவளைப் பார்த்து கேட்டார். "நீங்கள் சேவிக்கும் தேவனைச் சேவிக்கிறவள்" என்று மறுமொழி சொன்னாள். "அப்படியானால் நீ கிறிஸ்தவளோ?" என்று கேட்டார். "ஆம், இந்த மூலை முடங்கிலே உங்களைக் கண்டது எனக்கு ஆனந்த சந்தோஷமாயிருக்கிறது" என்றாள். அவர்கள் சந்தோஷமாய்ப் புசித்து அவளை ஆசீர்வதித்துவிட்டுப்போனார்கள். "நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கவேண்டும்" என்ற பிரதான கட்டளைப்படி நடந்த இந்த ஏழை ஆப்பிரிக்க ஸ்திரீ ஒரு நல்ல கிறிஸ்தவள் அல்லவா?

## நோட்டீஸ்.

1907-ம் வருஷமுதலுள்ள பாலர் தூதனைப் புஸ்தகமாகச் சேர்த்துக் கட்டிவைத்திருக்கிறோம். வேண்டியவர்கள் நமது சங்கத்தின் செக்ரற்றெரி, நாசரேத் Mr. S. D. லாசரஸ் உபாத்தியாயரவர்களிடம் அடியில்கண்ட விலைப்படி வாங்கிக்கொள்ளலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 வருஷத்துக்குரியதைக் கட்டிய புஸ்தகம் 1க்கு அணா 2. | | | | |
| 2 வருஷத்துக்குச் சேர்த்துக்கட்டிய | ,, | ,, | ,, | 3. |
| 3 ,, ,, | ,, | ,, | ,, | 4. |

Printed at the Church Mission Press, Palamcottah, for the Tinnevelly S. P. G. Children's Mission.



The Children's Herald.

# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. IX — மார்ச்சு, 1914. — No. 3

MADRAS. 1914

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்

### பத்தாவது சத்தியம்.

'பாவமன்னிப்பும் உண்டென்று விசுவாசிக்கிறேன்'.

தங்கவாக்கியம்:— 'இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.' எபே. 1: 7.

பாவமன்னிப்பு விசுவாசிகளுக்குக் கிடைக்கிற முதல் ஆசீர்வாதம். பாவம் மன்னிக்கப்படுகிறதினாலேதான் மனுஷன் தேவனோடு ஒப்புரவாகிறான். ஒருவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படாவிட்டால் அவன் தேவனிடத்தில் வேறெந்த நன்மையையும் பெற்றுக்கொள்ளமுடியாது. இதினால் சங்கீதக்காரன் 'எவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதோ அவன் பாக்கியவான்' என்கிறார்.

1. பாவமாவது என்ன? தேவ கட்டளையை மீறுவதே பாவம். நம்மிடத்தில் ஜென்மப்பாவம், கர்மப்பாவம் என இருவகைப் பாவமுண்டு. ஜென்மப்பாவம் நம்முடைய பிறப்பிலேயே உண்டாகிறது. கர்மப்பாவம் நம்முடைய செய்கைகளினாலே வருகிறது. கர்மப்பாவம் இரண்டுவகைப்படும். ஒன்றுசெய்யவேண்டியவைகளை செய்யாமல் விடுவது, இன்னொன்று செய்யத்தகாதவைகளைச் செய்வது. ஓய்வுநாள் ஆசரிப்பு, பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், ஜெபம் செய்தல், வேதவாசிப்பு, ஆராதனைகளுக்குப் போகுதல், ஏழைகளுக்கு உதவி செய்வது இவை முதலியன நாம் செய்யவேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறவைகள். இவைகளைச் செய்யாவிட்டால் அதுபாவம். பொய், களவு, தூஷணம், சண்டை

இவை முதலானவைகள் செய்யக்கூடாது என்று தேவன் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறவைகள். இவைகளைச் செய்தால் அதுவும் பாவம்.

2. பாவமன்னிப்பு நமக்கு எப்படிக் கிடைக்கிறது? கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் புண்ணியங்களினாலே நமக்குப் பாவமன்னிப்புக் கிடைக்கிறது. பாவத்தினிமித்தம் நியாயமாய் வரவேண்டியது தண்டனை. ஆனால் அந்த தண்டனைகளையெல்லாம் இயேசுசுவாமி நமக்காகப் பட்டு உத்தரித்திருக்கிறார். ஆகையால் அவருடைய பாடுகளைப் பார்த்து தேவன் நமது பாவங்களை மன்னிக்கிறார்.

3. தேவன் எப்போது நமது பாவங்களை மன்னிக்கிறார்? நாம் உண்மையாய் மனந்திரும்பும்போது தேவன் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். மனந்திரும்புதலில் மூன்று காரியங்கள் அடங்கியிருக்கின்றன. 1-வது உத்தம மனஸ்தாபம். செய்த பாவங்களுக்காக உண்மையாய்த் துக்கப்படவேண்டும். 2. பாவ அறிக்கை.—அந்தப் பாவங்களை ஒன்றும் மறைக்காமல் அறிக்கையிடவேண்டும். 3. பாவப் பரிகாரம்.—அந்தப் பாவத்தினால் யாருக்காகிலும் நஷ்டம் உண்டாகியிருந்தால் அந்த நஷ்டத்துக்கு ஈடு செலுத்தவேண்டும். அப்பொழுது நிச்சயமாகவே தேவன் நமது பாவங்களை மன்னிக்கிறார். பரிசுத்த ஞானஸ்நானம் பாவமன்னிப்பின் நிச்சயத்தைக் காட்டும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட சாக்கிரமெந்து. அதிலே முதலாவதாக நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அப்பால் காலை, மாலை ஆராதனைகளிலும், பரிசுத்த நற்கருணை ஆராதனையிலும், வியாதி சமயங்களிலும் மற்ற விசேஷ காலங்களிலும் பாவ அறிக்கைசெய்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள திருச்சபை நம்மை ஏவுகிறது. நாம் உண்மையாய் மனந்திரும்பும்போது நிச்சயமாகவே தேவன் நமது பாவங்களை மன்னிக்கிறார். பரிசுத்த ஆவியாகிய தேவனே நம்மை மனந்திரும்பச் செய்கிறவர். நாம் ஒரு பாவத்தைச் செய்தவுடன் அதைப்பற்றிய துக்கத்தை நமக்குள் உண்டாக்குகிறவர் அவரே. பாவமன்னிப்பின் நிச்சயத்தை நமக்கு அருளுகிறவரும் அவரே. ஆகவே பாவமன்னிப்பு தேவனால் நமக்கு இலவசமாய் அல்லது கிருபையாய்க் கிடைக்கிற ஒரு ஈவாகயிருக்கிறது.

போதனை. 1. தேவன் கிருபையாய் உன் பாவங்களை மன்னித்திருக்கிறார், நீ எப்போதும் அவருக்கு நன்றியுள்ளவனாயிரு. 2. தேவன் உன் குற்றங்களை மன்னித்திருக்கிறபடியால் நீயும் மற்றவர்கள் உனக்கு விரோதமாய்ச் செய்யும் குற்றங்களை மன்னிக்கவேண்டும். 3. பாவம் உன்னிடத்தில் காணப்படும்போது உடனே மனந்திரும்பி மன்னிப்பைப் பெற்றுக்கொள்.

“நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்” 1 யோவா.1:9.



# இலவசமான விடுதலை.

சுமார் 200 வருஷங்களுக்கு முன்னே ஒருநாள் அத்லாந்திக் மகா சமுத்திரத்தில் ஒரு கப்பல் போய்க்கொண்டிருந்தது. அதிலே கப்பல்காரரைத் தவிர 270 ஜனங்கள் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் கடன்பட்டவர்கள். கடனைத் தீர்க்க நிர்வாகமில்லாததினால் அடிமைகளானவர்கள். தூரமான மேல் இந்திய தீவுகளுக்குக் கொண்டுபோகப்படுகிறவர்கள். அவர்களில் அநேகர் பிள்ளைகளை விட்டுப் பிரிந்த பெற்றோர். சிலர் மனைவிகளைப் பிரிந்த புருஷர். சிலர் தாய் தகப்பன் அற்ற ஏழைப் பிள்ளைகள். தங்கள் பெற்றோரின் கடனுக்காக சிறையாக்கப்பட்டவர்கள். ஐயோ, என்ன பரிதாபம்! இனி என்றைக்காவது இவர்கள் தங்கள் சொந்த நாட்டையும், இனத்தாரையும் பார்க்கமுடியுமா? கூடவே கூடாது. ஆகையால் அவர்கள் எல்லாரும் தங்களுடைய நிர்ப்பந்த நிலைமையை நினைத்து ஏங்கிக்கொண்டிருந்தார்கள். அழுகையும் பெருமூச்சும் அந்தக் கப்பலிலிருந்து வெகுதூரம் தொனித்துக்கொண்டிருந்தது. இப்படியிருக்கையில் திடீரென்று இன்னொரு கப்பல் அங்கே வந்தது. அதிலிருந்து ஒரு நல்ல துரைமகன் படவு வழியாய் இந்தக் கப்பலுக்குள் போனார். துக்கத்தால் நிறைந்த ஜனங்களை அன்போடு பார்த்தார். “பிரியமான ஜனங்களே, என்னுடைய திரண்ட ஆஸ்தியினாலே உங்கள் எல்லாருடைய கடனையும் தீர்த்துவிட்டேன். ஆகையால் நீங்கள் என்னுடையவர்கள். நான் உங்களுக்கு இலவசமான விடுதலையைக் கொடுக்கிறேன். நீங்கள் என் கப்பலில் ஏறி, உங்கள் சொந்த வீடுகளுக்குச் சந்தோஷமாய்ப் போகலாம்” என்றார். ஆ! அந்த ஜனங்கள் எவ்வளவாய்ச் சந்தோஷப்பட்டார்கள். தங்களுக்கு விடுதலை கொடுத்த அந்த துரைமகனை மனதார வாழ்த்திப் புகழ்ந்து, நன்றி செலுத்தினார்கள். அவருடைய கப்பலில் ஏறி சந்தோஷமாய்ப் போனார்கள்.

பிரியமான பிள்ளையே! இதே பிரகாரமாய்த்தான் தேவன் நம்மைப் பாவ அடிமைத்தனத்திலேயிருந்து, தமது சொந்தக் குமாரனுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்டிருக்கிறார். நமது பாவக் கடன்களையெல்லாம் கிருபையாய் மன்னித்திருக்கிறார் பாவ மன்னிப்பாகிய விடுதலையை அருளியிருக்கிறார். இத்தனை பெரிய நன்மையைப் பெற்றிருக்கிற நீ எப்போதும் அவருக்கு நன்றியுள்ள பிள்ளையாயிருப்பாயா?

# நாங்கள் மன்னிக்கிறதுபோல

ஒருநாள் ஜானகி தன் அண்ணனைப்பார்த்து ‘அண்ணா, இனி ஒரு நாளும் உன் படத்தைத் தொடமாட்டேன். தயவுசெய்து இந்த ஒரு தடவையும் மன்னித்துக்கொள்’ என்று கெஞ்சினாள். ‘இல்லை, நான் உனக்கு

மன்னிக்கவேமாட்டேன், தூரப்போ, என் பெட்டிக் கிட்டப்போகாதே என்று நான் எத்தனையோ தடவை சொல்லியிருந்தும், நீ போய் என் அழகான படத்தை அழுக்காக்கிப்போட்டாய், என்கிட்ட வராதே, ஓடிப்போ' என்று துரத்திவிட்டான்.' பிற்பாடு ஜாண் தன் சிலேற்றை எடுத்து கணக்குச்செய்யத் தொடங்கினான். ஆனால் அவன் மனம் கணக்கில் செல்லவில்லை. தன் தங்கை மன்னிப்புக்காகக் கெஞ்சின பாவனை அவன் முன் வந்துகொண்டேயிருந்தது. அவள் தன் நல்ல படத்தை அழுக்காக்கிவிட்டது வருத்தம்தான், என்றாலும் அதிகமாய்த் துக்கப்பட்டாளே, அவளுக்கு மன்னிக்கவேண்டாமா? என்று நினைத்தான். அதோடு அன்று காலையில் படித்த தங்கவாக்கியம் அவன் ஞாபகத்தில் வந்தது. 'எங்களுக்கு விரோதமாய்க் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்' என்பதே அன்று தங்கவாக்கியம். உடனே தன் தங்கையைத் தேடி வெளியே வந்தான். அவள் அங்கே இல்லை. அப்புறம் தெருவுக்குப்போனான். அங்கே சிலர் ஒரு பிள்ளையைத் தூக்கிக்கொண்டுவந்தார்கள். அந்தப் பிள்ளைக் கடைக்குப் போய்த் திரும்புகிறபோது வழியிலே தவறிவிழுந்து முகத்தில் ஒரு பலத்த காயம் பட்டுவிட்டது. முகம் எல்லாம் இரத்தம். துணி எல்லாம் இரத்தம். இந்தப் பிள்ளை யார்? இது அவனுடைய தங்கைதான். இதைக் கண்ட ஜாண் எவ்வளவாய்த் துக்கப்பட்டிருப்பான்! ஜானகியை வீட்டுக்குக் கொண்டுவந்தார்கள். அவளுடைய காயத்தைக் கழுவினார்கள். அதிலே மருந்துவைத்துக் கட்டினார்கள். ஜாண் அவளுடைய பக்கத்திலே துக்கத்தோடு நின்றுகொண்டிருக்கிறான். ஜானகி கடையிலேயிருந்து வாங்கிவந்த ஓர் படம் அவன் கையிலே யிருக்கிறது. அவள் சந்தோஷத்தோடு "அண்ணா, இதோ இந்தப் படம், இதை உனக்காகத்தான் வாங்கப்போனேன். இப்போது எனக்கு மன்னிக்கிறாய் அல்லவா?" என்று கேட்டாள். ஜாண் அழுதுகொண்டு "தங்காய், நான் உன்னோடு கோபமாய்ப் பேசினதற்காகத் துக்கப்படுகிறேன். என்னாலேதான் உனக்கு இந்தப் பெரிய காயம் உண்டாயிற்று; நீ எனக்கு மன்னிப்பாயா?" என்று அலறினான்.

பிள்ளைகளே! நீங்களும் ஒருவர் குற்றத்தை ஒருவர் மன்னியுங்கள்.



# 1913-ம் வருஷத்துப் பரீட்சையில் பரிசுபெற்றவர்கள்.

## நாசரேத்.

### Girls' High School.

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 1 | M. அன்னாள் ஞானமணி | ... 1-ம் |
| 2 | L. ராஜம்மாள் | ... ,, |
| 3 | Y. N. கனகமணி | ... ,, |
| 4 | G. சொர்ணம் | ... ,, |
| 5 | D. தேவதிரவியம் | ... ,, |
| 6 | S. ஞானமணி | ... 2-ம் |
| 7 | Y. அன்னப்பழம் | ... ,, |
| 8 | V. செல்வ சிரோமணி | ... ,, |
| 9 | A. S. அன்னத்தாய் | ... ,, |
| 10 | P. ஞானமணி | ... ,, |
| 11 | S. தாயம்மாள் | ... ,, |
| 12 | K. மரியம்மாள் | ... ,, |
| 13 | A. மேரி தங்கம் | ... ,, |
| 14 | M. சாந்தம் | ... ,, |
| 15 | J. H. வசந்தம் | ... ,, |
| 16 | A. E. பொன்னம்மாள் | ... ,, |
| 17 | J. புஷ்பம் | ... ,, |
| 18 | J. மனோரஞ்சிதம் | ... ,, |
| 19 | A. நேசம் | ... 3-ம் |
| 20 | V. அன்னாள்பாக்கியம் | ... ,, |
| 21 | J. நகோமி | ... ,, |
| 22 | M. கோவில்பிள்ளை | ... ,, |
| 23 | J. மரியம்மாள் | ... ,, |
| 24 | G. ஞானம்மாள் | ... ,, |
| 25 | Y. S. ஜெயஞானம் | ... ,, |
| 26 | M. தவமணி | ... ,, |
| 27 | J. A. நேசம் | ... ,, |
| 28 | S. தேவஇரக்கம் | ... ,, |
| 29 | G. M. நேசம் | ... ,, |
| 30 | P. சாராள் | ... ,, |
| 31 | M. மேரி | ... ,, |
| 32 | A. J. வடிவு | ... ,, |
| 33 | M. ஞானம் | ... ,, |
| 34 | D. தவமணி | ... ,, |
| 35 | L. கமலம் | ... ,, |
| 36 | A. கிரேஸ் | ... ,, |
| 37 | S. K. தபசு | ... ,, |
| 38 | J. அலிஸ் | ... ,, |
| 39 | A. அன்புமணி | ... ,, |
| 40 | S. அலிஸ் | ... ,, |
| 41 | M. ரஞ்சிதம் | ... ,, |
| 42 | S. ஞானமணி | ... ,, |
| 43 | V. சிரோமணி | ... ,, |
| 44 | R. எஸ்தர் பாப்பாத்தி | ... ,, |
| 45 | Y. அன்னத்தாய் | ... ,, |

### Boys' Secondary School.

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 1 | M. J. செல்லையா | ... 1-ம் |
| 2 | K. ஆசேர் | ... 3-ம் |
| 3 | D. தங்கையா | ... ,, |
| 4 | A. யாக்கோபு | ... ,, |
| 5 | S. ராமசாமி | ... ,, |
| 6 | D. V. ஞானசிரோமணி | ... ,, |
| 7 | M. பாலசுந்தரம் | ... ,, |
| 8 | S. C. முத்துநாயகம் | ... ,, |

### Boys' Model School.

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 1 | S. சிந்தாமணி | ... 2-ம் |
| 2 | J. பென்யமீன் | ... ,, |
| 3 | S. பாண்டியன் | ... ,, |
| 4 | J. ஐயாத்துரை | ... 3-ம் |
| 5 | G. தாமஸ் | ... ,, |
| 6 | S. எட்வர்ட் | ... ,, |
| 7 | A. தேவசகாயம் | ... ,, |
| 8 | S. தியாகராஜ் | ... ,, |

### A. I. Boys' School.

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 1 | S. சாலொமோன் | ... 1-ம் |
| 2 | V. செல்லையா | ... ,, |
| 3 | A. ஏசுவடியான் | ... 3-ம் |
| 4 | M. தாமஸ் | ... ,, |

### A. I. Girls' School.

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 1 | M. நேசமணி | ... 1-ம் |
| 2 | M. ரஞ்சிதம் | ... ,, |
| 3 | P. மரியம்மாள் | ... ,, |
| 4 | J. ஞானதீபம் | ... ,, |
| 5 | A. ராஜமணி | ... ,, |
| 6 | M. மேரி சுந்தரம் | ... ,, |

### மூக்குப்பீரி.

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 1 | A. பூமணி | ... 1-ம் |
| 2 | V. தவமணி | ... ,, |
| 3 | N. சாராள் | ... 2-ம் |
| 4 | K. சுந்தரம் | ... ,, |

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 5 | S. சாமுவேல் | ... 2-ம் |
| 6 | M. செல்லம்மாள் | ... ,, |
| 7 | Y. ஞானமுத்து | ... ,, |
| 8 | A. ஜிரேஸ் | ... ,, |
| 9 | M. தேவஇரக்கம் | ... ,, |
| 10 | P. பாலய்யா | ... ,, |
| 11 | A. சுவாமியடியான் | ... ,, |
| 12 | S. செல்வம் | ... ,, |
| 13 | K. சிரோமணி | ... ,, |
| 14 | J. ராஜம்மாள் | ... ,, |
| 15 | C. அன்னூன் | ... 3-ம் |
| 16 | P. சாமுவேல் | ... ,, |
| 17 | S. பாக்கியநாதன் | ... ,, |
| 18 | I. மரியாள் | ... ,, |
| 19 | K. தவமணி | ... ,, |
| 20 | T ஞானமணி | ... ,, |

**ஒய்யான்குடி.**

| | | |
|---|---|---|
| 1 | V. ஏசுதாசன | ... 3-ம் |

**எருசலேம்.**

| | | |
|---|---|---|
| 1 | I. ஞானமணி | ... 2-ம் |
| 2 | A. சொர்ணம் | ... ,, |
| 3 | A. சிரோமணி | ... ,, |
| 4 | V. நேசமணி | ... ,, |
| 5 | P. பொன்னம்மாள் | ... 3-ம் |
| 6 | A. துரைசாமி | ... ,, |
| 7 | A. திரவியம் | ... ,, |
| 8 | K. வெள்ளையம்மாள் | ... ,, |
| 9 | P. பிச்சமணி | ... ,, |

**அசப்பைகுளம்.**

| | | |
|---|---|---|
| 1 | D. தாயம்மாள் | ... 2-ம் |
| 2 | I. ரஞ்சிதம் | ... 3-ம் |

**பிள்ளையன்மனை.**

| | | |
|---|---|---|
| 1 | G. தேவஇரக்கம் | ... 3-ம் |
| 2 | M. நல்லம்மாள் | ... ,, |
| 3 | A. பொன்னம்மாள் | ... ,, |
| 4 | I. யாக்கோபு | ... ,, |

**உடையார்குளம்.**

| | | |
|---|---|---|
| 1 | S. ஈசாக்கு | ... 2-ம் |

**வெள்ளமடம்.**

| | | |
|---|---|---|
| 1 | Y. கோவில்பிள்ளை | ... 3-ம் |

**கடையனோடை.**

| | | |
|---|---|---|
| 1 | S. அற்புதம் | ... 1-ம் |
| 2 | K. சுவாமியடியான் | ... 2-ம் |

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 3 | V. கோவில்பிள்ளை | ... 2-ம் |
| 4 | P. அன்னத்தாய் | ... ,, |
| 5 | K. தங்கையா | ... 3-ம் |
| 6 | P. ஜீவரத்தினம் | ... ,, |
| 7 | D. பாக்கியம் | ... ,, |
| 8 | I. எலிசா | ... ,, |

**குளத்துக்குடி.**

| | | |
|---|---|---|
| 1 | M. தாசன் | ... 1-ம் |
| 2 | D. ரஞ்சிதம் | ... ,, |
| 3 | K. தங்கையா | ... 2-ம் |
| 4 | N. சாலொமோன் | ... ,, |
| 5 | V. ராஜமணி | ... ,, |
| 6 | S. ஞானப்பூ | ... ,, |
| 7 | A. தங்கையா | ... ,, |
| 8 | S. ஏசுதாசன் | ... ,, |
| 9 | S. கோவில்பிள்ளை | ... ,, |
| 10 | D. தேவ இரக்கம் | ... ,, |
| 11 | A. கோவில்பிள்ளை | ... ,, |
| 12 | D. நவமணி | ... ,, |
| 13 | S. யோசுவா | ... ,, |

**பன்றிமடல்.**

| | | |
|---|---|---|
| 1 | K. பாக்கியநாதன் | ... 2-ம் |
| 2 | K. தங்கம்மாள் | ... ,, |
| 3 | P. கோவில்பிள்ளை | ... ,, |
| 4 | D. தருமமணி | ... ,, |
| 5 | K. அற்புதம் | ... ,, |
| 6 | V. ஞானமலை | ... ,, |
| 7 | P. ஜெபமணி | ... ,, |
| 8 | V. ஞானக்கண் | ... ,, |

**சாயற்புரம் கஸ்பா.**

| | | |
|---|---|---|
| 1 | M. நேசமணி | ... 1-ம் |
| 2 | A. திரவியம் | ... 2-ம் |
| 3 | S. ஏசுதாசன் | ... ,, |
| 4 | M. தாவீது | ... 3-ம் |
| 5 | M. தாசன் | ... ,, |
| 6 | S. தேவசகாயம் | ... ,, |
| 7 | M. முத்து சாலொமோன் | ... ,, |
| 8 | D. ராஜமணி | ... ,, |
| 9 | M. ஆபிரகாம் | ... ,, |
| 10 | P. தர்மராஜ் | ... ,, |

**S. Mary's School.**

| | | |
|---|---|---|
| 1 | I. அன்னம்மாள் | ... 1-ம் |
| 2 | S. P. மேரி | ... ,, |
| 3 | G. M. அமிர்கோது | ... 2-ம் |



| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 4 | B. மரியம்மாள் | ... 2-ம் |
| 5 | S. அன்னவடிவு | ... ,, |
| 6 | J. S. செல்லய்மாள் | ... ,, |
| 7 | S. பூவம்மாள் | ... 3-ம் |
| 8 | M. ஜேன் | ... ,, |
| 9 | D. எபெனேசர் | ... ,, |
| 10 | M ஞானம்மாள் | ... ,, |
| 11 | Y. ரத்னமணி | ... ,, |
| 12 | G. தங்கரத்னம் | ... ,, |
| 13 | S. செல்வம் | ... ,, |
| 14 | S. ரத்னம் | ... ,, |

**சுப்பிரமணியபுரம்.**

| | | |
|---|---|---|
| 1 | A. தங்கையா | ... 1-ம் |
| 2 | D. K. பாலாஜி பாய் | ... ,, |
| 3 | I. பாலாஜி | ... 2-ம் |
| 4 | A. வேதமணி | ... ,, |
| 5 | M. நவமணி | ... 3-ம் |
| 6 | D. வேதமணி | ... ,, |
| 7 | A. பாக்கியம் | ... ,, |
| 8 | V. ஞானசுந்தரவடிவு | ... ,, |
| 9 | V. ஞானஜெபமணி | ... ,, |
| 10 | R. மாணிக்கம் | ... ,, |

**வைகுந்தபுரம்**

| | | |
|---|---|---|
| 1 | A. தவமணி | ... 3-ம் |

**முன்னன்விளை**

| | | |
|---|---|---|
| 1 | Y. சாமுவேல் | ... 1-ம் |
| 2 | D. N. ராஜநாயகம் | ... 2-ம் |

**குமாரபுரம்**

| | | |
|---|---|---|
| 1 | G. J. நல்லதம்பி | ... 3-ம் |
| 2 | Y. ஆசீர்வாதம் | ... ,, |

**செந்தியம்பலம்**

| | | |
|---|---|---|
| 1 | J. யோவான் | ... 2-ம் |
| 2 | J. பொன்னையா | ... 3-ம் |

**நடுவக்குறிச்சி**

| | | |
|---|---|---|
| 1 | D. மேரி | ... 1-ம் |
| 2 | S. ரஞ்சிதம் | ... ,, |
| 3 | A. தங்கசாமி | ... 2-ம் |
| 4 | A. வேதக்கண் | ... 3-ம் |
| 5 | D. கிரேஸ் | ... ,, |

**புளியநகர்**

| | | |
|---|---|---|
| 1 | S. துரைசாமி | ... 1-ம் |
| 2 | S. பால் | ... ,, |
| 3 | S. பாலசுந்தரம் | ... 2-ம் |

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 4 | V. மெர்சியம்மாள் | ... 2-ம் |
| 5 | D. S. ரத்னமணி | ... 3-ம் |
| 6 | D, G. அமிர்தராஜ் | ... ,, |

**செபத்தியாபுரம்**

| | | |
|---|---|---|
| 1 | I. ஞானதீபம் | ... 1-ம் |
| 2 | J. தங்கப்பூ | ... ,, |
| 3 | V. தேவஇரக்கம் | ... ,, |
| 4 | J. துரைப்பாண்டியன் | ... 2-ம் |
| 5 | I. ஞானமணி | ... ,, |
| 6 | S. ஞானசிரோமணி | ... 3-ம் |
| 7 | R. M. ஆசீர்வாதம் | ... ,, |
| 8 | S. தேவசிகாமணி | ... ,, |

**இடையர்காடு**

| | | |
|---|---|---|
| 1 | A. ஐயாத்துரை | ... 1-ம் |
| 2 | A. ஞானமாணிக்கம் | ... ,, |
| 3 | A. தேவதாசன் | ... 2-ம் |
| 4 | M. செல்லம்மாள் | ... 3-ம் |

**காவல்காடு**

| | | |
|---|---|---|
| 1 | Y. தங்கப்பூ | ... 1-ம் |
| 2 | Y. சற்குணம் | ... ,, |
| 3 | K. யோவான் | ... ,, |
| 4 | S. பாக்கியம் | ... 2-ம் |
| 5 | Y. நவமணி | ... ,, |
| 6 | G. சொர்ணம் | ... ,, |
| 7 | Y. மரியாள் | ... 3-ம் |

**அகரம்**

| | | |
|---|---|---|
| 1 | M. பொன்னையா | ... 2-ம் |
| 2 | S. திரவியம் | ... ,, |
| 3 | A. தங்கவேலு | ... ,, |
| 4 | V. தங்கப்பழம் | ... 3-ம் |
| 5 | M. பிச்சமுத்து | ... ,, |
| 6 | G. தங்கையா | ... ,, |

**காயல்**

| | | |
|---|---|---|
| 1 | D. தங்கசாமி | ... 2-ம் |

**புதியம்புத்தூர்**

**Girls' Boarding School**

| | | |
|---|---|---|
| 1 | M. ஞானசுந்தரம் | ... 1-ம் |
| 2 | S. C. ராபர்ட் | ... ,, |
| 3 | J. விக்டோரியா | ... ,, |
| 4 | M. நவமணி | ... ,, |
| 5 | P. தேவசுந்தரம் | ... 2-ம் |
| 6 | A. ராஜம்மாள் | ... ,, |
| 7 | D. P. சமிமாள் | ... ,, |

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 8 | J ராஜம்மாள் | ... 2-ம் |
| 9 | L. ராஜேந்திரம் | ... 3-ம் |
| 10 | A. ஆபிரகாம் | ... ,, |
| 11 | D. P. ஜெயராஜ் | ... ,, |
| 12 | D. P. செல்லத்துரை | ... ,, |
| 13 | S. சுவாமியடியாள் | ... ,, |
| 14 | S. ராஜமணி | ... ,, |
| | **Day School** | |
| 1 | V. ஆவுடைநாயகம் | ... 1-ம் |
| 2 | M. வன்னியபெருமாள் | ... ,, |
| 3 | A. சந்நியாசி | ... ,, |
| 4 | K ஆண்டியப்பன் | ... ,, |
| 5 | P. சுப்பையா | . ,, |
| 6 | V. சாமுவேல் | ... ,, |
| 7 | J. யோசேப்பு | ... ,, |
| 8 | S. சண்முகசுந்தரம் | ... ,, |
| 9 | A. உலகநாதன் | ... ,, |
| 10. | M. செல்லையா | ... ,, |
| 11 | S. சண்முகம் | ... ,, |
| 12 | S. ரத்னம் | ... 2-ம் |
| 13 | S. ராமசாமி | ... ,, |
| 14 | M. நல்லமிசாக் | ... 3-ம் |
| | **முதலூர் கஸ்பா** | |
| 1 | D. திரிமணி | ... 1-ம் |
| 2 | S. பாலம்மாள் | ... ,, |
| 3 | J. தேவகிருபை | ... ,, |
| 4 | J. செல்வம் | ... ,, |
| 5 | Y. ஞானமணி | ... ,, |
| 6 | G. நல்லாயி | ... 2-ம் |
| 7 | L. பரிபூரணம் | ... 3-ம் |
| 8 | K. பொன்னம்மாள் | ... ,, |
| 9 | J. முத்தாபரணம் | ... ,, |
| 10 | S. ரோசாள் | ... ,, |
| | **Boys' School** | |
| 1 | D. தேவசீர்வாதம் | ... 1-ம் |
| 2 | D. தங்கப்பாண்டியன் | ... 2-ம் |
| 3 | E. கோவில்பிள்ளை | ... ,, |
| 4 | S. தங்கப்பழம் | ... 3-ம் |
| 5 | G. ஞானர்லன் செல்லையா | ... ,, |
| | **Girls' School** | |
| 1 | G. மரகதம்மாள் | ... 1-ம் |
| 2 | A. கல்லம்மாள் | ... ,, |
| 3 | P. தேவஇரக்கம் | ... ,, |
| 4 | Y. தேவஞானம் | ... ,, |

| நம்பர். | பேர். | பரிசு |
|---|---|---|
| 5 | M. தவமணி | ... 2-ம் |
| 6 | J. கனகமணி | ... ,, |
| 7 | J. ரஞ்சிதம் | ... ,, |
| 8 | S. அன்னாள் பாக்கியம் | ... ,, |
| 9 | D. நக்ஷத்திரம் | ... 3-ம் |
| 10 | Y. தேவஇரக்கம் | ... ,, |
| 11 | T. தேவதிரவியம் | ... ,, |
| 12 | S. கோவில்மணி | ... ,, |
| 13 | J. செல்வம் | ... ,, |
| | **அடையல்** | |
| 1 | A. தேவதாசன் | ... 1-ம் |
| 2 | V. சுவாமியடியாள் | ... 2-ம் |
| 3 | P. அன்னப்பழம் | ... 3-ம் |
| 4 | I. பொன்னம்மாள் | ... ,, |
| | **புதூர்** | |
| 1 | K. சமாதானம் | ... 1-ம் |
| 2 | K. தங்கரத்னம் | ... 2-ம் |
| 3 | V. யோவன்னாள் | ... 3-ம் |
| 4 | S. கோவில்பிள்ளை | ... ,, |
| 5 | D. எபெனேசர் | ... ,, |
| 6 | S. செல்வம் | ... ,, |
| | **பொத்தக்காலன்விளை** | |
| 1 | A. ஜெபமணி | ... 2-ம் |
| 2 | D. ஜெபமணி | ... 3-ம் |
| | **கண்காணியார்புரம்** | |
| 1 | P. தவமணி | ... 1-ம் |
| 2 | C. தாவீது | ... ,, |
| 3 | M. தேவகிருபை | ... 2-ம் |
| 4 | S. சுப்பையா | ... ,, |
| 5 | P. ஏசா | ... ,, |
| 6 | M. தங்கப்பழம் | ... 3-ம் |
| 7 | V. பண்டாரம் | ... ,, |
| 8 | A. சற்குணம் | ... ,, |
| 9 | A. D. தேவாசீர்வாதம் | ... ,, |
| 10 | A. வயனப்பெருமாள் | ... ,, |
| 11 | P. ராமசாமி | ... ,, |
| 12 | M. தங்கப்பழம் | ... ,, |
| | **சந்திராயர்புரம்** | |
| 1 | மேரி G. ஆபிரகாம் | ... 1-ம் |
| | **காலன்குடி** | |
| 1 | Y. பொன்னம்மாள் | ... 3-ம் |
| | **டக்கர்புரம்** | |
| 1 | P. தவமணி | ... 3-ம் |
| 2 | K. பரஞ்சோதி | ... ,, |

Printed at the Church Mission Press, Palamcottah, for the
Tinnevelly S. P. G. Children's Mission.

OFFICE ... OF BOOKS
REGISTERED
2 OCT 1913
MADRAS.



The
# Childrens' Herald.
# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. VIII. எப்ரல், மே, 1913. No. 4, 5.

## அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம்.

நாலாவது சத்தியம்.

'அவர் . . . பொந்தியுப் பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டார்'.

*தங்கவாக்கியம்.—'அவர் தாமே, தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்'. 1 பேது. 2: 24.*

மூன்றாவது சத்தியத்திலே தேவ குமாரன் மனுஷனாக வந்து அவதரித்ததைப்பற்றிச் சொல்லிய காரியங்களை போன மாசம் கவனித்தோம். இந்த சத்தியத்திலே மனுஷனாக, நமது பாவங்களினிமித்தம் அவர் பட்ட பாடுகளைப்பற்றிச் சொல்லியிருக்கிறவைகளைக் கவனிப்போம். இயேசு சுவாமியின் பாடுகள் சம்பந்தமான 5 காரியங்கள் இதிலே அடங்கியிருக்கின்றன.

1-வது, நமதாண்டவர் பாடுபட்டகாலம். 'பொந்தியுப் பிலாத்துவின் காலத்தில்' அவர் பாடுபட்டார். (பரி. மத். 27: 2). விசுவாசப் பிரமாணத்தில் பொந்தியுப் பிலாத்துவின் பேர் சொல்லப்படுவானேன்? நமதாண்டவர் பாடுபட்டு மரித்த காலத்தைத் திட்டமாய்க் காட்டும்படி அவன் பேர் சொல்லப்படுகிறது. பிலாத்து கி. பி. 26-ம் வருஷம் முதல் 36-ம் வருஷம் வரை யூதேயாவில் கவர்னராக இருந்தான். அந்தக்காலத்தில் இயேசு சுவாமி நமக்காகப் பாடுபட்டார். தேவ குமாரனாகிய அவர் நமது பாவங்களினிமித்தம் மனுஷனாக வந்தது மாத்திரம் அல்ல, பிலாத்துவின்

அதிகாரத்துக்குக் கீழடங்கிப் பாடுபட்டார் என்பதும் இதினால் குறிக்கப்படுகிறது.

2-வது, அவருடைய பாடுகளின் விவரம் அவர் 'பாடுபட்டார்'. மனுஷனாகப் பிறந்ததுமுதல் பாடுகளும் துன்பங்களும் அவருக்கு இருந்தது. பசியாயிருந்தார், குடியிருக்க வீடில்லாதிருந்தார்; அலட்சியம் பண்ணப்பட்டார்; புறக்கணிக்கப்பட்டார்; சோதிக்கப்பட்டார். ஆயினும் முதல் பெரிய வெள்ளிக்கிழமையிலும், அதற்கு முந்தின இராவிலும் அவர் பட்ட பாடுகளே விசுவாசப் பிரமாணத்தில் விசேஷமாய்க் குறிக்கப்படுகிறவைகள். அப்போது அவர் பட்ட பாடுகள் என்ன? கெத்சமனேத் தோட்டத்தில் இரத்த வேர்வை விழத்தக்கதாக ஆத்துமப்பாடுபட்டார். அங்கேயே யூதாசினால் காட்டிக்கொடுக்கப்பட்டார். ஒரு குற்றவாளியைப்போல பிடித்துக்கொண்டு போகப்பட்டார். தமது சீஷர் எல்லாராலும் கைவிடப்பட்டார். பிரதான ஆசாரியனாலும் அவன் வேலைக்காரராலும் நிந்திக்கப்பட்டார். பரி. பேதுருவினால் மறுதலிக்கப்பட்டார். ஏரோது ராஜாவினால் இகழப்பட்டார். பிலாத்துவால் வாரால் அடிக்கப்பட்டு, முள்முடி சூட்டப்பட்டு, பரியாசம் பண்ணப்பட்டார். பரி. மத். 26, 27 அதி. பார். மனிதரை இரட்சிக்க வந்தவர் மனிதராலேயே பாடுபட்டார்.

3-வது, அவர் மரித்த மாதிரி. அவர் 'சிலுவையில் அறையுண்டு' மரித்தார். முதல் பெரிய வெள்ளிக்கிழமை காலையில் பிலாத்துவின் அரண்மனையிலிருந்து நமதாண்டவர் சிலுவை சுமந்தவராய் கொல்கதா மலைக்குக் கொண்டுபோகப்பட்டார். (பரி. லூக். 23: 32). ரோமப் போர்ச்சேவகர் சிலுவையைப் பூமியிலே இறக்கிவைத்தார்கள். நமதாண்டவரை அதின் மேல் கிடத்தினார்கள். மெதுவான அவர் கால்கரங்களை ஆணிகளால் சிலுவையோடு சேர்த்துக் கடாவினார்கள். சிலுவையோடே அவரைத் தூக்கி, நிறுத்தி, நாட்டினார்கள். அப்படியே மரிக்கும் மட்டும் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கவிட்டார்கள். அருமையான பிள்ளையே! உன் ஆண்டவர் உனக்காக, நிந்தையும், அவமானமும், வேதனையுமான சிலுவையிலே அறையுண்டார்.

4-வது, அவருடைய மரணம், அவர் 'மரித்தார்'. நமதாண்டவர் காலை 9-மணி முதல் மாலை 3 மணி வரை 6 மணி நேரம் சிலுவையிலே வதைத்து வதைத்துத் தொங்கினார். சிலுவையிலிருந்து 7 தரம் பேசினார். 'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்பதே அவர் கடைசியாய்ச் சொன்ன வார்த்தை (பரி. லூக். 23: 46). 'இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார்' 'ஜீவனை விட்டார்' என்பதின் அர்த்தம் என்ன? அவருடைய ஆவி சரீரத்தைவிட்டுப் பிரிந்தது. அவர் மரித்தார். வழக்கமாய், சிலுவையில் அறையப்பட்டவர்களுடைய கால் எலும்புகளை முறித்துக் கொல்வதுண்டு. ஆனால் நமதாண்டவர் அதற்கு முன்னமே



மரித்துப்போனபடியால் அவருடைய எலும்புகளை முறிக்கவில்லை. (பரி. யோவா. 19: 32, 33). 'எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர்' மெய்யான மனிதனாக மரித்தார்.

5-வது, அவருடைய அடக்கம். மரித்தபின் அவருடைய திருச்சரீரம் சிலுவையிலேயே வைக்கப்படவில்லை. அவர் 'அடக்கம் பண்ணப்பட்டார்' (பரி. யோவா. 19: 38-42). அரிமத்தியா ஊரார் யோசேப்பும், நிக்கோதேமு என்பவனும் அவருடைய திருச்சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்கினார்கள். சுகந்த வர்க்கங்களுடனே அதை சீலைகளில் சுற்றினார்கள். அவர்களோடே யோசேப்பின் தோட்டத்துக்குப்போ. அங்கே கன் மலையில் வெட்டப்பட்ட ஓர் புதிய கல்லறையைப்பார். யோசேப்பு தனக்காக அதை வெட்டியிருந்தான். (பரி. மத் 27: 60). இயேசுவின் சரீரத்தை அதிலே அடக்கம் பண்ணினார்கள். ஏசா. 53: 9 பார். ஒரு பெரிய கல்லினால் கல்லறையின் வாசலை அடைத்தார்கள். மறுநாளாகிய, நஸ்றருக்கு முந்தின சாயங்காலத்திலே யூதருடைய மூப்பர் போய், அந்தக் கல்லுக்கு முத்திரை போட்டு காவல் வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள். (பரி. மத். 27: 66). அவர் கல்லறையிலே அடக்கம் பண்ணப்பட்டிருந்தார்.

'போதனை'. தேவகுமாரனாகிய இயேசு உன்னை 'நேசித்தபடியினாலே' உனக்காகப் பாடுபட்டார், நீ அவரை நேசிக்கவேண்டும்.

'கிறிஸ்து நமக்காகத் தம்மை .. ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்' எபே. 5: 2

## உனக்குப்பதிலாக.

ஷார்லி என்ற பையன் 9 வயதாயிருக்கும்போது அவன் பெற்றோர் இறந்துபோனார்கள். ஒரு நல்ல துரை அவனைக் கூட்டிக்கொண்டுபோய், தன் சொந்தப் பிள்ளையைப்போல அவனை வளர்த்துவந்தார். ஆனாலும் ஷார்லி மிகவும் கெட்டபையனாயிருந்தான். அடிக்கடி குறும்புகள் செய்வான். கீழ்ப்படிதல் அவனிடத்தில் கிஞ்சித்தேனும் கிடையாது. தப்பிதம் செய்யும்போதெல்லாம் துரை அவனைத் தண்டிப்பார். புத்தி சொல்லுவார், ஆனாலும் அவன் சீர்ப்பட வழியில்லை, ஒருநாள் ஷார்லி வீட்டிலுள்ள விலையுயர்ந்த ஒரு பொருளை எடுத்து நெருப்பில் போட்டுவிட்டான். இந்தக் குற்றத்துக்குத் தண்டனையாக துரை அவனை இருட்டறையிலே அடைத்துவைத்தார். தன் தப்பிதத்தை உணருமட்டும் அவன் அந்த அறைக்குள்ளேயே இருக்கவேண்டும் என்றும், காய்ந்த ரொட்டியும், பச்சைத்தண்ணீருமாத்திரம் அவனுக்குச் சாப்பிடக்கொடுக்கவேண்டும் என்

றும் துரை கட்டளையிட்டார், மூன்று நாட்களாய் க்ஷார்லி அந்த அறையிலே அடைபட்டிருந்தான். அவன் மனம் கொஞ்சமும் மாறவில்லை. அந்த துரைக்கு உல்லியம் என்ற ஒரே குமாரன் இருந்தான். அவன் மிகவும் நற்குணசாலி, பல சமையங்களில் க்ஷார்லியினால் அவன் துன்பம் அடைந்திருந்தான். என்றாலும் அவன் க்ஷார்லியை அதிகமாய் நேசித்து வந்தான். ஆகையால் இப்பொழுது க்ஷார்லியின் நிலைமைக்காக பரிதபித்தான். நாலாம்நாள் காலையில் உல்லியம் தன் தகப்பனை நோக்கி 'ஐயா, க்ஷார்லிக்குப் பதிலாக இருட்டறையில் நான் இருக்கிறேன், அவன் வெளியே வந்து சந்தோஷப்படட்டும்' என்றான். தகப்பனார் சந்தோஷமாய்ச் சம்மதித்தார். உல்லியம் இருட்டறையைத் திறந்தான், உள்ளே போனான். 'க்ஷார்லி, நீ வெளியே போய்ச் சந்தோஷமாயிரு. உனக்குப் பதிலாக நான் இங்கே அடைபட்டிருப்பேன்' என்றான். க்ஷார்லி வெளியே வந்தான், தகப்பனார் போய்க் கதவைப் பூட்டினார். சாப்பாட்டு நேரத்திலே க்ஷார்லி தீனிமேசையிலிருந்து நல்ல சாப்பாடு சாப்பிட்டான் குற்றம் செய்யாத உல்லியத்துக்குக் காய்ந்த ரொட்டியும் தண்ணீரும் கொடுக்கப்பட்டது. இப்பொழுதுதான் க்ஷார்லிக்குத் தான்செய்த தப்பிதம் தெரிந்தது. அவன் கண்கள் கண்ணீரால் நிறைந்தது. இருட்டறைக்கு நேரே ஓடினான், 'உல்லி, நீ எவ்வளவு நல்ல பையன், நான் உன்னை நேசிக்கிறேன். நானும் உன்னைப்போலவே இருப்பேன், முன்னே நான் செய்தது பெரிய தப்பிதம்' என்று அழுதான்.

இந்த முரட்டுப்பையன் இவ்வளவு தூரம் உணர்வடைந்ததற்குக் காரணம் என்ன? உல்லியம் அவனுக்குக் காட்டின அன்பே அதற்குக்காரணம். உல்லி க்ஷார்லியை நேசித்தான், அவன் படவேண்டிய கஷ்டத்தைத் தான் பட்டான். நமதாண்டவராகிய இயேசுவும் அப்படியே நம்மை நேசித்ததினாலே இந்தப் பாவ உலகத்துக்கு வந்தார். நாம் படவேண்டிய பாடுகளையெல்லாம் அவர் பட்டார், நமக்காக மரித்தார் நீ அவரை நேசிக்கிறாயா? க்ஷார்லியைப்போல உன் பாவங்களை உணருகிறாயா?

## நல்லமாதிரியும், கெட்டமாதிரியும்.

மனம்போல் பாவஞ்செய்துவந்த ஒருவாலிபன் ஒருநாள் காலையில், கடலோரத்திலுள்ள ஓர் மலையின்மேல் ஏறி, உலாவப்போனான். அவன் மனதில் சந்தோஷமேயில்லை. 'உலகம் எவ்வளவு நிர்ப்பந்தமுள்ளதாயிருக்கிறது. உயிரோடிருப்பதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, ஒரு பாறையின்மேல் அவன் நீண்டு, நிமிர்ந்து, படுத்தான். சிறிது நேரத்துக்குள் இரண்டு வாலிபப்பெண்கள் அந்த மலை



யின் இன்னோர் பக்கமாய் ஏறி உலாவ வந்தார்கள். அவர்கள் இவன் படுத்திருப்பதை அறியாமல், அந்த இடத்துக்குச் சமீபமாய் உட்கார்ந்தார்கள். அவர்களும் இவனைப்போலவே இயேசுவை நேசியாதவர்கள்தான். அவர்களில் ஒருத்தி மற்றவளைப் பார்த்து 'இங்கே நாம் சந்தோஷப்படத்தக்க காரியம் ஒன்றுமில்லை. வீட்டிலே இருந்துவிட்டோமில்லையே' என்றாள். அடுத்தவள் 'இதோ, ஒரு கதைப்புஸ்தகம் இருக்கிறது. அதை வாசிப்போம்' என்றாள். அப்படியே ஒரு கெட்ட கதையை வாசித்துவிட்டு எழும்பிப்போனார்கள். இதை எல்லாம் கேட்டுக்கொண்டிருந்த அந்த வாலிபன் 'இவர்களும் என்னைப்போலவே இருக்கிறார்கள். உலகம் முழுவதும் இப்படித்தான் இருக்கும்போல் தெரிகிறது. ஆதலால் நாம் வீணாய்ச் சஞ்சலப்படுவதில் பிரயோஜனமில்லை. மனம்போனபடி பாவத்தைச் செய்யவேண்டியதுதான்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு, எழுந்திருந்து போகப்போனான். அப்போது வேறு இரண்டு பெண்கள் அதே இடத்துக்கு வருகிறதைக்கண்டு, இவர்கள் என்ன செய்கிறார்கள் பார்ப்போம் என்று மறுபடியும் படுத்துக்கொண்டான். அந்த இரண்டு பிள்ளைகளும் முந்தினவர்கள் உட்கார்ந்திருந்த இடத்திலேயே வந்து உட்கார்ந்தார்கள்.

“என்ன நேர்த்தியான இடம், ஆண்டவருடைய சிருஷ்டிப்பின் மாட்சிமையை இங்கே அதிகமாய்ப் பார்க்கலாம், நாம் இங்கே அடிக்கடி வந்து தியானஞ்செய்கிறது நல்லது” என்று ஒருத்தி சொன்னாள். மற்றவள் “ஆம், நாம் இங்கேயிருந்து நமது வேதாகமத்தை வாசிப்போம்” என்றாள். அப்படியே இருவரும் வாசித்து, அதைப்பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். அப்புறம் இருவரும் முழங்கால்படியிட்டு ஜெபம் செய்தார்கள். அப்பொழுது அந்த வாலிபன் தனக்குள்ளே “ஆ, இவர்கள் எவ்வளவு மனத்திருப்தியும், சந்தோஷமும் உள்ளவர்களாயிருக்கிறார்கள். உற்றுக்கேட்கிறதும் தப்பிதந்தான், என்றாலும் இன்னும் கொஞ்சம் கவனிப்பேன்” என்று சொல்லிக்கொண்டான். அப்புறம் அவர்கள் தேவ அன்பையும், இயேசுசுவாமி தங்களுக்காகப் பட்டபாடுகளையும்பற்றிப் பேசிக்கொண்டிருந்து, சந்தோஷமாய் எழும்பிப்போனார்கள். உடனே அந்த வாலிபன் தன் புத்தியீனத்தை உணர்ந்தான், இயேசுவை நேசிக்கிறதினால் மனச்சந்தோஷம் கிடைக்கும் என்பதை அறிந்துகொண்டான். தனக்காகப் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்ட இரட்சகரிடம் தன் பாவங்களை எல்லாம் அறிக்கையிட்டான். அது முதல் நல்ல குணமும், சந்தோஷமும் உள்ளவனாய் நடந்துகொண்டான்.

பிரியமான என் சிறு நேசா! உன்னை அறியாமலே மற்றவர்கள் கெட்டுப்போக அல்லது நல்லவர்களாக நீ காரணமாயிருக்கிறாய். உன் நடக்கையும், பேச்சும் மற்றவர்களை நன்மைக்காவது தீமைக்காவது இழுக்கிற

கருவிகளாயிருக்கின்றன. ஆகையால் உன் நடக்கையையும், சம்பாஷணையையும், குறித்து எச்சரிக்கையாயிரு.

“மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்” நீதி. 18: 21.

## நான் பிணைப்படுகிறேன்

ஒரு ஞாயிற்றுக்கிழமை சாயந்தரத்திலே ஓய்வுநாள் பள்ளிக்கூடத்தின் வாசலில் ஒரு பையன் நின்றுகொண்டிருந்தான். கெட்டநடக்கையினிமித்தம் அந்தக்கூட்டத்தைவிட்டு அவன் தள்ளப்பட்டவனாயிருந்தான். அவனுடைய தாய் உபாத்தியாயரிடம், “ஐயா, என் மகனை நீங்கள் மறுபடியும் இங்கே சேர்த்துக்கொள்ளவேண்டும்” என்று கேட்டாள். உபாத்தியாயர் அவளை நோக்கி “அவனுக்கு நன்மைசெய்ய எனக்கு அதிகப் பிரியம் உண்டு. ஆனால் அவன் மற்றப் பையன்களையும் கெடுத்துவிடுவான். கெட்டமாதிரியே காட்டிக்கொண்டிருக்கிற ஒரு பையனை இங்கே வைத்துக்கொண்டிருப்பது, இந்தக்கூட்டத்தின் நன்மைக்குக் கெடுதியாகும்” என்று சொல்லிவிட்டார். அப்பொழுது தாய் கண்ணீரோடு “ஐயா, வீட்டில், இங்கேயிருப்பதைவிட, பத்துமடங்கு அதிகம் கெட்டவனாயிருக்கிறான். நீங்கள் இவனை இப்படியேவிட்டால் முழுவதும் கெட்டுப்போவானே” என்றாள். உடனே உபாத்தியாயர் மணியைக்கிலுக்கினார். பையன்கள் எல்லாரும் வந்து கூடினார்கள். “பையன்களே, கெட்டநடக்கையினிமித்தம் போனவாரத்தில் இக்கூட்டத்திலிருந்து நாம் தள்ளிவிட்ட ஜோன்ஸ் மறுபடியும் இங்கே சேர விரும்புகிறான். இனிமேல் அவன் நல்லவனாய் நடப்பான் என்பதற்கு தகுந்த ஜாமீன் இல்லாமல் நாம் அவனை இங்கே சேர்க்கமுடியாது. ஆகையால் அவனுக்காக உங்களில் யாராகிலும் பிணைப்படுவீர்களா?” என்று கேட்டார்.

கொஞ்சநேரம் எல்லாம் அமைதலாயிருந்தது, “அவனுடைய குணம் எங்களுக்கு நன்றாய்த்தெரியும், நாங்கள் பிணைப்படமுடியாது” என்று சில பையன்கள் சொன்னார்கள். இன்னும் சிலர் கவலையற்று, பேசாமல் நின்றார்கள். பாபு என்ற ஒரு சிறுபையன் இதை எல்லாம் பார்த்தபோது, அந்த கெட்ட பையனுக்காகப் பரிதபித்தான். இவனை நமது கூட்டத்தோடு சேர்த்தால் நல்லதே, அவன் சீர்ப்பட அது ஒருவழியாகுமே என்று எண்ணினான், பெரிய பையன்கள் ஒருவராகிலும் பிணைப்பட்டார்களில்லையே என்று நினைத்தான். மெதுவாய் உபாத்தியாயரிடம் போனான். “ஐயா, தங்களுக்குப் பிரியமானால் ஜோன்ஸ்க்காக நான் பிணைப்படுகிறேன்” என்றான். உபாத்தியாயர் “நீ சிறுபையன், பிணைப்படுவதின் பொருள் உனக்குத் தெரியாது” என்றார்.



“இல்லை, ஐயா, எனக்குத்தெரியும், இனி அவன் தப்பிதம் செய்தால், அவனுக்காக என்னைத்தண்டியுங்கள்” என்றான். “அந்தக் கெட்டபையனுக்காக நீ தண்டிக்கப்பட மனப்பூர்வமாய்ச் சம்மதிக்கிறாயா? என்று உபாத்தியாயர் கேட்டார். “ஆம், ஐயா, இனி அவன் தப்பிதம் செய்தால் என்னைத்தண்டியுங்கள்” என்றான் பாபு.

ஜோன்ஸ் உள்ளே அழைக்கப்பட்டான். பையன்களோடு உட்கார இடம்பெற்றான், பாபு தனக்குச் செய்த உபகாரம் அவன் மனதில் ஆழமாய்ப்பதிந்தது. “நான் எவ்வளவு கெட்டவன், இந்த நல்ல பையன் எனக்காகத் தண்டிக்கப்பட ஒருபோதும் நான் இடம்பண்ணக்கூடாது. இனி நான் நல்ல பையனாய் நடப்பேன்” என்று அவன் தனக்குள்ளே தீர்மானம் செய்தான். பிள்ளைகளே! உங்களுக்காகப் பிணைப்பட்ட ஆண்டவருக்கு மனவருத்தம் உண்டாக்காமல் நல்லவர்களாய் நடக்கத் தீர்மானித்திருக்கிறீர்களா? கூட்டமுடிந்தவுடன் பாபு, ஜோன்ஸ் இருவரும் தனிமையான ஒரு இடத்துக்குப் போகிறார்கள். முழங்காலில் நிற்கிறார்கள். அங்கே ஜோன்ஸ் செய்கிற ஜெபம் என்ன? “கர்த்தாவே, இதுவரையும் நான் எல்லாப் பையன்களிலும் கெட்டவனாய் நடந்தேன், இதுமுதல் நான் எல்லாப் பையன்களிலும் நல்லவனாய் நடக்க உமது பரிசுத்த ஆவியைத்தாரும்” என்பதே.

## யோசேப்பு

என் அருமையான பாலிய சிநேகிதரே! பாலியர் மிஷனைச் சேர்ந்த நீங்கள் இப்பொழுது யோசேப்பின் சரித்திரத்தை வாசித்து வருகிறீர்கள். சிறு வயது முதல் கர்த்தருக்குப் பிரியமாய் நடந்துவந்த பரிசுத்த மனுஷர்களில் இவரும் ஒருவர். ஆதலால் இவரிடம் காணப்பட்ட நற்குணங்கள் எவை என்று கண்டுபிடித்து, நாமும் அப்படி நடக்க தேவ ஒத்தாசையினால் பிரயாசப்படுவோமாக.

1-வது, அவருடைய சகோதரர் துன்மார்க்கராய் நடந்து கெட்டுப்போவது அவருக்குப்பிரியமில்லை, ஆகையால் அவர்களுடைய துன்மார்க்கத்தைத் தன் தகப்பனுக்கு அறிவித்துவந்தார். (ஆதி. 37. 2). 2-வது, அவருடைய சகோதரர் அவரைத் பகைத்தபோதிலும், இவர் எவ்வித வஞ்சகமுமின்றி தன் சொப்பனங்களை அவர்களுக்கு அறிவித்தார். (ஆதி. 37. 5) 3-வது, தன்னைப் பகைக்கிற சகோதரருடைய க்ஷேமத்தை விசாரித்துவரும்படி அதிக தூரமான இடத்துக்குத் தகப்பனார் அவரைப்போகச் சொன்னபோது உடனே கீழ்ப்படிந்துபோனார். (37. 14). 4-வது, சிகேமில் சகோதரர் இல்லாததினால் தன் கடமை தீர்ந்தது என்று வீட்டுக்குத் திரும்பி

விடாமல், முழுமனதோடு அவர்களைத் தேடி தோத்தான்மட்டும்போனார். (37. 17). 5 வது, கர்த்தர் தன்னோடிருக்கிறார் என்பதை தன்னுடைய அஞ்ஞான எஜமானும்கூட அறிந்துகொள்ளத்தக்கதாக பரிசுத்தமாய் நடந்தார். (39 3). 6-வது, அவர் எல்லா விஷயத்திலும் உண்மையாய் நடந்துகொண்டபடியால் அவருடைய எஜமான் எல்லாவற்றையும் அவரை நம்பி ஒப்புவித்தான் (39 6). 7-வது, தான் எப்போதும் தேவ சமுகத்திலிருக்கிறதாக உணர்ந்தபடியால், தன்னை நேசிக்கிற தேவனுக்கும், தன்னை நம்பின எஜமானுக்கும் துரோகம்பண்ணாமல் பாவ சோதனையை ஜெயித்தார். (39. 8, 9). 8-வது, மற்றவர்கள் பேரில் அனுதாபமுள்ளவரானபடியால், தன்னுடன் சிறைச்சாலையில் அடைப்பட்டவர்களைப் பார்த்து "உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன?" என்று விசாரித்தார் (40 7). 9-வது, தற்பெருமையுள்ளவராய் நடவாமல் எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்தினார். பிரதானிகளிடம் "சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியதல்லவா" என்றும், (40. 8). பார்வோனைப் பார்த்து "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச் செய்வார்" என்றும் (41. 16) சொன்னார். 10-வது, தீமைக்குத் தீமை செய்யாமல் தன் சகோதரர் தனக்குச் செய்த அநியாயங்களை எல்லாம் மன்னித்துவிட்டார். 11-வது, தன் ஜீவகாலமெல்லாம் தன் தகப்பன் குடும்பத்தை ஆதரித்துவந்தார். இக்குணங்கள் உங்களிலும் காணப்படுவதாக.

## பரீட்சைப்பாடங்கள்

### ஆதியாகமம்

1 சிருஷ்டிப்பு
2 ஏதேன்தோட்டம்.
3 காயீன், ஆபேல்
4 ஜலப்பிரளயம்
5 கோபுரம்கட்டினது
6 ஈசாக்கைபலியிட்டது
7 எலியேசர் பெண்தேடிப்போனது
8 யாக்கோபு ஆசீர்வாதம் பெற்றது
9 பெத்தேலில் நடந்த விசேஷங்கள்
10 யோசேப்பின் சரித்திரம்

Printed at the Church Mission Press, Palamcottah for the Tinnevelly S. P. G. Children's Mission.

OFFICE OF ... BOOKS
REGISTERED
2 - OCT 1913
MADRAS.



The Childrens' Herald.

# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. VIII. ஜூன், 1913. No. 6.

## அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம்.

### ஐந்தாவது சத்தியம்.

'அவர் .... பாதாளத்தில் இறங்கினார், மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்திருந்தார்'.

தங்கவாக்கியம்:—'நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்' வெளி. 1: 18.

முந்தின மாசங்களில் நாலாவது சத்தியத்தைக் கவனித்தோம், இந்த மாசம் ஐந்தாவது சத்தியத்தில் முதல் பாகத்தைக் கவனிப்போம். 'அவர் பாதாளத்தில் இறங்கினார்' நாலாவது சத்தியத்திலே நமதாண்டவரின் சரீரம் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டதாக விசுவாசிக்கிறோம். இந்தச் சத்தியத்திலே அவருடைய ஆத்துமா பாதாளத்தில் இறங்கினதாக விசுவாசிக்கிறோம். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய காரியங்களெவையென்று பார்ப்போம்.

I. பாதாளம் என்பது என்ன? மரித்துப்போன நல்லார், பொல்லாருடைய ஆத்துமாக்கள் இருக்கும் இடமே பாதாளம். இதை ஆதேஸ் என்றும் சொல்லலாம். இதைக்குறித்து நமதாண்டவர் ஏழை லாசருவின் உவமையில் தெளிவாய்ப் போதித்திருக்கிறார். (பரி. லூக். 16: 19-31) ஆதேசில் அல்லது பாதாளத்தில் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒரு பாகத்தில் நல்லவர்களுடைய ஆத்துமாக்களும் மற்றோர் பாகத்தில் பொல்லாதவர்களுடைய ஆத்துமாக்களும் இருக்கின்றன. இவை இரண்டுக்கும் இடையில் ஒரு பெரிய பிளப்பு உண்டு (வா. 26). பொல்லாதவர்களுடைய ஆத்து

மாக்கள் இருக்கும் பாகம் 'வேதனையுள்ள இடம்' என்றும் (வா. 27), நரகத்திலும், அக்கினி ஜுவாலையிலும் அந்த ஆத்துமாக்கள் வேதனைப்படுகிறது என்றும் (வா. 24) அறிந்துகொள்ளுகிறோம். நல்லவர்களுடைய ஆத்துமாக்கள் இருக்கும் பாகம் 'ஆபிரகாமின் மடி' என்றும் (வா. 22) 'பரதீஸ்' என்றும் (பரி. லூக். 23: 43), அழைக்கப்படுகிறது. மரித்தோரின் அடக்கமுறைமையில் சொல்லியபடி அங்கே 'விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சரீரமாகிய சுமை நீங்கி விடுதலையடைந்து ஆனந்த சந்தோஷம் அனுபவித்து வாழுகிறது' (பிலி. 1: 23).

2. பரதீஸ் என்பது நித்திய சதானந்த மோட்சமா? இல்லை, பரதீஸ் மோட்சமல்ல. நமதாண்டவர் சிலுவையில் அறையப்பட்ட கள்ளனைப் பார்த்து 'இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்' என்றார். (பரி. லூக். 23: 43). மூன்றாம் நாளிலே மகதலேனா மரியாளைப் பார்த்து 'நான் இன்னும் என் பிதாவினிடத்துக்கு ஏறிப்போகவில்லை' என்கிறார். பரி. யோவா. 20: 17). ஆகவே பரதீஸ் என்பது பாதாளத்தின் ஓர்பாகமே. அங்கே நல்லவர்களின் ஆத்துமாக்கள் போய்க் கடைசி உயிர்த்தெழுதல் வரையும் இளைப்பாறிக்கொண்டிருக்கிறது. மரித்தவுடனே மனுஷருடைய ஆத்துமாக்கள் நேரே மோட்சத்துக்காவது, நரகத்துக்காவது போய் விடுகிறதில்லை. அப்படியானால் கடைசி நியாயத் தீர்ப்பு அவசியமில்லையே.

3. நமதாண்டவர் பாதாளத்தில் இறங்கினார் என்பதின் பொருள் என்ன? அவருடைய ஆத்துமா மரித்தோருடைய ஆத்துமாக்கள் போகிற பாதாளத்துக்குப் போனது என்பதே அதின் பொருள். இயேசு சுவாமி எல்லா விஷயத்திலும் நம்மைப்போலவே இருந்தார். நம்மைப்போல அவருக்கு ஒரு சரீரமும் ஒரு ஆத்துமாவும் இருந்தது. அவர் மரித்தபோது, அவருடைய சரீரம் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டது. அவருடைய ஆத்துமா, நாம் மரிக்கும்போது நம்முடைய ஆத்துமாபோகிற இடமாகிய பாதாளத்துக்குப் போனது.

போதனை. 1. நாம் நல்லவர்களாய் நடக்கப் பிரயாசப்பட்டால்தான் நம்முடைய ஆத்துமா பரதீசுக்குப்போகும். 2. நாம் மரிக்கும்போது நமது ஆத்துமா நமதாண்டவரின் ஆத்துமாபோன இடத்துக்கே போகிறபடியால் நாம் பயப்பட அவசியமில்லை.

'பயப்படாதே .... நான் மரணத்துக்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன். வெளி. 1: 17, 18.

## சோதனைக்கு இடங்கொடாதே

தாசன் என்ற ஒரு பையன் இருந்தான். அவன் தகப்பனார் ஒரு குருவானவர். அவர்கள் வீட்டுத் தோட்டத்தில் நேர்த்தியான ஒரு மாமரம்



நின்றது. அது நன்றாய்ப் பழுத்திருந்தது. ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை
யிலே குருவானவர் பக்கத்து ஊரிலிருந்த ஆலயத்துக்கு ஆராதனை நடத்த
புறப்பட்டார். போகும்போது மகனைக் கூப்பிட்டு 'தாசன்! இன்று கர்த்த
ருடைய நாள் அல்லவா? இன்று பழம் பறிக்க மரத்தில் ஏறாதே' என்றார்
மகன் 'நல்லது ஐயா' என்றான். மறுபடியும் தகப்பனார் 'என் மகனே, மர
தின் கிட்டப் போகாதே. உன் தகப்பன் கட்டளையை மறந்துவிடாதே
என்றார். தகப்பனார் போன கொஞ்ச நேரத்துக்குப்பின் தாசன் ஜன்னல்
வழியாய் அந்த மரத்தின் பழங்களைப் பார்த்துக்கொண்டு நின்றான். அ
னைச் சோதிக்கிறதற்கு அங்கே ஒருவருமில்லை என்று நீ நினைக்கலாம். அ
படியல்ல, சாத்தான் அங்கே நின்றான். அதைத் தாசனும் அறியான். சா
தான் மெதுவாய்த் தாசனுடைய மனதில், 'அந்தப் பழங்கள் எத்தனை நேர்
தியாய்ப் பழுத்திருக்கிறது; பறித்து வாயில் போட்டால் எவ்வளவு ருசிய
யிருக்கும். இப்பொழுது நீ மரத்தில் ஏறினால் உன்னைத் தடுக்கிறது யார
தாயார் வீட்டுக்குள் அந்தப்பக்கத்தில் இருக்கிறார்கள். ஒருவரும் உன்னை
காணமாட்டார்கள்' என்று சொன்னான். முதலில் தாசனுக்கு இந்த யோ
னைகள் பிரியமாயிருக்கவில்லை. என்றாலும் ஜன்னல் ஓரத்தில் நிற்க, நிற்
அந்தப்பழங்கள் அவன் கண்களையும், அவன் மனதையும் கிரப்பினது
சோதனைக்கு இடங்கொடுத்தான், வீட்டை விட்டு வெளியே வந்தான்
மரத்தில் ஏறினான். சில பழங்களைப்பறித்துச் சேப்புக்குள் போட்டான்
திடீரென்று தோட்டத்துக்கு நேரேயிருந்த வீட்டுக் கதவு திறக்கி
சத்தம் கேட்டது, தாயார் வந்துவிட்டார்கள் என்ற பயம் அவனைப் பிடி
தது. பயத்தினால் அவன் கைகளும் கால்களும் நடுங்கினது. தவறி மர
திலிருந்து கீழே விழுந்தான். வேலைக்காரன் வந்து தூக்கிப்பார்த்தான்
இதோ, தாசன் கழுத்து முறிந்து செத்தவனாய்க் காணப்பட்டான். தாச
நாலாம் கற்பனையையும், ஐந்தாம் கற்பனையையும் மீறினான். நினையாத
நேரத்தில் கீழே விழுந்து மரித்தான், மத்தியானத்திலே தகப்பனார் வீட
டுக்கு வந்தார். "என் மகனே! என் மகனே!" என்று தாவீது ராஜாவை
போல புலம்பினார். என் பிரியமான பிள்ளைகளே! நீங்கள் சோதனைக்
இடங்கொடுத்து பாவஞ்செய்யும்போது மரத்திலிருந்து விழுவீர்கள் என்
நான் சொல்லமாட்டேன். இதைவிட மகா பயங்கரமான ஒரு பெரி
மோசம் உண்டு. நீ பாவ சோதனைக்கு இடங்கொடுக்கும்போது உன்
ஆத்துமாவை பாவத்தினாலே சாகப்பண்ணுகிறாய். நீ மரிக்கும்போது உன்
ஆத்துமா பாதாளத்திலே பொல்லாதவர்கள் இருக்கும் இடத்துக்குப் போ
கும். கடைசி நியாயத்தீர்ப்பு நாளிலே (உன் ஆத்துமாவும் சரீரமு
சேர்ந்து) நீ நித்திய நரகத்திலே தள்ளப்படுவாய். ஆ! அதுதான் பயங்கர
ஆதலால் இப்பொழுதே நல்ல வழியில் நடக்கப் பிரயாசப்படுங்கள்.

## இனிமேல் பயம் இல்லை.

எமிலி என்ற சிறுபெண் ஒருநாள் தெருவழியாய் நடந்துபோனாள். அவளுக்கு எதிரே, அடக்கம்பண்ணுவதற்காக மரித்துப்போன ஒரு பிரேதத்தைச் சிலர் சுமந்துகொண்டுவந்தார்கள். அதைக் கண்டு அவள் பயந்து, அலறிக்கொண்டு வீட்டுக்கு ஓடினாள். பயத்தினால் உடனே அவளுக்கு காய்ச்சல் உண்டாயிற்று. ஒரு வாரமாய்ப் படுக்கையிலிருந்து அப்புறம் சுகப்பட்டாள். ஒருநாள் அவள் தன் தகப்பனைப் பார்த்து, "ஐயா, பிரேதத்தைக் காண்பது எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது" என்றாள். தகப்பன் "இல்லை அம்மா, அது நீ நினைக்கிறபடி பயங்கரமானதல்ல. உனக்கு ஒரு சரித்திரம் சொல்லுகிறேன் கேள்:—42 வருஷங்களுக்கு முன்னே ஒருநாள் மரித்துப்போன ஒரு மனிதனை அடக்கம்பண்ணக் கொண்டுபோனார்கள். அநேக ஜனங்கள் அந்தப் பாடையின் பின்னாலே போனார்கள். 8 வயதுள்ள ஒரு சிறுவனும் சத்தமிட்டு அழுதுகொண்டுவந்தான். பிரேதம் கல்லறைக்குள் இறக்கப்பட்டது. அந்தச் சிறுவன் கொஞ்சமும் பயமில்லாமல் 'என்னையும் என் தகப்பனோடு கூட அடக்கம்பண்ணிவிடுங்கள்' என்று மருகி அழுதான். எல்லாரும் அதைப் பார்த்துப் பரிதபித்தார்கள். அந்தப் பையன் பிரேதத்தைப் பார்த்துப் பயப்படவில்லையல்லவா? அந்தச் சிறுவன் இப்பொழுது 50 வயதுள்ள பெரிய மனிதனாயிருக்கிறான். ஆயினும் தன்னுடைய 8-ம் வயதில் நடந்த அந்த சங்கதியை இன்னமும் அவன் நன்றாய் ஞாபகத்தில் வைத்திருக்கிறான்" என்றார். அப்பொழுது எமிலி 'அவன் பிரேதத்தைக் கண்டு பயப்படவில்லை என்பதும், இன்னமும் அதை மறந்துபோகாமலிருக்கிறான் என்பதும் உங்களுக்கு எப்படித்தெரியும்?' என்று கேட்டாள். அதற்குத் தகப்பன் 'நான்தான் அந்தச் சிறு பையன். இன்னும் அது எனக்கு நல்ல ஞாபகமிருக்கிறது, அப்போது நான் என் பிரேதத்தைக் கண்டு பயப்படவில்லை? சொல் பார்ப்போம்' என்றார். அந்தப்பிள்ளை சற்றுநேரம் யோசித்துவிட்டு, 'அது நீங்கள் அதிகமாய் நேசித்த, உங்கள் தகப்பனாருடைய பிரேதமாயிருந்தபடியால் நீங்கள் பயப்பட்டிருக்கமாட்டீர்கள்' என்றாள். 'ஆம், அதினாலேதான் நான் பயப்படவில்லை, மேலும் நீ பயப்படாதிருப்பதற்கு இன்னொர் முகாந்தரம் உண்டு. நீ மிகவும் அருமையாய் நேசிக்கிற ஒருவர், அதாவது: கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, அவருடைய சரீரம் கல்லறையில் இருந்தினாலும், அவருடைய ஆத்துமா பாதாளத்துக்குப் போனதினாலும் உனக்கு மரணத்தைப்பற்றியாவது, பிரேதத்தைப்பற்றியாவது, பயம் இருக்கவேண்டியதில்லை அல்லவா?' என்று தகப்பனார் சொன்னார்.

Printed at the Church Mission Press, Palamcottah for the
Tinnevelly S. P. G. Children's Mission.



The Childrens' Herald

# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. VIII. ஜூலை, 1913. No. 7.

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்

### ஐந்தாவது சத்தியம்—தொடர்ச்சி.

'மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்திருந்தார்'.

*தங்கவாக்கியம்:—"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" 1 கொரி. 15: 20.*

நமதாண்டவர் அடக்கம்பண்ணப்பட்டபோது, அவருடைய சீஷர்கள் தங்கள் ஆண்டவரை நிலையாய் இழந்துவிட்டதாக நினைத்தார்கள். அவருடைய சத்துருக்கள் அவரை அப்படியே தொலைத்துவிட்டோம் என்று எண்ணிக்கொண்டார்கள். ஆயினும் இந்தச் சத்தியத்திலே நாம் அறிக்கையிடுகிறபடி இயேசுசுவாமி "மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்திருந்தார்."

1. அவர் எப்போது உயிரோடே எழுந்தார்? இந்த சத்தியத்திலே மூன்றாம் நாள் என்று சொல்லியிருக்கிறது. அதாவது அவர் அடக்கம்பண்ணப்பட்ட நாளிலிருந்து மூன்றாவது நாள். தாம் மூன்றாம் நாளில் உயிரோடெழுந்திருப்பதாக இயேசு முன்னமே தமது சீஷர்களுக்குச் சொல்லியிருந்தார் (பரி. லூக் 18: 33). அப்படியே வாரத்தின் முதல் நாளில், அதாவது ஞாயிற்றுக்கிழமையில், இயேசு உயிரோடே எழுந்தார். ஞாயிற்றுக்கிழமைக்குக் 'கர்த்தருடைய நாள்' என்றும் பேர்.

2. 'மரித்தோரிடத்திலிருந்து' என்பதின் பொருள் என்ன? நமதாண்டவரின் ஆத்துமா மரித்தோரின் ஆத்துமாக்கள் இருக்கும் பாதியில்

இருந்தது, அவருடைய சரீரம் மற்ற மரித்தோருடைய சரீரத்தைப்போல் கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டிருந்தது. மூன்றாம் நாளிலே அவருடைய ஆத்துமா அவருடைய சரீரத்துடன் சேர்ந்து, மரித்தோரின் இடமாகிய பாதாளத்தையும், கல்லறையையும் விட்டு எழும்பினது என்பதே அதின் பொருள்.

3. எழுந்திருந்திருந்தார் என்னும் வார்த்தை எதைக்காட்டுகிறது? எழுந்திருந்தார் என்னும் வார்த்தை அவருடைய உயிர்த்தெழுதலின் நிச்சயத்தைக் காட்டுகிறது. முதல் ஈஸ்டர் பண்டிகையன்று அதிகாலையிலே மகதலேனாமரியாளும் மற்ற மரியாளும் இயேசுவின் கல்லறைக்கு வந்தார்கள். கல்லறையை அடைத்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கக் கண்டார்கள். "அவர் இங்கேஇல்லை, அவர் உயிரோடே எழுந்தார்" என்று சொன்ன தேவதூதனைத் தரிசித்தார்கள். சீஷர்களிடம்போய்ச் சொன்னார்கள். பரி. பேதுருவும், யோவானும் வந்து கல்லறையைப் பார்த்தார்கள். இயேசுவின் சரீரம் கல்லறையில் இல்லை. அப்பால் மகதலேனா மரியாள் இயேசுசுவாமியை முதலாவதாகக் கண்டாள். அந்த நாளிலேயே பரி. பேதுருவுக்கும், எம்மாவூருக்குப்போன சீஷருக்கும், அதற்கப்பால் கூடியிருந்த அப்போஸ்தலருக்கும் தரிசனமானார். ஆம். அவர் மரித்தது எப்படி நிச்சயமோ, அப்படியே அவர் உயிர்த்தெழுந்ததும் நிச்சயமே.

"போதனை" 1. கிறிஸ்துநாதரின் உயிர்த்தெழுதலே கிறிஸ்துமார்க்கத்தின் அஸ்திபாரமாயிருக்கிறது. 2. அவருடைய உயிர்த்தெழுதலினாலேயே நமது ஆத்துமாவுக்கு ஜீவன் கிடைக்கிறது. 3. அவர் உயிரோடெழுந்ததினாலே நாமும் கடைசிநாளில் உயிரோடெழுப்பப்படுவோம் என்பது நிச்சயம்.

"நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" கொலோ 3. 1.

## மூத்த சகோதரன்.

அமெரிக்காக் கண்டத்திலே 'லேக் சுப்பீரியர்' என்ற ஓர் பெரிய ஏரியுண்டு. உலகத்தில் சுத்தமான தண்ணீர் உள்ள ஏரிகளில் இதுதான் மிகப்பெரிது. ஒருநாள் சாயங்காலத்திலே இரண்டு பையன்கள் அந்த ஏரிக்கரையிலே உட்கார்ந்து, தூண்டில்போட்டு மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் ஒரே தகப்பனுடைய பிள்ளைகள். அடிக்கடி அந்த ஏரிக்குப்போய் அவர்கள் மீன் பிடிப்பதுண்டு. அன்று அவர்கள் நெடுநேரமாய் மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். மூத்தவனுக்கு அதிக மீன்கள் அகப்பட்டிருந்தது, இளையவன் கொஞ்ச மீன்கள்தான் பிடித்



திருந்தான், மூத்தவன் இளையவனைப்பார்த்து "நாம் வந்து வெகுநேரமாயிற்று. தாயார் கோவிப்பார்கள். வீட்டுக்குப்போவோம் வா" என்று சொல்லி வீட்டுக்குப் புறப்பட்டான். இளையவன் உடனே புறப்படாமல் சற்றே தாமதித்தான். ஒரு பெரிய மீன் அகப்பட்டுக்கொள்ளாதா என்று எண்ணினான். அவசரமாய்த் தூண்டிலை வீசினான். கம்பு வழுவித் தண்ணீருக்குள் விழுந்தது. தூண்டில்க் கம்பை எடுக்கப்பிரயாசப்பட்டான். தானும் தடுமாறித் தண்ணீருக்குள் விழுந்தான், எவ்வளவு பிரயாசப்பட்டும் கரையேற முடியவில்லை. உடனே சத்தமிட்டான். அவன் போட்ட சத்தம் அவன் சகோதரனுக்கு எட்டினது. சற்று தூரம் போய்விட்ட தமையன் அதிவேகமாய் ஓடிவந்தான். தண்ணீருக்குள் குதித்தான். மரணத்தருவாயிலிருந்த தன் தம்பியை சுகமாய்க் கரையில் கொண்டுவந்து சேர்த்தான். இந்தச் சரித்திரமானது பாவமாகிய சமுத்திரத்தில் விழுந்து கெட்டுப்போன மனுஷனைக் காப்பாற்றும்படி, தேவகுமாரன் இந்த உலகத்தில் வந்து மரித்து, உயிரோடே எழுந்ததை நமக்குக் காட்டுகிறது. எப்படியெனில், தண்ணீருக்குள் விழுந்த தம்பியை இரட்சிக்க தமையனும் தண்ணீருக்குள் குதிக்கவேண்டியதாயிருந்தது. அப்படியே நமதாண்டவரும் பாவிகளாகிய நம்மை இரட்சிக்க இந்தப் பாவ உலகத்துக்கு வந்து பாவத்தின் தண்டனையாகிய மரணத்தையும் அடைந்தார். தமையன் தண்ணீருக்குள் குதித்ததினாலேயே தம்பி இரட்சிக்கப்பட்டான். அப்படியே நமதாண்டவரும் மரித்தோரிடத்திலிருந்து உயிர்த்தெழுந்ததினாலேயே, நமக்கு ஜீவன் கிடைக்கிறது.

## ஞானஜீவன்.

ஜேம்ஸ் என்ற பையன் ஒருநாள் அதிகாலையில் தன்மட்டில் உட்கார்ந்துகொண்டு "நான் பெரிய ஆளாகும்போது அதிகமாய் நன்மைசெய்வேன். நான் கவர்னர் ஆனால் ஜனங்களுக்கு உபயோகமான நல்ல சட்டங்களை ஏற்படுத்துவேன். நான் ஒரு குருவானால் ஏழைகளுக்கு அதிகமாய்ப் பணம் கொடுப்பேன்" என்று சொல்லிக்கொண்டான். சிறு பிள்ளைகள் அடிக்கடி இவனைப்போல நினைக்கிறதுண்டு. ஜேம்ஸ் இப்படி நினைத்தவுடனே அவன் முகம் துக்கமுள்ளதாய்க் காணப்பட்டது. ஏனென்றால் இப்படிப்பட்ட நன்மைகளைச்செய்ய நான் இன்னும் அநேக வருஷங்கள் காத்திருக்கவேண்டுமே! இப்பொழுதே நான் என் நல்லவனாய் நடக்கக்கூடாது என்று நினைத்தான். உடனே முழங்கால்படியிட்டு "கர்த்தாவே நான் நல்ல பையனாய் நடக்க எனக்கு உதவி செய்யும்" என்று ஜெபம் பண்ணினான். அப்புறம் தான் பள்ளிக்கூடத்தில் காட்டவேண்

டிய பாடத்தை எழுதத் தொடங்கினான். அப்பொழுது அவனுடைய தாய் அவனைக் கூப்பிட்டு "ஜேம்ஸ், தம்பியை சற்றுநேரம் பார்த்துக்கொள்" என்றாள். அவனுக்குத் தன் பாடத்தைக் குறையாய் வைத்துவிட்டுப்போக மனம்இல்லை. என்றாலும் தன் தாய்க்கு உதவிசெய்ய விரும்பினான். உடனே தன் சிலேற்றை வைத்துவிட்டுப்போய் தன் தம்பியைப்பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்பால் ஜேம்ஸ் பள்ளிக்கூடத்துக்குப் போனான். பிள்ளைகள் கணக்குச்செய்ய வேண்டிய நேரம் வந்தது. உபாத்தியாயர் கரும்பலகையில் ஒரு கணக்கை எழுதினார். பிள்ளைகள் எல்லாரும் அதைப்பார்த்து அந்தக் கணக்கை சிலேற்றில் எழுதி செய்யத்தொடங்கினார்கள். யோசேப்பு என்ற ஒரு பையன்மாத்திரம் எழுதாமல் அழுதுகொண்டு நின்றான். ஏனென்றால் அவன் சிலேற்றுப்பென்சலைத் தொலையவைத்துப்போட்டான். எழுதப் பென்சல் இல்லாததால் சும்மா நின்றான். ஜேம்ஸ் தன் நீண்ட பென்சலை இரண்டாய் ஒடித்து யோசேப்புக்குப் பாதிகொடுத்தான்.

ஜேம்ஸ் சாயந்தரம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன் தகப்பனார் அவனைக் கடைக்கு அனுப்பினார். வழியிலே வயதுசென்ற ஓர் ஸ்திரீ மாம்பழங்களை விற்கும்படி கொண்டுபோனாள். அன்று மழை பெய்திருந்தபடியால் வழியெங்கே சகதியிருந்தது. அந்த ஸ்திரீ திடீரென்று வழுவிக் கீழே விழுந்தாள். ரோட்டில் நின்ற சில பையன்கள் இதைப்பார்த்துச் சிரித்தார்கள். ஆனால் ஜேம்ஸ் உடனே ஓடிப்போய் அவளைத்தூக்கிவிட்டு, சிதறிப்போன அவளுடைய மாம்பழங்களையும் அவளுக்குப் பொறுக்கிக்கொடுத்து உதவிசெய்தான்.

இவன் இயேசு ரட்சகரிடமிருந்து ஞானஜீவனைப்பெற்று நடக்கிற ஓர் நல்லபையன் அல்லவா?

Printed at the Church Mission Press, Palamcottah for the
Tinnevelly S. P. G. Children's Mission.



REGISTERED OCT 1913 MADRAS

The Childrens' Herald.

# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. VIII. ஆகஸ்ற்று, 1913. No. 8.

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்

### ஆறாவது சத்தியம்.

"அவர் .... பரலோகத்துக்கு எழுந்தருளி, 'சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார்."

தங்கவாக்கியம்:— "அவர் . . . தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார்" எபி. 12: 2.

போனமாசம் நமதாண்டவரின் உயிர்த்தெழுதலைப்பற்றிப் படித்தோம். இந்த மாசம் அவர் பரலோகத்துக்குப்போன விபரத்தைப்பற்றிக் கவனிப்போம்.

1. பரலோகத்துக்கு எழுந்தருளினார். நமதாண்டவர் உயிரோடெழுந்தபின் 40 நாள் இந்த உலகத்திலிருந்தார். அந்த நாட்களில் அடிக்கடி தமது சீஷர்களுக்குத் தரிசனமானார். தம்மை உயிரோடிருக்கிறவராக அவர்களுக்குக் காண்பித்தார். தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி அவர்களுடனே பேசினார். பரிசுத்த ஆவியைப் பெறுமளவும் எருசலேமிலே அவர்களைக் காத்திருக்கச் சொன்னார். அப்பால் உலகமெங்கும்போய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டார். 40-ம் நாளில் பெத்தானியா ஊருக்குச் சமீபமாய் ஒலிவமலையின்மேல் நின்று தமது சீஷர்களை ஆசீர்வதித்தார். ஆசீர்வதிக்கும்போதே ஒரு மேகம் வந்து அவரை எடுத்துக்கொண்டது. அந்த மேகத்தின்மேல் அவர் பரலோகத்துக்கு எழுந்தருளிப்போனார். சீஷர்கள் கவலைப்பட்டு, வானத்தை அண்

ணாந்து பார்த்துக்கொண்டு நின்றார்கள். தேவதூதர்கள் வந்து அவர்களை தேறுதல்படுத்தி அனுப்பினார்கள்.

2. வலதுபாரிசம். நமதாண்டவர் பரலோகத்துக்குப்போய் பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார். பரி. ஸ்தேவான் தேவனுடைய 'வலதுபாரிசத்திலே' இயேசுவானவரைக்கண்டார்(அப் 7. 55) "நீர் என்னுடைய வலது பாரிசத்திலே உட்காரும்" என்று பிதா குமாரனுக்குச் சொன்ன தீர்க்கதரிசனமும் உண்டு (சங். 110: 1.) வலது பாரிசம் என்பது நமதாண்டவர் உயர்த்தப்பட்டிருக்கும் உன்னதமான நிலமையை நமக்குக்காட்டுகிறது. பிலி. 2: 9. பார்.

3. வீற்றிருக்கிறார். இதுவரை நாம் கவனித்த சத்தியங்களில் முன்னமே நடந்த காரியங்களை ஒப்புக்கொண்டு விசுவாசிக்கிறோம். இதிலே வீற்றிருக்கிறார் என்பது இப்பொழுதும் நடந்துகொண்டிருக்கிற காரியத்தை நமக்குக் காட்டுகிறது. அதாவது நமதாண்டவர் பரலோகத்துக்குப்போனது முதல் இதுவரையும் அங்கேயே வீற்றிருக்கிறார். உலகத்தின் முடிவுபரியந்தம் அங்கேயே வீற்றிருப்பார். வீற்றிருக்கிறார் என்பதினால் குமாரனும் பிதாவைப்போல 'சம மகிமையும், சம நித்திய மகத்துவமும் உள்ளவர்' என்றும், அவர் நம்முடைய ராஜாவாகவும், ஆசாரியராகவும் இருக்கிறார் என்றும் அறிந்து கொள்ளுகிறோம். சங். 110: 1 ல் வலதுபாரிசத்தில் உட்காரும் என்று சொல்லியிருப்பது ராஜாவாக அவர் செய்யும் ஆளுகையைக் குறிக்கிறது. 1 கொரி. 15: 25. பார். அவர் நம்முடைய ராஜாவாக, திருச்சபையை, தமது ஆவியினாலே ஆண்டு நடத்துகிறார். நமக்கு ஒரு இடத்தை ஆயத்தம்பண்ணுகிறார். நமது ஜெபத்துக்கு உத்தரவாக தமது கிருபையை நமக்குத்தருகிறார். நமது ஆசாரியராக தமது பலியை நினைப்பூட்டி பிதாவின் சமுகத்திலே நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் எபி. 7. 25.

போதனை 1. நமதாண்டவர் வீற்றிருக்கும் மேலோகத்தின்மேல் நாம் ஆசைவைத்து எப்போதும் பரம காரியங்களைச் சிந்திக்கவேண்டும். 2. அவர் நமக்காக எப்போதும் பரிந்துபேசுகிறபடியால் நமக்குண்டாகும் சோதனைகளிலும், துன்பங்களிலும் தைரியமாயும், பொறுமையாயும் இருக்கவேண்டும்.

"கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" ரோமர் 8: 34.

## இராஜ குமாரன்

மிதுனபுரி என்ற இராஜ்யத்திலே ஒரு நல்ல அரசன் இருந்தார். அவருடைய பட்டத்துக் குமாரன் 16 வயதாயிருக்கும்போது, தமது குடிகளை



நேரில்பார்த்து, அவர்களுடைய கஷ்டங்களைத் தீர்க்க விரும்பினார். ராஜகோலத்துடன்போனால் ஜனங்களுடைய சரியான நிலமையை அறிந்துகொள்வது கூடாதகாரியம். ஆகையால் ஒரு ஏழையைப்போல் வேஷமாறிப் புறப்பட்டார். அநேக ஊர்களைச் சுற்றிப்பார்த்தார். ஜனங்களுடைய அறைகுறைகளைத் திட்டவட்டமாய் அறிந்தார். பல பெரிய நன்மைகளைச்செய்தார். ஆயினும் அவரைத் தங்கள் இராஜகுமாரன் என்று ஒருவரும் அறிந்து கொள்ளவில்லை. ஒருநாள் அவர் ஒரு சிறு ஊருக்கு வந்தார். நேரம் இருட்டிவிட்டது. அந்த ஊராருக்கு நன்மை செய்யும்படியாகவே அவர் வந்தார். ஆயினும் அவ்வூரில் அவரை ஏற்றுக்கொள்வார் ஒருவருமில்லை. அநேகவீடுகளில் அவர் தங்குவதற்கு இடம்கேட்டும், கிடையாமல், கடைசியாக ஊருக்குவெளியே இருந்த ஒரு சிறு வீட்டுக்கு வந்தார். அவ்வீட்டுக்காரன் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு, உபசரித்தான். அவ்வூர் நிலமையையும், அந்த ஏழை மனுஷனுடைய கஷ்டங்களையும் இராஜகுமாரன் திட்டமாய் அறிந்துகொண்டார். மறுநாள் காலையில் அவர் அவ்வீட்டைவிட்டுப் புறப்படும்போது, வீட்டுக்காரனைநோக்கி "உன் கஷ்டங்களையெல்லாம் ராஜாவினிடம்போய்ச்சொல்லு, உனக்கு உதவி கிடைக்கும்" என்று சொல்லிவிட்டுப்போனார்.

அந்தக்குடியானவன் தன் வருத்தங்களையெல்லாம் ராஜாவினிடத்தில் சொல்லும்படி புறப்பட்டான். அவன் ராஜசமுகத்தில் பிரவேசித்தவுடனே மகா சந்தோஷமான ஒரு காரியத்தைக் கண்டான். தன் வீட்டுக்கு வந்தவர் இளவரசன் என்று அறிந்தான். அவர் ராஜாவின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்தான். தனக்காகவே ராஜகுமாரன் ராஜாவிடத்தில் பரிந்துபேசுகிறதையும்கேட்டான். அவன்மனம்சந்தோஷத்தால்நிறைந்தது. தனக்கு எப்படியாவது சகாயம் கிடைக்கும் என்று நம்பினான். இனி தனக்கு யாதொரு குறைவுமில்லையென்று ஆனந்தம் அடைந்தான். என் அருமையான பிள்ளையே! உன்னை நேசித்து, உனக்காக இந்தப்பூவுலகில் ஓர் ஏழையைப்போல வந்த உன் ஆண்டவர் இப்பொழுது பரலோகத்திலே பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் மகிமையோடு வீற்றிருக்கிறார். உனக்காகப் பரிந்து பேசுகிறார், நீ அவருடைய பாதுகாப்புக்குள்தான் இருக்கிறாய். ஆகையால் தைரியமாயிரு. எந்தத் துன்பத்துக்கும், சோதனைக்கும் பயப்படாதே.

## இன்பநாடு

எடின்பர்க் என்ற பட்டணத்தில் ஒரு குருவானவர் சில நாட்களாய் விசேஷித்த கூட்டங்கள் வைத்து நடத்தி பிரசங்கம்பண்ணிவந்தார். ஒவ்

வாரு நாளும் திரளான ஜனங்கள் அவருடைய பிரசங்கத்தைக் கேட்ப
ற்கு வந்து கூடுவார்கள். ஒருநாள் சாயங்காலத்தில் அந்த ஜனங்களின்
த்தியிலே வயதுசென்ற ஒரு ஏழை மனுஷியும் வந்தாள். அவளைக் கண்ட
டனே சிலர் 'இந்தக்கிழவியும் வந்துவிட்டாள்' என்று கேலிபண்ணிச்
ரித்தார்கள். அந்த சந்தடியை அமர்த்தும்படி குருவானவர், முதல்
ரிசையிலிருந்த பிள்ளைகளைப்பார்த்து 'ஒரு பாட்டுப் பாடுங்கள்' என்று
சொன்னார். 'எந்தப் பாட்டைப் பாடவேண்டும்' என்று அவர்கள் கேட்
டார்கள். "மேலோக இன்ப நாட்டில் நித்ய வீடுண்டே" என்ற பாட்
டைப் பாடுங்கள் என்றார். உடனே அந்தப் பிள்ளைகள் எழுந்து நின்று,
வெகு இனிமையாய் அந்தப் பாட்டைப் பாடினார்கள். 'தேவ ஆசனத்தில்
மீட்பர் வீற்றிருப்பார்' என்று அவர்கள் பாடினபோது அந்த ஏழை மனுஷி
யின் உள்ளம் முழுவதும் பரலோகத்தை நோக்கினது. "சீக்கிரம் மோட்ச
நகர் நானும் சேருவேன்" என்ற கவியை அவர்கள் பாடத்தொடங்கின
வுடனே அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. கூட்டம்
முடிந்தபின் அவள் வீட்டுக்குப்போனாள். தன் பிள்ளைகளிடம் "நான்
மேலோக நாட்டிற்குப் போகவேண்டும் என் ஆண்டவர் அங்கே இருக்
கிறார். வாருங்கள், ஜெபம்பண்ணுவோம்" என்றாள். அதுமுதல் அந்த
வீட்டில் மேலோக இன்பநாட்டை வாஞ்சிக்கும் ஆசையும் ஜெபமும்
வளர்ந்துவந்தது. என் சிறு நேசா! உனக்கு இந்த வாஞ்சை உண்டா?

இலங்கும் அந்த வீட்டில் பாலர் பாடுவார்;
தேவ ஆசனத்தில் மீட்பர் வீற்றிருப்பார்;
பாலர் கீதங்கள்பாடி ஓய்வின்றி ஆர்ப்பரிப்பார்
ஜோதிவீசும் அவ்வீட்டை என்று பார்த்தானந்திப்பேன்!

ஆ! ஆனந்தமாம் பேரின்பமுண்டாம்.
நல் மீட்பரின் வீட்டில் பேரின்பமுண்டாம்.

## பரீட்சைப் பாடங்கள்.

பரி. லூக்கா சுவிசேஷத்திலுள்ள:—

1 கீதங்கள்.
2 அற்புதங்கள்.
3 உவமைகள்.

Printed at the Church Mission Press, Palamcottah, for the
Timnevelly S. P. G. Children's Mission.



The
Children's Herald.

பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. VIII. செப்டம்பர், 1913. No. 9.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2 - OCT 1913

## அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம்.

### ஏழாவது சத்தியம்

'அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும்
நியாயந்தீர்க்க வருவார்'.

தங்கவாக்கியம்:—'கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார்' 1 தெச. 4. 16.

நமதாண்டவர் இந்தப் பூலோகத்தைவிட்டுப் பரலோகத்துக்குப் போயிருக்கிறார் என்று ஆறுவது சத்தியம் நமக்குக் காட்டுகிறது. ஏழாவது சத்தியம் அவர் 'அவ்விடத்திலிருந்து' அதாவது பிதாவின் வலதுபாரிசத்திலிருந்து திரும்பவும் இந்தப் பூலோகத்துக்கு வருவார் என்று காட்டுகிறது.

1-வது, அவர் எப்படிவருவார் என்று பார்ப்போம். முன்னே அவர் தாழ்வான நிலைமையுடையவராய் இங்கேவந்தார். இனி அப்படியல்ல, மகா மேன்மையோடும், மகிமையோடும் வருவார். ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வருவார். வல்லமையின் தூதரோடும், சுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படுவார். முன் எவ்விதமாய் மேகங்களின்மேல் எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மேகங்களின்மேல் வருவார் (அப். 1. 11. பார்) "இதோ, மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்" வெளி. 1: 7. உன் கண்கள் ராஜாவை மகிமைபொருந்தினவராய்க் காணும்.'

2-வது, அவர் எப்போது வருவார்? திடிரென்று அவர் வருவார், நாம் நினையாத நேரத்திலே அவர் வருவார். அவர் வரும் நாளையாவது நாழிகையையாவது பிதா ஒருவர் தவிர வேறொருவரும் அறியார்கள். அந்த நாள் அனைவர்மேலும் ஒரு கண்ணியைப்போலவரும். நோவாவின் காலத்தில் நினையாத நேரம் ஜலப்பிரளயம் வந்ததுபோலவும், லோத்தின் நாட்களில் திடிரென்று சோதோம், கொமோராப்பட்டணங்களின்மேல் அக்கினியும் கந்தகமும் இறங்கினதுபோலவும் அவர் வரும் நாளிலும் நடக்கும். ஆகையால் எச்சரிக்கை! "நீங்கள் நினையாத நாழிகையில் மனுஷ குமாரன் வருவார்" பரி. மத். 24: 44.

3-வது, அவர் ஏன் வருவார்? 'உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந்தீர்க்க அவர் வருவார்'. உயிருள்ளோர் என்பது நமதாண்டவர் வரும் சமயத்தில் இவ்வுலகில் உயிரோடே இருக்கிறவர்களையும், மரித்தோர் என்பது ஆதாமுதல் மரித்துப்போன எல்லா மனுஷரையும் குறிக்கும். ஆகவே ஒரு மனுஷனும் அவருடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பமுடியாது. எல்லாரையும் அவர் நியாயந்தீர்ப்பார்; ஒவ்வொருவருடைய நினைவுகளைக் குறித்தும் (ரோம. 2: 16 ) வார்த்தைகளைக் குறித்தும் (பரி. மத். 12 36.) செய்கைகளைக் குறித்தும் (பரி. யோவா. 5: 29) நியாயந்தீர்ப்பார். நீதிமான்களைத் தமது வலது பக்கத்திலும், பொல்லாதவர்களைத் தமது இடது பக்கத்திலும், நிறுத்தித் தீர்ப்புக்கூறுவார். பொல்லாதவர்களை நித்திய அக்கினியிலே தள்ளி, நீதிமான்களுக்கு நித்திய ஜீவனைக்கொடுப்பார், பரி. மத். 25. 31—47 பார்.

**போதனை.** 1. உன் ஆண்டவர் நினையாத நேரத்தில் வருவார். ஆகையால் எப்போதும் ஆயத்தமாயிரு. 2. அவர் உன்னை நியாயந்தீர்க்க வருகிறார். ஆகையால் உன் நினைவு, வார்த்தை, செய்கைகளைக்குறித்து எப்போதும் கவலையாயிரு.

'தேவரீர் எங்களுக்கு நியாயாதிபதியாக வருவீரென்று விசுவாசிக்கிறோம்,' ஆகையால் 'உமது விலையுயர்ந்த இரத்தத்தால் மீட்டுக்கொண்ட உமதடியாருக்குச் சகாயஞ்செய்ய உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்.'

## நீ ஆயத்தமா?

ஒரு நாள் நான் திருநெல்வேலியிலிருந்து மதுரைக்கு ரெயில் ஏறிப்போனேன். நான் இருந்த வண்டியில் இன்னும் சிலரும் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் கடம்பூர் ஸ்டேஷனில் இறங்கவேண்டியவன். ஆயினும் அவன் கொஞ்சமும் கவலையில்லாமல் தூங்கிக்கொண்டிருந்தான். கடம்பூர் இன்னும் அதிகத்தூரத்திலிருக்கிறதென்றும் ரெயில் அங்கேபோய்ச்



சேர இன்னும் அதிக நேரம் செல்லும் என்றும் நினைத்துக்கொண்டான். ரெயில் கடம்பூருக்குச் சமீபமாய் வந்துவிட்டது. ஸ்டேஷனுக்குக்கிட்ட வந்தவுடனே வழக்கமாய்க் கொடுக்கிற எச்சரிப்பின் சத்தம் கொடுத்தது. இது எப்போதும் கேட்கிற சத்தம்தானே என்று நினைத்து அதையும் அசட்டைசெய்துவிட்டான். ரெயில் ஸ்டேஷனில் வந்து நின்றது. ஒரு வேலைக்காரன் கடம்பூர், கடம்பூரென்று கூவினான். அந்த மனிதன் அவனையும் பலகாரம் விற்கிறவன் என்று எண்ணிவிட்டான். சற்று பொறுத்து ரெயில் மெதுவாய் ஒரு சத்தமிட்டுக்கொண்டு கடம்பூர் ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்டது. இப்பொழுதுதான் அவன் மெள்ள எழுந்திருந்து பக்கத்திலிருந்தவர்களிடம் விசாரித்தான். கடம்பூரைவிட்டு ரெயில் கடந்துவிட்டதென்று அறிந்தவுடனே, 'சீச்சீ, தூங்கியல்லோவிட்டேன், ஐயோ! ரெயில்போகுதே, போகுதே' என்று புலம்பினான். இனி புலம்பி என்ன பிரயோஜனம்! யார் இவனுக்காக ரெயிலை நிறுத்தி இவனை இறக்கிவிடப் போகிறார்கள். அழுதுகொண்டே அடுத்த ஸ்டேஷன் மட்டும் வந்தான் அதிகமாய் வந்த தூரத்துக்குரிய கூலி இரட்டிப்பாய்க்கொடுக்க நிர்வாகமில்லாமல் தண்டனைக்குள்ளானான்.

என் அருமையான பாலியரே! நமதாண்டவரின் வருகைக்கு நாம் எப்போதும் ஆயத்தமாய் காத்திருக்கவேண்டும் என்று இந்த சரித்திரம் நமக்குக் காட்டுகிறதல்லவா? "இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள்" என்கிற சத்தம் நீ நினையாத நேரத்தில் கேட்கும். ஆகையால் எப்போதும் ஆயத்தமாயிரு, இல்லாவிட்டால் கதவு பூட்டப்பட்டுப்போம், கதவு பூட்டப்பட்டபின்பு வெளியே நின்று தட்டுவது விருதாவாயிருக்கும்.

## எச்சரிப்பு.

ஒரு குருவானவரின் மனைவி தன் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு ரெயிலில் பிரயாணம் போனார்கள். வழியிலிருந்த ஒரு ஸ்டேஷனில் வண்டி நிற்கும்போது, ஒரு வாலிப ஸ்திரீ வந்து "அம்மா, இன்று நீங்கள் இவ்வழியாய்ப் போகிறதாகக் கேள்விப்பட்டேன். ஆகையால் உங்களைக் கண்டு பேசிக்கொள்ள வந்தேன்" என்றாள். உடனே போதகரம்மாள் தானிருந்த வண்டியின் கதவைத்திறந்து, அந்த ஸ்திரீயோடு பேசிக்கொண்டு நின்றார்கள். அந்த வாலிப ஸ்திரீ குருவின் மனைவியைப்பார்த்து "அம்மா, உங்கள் சபையின் பிள்ளைகளுக்கு நீங்கள் நடத்தும் வேதபாட வகுப்புக்கு 7 வருஷங்களுக்கு முன்னே நானும் வந்திருந்தேன். நான் பின்வரிசையில் உட்கார்ந்திருந்தேன். என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பிள்ளைகள் பாடத்

தைக் கவனியாதபடி அவர்களுக்குச் சிரிப்பு உண்டாக்கிக்கொண்டிருந்தேன். நீங்கள் அதைக்கண்டுகொண்டீர்கள். உடனே நீங்கள் என்னைப் பார்த்து 'எமிலி, நீ இப்பொழுது பிசாசுக்கு ஊழியஞ் செய்கிறாய், உன் செய்கைகளைக்குறித்து நீ ஒருநாள் ஆண்டவருக்குக் கணக்குக் கொடுக்க நேரிடும்' என்று என்னை எச்சரித்தீர்கள். நீங்கள் சொன்ன அந்த வார்த்தைகள் என் இருதயத்தில் பலமாய்த் தைத்தது. தேவன் என்னை நியாயந் தீர்ப்பார் என்ற எண்ணம் என் மனதில் பட்டவுடனே என் உடம்பு சிலிர்த்தது. என் பாவங்களை யெல்லாம் ஆண்டவரிடம் அறிக்கையிட்டு மன்னிப்புக்காகக் கெஞ்சினேன். தேவ ஒத்தாசையினால் இப்பொழுது நல்லவளாய் நடக்கப் பிரயாசப்பட்டு வருகிறேன். ஆகையால் அன்று நீங்கள் என்னை எச்சரித்ததற்காக உங்களுக்கு நன்றி சொல்ல வந்தேன்" என்றாள்.

என் சிறு நேசா! இது உனக்கும் எச்சரிப்பாயிருப்பதாக. நீ தகாத காரியங்களை யோசிக்கும்போதும், பேசும்போதும், செய்யும்போதும் உன் ஆண்டவர் அவைகளை எல்லாம் ஒருநாள் நியாயத்திலே கொண்டு நிறுத்துவார் என்பதை மறந்துபோகாதே.

## நோட்டீஸ்.

கர்த்தருக்குச் சித்தமானால் நமது வருஷாந்தரப் பரீட்சை வழக்கம்போல நவம்பர், டிசம்பர் மாசங்களில் நடத்தப்படும். எல்லாரும் ஏற்கனவே பரீட்சைக்கு ஆயத்தப்படக் கேட்கிறோம்.

பாடங்கள்:—1. ஏப்பிரல், ஆகஸ்ற்று பாலர்தூதனில் குறிப்பிட்டிருக்கும் வேதாகமப் பாகங்கள்.

2. தங்கவாக்கியங்களும் அவைகளின் சந்தர்ப்பங்களும்.

3. காளது வருஷத்து பாலர்தூதனிலுள்ள போதனைகளும், சரித்திரங்களும்.

4. திருச்சபை ஞானோபதேச வினாவிடை.

Printed at the Church Mission Press, Palamcottah, for the Tinnevelly S. P. G. Children's Mission.

REGISTERED
MADRAS.



The Children's Herald.

பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. IX | ஏப்பிரல், மே, 1914 | No. 4, 5

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்.

### 11-வது சத்தியம்.

"சரீர உயிர்த்தெழுதலும் உண்டென்று விசுவாசிக்கிறேன்."

தங்கவாக்கியம்:—"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." 1 கொரி. 15. 22.

ஒரு நல்ல பையன் திடீரென்று மரித்துப்போகிறான். அவனுடைய இனஜனத்தார் அவனுக்காக அழுது புலம்புகிறார்கள். இனி ஒருவரும் அவனைக் காணமுடியாது என்று கலங்குகிறார்கள். ஆனால் ஒரு நாளில் திரும்பவும் அவன் உயிரோடே எழுந்திருப்பான். அவன் மாத்திரமல்ல, மரித்துப்போன எல்லா மனுஷருமே உயிரோடெழுந்திருப்பார்கள். இதையே இந்த சத்தியம் நமக்குக் காட்டுகிறது.

i. சரீர உயிர்த்தெழுதல் என்றால் என்ன? பிரிந்துபோன ஆத்துமா அழிந்துபோன சரீரத்தோடு சேர்ந்து மனுஷீகமாய் விளங்குவதே சரீர உயிர்த்தெழுதல். மரணத்திலே ஆத்துமா சரீரத்தைவிட்டுப் பிரிந்து பாதிக்குப் போகிறது. சரீரம் மண்ணுக்கு மண்ணாய் அழிந்துபோகிறது. இவை இரண்டும் திரும்பவும் ஒன்றாய்ச் சேர்ந்து உயிரோடெழுந்திருக்கிறதே சரீர உயிர்த்தெழுதல். சரீரமும் ஆத்துமாவும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியும்போது அதை மரணம் என்று சொல்லுகிறோம். திரும்பவும் அவை இரண்டும் ஒன்றாய்ச் சேரும்போது அதை உயிர்த்தெழுதல் என்கிறோம்.

ii. இந்த உயிர்த்தெழுதல் உண்டாகும் என்பதற்கு நிச்சயம் என்ன?

(1) இது உண்டாகும் என்று இயேசுவானவர் தாமே சொல்லியிருக்கிறார். "பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும், அப்பொழுது நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். (பரி. யோவா. 5. 28, 29). (2) நமதாண்டவர் மரித்துப்போன மூன்று பேரை உயிரோடே எழுப்பி உயிர்த்தெழுதலின் நிச்சயத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார். யவீருவின் மகளை மரித்தவுடனே எழுப்பினார். நாயினூர் வாலிபனை அடக்கம்பண்ணக்கொண்டுபோன வழியிலே எழுப்பினார். லாசருவை மரித்து நாலு நாளைக்குப்பின் கல்லறையிலிருந்து எழுப்பினார். (3) அவர் தாமே உயிரோடே எழுந்து அதின் நிச்சயத்தை நமக்குக் காட்டியிருக்கிறார். கிறிஸ்துநாதர் உயிரோடே எழுந்ததினாலே நாமும் உயிரோடே எழுந்திருப்போம் என்பது நிச்சயம். ஏனென்றால் அவர் நம்முடைய தலை. நாம் அவருடைய அவயவங்கள். அவருக்கு நேரிட்டதெல்லாம் அவருடைய பிள்ளைகளாகிய நமக்கும் நேரிடும். உயிர்த்தெழுதலில் முதற்பலனானவர் கிறிஸ்து.

iii. உயிர்த்தெழுதல் எப்போது நடக்கும்? இயேசுவானவர் மகிமையோடு திரும்பவரும்போது உயிர்த்தெழுதல் நடக்கும். அப்போது கடைசி எக்காளம் தொனிக்கும். மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். அவர்களுடைய சரீரம் மண்ணுக்கு மண்ணாய்ப் போயிருந்தாலும் தேவனுடைய வல்லமையினாலே அது உயிரோடே எழும்பும். அப்படி உயிர்த்தெழுந்த சரீரம் ஆவிக்குரிய மகிமையான சரீரமாக இருக்கும். அது முன்னே இருந்த அதே சரீரம்தான். என்றாலும் பெரிய வித்தியாசம் இருக்கும். முன்னிருந்த சரீரம் அழிவுள்ளது. உயிர்த்தெழுதலின் சரீரம் ஆவிக்குரியது. அந்த வித்தியாசத்தைப் பரி. பவுல் 1 கொரி. 15. 42—44ல் தெளிவாய்க் காட்டியிருக்கிறார். "அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்; ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்." மேலும் இரட்சகர் வரும் அந்த நாளில் பூமியில் இருக்கும் பரிசுத்தவான்கள் எல்லாரும் உயிர்த்தெழுதலின் சரீரத்துக்கொப்பாக மறுரூபமாக்கப்படுவார்கள். ஆகவே "மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல வானவருடைய சாயலையும் அணிந்துகொள்ளுவோம்."

போதனை. (1) நாம் உயிர்த்தெழுதலின் மகிமையான சரீரத்துக்குப் பங்குள்ளவர்களாகும்படி இப்பொழுது நமது சரீரத்தைப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளவேண்டும். (2) நிச்சயமாகவே உயிர்த்தெழுதல் இருக்கிறபடியால் மரித்தவர்களைக்குறித்து நம்பிக்கையற்றவர்களைப்போல துக்கப்படக்கூடாது.

OF THE R... TRAR OF BOOKS
2... 1914
MADRAS



"சகோதரரே, நித்திரையடைந்தவர்களைக்குறித்து நீங்கள் நம்பிக் கையற்றவர்களைப்போல துக்கித்து, [illegible] எனக்கு மனதில்லை." 1 தெச. 4. 13.

## மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்.

ஒரு துரைசானியின் மகன் இறந்துபோனான். அவள் அதைப்பற்றி மிகவும் வியாகுலப்பட்டுக்கொண்டிருந்தாள். ஒருநாள் அவள் தன் வழக்கத்தின்படி தோட்டத்திலுள்ள செடிவகைகளை கவனித்துக்கொண்டு வந்தாள். ஒரு செடியில் ஒரு முசுக்கட்டைப்புழு இருப்பதைப் பார்த்தாள். அதை எடுத்துவந்து ஒரு பாத்திரத்தில் போட்டு, வீட்டிலுள்ள ஓர் அறைக்குள் அந்தப்பாத்திரத்தோடு அதை வைத்துப் பூட்டினாள். அந்தப்புழு தின்னுவதற்கு இலைகள், தழைகள் பறித்துப்போட்டாள். சில நாட்களுக்குப்பின் அந்தப்புழுவைக் காணவில்லை, தேடிப்பார்த்தாள். பாத்திரத்தின் மூலையில் ஏதோ ஒரு வகையான சிறு கூடு கட்டியிருக்கக் கண்டாள். அந்தக் கூட்டை மெதுவாய்த் திறந்துபார்த்தாள். உள்ளே அந்த முசுக்கட்டைப் புழு அசைவற்று இருப்பதைக் கண்டாள். உடனே கூட்டில் தான் திறந்த பாகத்தை மூடிவிட்டாள். இரண்டு வாரத்துக்குப்பின் அந்தக்கூடு திறந்திருக்கக்கண்டாள், கூட்டை நன்றாய் உற்றுப்பார்த்தாள், உள்ளே புழுவாவது வேறு எவ்வித உயிர்ப்பிராணியாவது இல்லை. வெற்றுக்கூடு மாத்திரமிருந்தது. புழுவுக்கு என்ன நேரிட்டதென்று ஆராய்ந்தாள். அந்த அறைக்குள் வெளியே இருந்து யாதொன்றும் வராதபடி அந்த அறை நன்றாய்ப் பூட்டப்பட்டிருந்தது. ஆனால் அந்த அறைக்குள் நேர்த்தியும் அழகுமான ஓர் வண்ணாரப்பூச்சி பறக்கக்கண்டாள். வெளியே இருந்து இந்தப் பூச்சி வந்திருக்கமுடியாது. ஆகையால் அந்த முசுக்கட்டைப்புழுதான் மாறுதல் அடைந்து இந்த அழகான வண்ணாரப்பூச்சி ஆயிற்று என்று அறிந்துகொண்டாள்.

உடனே அவளுடைய மனதில் தன் மகனுடைய மரணத்தைப்பற்றிய நினைவு வந்தது. மரணமடைந்ததாயும், அழிந்து ஒன்று மில்லாமல் போனதாயும் காணப்பட்ட அந்தப்புழு ஒரு அழகான வண்ணாரப்பூச்சியாகி விட்டதுபோல, மரித்து, மறைந்துவிட்டதாகக் காணப்படுகிற என் மகனும் உயிர்த்தெழுதலின் நாளில் மகிமையான சரீரத்தைப்பெற்று எழுந்திருப்பான் அல்லவா? என்று நினைத்தாள். "ஆ, சுவாமி இந்த அற்பப்புழுவுக்கு இவ்வளவு மகிமையான மாறுதலைக் கொடுத்த தேவரீர் என் மகனும் மகிமையான சரீரத்தோடு உயிரோடே எழுந்திருக்கச் செய்வீர்" என்று நன்றியறிதலோடே சொன்னாள். அதுமுதல் அதிக ஆறுதலாயிருந்தாள்.

## சாயர்புரம் பாலர் பண்டிகை.

இந்தப்பாலர் மனமகிழ்ச்சிப்பண்டிகை நானது மார்ச்சு மீ 16-ம், 17-ம் தேதிகளில் சாயர்புரம் பரி. திரித்துவ தேவாலயத்தில் கொண்டாடப்பட்டது. இத்தேசத்துப்பிள்ளைகள் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்

னிலே, நம்மை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவர்களாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை இந்தச் சிறுவயது முதலே அறிந்த அனைவரில் தேறி வருகிறதைப்பார்த்து, இந்த ஆறு வருஷத்துக்குள் ஆண்டவர் நடத்திவிருக்கிற ஆச்சரியமான வேலைகளுக்காக அவரைத் துதிக்கிறோம். இந்த தேசத்திலுள்ள மிஷன் ஆசாமிகளும் அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கும் சபை ஊழியமும் பள்ளிக்கூட வேலையும் மட்டுக்குமிஞ்சியிருந்தாலும் அவர்கள் இந்த வேலையையும் பிள்ளைகளுடைய ஆவிக்குரிய ஜீவியம் வளர்ந்துவருவதற்காக உற்சாகமாய் நடப்பித்து வருகிறார்கள்.

16உ மாலை 7 மணிக்கு விழிப்பு அல்லது ஆயத்த ஆராதனை கனம் S. காலேப் ஐயரவர்களால் நடத்தப்பட்டது. அந்நாளுக்கேற்றபோல விசேஷித்த சங்கீதங்களும், பாடல்களும் வாசிக்கப்பட்டன. கனம் G. தேவசகாயம் ஐயரவர்கள் "சாமுவேல் வளர்ந்தான்; கர்த்தர் அவனுடனே கூட இருந்தார்" (1 சாமு. 3. 19) என்ற வசனத்தின் பேரில் மிகவும் அருமையான ஒரு பிரசங்கம் செய்தார்கள். அதில் அவர்கள் ஏலியின் பிள்ளைகளுடைய துர்க்குணங்களையும், சாமுவேலுக்கிருந்த தேவவாஞ்சை, இளமைப்பக்தி, கீழ்ப்படிதல், உண்மை ஆகிய இவைகளை எடுத்துக்காட்டி ஆராதனையில் கவனமாயிருக்கவேண்டும் என்று சொல்லிப் பின் வேதவாசிப்பின் அவசியத்தையும் பிள்ளைகளுக்குப் புகட்டினார்கள். கனம் உவெல்ஸ் ஐயரவர்கள் ஆசீர்வாதம் கூற ஆராதனை முடிந்தது. அப்பால் 8½ மணிக்கு ஆலயத்தின் முன் ஒளிவிசித்திரப்படம் காட்டப்பட்டது. அதில் பாலியர் மிஷன் செக்ரடேரி மிஸ்டர் லாசரஸ் அவர்கள் தாளம், மேளம், பிடில் இசைய இனிய பாட்டுகள் பாடி பிள்ளைகளுக்குப்போதனை செய்தார்கள்.

17உ காலை 7½ மணிக்கு கனம். பாக்கியநாதன் ஐயரவர்களால் பரி. நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டது. அதில் பலபிள்ளைகளும், தேவ ஊழியரும் பங்கு பெற்றார்கள். 9½ மணிக்கு பண்டிகை ஆராதனை நடந்தது. அன்று வாசிக்கவேண்டிய வேதாகம பகுதி கனம். காலேப் ஐயரவர்கள் பிள்ளைகளுடன் வாசித்து, அதிலடங்கிய தேவகட்டளைகளையும், ஆசீர்வாதங்களையும் தெளிவாய் எடுத்துக்காட்டி "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்" என்ற சத்தியத்தைப்பிள்ளைகளுடைய மனதில் அழுத்தினார்கள். அப்பால் மிஸ்டர் லாசரஸ் அவர்கள் (பரி. யோவா. 6. 9, "இங்கே ஒரு பையன் இருக்கிறான்" என்ற வசனத்தின் பேரில் 1. பிள்ளைகள் இயேசுவோடு சகவாசம் செய்யவேண்டும் என்றும், 2 அற்பமானவைகளைக்கொண்டும் தேவன் தமது சித்தத்தை நிறைவேற்றக்கூடும் என்றும், 3. பிள்ளைகள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி இயேசுவினிடம் போகவேண்டும் என்றும், 4. பெற்றோரும் தேவஊழியரும் அவர்களை இயேசுவினிடம் வழி நடத்தவேண்டும் என்றும், நல்ல திருஷ்டாந்தங்களுடன் பிரசங்கம் செய்தார்கள். அப்பால் ஏல விற்பனை நடந்தபின் பிள்ளைகளுக்கு விருந்தளிக்கப்பட்டது.

மாலை 3 மணிக்கு கீத ஆராதனை நடந்தது. கனம். தர்மநாதன் ஐயரவர்கள் ஜெபம் செய்தபின் பாலியர் மிஷனர் மூன்றுவிதமான பழங்களைப் பிள்ளைகளுக்குக்காட்டி ஓர் பொருட்பாடப் பிரசங்கம் செய்தார்கள். அப்பால் ஒவ்வொரு பிராஞ்சுகளும் தனித்தனியே எழும்பி நின்று பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். பின்பு சென்ற வருஷாந்தரப் பரீட்சையில் [illegible] பிள்ளைகளின் பேர்களை [illegible] செக்ரடேரியவர்கள் வாசிக்க கனம்: உவெல்ஸ் அம்மாள் அவர்கள் அந்தப்பிள்ளைகளுக்கு இனாம் அளித்தார்கள். கனம்: உவெல்ஸ் ஐயரவர்கள் சிலபோதனைகள் சொன்னபின் கனம்: பாக்கியநாதன் ஐயரவர்கள் ஜெபம் செய்து ஆசீர்வாதம் கூற ஆராதனை முடிந்தது.



இந்தசங்கத்தைச்சேர்ந்த எல்லாப்பிள்ளைகளும் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடையும்படி ஜெபிப்போமாக.

## இரண்டு சிநேகிதர்கள்.

ஒரு ஊரில் இரண்டு பெண்கள் இருந்தார்கள். ஒருத்திக்கு செல்லம்மாள் என்றும், மற்றவளுக்கு பாலம்மாள் என்றும் பேர். பாலம்மாள் தன்னை அதிக அழகுள்ளவள் என்று சொல்லி தன் அழகைக்குறித்து அடிக்கடி பெருமை பாராட்டுவாள். தன்னைக்குறித்து யாராவது குறைவாய்ச் சொல்லிவிட்டால் அதிக எரிச்சலடைவாள். தன் பள்ளிக்கூடத்திலுள்ள உபாத்திமார்களுக்கு முன்பாக தன்னை மகா சற்புத்திரிபோல் காட்டுவாள், வகுப்பைவிட்டு வெளியே போனவுடனே உபாத்திமாரைப்பற்றி குறைவாய்ப்பேசி, நிந்திப்பாள். தன்னோடு படிக்கிற மற்றப்பிள்ளைகளையும் அற்பமாய்ப் பேசுவாள், சிலவேளைகளில் பொய்யாகக் குற்றஞ்சாட்டி அழப்பண்ணுவாள். இதைக்கவனித்த அவளுடைய தோழி செல்லம்மாள் ஒருநாள் அவளைப்பார்த்து "என் அருமைத் தோழி, நீ எத்தனையோ போதனைகளை கேட்டிருக்கிறாய், நித்தம் வேதம் வாசிக்கிறாய். என்றாலும் உன் குணம் கொஞ்சமும் மாறவில்லை. நீ எத்தனையோ பிள்ளைகளுக்குத் தீமை செய்திருக்கிறாய். பரிசுத்த வேதாகமத்தைக் கவனி, மொர்தெகாயக்கும், யூதருக்கும் தீங்குசெய்ய நினைத்த ஆமான் சுகமாய் வாழ்ந்தானா? நீ எத்தனை பிள்ளைகளுடைய கண்களில் கண்ணீர் உண்டாக்கியிருக்கிறாய்! உனக்குப் படிப்பிக்கிறவர்களைக் குறித்துக் [illegible]பேசி, அவர்களைக் கண்டவுடனே [illegible] உன் ரூபத்தை அடக்கிக்கொள்ளுகிறாய். எத்தனையோ பிள்ளைகள் அழகின் [illegible]யிருக்கிறார்கள்: அவர்கள் தங்கள் அழகைக்குறித்துப் பேசுகிறார்களா? நீ [illegible]துப் பெருமையாய் நினைக்கிறதினாலேதான் உன் இருதயம் [illegible] உள்ளதாகிறது. அழகு நிலைக்குமா, அது [illegible]. "அழகு வீண்" என்று வேதத்தில் நீ வாசிக்கவில்லையா? 1 பேதுரு 3. 4-ல் சொல்லியபடி சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமல்லோ நமக்கு அழகைக்கொடுக்கும். அதோ, போகிற கமலம்மாளைப்பார். அவள் எவ்வளவு அழகுள்ளவள். அவள் எப்போதாவது பெருமை பாராட்ட நீ கண்டாயா? அவள் வேதாகமத்தை வாசிக்கும்போது எவ்வளவோ உணர்வோடும் பயபக்தியோடும் வாசிக்கிறதை அடிக்கடி பார்த்திருக்கிறேன். எல்லாவற்றுக்கு மேலாக இயேசுவின் மாதிரியைப்பார். அவர் எவ்வளவு மனத்தாழ்மையை தரித்திருந்தார். சீஷர்களுடைய கால்களை முதலாய்க் கழுவினாரே. நாமும் தாழ்மையுள்ளவர்களாய் நடக்கவேண்டாமா, வா, முழங்கால்படியிட்டு, ஜெபம்பண்ணுவோம்" என்றாள். உடனே இருவரும் முழங்காலில் நின்றார்கள். பாலம்மாள் தன் பாவங்களை

எல்லாம் உணர்ந்து, அறிக்கையிட்டு, அதுமுதல் நல்லபிள்ளையாய் நடந்து வந்தான்.

## கையெழுத்து.

தேவனுடைய நியாயப்பிரமாணம் மோசேயால் உடைக்கப்பட்ட கற்பலகைகளில் எழுதப்பட்டிருந்தது. அது தேவனுடைய கையெழுத்தாக இருந்தது. (யாத். 31. 18) யூதர்கள் அந்தக்கற்பலகை நீலக்கற்களில் வெட்டப்பட்டதென்றும், தங்க எழுத்துக்களால் பத்துக்கற்பனைகள் எழுதப்பட்டு தீப்போல் அந்த நீலக்கல்லில் மினுங்கினது என்றும் சொல்லிக்கொண்டார்கள். தேவனுடைய சொந்த விரல்களால் எழுதப்பட்ட அந்த எழுத்துகள் எவ்வளவு மகிமை பொருந்தினதாயிருந்திருக்கும்! அந்தக் கற்பலகைகள் உடைக்கப்பட்டதுபோலவே மனுஷர் அந்தக்கற்பனைகளையும் மீறி நடக்கிறார்கள்.

மறுபடியும் ஒருதடவை தேவனுடைய விரல் மனுஷருக்காக எழுதினது. இந்த முறை கற்பலகைகளில் அல்ல ஒரு அரண்மனைச்சுவரில் எழுதப்பட்டது. (தானி 5. 25 பார்) அபபோது எழுதின எழுத்து தேவனுடைய கற்பனையை மீறுகிறவர்களுக்குத் தண்டனை யுண்டென்று படிப்பித்தது.

இயேசுவின் சிலுவையின்மேல் இன்னொரு கையெழுத்து எழுதப்பட்டது. பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி சிலுவையின்மேல் போடுவித்தான். (பரி. யோவா. 19. 19) நம்முடைய கையிலிருக்கும் ஒரு பேனா நாம் விரும்புகிறதை எழுதுகிறதுபோல பிலாத்து தேவன் விரும்புகிறதை எழுதும் எழுதுகோலாயிருந்தான். இயேசு நிச்சயமாகவே ராஜாதான். அவர் யூதருடைய ராஜாதான் ஆகையால் பிலாத்து அந்தப்படி எழுதவும், எல்லாரும் வாசிக்கத்தக்கதாக அந்த எழுத்துக்கள் எபிரேயு, கிரேக்கு, லத்தீன் பாஷைகளில் எழுதப்படவும் தேவன் செய்தார். பிலாத்து பரிகாசத்துக்காக அப்படிச்செய்கிறோம் என்று நினைத்து தேவசித்தத்தை நிறைவேற்றினன். மனிதர் நியாயப்பிரமாணத்தை மீறினதற்காக இயேசு அந்தத்தண்டனைகளைப் பட்டிருக்கிறார் என்று அந்த எழுத்துக்கள் காட்டின.

இன்னொரு தடவை தேவனுடைய எழுத்தைப்பற்றி வாசிக்கிறோம். அது முன்போல் கற்பலகைகளிலாவது, சுவரிலாவது சிலுவையின்மேலாவது எழுதப்படாமல் இருதயங்களில் எழுதப்படும். "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயங்களிலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" என்கிறார். (எரே. 31. 33). சிறுபிள்ளைகளின் இருதயத்தில் தான் அவர் அதிகமாய் எழுதப்பிரியப்படுகிறார். சாத்தானும், உலகமும் அந்த இருதயத்தைக் கறைப்படுத்துமுன், அது சுத்தமான வெள்ளைக்காகிதம்போல் இருக்கிறது. ஆகையால் தம்முடைய சித்தத்தை உன் இருதயத்திலே பதிக்கும்படி ஆண்டவரிடம் கேள். அவருடைய கூர்மையான எழுதுகோல் பரிசுத்த ஆவியானவர் தான்.



## முதலூர் பாலர் பண்டிகை.

நாளது மார்ச்சுமீ 24உ செவ்வாய்க்கிழமை இப்பண்டிகை 7-வது தடவையாக முதலூர் பரி. மிகாவேலின் தேவாலயத்தில் சந்தோஷமாய்க் கொண்டாடபபட்டது. இச்சேகரத்திலுள்ள 12 பிரான்சுகளிலிருந்து சுமார் 450 பிள்ளைகள் இப்பண்டிகைக்கு வந்து கூடினார்கள். முந்தினநாள் மாலை 7 மணிக்கு ஆயத்த ஆராதனை நடந்தது. பாவியர் மிஷனைச்சேர்ந்த அநேகப்பிள்ளைகள் அடுத்தநாளில் திடப்படுத்தல் பெற ஆயத்தமாயிருந்தபடியால் கனம். லாம்ப் ஐயரவர்கள் திடப்படுத்தலுக்குரிய ஆயத்தத்தைப் பற்றி ஓர் பிரசங்கம் செய்தார்கள்.

பண்டிகையன்று காலை 8 மணிக்கு மகாகனம்: அத்தியக்ஷரவர்கள் 107 பேருக்குத் திடப்படுத்தல் கொடுத்தார்கள். 11 மணிக்கு பண்டிகை ஆராதனை நடந்தது. கனம்: ஞானமணி ஐயரவர்கள் ஆராதனை நடத்த நமது சங்கத்தின் மிஷனர் அந்த நாளுக்குரிய வேதாகமப்பாகத்தை வாசித்து விஸ்தரித்தபின், "பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்" என்பதைப்பற்றி பிள்ளைகளுக்கேற்ற ஓர் பிரசங்கம செய்தார்கள். பின்பு பிள்ளைகள் தங்கள் காணிக்கைகளை வரிசை வரிசையாய்க்கொண்டுபோய்க் கர்த்தருடைய சமுகத்தில் படைத்தார்கள். சில ஆசாமிகள் தங்கள் பிள்ளைகளுக்கு அழகான ஓலைப்பெட்டிகள் வாங்கிக்கொடுத்து, அந்தப்பெட்டிகளை ஏதாவது பொருள்களால் நிரப்பி கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தும்படி போதித்திருந்தார்கள். அந்தபபடியே அநேக பிள்ளைகள் அந்தப் புதுப்பெட்டிகளில் தங்கள் பெற்றோர் உற்சாகமாய்க்கொடுத்த தானிய தவசங்களையும், பழவர்க்கங்களையும் கொண்டுவந்து படைத்தார்கள். இன்னும் சிலபிள்ளைகள் தங்கள் சொந்தக்கைவேலையான பொருள்களைக் கொண்டுவந்து செலுத்தினார்கள். முதலூர் கஸ்பா, ஷையூர் ஆண், பெண் பள்ளிக்கூடங்கள், புதூர் இந்த நாலு பிரான்சுகளும் தாங்கள் செலுத்தின மற்றக் காணிக்கையோடு ஒவ்வொரு ஆட்டுக்குட்டிகளையும் ஆண்டவருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்து படைத்தார்கள். மகாகனம்: அத்தியக்ஷரவர்கள் அவைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு ஆசீர்வதித்தபின் ஏலவிற்பனை நடந்தது. அன்று சேகரமான மொத்தக்காணிக்கை ரூ. 50 சொச்சம். முந்தின வருஷத்தைவிட ரூ. 5 அதிகம். மதியம் பண்டிகைக்கு வந்த எல்லாப்பிள்ளைகளுக்கும் விருந்தளிக்கப்பட்டது.

மாலை 3 மணிக்கு கனம்: லாம்ப் ஐயரவர்கள் ஜெபம் செய்ய கீத ஆராதனை தொடங்கிற்று. அதிலும் நமது மிஷனர் பிள்ளைகளுக்கேற்ற ஓர் பொருள்பாடப்பிரசங்கம செய்தார்கள். அப்பால் ஒவ்வொரு பிரான்சுப் பிள்ளைகளும் தனித்தனியே எழும்பி நின்று பாடினார்கள். சிலபிரான்சுகள் வெகு கோர்த்தியாய்ப் பாடின. அப்பால் வேதாகமப்பரீட்சையில் நன்றாய்ச் செய்திருந்த 56 பிள்ளைகளுக்கு கனம்: பிஷப் அம்மாள் அவர்களும் அந்தப் பிள்ளைகளுக்குள் நல்லவேலை செய்திருந்த 6 ஆசாமிகளுக்கு மகாகனம் அத்தியக்ஷரவர்களும் பரிசு கொடுத்தார்கள். மாலை 7½ மணிக்கு நமதாண்டவரின் சரித்திரம் ஒளிவிசித்திரப் படங்களின் மூலமாய் விளக்கிக் காட்டப்பட்டது. இச்சங்கத்தின் வேலை நாளுக்கு நாள் வளர்ந்தேறவும் இப்பண்டி

கையில் பிள்ளைகள் கேட்டபோதனை வீண்போகாமல் நற்பலனைக் கொடுக்கவும் கர்த்தர் தயை செய்வாராக.

## நீரூற்று.

உஷ்ணகால ரஜாக்காலத்தில் ஒரு துரையும் அவர் சகோதரியும் சுகத்துக்காக ஒருமலை நாட்டுக்குப் போயிருந்தார்கள். போய் சிலநாட்களுக்குப்பின் ஒருநாள் இருவரும் மலையேறிப் பார்க்கப்போனார்கள். வழியில் துரைக்குத் தாகம் உண்டாயிற்று. பக்கத்தில் இருந்த ஒரு நீரூற்றில் இறங்கி தண்ணீர் குடித்தார். அவருடைய சகோதரி அந்தத்தண்ணீரைப் பார்த்தவுடன் "இது ஒரு மாதிரியாய் இருக்கிறதே" என்றாள். அந்த துரையும் அதைக்குடித்துவிட்டு "இதின் ருசியும் ஒருவிதமாய்த்தான் இருக்கிறது" என்றார். அந்தத் தண்ணீரைக் குடித்தது துரையின் மனதுக்கு அதிக அருவருப்பாயிருந்தது. சாயந்தரம் இருவரும் வீட்டுக்குத் திரும்பி வந்தார்கள். தாங்கள் தங்கியிருந்த வீட்டின் துரைசாணியிடம் அந்த நீரூற்றைப்பற்றிக் கேட்டார்கள். அப்பொழுது அந்த அம்மாள் "அதுதான் இங்குள்ள எல்லா நீரூற்றுகளிலும் விசேஷித்தது, வியாதியுள்ளவர்களுக்கு அந்த ஊற்று அதிகப்பிரயோஜனமானது, அந்தத் தண்ணீரில் இரும்பும் கந்தகமும் கலந்திருக்கிறதென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்" என்றார்கள். அப்பொழுது துரைக்கு அந்தத் தண்ணீரைப்பற்றிய வெறுப்பு நீங்கிவிட்டது. அதைக் குடிக்க அதிக ஆத்திரம் உண்டாயிற்று. தினந்தோறும் ஒரு பாத்திரத்தில் அந்த ஊற்றுத்தண்ணீரைக் கொண்டுவந்து, அதிகப்பிரியமாய்ச் சாப்பிட்டு வந்தார். அதினால் அவருக்கு நல்ல ஆரோக்கியமும் சுகமும் உண்டாயிற்று. வேலையினால் இளைத்துப்போன அவருடைய சரீரம் தைரியமடைந்து பலப்பட்டது. நமக்கும் தினசரி பெலன் கொடுக்கும் ஒரு ஊற்று உண்டு. அது தேவனுடைய வாயினின்று புறப்பட்ட சத்திய வார்த்தையாகிய வேத புஸ்தகமே. அது அநேகருக்கு வெறுப்பாய்த் தோன்றுகிறது. பெலனும், சுகமும் கொடுக்கும் மருந்து கசப்பாகவேயிருக்கும். அந்தத்துரை அந்தத் தண்ணீரைத் தினம் தினம் பிரியமாய் சாப்பிட்டுப் பெலன் அடைந்தது போல் நாமும் கர்த்தருடைய வசனத்தை ஆசையோடு தினந்தினம் வாசித்து வந்தால் நமது ஆத்துமா பாவ வியாதி நீங்கிப் பலப்படும்.

Printed at the Church Mission Press, Palamcottah, for the Tinnevelly S. P. G. Children's Mission.



Children's Herald.

பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. IX ஜூன், 1914 No. 6

1914 MADRAS.

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்.

### 12-வது சத்தியம்.

"நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன்."

தங்க வாக்கியம்:—"நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச்செய்த வாக்குத்தத்தம்" 1 யோவா. 2: 25.

11-வது சத்தியத்திலே உயிர்த்தெழுதலின் சரீரத்தைக்குறித்தும் 12-வது சத்தியத்திலே உயிர்த்தெழுதலின் ஜீவியத்தைக்குறித்தும் சொல்லியிருக்கிறது. உயிர்த்தெழுதலின் ஜீவியமே நித்திய ஜீவன்.

1. நித்திய ஜீவன் என்றால் என்ன? உயிர்த்தெழுதலுக்குப்பின் நல்லவர்களுடைய ஆத்துமாவும் சரீரமும் சேர்ந்து முடிவில்லாத காலமாய் அனுபவிக்கும் பேரின்பமே நித்திய ஜீவன். நீசேயா விசுவாசப்பிரமாணத்தில் அது மறுமைக்குரிய ஜீவன் என்று சொல்லப்படுகிறது. சரீர உயிர்த்தெழுதலுக்குப் பின் மறுமையில் அதாவது மோட்சத்தில் நாம் இன்பத்தைப்பெற்று வாழுவோம். அங்கே வெள்ளையங்கிதரித்து, பொற்கிரீடம் அணிந்து, குருத்தோலைகளைப் பிடித்துக் கர்த்தரைச் சேவிப்போம். இவ்வுலகத்தை மிகவும் கசப்பாக்குகிற மரணமும் துக்கமும் அலறுதலும் வருத்தமும் அங்கேயில்லை. மரணத்தினால் நம்மை விட்டுப் பிரிந்துபோன நமது இனத்தாரையும் நேசரையும் நாம் அங்கே கண்டு சந்திப்போம். எல்லாவற்றிலும் மேலாக நம்மிடத்தில் அன்புகூர்ந்து நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த நமதாண்டவரை முகமுகமாய்த் தரிசித்து என்றென்றைக்கும் அவருடனே கூட இருப்போம். இதுவே நித்திய ஜீவன்.

2. நித்திய ஜீவன் யாருக்குக் கிடைக்கும்? இயேசு இரட்சகரைப் பின்பற்றி, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற யாவருக்கும் நித்திய ஜீவன் கிடைக்கும். பரி. யோவா. 10: 27, 28 பார். "என் ஆடுகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது .... அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது, நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்" என்று ரட்சண்யர் சொல்லுகிறார். தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள், அதாவது கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமன்னிப்பைப் பெற்றவர்கள் நித்திய ஜீவனை அடைவார்கள். (வெளி. 7: 13, 14.) மனதாரப் பாவத்திலே நிலைத்திருக்கிறவர்கள், பாவமன்னிப்புப் பெறாமல் மரித்தவர்கள் நித்திய ஜீவனை அல்ல, நித்திய அக்கினியை அடைவார்கள். அப்படியே பரி. அதனாசியஸ் விசுவாசப் பிரமாணத்தில் "நன்மை செய்தவர்கள் நித்திய ஜீவனையும் தீமை செய்தவர்கள் நித்திய அக்கினியையும் அடைவார்கள்" என்று விசுவாசிக்கிறோம்.

3. நித்திய ஜீவன் எப்போது ஆரம்பிக்கிறது? நித்திய ஜீவன் பரிசுத்த ஞானஸ்நானத்திலே ஆரம்பிக்கிறது. சுபாவத்தின்படி கோபாக்கினையின் பிள்ளைகளான நாம் மனந்திரும்பி கிறிஸ்துநாதரை விசுவாசிக்கும்போது, பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாய் அவரோடு ஐக்கியப்படுகிறோம். அவருடைய ஜீவன் நம்மில் உண்டாகிறது. இந்த ஜீவன் தேவனால் நமக்குக் கிடைக்கிற கிருபையின் ஈவு (ரோம. 6: 23). இந்த ஜீவனை நமக்குத் தரவும் அது நம்மில் பூரணப்படவுமே ரட்சண்யர் இவ்வுலகத்துக்கு வந்தார் (யோவா. 10: 10). பரி. ஞானஸ்நானத்தில் நம்மில் ஆரம்பிக்கிற நித்திய ஜீவன் நாளுக்குநாள் வளர்ந்து கடைசி உயிர்த்தெழுதலில் பூரணப்படுகிறது.

போதனை. 1. கடைசி உயிர்த்தெழுதலில் நீ நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டுமானால் அந்த ஜீவன் இப்பொழுதே உன்னில் ஆரம்பித்திருக்கவேண்டும். 2. அந்த ஜீவன் நாளுக்குநாள் வளர்ந்து பூரணப்பட நீ இயேசுவில் நிலைத்திருக்கவேண்டும்.

"தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறது; குமாரனையுடையவன், ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்." 1 யோவா. 5: 11, 12.

---

தாமஸ்.

அமெரிக்காக் கண்டத்திலே தாமஸ் என்ற ஒரு பொல்லாத வாலிபன் இருந்தான். அவனுக்கு மேரி என்ற ஒரு சகோதரி உண்டு. அவள் மிகவும் நல்லவள். தினம் தினம் கர்த்தருடைய வசனத்தை வாசித்து தியானிப்பாள். இவளுக்கு அந்த துஷ்ட சகோதரனைத்தவிர வேறு ஆதரவு இல்லை. அவனோ மகா குடிகாரன். மேரி எவ்வளவோ நன்றாய்



சமைத்து வைத்திருப்பாள். அதில் கொஞ்சமும் ருசியில்லை என்று சொல்லி அவன் அவளைத் திட்டுவான். வேளைகளில் அடிப்பான். எப்போதும் அந்த வீட்டில் ஒரு [illegible] இருந்தபோலிருக்கும்.

ஒருநாள் மதியம் தாமஸ் வேலை முடிந்து வீட்டுக்கு வந்தான். மேசைமேல் சாப்பாடு ஆயத்தமாயிருந்தது. மேரி ஒரு அறையில் உட்கார்ந்து வேதம் வாசித்துக்கொண்டிருந்தாள். அவள் கவனம் முழுதும் வாசிப்பில் போய்க்கொண்டிருந்தது. தன் தமையன் உள்ளே வந்ததைக் கவனித்தாளில்லை. தாமஸ் அறைக்குள் வந்தான். தன் சகோதரி வாசித்துக்கொண்டிருக்கிறதைப் பார்த்தான். கோபத்தினால் நிறைந்து, அவளை அடிக்கப்போனான். ஓங்கின கை அவள்மேல் விழுமுன்னே அவள் வாசித்த பாகத்திலுள்ள ஒரு வாக்கியம் அவன் கண்களின் வழியாய் அவன் மனதில் விழுந்தது. "பாவத்தின் சம்பளம் மரணம்". (ரோம. 6: 23) என்பதே அந்த வாக்கியம். ஓங்கின கையை இறக்கினான். போய் சாப்பிட உட்கார்ந்தான். அவனால் சாப்பிட முடியவில்லை. வேலைக்குப் போனான். வேலையும் நடக்கவில்லை. "என்ன பயங்கரமான கூலி! என்ன பயங்கரமான சம்பளம்!" என்று சொல்லிக்கொண்டேயிருந்தான். சாயங்காலத்திலே தன் சகோதரியிடம் தன் மனக்கலக்கத்தையெல்லாம் சொன்னான். மேரி அவனைப்பார்த்து 'நீ வாசித்த அந்த வாக்கியத்தின் பின்பாகத்தைப்பார். "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டான நித்திய ஜீவன்" நீ உன் பாவங்களை விட்டு மனந்திரும்பினால் உனக்கு மரணம் அல்ல, நித்திய ஜீவன் கிடைக்கும்' என்றாள். தாமஸ் அங்கேயே குணப்பட்டு நித்திய ஜீவனுக்குப் பங்காளியானான்.

---

புதுக்கோட்டை பாலர் பண்டிகை.

சென்ற ஏப்ரல் 23உ இப்பண்டிகை புதுக்கோட்டையில் நடந்தது. முந்தினநாள் மாலை 7 மணிக்கு ஆயத்த ஆராதனை-[illegible] நடத்தப்பட்டது. "ஆயத்தப்பட்டு நில்" (எரே. 46: 14) என்ற வசனத்தின்பேரில் பிரசங்கம் செய்யப்பட்டது. இயேசு ராஜாவை சந்திக்க ஒரு போர்வீரனைப்போல நாமும் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றும், அவரையே உடையாகத் தரித்துக்கொள்ளவேண்டுமென்றும், தேவசமாதானமாகிய [illegible] பிடித்தவர்களாயிருக்கவேண்டுமென்றும் தெளிவாய் விளக்கிக்காட்டினார்கள். காலை 7½ மணிக்கு [illegible] ஆராதனை நடந்தது. 10½ மணிக்குப் பாலர் ஆராதனை ஆரம்பித்தது. [illegible] எபே. 6: 10-லிருந்து இப்பண்டிகையின் [illegible]

மனமகிழ்ச்சியின் நாள் [illegible] [illegible] [illegible], பரிசுத்த மான நாள் என்றும் பிறருக்கு [illegible] [illegible] நாள் என் றும் ஆகையால் அந்த நாளைச் [illegible] நாளாக ஆசரிக்கவேண்டும் என் றும் போதித்தார்கள். 11½ மணிக்கு [illegible] நடந்தது. பணமாகவும் பொருளாகவும் வந்த மொத்தக் காணிக்கை ரூ 23—8—6. முந்தின வருஷத்தை விட ரூ. 2 அதிகம். அப்பால் சுமார் 450 பிள்ளைகளுக்கு போஜனம் அளிக்கப்பட்டது. 3 மணிக்குப் பரிசு அளிக்கும் கூட்டம் நடந்தது. இதில் கனம்: சுந்தரம் எம். டி. சி. உபதேசியார் அவர்கள் "இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா?" (லூக். 12: 6.) என்ற வாக்கியத்திலிருந்து அடைக்கலான் குருவியின் தன்மை, லக்ஷணம், குணம் முதலியவைகளை எடுத்துக்காட்டி அதிலிருந்து சுறுசுறுப்பு, பாட்டில் பிரியம், தேவாலய நாட்டம், தேவ அன்பு, இளமைபக்தி முதலியவைகளைத் திருஷ்டாந்தங்களுடன் போதித்தார்கள். பின்பு ஒவ்வொரு பிரான்சும் ஒவ்வொரு பாட்டுப் பாடின. அப்புறம் சென்ற வருஷாந்தரப் பரீட்சையில் தேறின 41 பிள்ளைகளுக்கு இனாம் அளிக்கப்பட்டது. முடிவுரையாக தலத்து ஐயரவர்கள் மிஷன் ஆசாமிகளுக்கு சிலபுத்திமதிகள் சொல்லி, ஆசீர்வாதம் கூறி, கூட்டத்தை முடித்தார்கள். பரிசுபெற்ற பிள்ளைகளின் பேர் ஜாபிதா முன்னமே அச்சிடக்கூடாமல் போனபடியால் இங்கு அந்தந்த பிரான்சுகளில் பரிசு பெற்றவர்களின் தொகையை மாத்திரம் குறிப்பிடுவோம். புதுக்கோட்டை B. B. S. 7. ஷை G. B. S 9. நாகூியரபுரம் 6. ராமசாமிபுரம் 3. குலையன் கரிசல் 3. சேர்வைகாரன் மடம் 4. தங்கம்மாள்புரம் 5. ஜெபஞானபுரம் 4. ஆக 41.

---

## பரீட்சைப்பாடங்கள்.

**யாத்திராகமம்.**

1. பார்வோன் இஸ்ரவேலை ஒடுக்கின விபரங்கள்.
2. மோசேயின் பிறப்பும், இளமைப்பருவமும்.
3. முட்செடித் தரிசனம்.
4. பஸ்கா ஆசரிப்பு
5. எகிப்திலிருந்து சீனாய்மலை வரை இஸ்ரவேலர் போன இடங்களும் அங்கு நடந்த விசேஷங்களும்.

Printed at the Church Mission Press, Palamcottah, for the Tinnevelly S. P. G. Children's Mission.



The Children's Herald.

OFFICE OF THE REGIS... 29 SEP

கொள்ளவேண்டும்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. IX ஜூலை, 1914 No. 7

## ஒருமணி நேரம்.

சில வருஷங்களுக்கு முன்னே, ஸ்காட்லாந்து தேசத்திலுள்ள ஒரு பட்டணத்தில், ஒரு நல்ல குருவானவர் இருந்தார். ஒருநாள் அவர் ஒரு வீட்டுக்குப்போனார். அந்த வீட்டுக்கு ஒரே ஒரு ஜன்னல் தான் இருந்தது. அதுவும் நாலு சிறிய கண்ணாடித்தட்டுகள் உள்ளதாயிருந்தது. அந்த வீட்டில் அதிகமான தட்டுமுட்டு ஜாமான்களும் இல்லை, என்றாலும் எல்லாம் சுத்தமாயும் நேர்த்தியாயும் இருந்தது. அந்தச் சிறு குடிசையில் வயது சென்ற ஓர் ஏழை விதவை குடியிருந்தாள். குருவானவர் அந்த வீட்டுக்குள் பிரவேசித்தபோது அவள் ஒரு மூலையில் நெருப்பண்டையில் உட்கார்ந்திருந்தாள். குருவானவர் அவள் சமீபத்தில் போய், அவளோடே பேசத்தொடங்கினார். அவள் ஒண்டியாய் அந்த வீட்டிலே குடியிருந்தாள். கொடிய தரித்திரமுள்ளவளாயிருந்தும், அதிக சந்தோஷமுள்ளவளாயிருந்தாள். "நீ தனிமையாய் இந்த இடத்தில் எப்படி உன் நேரத்தைக்கழிக்கிறாய்?" என்று குருவானவர் கேட்டார். "நான் ஒண்டியாய் இருக்கவில்லை. என் அருமை இயேசு ரட்சகரும் என்னோடேகூட இருக்கிறார். நான் அவரைப்பற்றித் தியானிக்கும்போது நேரம் சீக்கிரம் கழிந்துவிடுகிறது. என் அண்டை வீட்டுக்காரரும் மிக நல்லவர்கள். அவர்கள் எனக்கு உதவிசெய்ய வரும்போது, என் ஆண்டவரைப்பற்றி நான் அவர்களோடு பேசுவேன். அதினாலும் என்நேரம் இன்பமாய்க் கழிகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஒவ்வொருநாளும் ஒருமணி நேரம் எனக்கு அதிக இன்பமானது. அதோ அந்த கண்ணாடி ஜன்னலைப் பாருங்கள். காலையில், சூரியன் உதயமாகும்போது நான் அந்த ஜன்னல் அண்டை போவேன். பெரிய எழுத்துகளுள்ள அந்த வேதாகமம் என் கையில் இருக்கும். ஒருமணிநேரம்

அங்கே உட்கார்ந்திருந்து பரிசுத்த வேதாகமத்தை வாசித்துத் தியானிப்பேன். அதுதான் என் ஆண்டவர் என்னோடு பேசும் நேரம். ஆ! அந்தநேரம் எவ்வளவு பாக்கியமான நேரம்!'' என்றாள், அந்த ஸ்திரி.

என் சிறு நேசா, பாவியர் கூட்டத்தைச் சேர்ந்திருக்கிற நீ காலையிலே கர்த்தருடைய சமுகத்தில் உட்காருகிறதுண்டா? பரிசுத்த வேதாகமப் பாகத்தை வாசித்துத் தியானிக்கிறதுண்டா? அந்தநேரம் நாள் முழுவதும் உன்னை மற்ற நேரத்தைவிட உனக்கு அதிக அருமையாய்க் காணப்படு

இதில் சனம்: சந்தரம் எம். டி. சி. உபதேசபோதா அவ

ளக்கு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்

## எண்ணாகமம்.

பிரியமான பிள்ளைகளே,

இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டது முதல் சீனாய்மலை வரை நடந்த சங்கதிகளையும் சீனாய் மலையில் நடந்த விசேஷங்களையும் யாத்திராகமத்திலே நாம் வாசித்து முடித்தோம். அதற்கப்பால் நடந்த விசேஷங்களை இப்பொழுது நாம் எண்ணாகமத்திலே வாசித்து வருகிறோம். அவைகளில் சிலவற்றை அதன் போதனையோடு உங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

1. தேவாலயக்கூடாரம் செய்து முடித்ததை யாத்திராகமத்தில் நாம் பார்த்தோம். அந்தக்கூடாரத்திலே வந்து தங்கின மேகம் அவர்களை வழி நடத்தினதை இங்கே பார்க்கிறோம். அதுமேலே எழும்பும்போது அவர்கள் பிரயாணம் செய்வார்கள். அது தங்கும் இடத்தில் அவர்களும் தங்குவார்கள். (எண். 9. 17). அது நெடுநாள் போய்க்கொண்டிருந்தாலும்சரி அல்லது நெடுநாள் தங்கியிருந்தாலும் சரி, இஸ்ரவேல் புத்திரர் சோர்ந்து போகாமல் அதைப்பின் பற்றுவார்கள் அதுபோல பரிசுத்த ஆவியாகிய தேவன் உன்னை நித்தம் நித்தம் வழி நடத்தும்படி நீ அவரைக் கேட்க வேண்டும். அவர் ஏவுகிறபடியே நீ நடக்கவேண்டும்.

2-வது, ''நீ எங்களோடு கூடவா, கர்த்தர் நல்ல வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்'' (10. 29) என்று சொல்லி ஓபாபையும் தங்களோடே கூட்டிக்கொண்டுபோனார்கள். அப்படியே நாமும் அஞ்ஞானப்பிள்ளைகளை நம்மோடு பரலோக ராஜ்யத்துக்குப் பிரயாணம் பண்ணுகிறவர்களாக அழைத்துக்கொண்டுவரப் பிரயாசப்படவேண்டும்.

3-வது, தபேரா என்ற இடத்துக்கு வந்தார்கள் (11:3.) எகிப்திலுள்ள அற்ப உணவுப்பொருள்களை நினைத்து, அவைகளின்மேல் இச்சையுள்ளவர்களானார்கள். (4 வா.) தேவதூதரின் அப்பமாகிய மன்னாவை வெறுத்தார்கள். (6 வா.) தங்கள் இச்சைக்கேற்ற பலனை அடைந்தார்கள். (34 வா.) கர்த்தருடைய கோபம் ஜனங்களுக்குள்ளே மூண்டது. கர்த்தர் ஜனங்களை மகா வாதையால் வாதித்தார். சிற்றின்பக்கதைகளிலும், வீண்பேச்சுகளிலும் மனதைச் செலுத்தி ஞானமன்னாவாகிய கர்த்தருடைய வேதத்தை வெறுக்கிற பிள்ளையே! எச்சரிக்கை! ''இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்'' என்பதை மறந்துவிடாதே.



4-வது, பன்னிரண்டு பேர் கானான் தேசத்தை வேவு பார்க்கப்போய்த் திரும்பிவருகிறார்கள். அவர்களில் பத்துப்பேர் அவிசுவாசிகளாய் அங்கே இராட்சதரைக்கண்டோம் (13: 33) அவர்களை எதிர்க்க நம்மாலே கூடாது. (31 வா.) என்கிறார்கள். காலேபோ ''நாம் எளிதாய் அவர்களை ஜெயித்துக்கொள்ளலாம் (30 வா.) என்கிறான். சிறுவராகிய நீங்கள் ஜெயிக்கவேண்டிய இராட்சதரும் உண்டு. களவு, பொய், தூஷணம், சண்டை முதலியவைகளே அந்த இராட்சதர். இயேசுவைப்பற்றிய விசுவாசத்தினால் நீங்கள் அந்தப்பாவங்களை மேற்கொள்ளவேண்டும்.

5-வது, கோராகின் கலகத்தைப்பார் (அதி. 16). தாத்தான் அபிராம் என்பவர்களையும் இன்னும் 250 பேரையும் தன்னோடு கூட்டிக்கொள்ளுகிறான். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறான். அவனுடைய பாவங்களைப் பார். மோசேயையும் ஆரோனையும் போல் இருக்க விரும்புகிறான். அது பேராசை. அவர்கள் உயர்ந்திருப்பது அவனுக்குப்பிரியமில்லை. அது பொறாமை. மோசேயின் அழைப்பைத் தட்டிவிடுகிறார்கள். கீழ்ப்படியாமை. அந்தப்பாவத்தால் வந்த தண்டனையைப் பார். உயிரோடே பாதாளத்தில் தள்ளப்பட்டார்கள். இந்தப்பாவங்கள் உன்னிடத்தில் உண்டா?

6-வது, மேரிபாவின் தண்ணீர் (அதி. 20.) ஜனங்களுக்குத் தண்ணீர் இல்லை. முறுமுறுக்கிறார்கள். ஆண்டவர் கன்மலையைப் பார்த்துப் பேசச்சொல்லுகிறார். முன் ஒரு தடவை தண்ணீர் இல்லாதபோது கன்மலையை அடிக்கச் சொன்னார் (யாத். 17: 6). இப்போது கன்மலையோடு பேசச்சொல்லுகிறார். ஆனால் மோசே தேவகட்டளைப்படி நடக்கவில்லை. கோபத்தினால் கன்மலையை அடித்துவிட்டான். தண்டனைக்கு உள்ளானான். அந்தக் கன்மலை கிறிஸ்துவே. (1 கொரி. 10: 4.) முன் ஒருதரம் அவர் நமது பாவங்களுக்காக அடிக்கப்பட்டார். இப்பொழுது நாம் அவரோடபேசி அந்த நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். திரும்பவும் நமது பாவங்களால் அவரை அடிக்காதபடி எச்சரிக்கையாயிருப்போமாக.

7-வது, கொள்ளிவாய்ச் சர்ப்பம் (அதி. 21.) திரும்பவும் ஜனங்கள் வழியினிமித்தமும் ஆகாரத்தினிமித்தமும் முறுமுறுக்கிறார்கள். ஆகையால் ஆண்டவர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அவர்களுக்குள்ளே அனுப்பினார். அந்தக்கொடிய தண்டனையைத் தங்களைவிட்டு நீக்கும்படி கர்த்தரை நோக்கிக் கெஞ்சினார்கள். தேவகட்டளைப்படி வெண்கல சர்ப்பம் கம்பத்தின்மேல் தூக்கிவைக்கப்பட்டது. அதை நோக்கிப் பார்த்தவன் பிழைத்தான். பிசாசுக்கு வலுசர்ப்பம் என்று பேர். அவன் பாவ விஷத்தை மனுஷனுக்குள்ளே செலுத்திவிடுகிறான். நமக்காக உயர்த்தப்பட்டிருக்கிற வெண்கலசர்ப்பம் இயேசுவே. அவரை நமது சொந்த ரட்சகராக விசுவாசத்தினால் நோக்கிப் பார்ப்போம். அப்பொழுது நமது பாவ விஷம் நீங்கி நமக்கு நித்திய ஜீவன் கிடைக்கும்.

## ஒரே வழி.

மணி என்ற ஒரு சிறு பையன் இருந்தான். அவனுடைய தாயார் வியாதியாய்ப் படுத்திருந்தார்கள். இவன் அந்த அறையிலே உட்கார்ந்திருந்தான். அங்கே அவனை பேசாமல், அமரிக்கையாய் இருக்கும்படி சொல்லியிருந்தார்கள். ஆகையால் அவன் ஒரு வெள்ளைக்காகிதத்தை எடுத்து, தன் பேனை நல்ல எழுத்துக்களாய், பென்சலால் எழுதிக்கொண்டிருந்தான். அதிலே ஒரு தப்பிதம் விழுந்துவிட்டது. சிலேற்றில் தப்பிதம் விழுந்தால் அழிக்கிறதுபோல அவன் தன் விரலை நனைத்து அதை அழிக்கப் போனான். அதைக்கண்ட தாய் அவனைத் தடுத்து "என் மகனே, உன் விரல்களால் நீ அதை அழித்துவிடமுடியாது, ஒன்றே ஒன்று மாத்திரம் அதை அழிக்கமுடியும். மேசைக்குள் றப்பர் இருக்கிறது. அதை எடுத்து அழித்துப்பார். அப்பொழுது லேசாய் அழிந்துவிடும் என்றாள். அவன் அப்படியே செய்தான். அது லேசாய் அழிந்துவிட்டது.

பின்பு அவனுடைய தாய் அவனைப்பார்த்து "என் மகனே, உன் செய்கைகளை எல்லாம ஆண்டவர் ஒரு புஸ்தகத்திலே எழுதிக்கொண்டே வருகிறார். ஒவ்வொரு தகாத வார்த்தையும் கெட்ட எண்ணங்களும் செய்கைகளும் அதிலே எழுதப்படுகின்றன. என் அன்புள்ள மகனே, அவைகளை அழித்துவிட உன்னால் முடியுமா?" என்று கேட்டாள். இதைப்பற்றி அந்தச் சிறு பையன் ஒரு நாளும் நினைக்கவேயில்லை. தன் செய்கைகள் எல்லாம் எழுதப்பட்டிருக்கிறது என்று அறிந்தபோது அதிகமாய்ப் பயந்தான், அவன் முகம் குளுவினது. கலக்கத்தோடு வெளியே போனான். சற்று பொறுத்துத் திரும்பவும் தன் தாயின் படுக்கையண்டை வந்தான். "அன்புள்ள அம்மா, இயேசு கிறிஸ்துவின் இரத்தம், தேவனுடைய புஸ்தகத்திலிருந்து என் பாவங்களை எல்லாம் அழித்துவிடக்கூடாதா?" என்று கேட்டான் "ஆம், மகனே, உன் பாவங்களை அழித்துவிடுவதற்கு அந்த வழிதான், அந்த ஒரே வழிதான் உண்டு என்று" தாய் சொன்னாள். அப்பொழுது அவன் தன் கண்களில் நிறைந்திருந்த கண்ணீரைத் துடைத்துவிட்டுச் சந்தோஷமுள்ளவனானான். "இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகலபாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கும்" என்ற வசனம் அவனுக்கு அதிக இன்பமாயிருந்தது.

---

### பரீக்ஷைப் பாடங்கள்

எண்ணாகமம்.

1. காலேபின் சரித்திரம்
2. மன்னாவை வெறுத்தது
3. தண்ணீருக்காக முறுமுறுத்தது
4. கோராவின் கலகம்
5. வெண்கலச் சர்ப்பம்
6. பிலேயாமின் சங்கதி

Printed at the Church Mission Press, Palamcottah, for the Tinnevelly S. P. G. Children's Mission.



The Children's Herald.

# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்." நீதி. 8: 32.

Vol. IX. ஆகஸ்ற்று, 1914. No. 8.

OFFICE OF ... 29 SEP 191 ... MA

## காலஞ்சென்ற

## மகா கனம் உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள்.

இவ்வுலகத்தின் வாழ்வே நிலையற்றதுதான். மரணம் யாருக்குமே வரும். அதற்குப்பெரியவர் என்றும், சிறியவர் என்றும், வித்தியாசமே இல்லை. எல்லாராலும் நேசிக்கப்பட்டு, அநேகருக்குப் பல நன்மைகள் புரிந்துவந்த நமது அருமை அத்தியக்ஷரவர்கள், சென்ற ஜூன்மீ 30உ செவ்வாய்க் கிழமை பகல் 1-40 மணிக்கு 68 வயதுள்ளவர்களாய் குன்னூர் ரெயில்வே ஸ்டேஷனில் இம்மண்ணுலகை விட்டுப் பிரிந்து விண்ணுலகம் சென்றார்கள். அவர்களுடைய மரணம் திருநெல்வேலி சபைக்குப் பெரும் நஷ்டமே. ஆயினும் நமது அறிவு குறைவுள்ளது. நமக்கு நஷ்டமாய்த் தோன்றுகிற காரியங்களைக்கொண்டே பல சமயங்களில் தேவன் தமது திருச்சித்தத்தை நிறைவேற்றுகிறார்!

மகாகனம் உல்லியம்ஸ் அத்தியக்ஷரவர்கள் 1846-ம் ஆண்டு நவம்பர் மாசத்தில் பிறந்து, டப்ளின் நகரத்துக் கலாசாலையில் கல்வி பயின்று, அங்கேயே (M A) எம் ஏ. பட்டமும் பெற்றார்கள். 1871-ல் குருப்பட்டம் பெற்று 9 வருஷக்காலம் இங்கிலாந்திலேயே உதவிக் குருவாக ஊழியஞ்செய்தார்கள். அப்பால் விவாகஞ்செய்துகொண்டு, சென்னை அத்தியக்ஷரினைச் சேர்ந்த ஒரு குருவாக இந்தியாவுக்குப் புறப்பட்டார்கள். 1880-ம் ஆண்டு அக்டோபர் மீ 18உ, நம் இந்திய தேசத்தின் கரையில் இறங்கி, அதுமுதல் [illegible] வருஷங்களாய் நம் இந்தியருக்காகவே தங்கள் பெலனையும் பொருளையும் செலவுசெய்தார்கள். [illegible] வருஷங்களில், சென்னை

அத்தியக்ஷாதீனத்தின் ஒரு க்ஷாப்ளன் குருவாக பல முக்கிய ஸ்தானங்களில் தங்கள் ஊழியத்தை நடப்பித்தார்கள். 1884-ல் தமிழ் பரீட்சையில் மிக உயர்ந்த மார்க்கு எடுத்து ஒப்பேறினார்கள். அவர்கள் அப்போது அடைந்துள்ள தமிழ் பாஷையின் அறிவானது பிற்காலத்தில் தமிழ் ஜனங்களுடன் நன்றாய்ப் பழகிக்கொள்ள ஓர் ஏதுவாயிற்று. 1896 முதல் 1900 வரை 'சென்னை அத்தியக்ஷாதீன ரெக்கார்ட்' என்ற பத்திரிகைக்குப் பத்திராதிபராகவும் இருந்து, வெகு திறமையுடன் அதை நடத்திவந்தார்கள். அப்பால் 1900-௵ செப்டெம்பர் ௴ 26௳ சென்னை ஆர்ச்டீக்கனாக நியமனம் பெற்று, 4½ வருஷக்காலம் அத்திருப் பணிவிடையை நிறைவேற்றினார்கள். சென்னை அத்தியக்ஷரவர்கள் தலத்தில் இல்லாதபோது அத்தியக்ஷாதீன அதிகாரத்தையும் வகித்து வந்தார்கள்.

1905-௵ பெப்ருவரி ௴ 2௳ சென்னை பரி. ஜியார்ஜ் அத்தியக்ஷாலயத்தில் திருநெல்வேலி மதுரை பிஷப்பாக அபிஷேகம் பெற்று, சுமார் 9½ வருஷங்களாக திருநெல்வேலி சபையை நடத்தி வந்தார்கள். இக்காலத்தில் சுமார் பதின்மூன்றாயிரம் பேருக்குப்போல் திடப்படுத்தல் கொடுத்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான ஆலயங்களைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அத்தியக்ஷாதீனத்தின் மத்திய ஸ்தானத்தில் மாத்திரமல்ல, ஜில்லாவின் எல்லா முக்கிய இடங்களிலும் குருப்பட்டாபிஷேகம் வைத்து நடத்தியிருக்கிறார்கள். கடந்த ஏப்ரல் மாசத்தில் வழக்கம்போல் மலைக்குப் போனார்கள். ஆயினும் தங்கள் தேகம் நாளுக்கு நாள் பலவீனப்பட்டு வருவதை உணர்ந்து, டாக்ற்றரிடம் ஆலோசனை கேட்க, அவர் 'உடனே சென்னபட்டணத்துக்குப் போகவேண்டும்' என்று ஆலோசனை சொன்னார். அப்படியே பட்டணத்துக்குப் போகும்படி புறப்பட்டு, குன்னூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்தார்கள். வண்டி வரச் சற்று தாமதமான மத்தியில், நிற்கமுடியாமல், பக்கத்தில் நின்ற ஒரு துரைசானியின் உதவியினால், அங்கு இருந்த ஒரு பெஞ்சில் உட்கார்ந்தார்கள். உடனே ஜீவன் பிரிந்துவிட்டது. அவர்களுடைய தேகம் மறுநாள் சாயந்தரத்தில், குன்னூரில் ஐரோப்பியரும் இந்தியருமான குருக்களும் சபையாரும் புடைசூழ வெகுபக்திவினயமாய் க்ஷேமிக்கப்பட்டது. தன் அருமைப் பத்தாவை இழந்த கனம். உல்லியம்ஸ் அம்மாளவர்களுக்கும், தங்கள் அன்பான மேய்ப்பனை இழந்த சபை முழுவதுக்கும் கர்த்தர் நல்ல ஆறுதலைக் கட்டளையிடுவாராக.

மகாகனம் அத்தியக்ஷரவர்கள் நமது பாலியர் சங்கத்துக்குப் பிரசிடென்றாக இருந்து வந்தார்கள். அவர்கள் இச்சங்கத்தின் பிரசிடென்றான துவக்கத்தில் இவ்வேலை நாசரேத் சேகரத்தில் மாத்திரம் நடந்துவந்தது. இப்போதோ இந்த அத்தியக்ஷாதீனத்திலுள்ள எஸ். பி. ஜி. சேகரங்கள் எல்லா



வற்றிலும் இவ்வேலை நடந்துவருகிறது. அப்போது நமது சங்கத்தைச் சேர்ந்த 231 மெம்பர்கள் மாத்திரம் இருந்தார்கள். இப்போதோ 2500 மெம்பர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆதரித்துவந்தவேலை இவ்வளவாய் விருத்தியடைந்திருக்கிறது. அவர்களோ நம்மைவிட்டுக் கடந்துபோய்விட்டார்கள். ஆயினும் அவர்களுடைய ஜீவியத்தை நமக்கு மாதிரியாகப் பின்வைத்துப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியத்திலிருந்து நாம் பின்பற்றக்கூடிய அநேக நல்ல காரியங்கள் உண்டு. சிலதை மாத்திரம் இங்கே சுருக்கிச் சொல்லுவோம்.

1. சுறுசுறுப்பு. அத்தியக்ஷரவர்கள் எப்போதாவது ஒரு வேலையுமின்றி சும்மாயிருக்க ஒருவரும் பார்த்திருக்கமாட்டார்கள். ஒரு ரைற்றர் முதலாய் வைத்துக்கொள்ளாமல் எழுத்து வேலையை எல்லாம் தாங்களே செய்துவந்தார்கள். திடப்படுத்தல் ஆராதனைகளுக்கும், ஆலய முதலிய பிரதிஷ்டைகளுக்கு மாத்திரமல்ல, தவசஉற்சவமோ, பிள்ளைகளின் மனமகிழ்ச்சிப் பண்டிகைகளோ, அல்லது சபைக்கடுத்த வேறு எந்த வேலையோ அவர்களை அழைப்பது தான் தாமதம். உடனே புறப்பட்டுப்போவார்கள். இவ்வருஷத்திலும் கூட இரண்டு இடங்களில் நமது பாலர் பண்டிகைக்கு வந்திருந்தார்கள். சிலவேளைகளில் கலியாணங்களுக்கும், அடக்கங்களுக்கும் கூடப்போய் நடத்துவார்கள். எப்போதும் வேலைசெய்யவேண்டுமென்பதே அவர்கள் பிரியம்.

2. உதாரத்துவம். அநேகர் ஆஸ்திக்காரராயிருந்தாலும், நமது அத்தியக்ஷரவர்களைப்போல உதாரமாய்க் கொடுக்கிறவர்கள் மிகச் சொற்பப்பேர் தான். இவ்வத்தியக்ஷாதீனத்தில் கடந்த 9 வருஷங்களுக்குள் கட்டப்பட்டிருக்கும் ஆலயங்களிலும், மற்றும் பொதுக் கட்டடங்களிலும் அவர்களுடைய பணம் சேராத கட்டடம் ஒன்றுமிராது. மிஷன் வேலைகளுக்கு அவர்களைப்போல பண உதவிசெய்தவர்கள் இங்கு எவருமே இல்லை. உற்சவதினங்களில் உதாரமாய் காணிக்கை கொடுப்பதுந்தவிர உற்சாகமாய் ஏலமும் எடுப்பார்கள். நமது பாலர் பண்டிகைகளில் இவ்விதமாய் அவர்கள் காட்டிய உதாரத்துவம்தவிர, வருஷந்தோறும் நமது சங்கத்துக்கு 70 ரூபாய் கொடுத்துவந்தார்கள். அவர்களது உதவியால் படித்துவரும் எத்தனையோ பிள்ளைகள் உண்டு. வருத்தப்படுகிறோம் என்று வருகிற யாருக்கும் உதாரமாய் உதவிசெய்வார்கள்.

3. அன்பு. அத்தியக்ஷரவர்களைப்போல அன்பும் பாசமும் உள்ளவர்கள் உலகத்தில் அதிகப்பேர் இல்லை. எந்த வீட்டுக்கும் தாராளமாய்ப் போவார்கள். யாரோடும் சாவகாசமாய்ப் பேசுவார்கள். சிறு பிள்ளைகள் என்றால் அவர்களுக்கு அதிகக் கொண்டாட்டம். அத்தியக்ஷரவர்கள் நடந்துபோகும்போது எப்போதும் ஒரு கூட்டம் பிள்ளைகள் அவர்களைத் தொடர்ந்துபோகும். அவர்களுடைய அன்பான போதனைகளும், சாதுரியப் பிரசங்கங்களும் நாம் எளிதில் மறக்கத்தக்கதன்று. உங்களில் அநேகர் அவர்களால் திடபபடுத்தல் பெற்றவர்களே. அப்போது அவர்கள் சொன்ன போதனைகளும் உங்கள் ஞாபகத்தில் இருக்கலாம். அவர்களுடைய அன்பான போதனைகளையும், அவர்களுடைய ஜீவியத்தில் காணப்பட்ட எல்லா நற்குணங்களையும் பின்பற்றுவீர்களானால் இதுவே நீங்கள் அவர்களுக்குக் காட்டக்கூடிய நல்ல குருபக்தியாகும்.

## ஆகாரம் தேவை.

ஏறக்குறைய 16 வருஷங்களுக்கு முன்னே ஓரியன்ற் என்ற ஒரு பெரிய நீராவிக்கப்பல் ஆஸ்ற்ரேலியா தேசத்தின் துறைமுகங்கள் ஒன்றை விட்டுப் புறப்பட்டது. கடல் அதிகக் கோஷ்டமாயிருந்தது. மறுநாளும் காற்றின் மும்முரமும் கடலின் கோஷ்டமும் தணியவேயில்லை. கப்பல் தரையைவிட்டு அநேக மைல் தூரம் வந்துவிட்டது. சாயந்திரத்திலே கப்பல் மாலுமி தூரதிருஷ்டிக்கண்ணாடி வைத்துப் பார்த்தபோது, தூரத்திலே ஒரு சிறு கப்பல் அதிக அவஸ்தையில் இருப்பதாகத் தெரிந்தது. "ஆகாரம் தேவை, நாங்கள் பட்டினியாயிருக்கிறோம்" என்ற கொடி அதிலே தொங்கிக்கொண்டிருந்தது இந்த மோசமான நேரத்தில் யார் அவர்களுக்கு ஆகாரம் கொண்டுபோய்க் கொடுக்கிறது! ஆயினும் தன் கப்பலை அந்தக்கப்பலுக்குச் சற்று சமீபமாய் நடத்தினான். "உங்களுக்கு அதிக அவசியமாய் ஆகாரம் வேண்டுமோ" என்று கொடியின் மூலமாய்க் கேட்டான். "ஆம் அதிக அவசியம்தான்" என்று மாறுத்தரம் சொன்னார்கள். யார் அவர்களுக்கு ஆகாரம் கொண்டுபோவார்கள்? என்று கப்பல் ஆட்களிடம் கேட்டான். ஆறு கப்பற்காரர் அதற்குச்சம்மதித்தார்கள். அந்த ஆறுபேரையும் வேண்டிய ஆகாரத்தையும் ஒரு தோணியில் வைத்து கடலுக்குள் இறக்கிவிட்டார்கள். ஆ, இந்த ஆறுபேரும் எவ்வளவோ வருத்தத்தோடு அலைகளை ஊடுருவிச் சென்றார்கள். சிலவேளைகளில் அவர்கள் மூழ்கிப்போனது போல தோன்றினாலும், கடைசியாக அந்தச் சிறு கப்பலைப் போய்ச் சேர்ந்து, அங்கே பட்டினியாயிருந்த ஜனங்களுக்குப் போதுமான சாப்பாடு கொடுத்துத் திரும்பினார்கள். அவர்கள் திரும்பிவரும்போதும் அதிக வருத்தப்பட்டு, இளைத்தவர்களாய் கப்பல் வந்து சேர்ந்தார்கள். ஆனால் தாங்கள் அடைந்த கஷ்டத்துக்கு மேலாக அவர்களுக்கு ஒரு சந்தோஷமிருந்தது. என்னவென்றால் பட்டினியாயிருந்து சாகப்போனவர்களைக் காப்பாற்றிவிட்டார்கள். அவர்களும் தங்கள் நன்றியறிதலை வெகுவாய்க் காட்டினார்கள்.

பிரியமான பாலியரே, உங்களைச் சுற்றி இருக்கும் அஞ்ஞானப்பிள்ளைகளையும், தூரத்திலே தெலுங்கு நாட்டிலிருக்கும் ஏழை ஜனங்களையும் சற்று கவனித்துப் பாருங்கள். ஆத்தும ஆகாரமின்றி எத்தனையோ பேர் அழிந்து போகிறார்கள். 'வந்து எங்களுக்கு உதவிசெய்யுங்கள்' என்று கூப்பிடும் ஏராளமான ஜனங்கள் தெலுங்கு நாட்டிலே உண்டு. உங்களில் யார் அவர்களுக்கு ஜீவ அப்பமாகிய இயேசு சுவாமியை கொண்டுபோவீர்கள். இப்போது நீங்கள் போகமுடியாவிட்டாலும் அவர்களுக்காக ஜெபம்பண்ணுவீர்களா? உங்கள் பொருள்களை உதாரத்துவமாய் அந்த நல்ல வேலைக்கென்று கொடுப்பீர்களா?

## பரீட்சைப்பாடங்கள்.

பரி யோவான் சுவிசேஷம்.

1. இதில் சொல்லப்பட்டிருக்கும் அற்புதங்கள்.
2. பரி. பேதுருவைப்பற்றி இதில் வரும் குறிப்புகள்.
3. நிக்கொதேமு, சமாரிய ஸ்திரீ, மரியாள், பரி. நாத்தான் வேல், பரி. தோமா இவர்களைப்பற்றி வரும் சங்கதிகள்.

Printed at the Church Mission Press, Palamcottah, for the
Tinnevelly S. P. G. Children's Mission.

The

# Children's Herald.

# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்" நீதி. 8: 32.

Vol. X. ஏப்பிரல், 1915. No. 4.

## கர்த்தருடைய ஜெபம்.

OFFICE OF THE REGISTRAR OF ... 7 - DEC 1915 MADRAS

### 2-வது விண்ணப்பம்.

"உம்முடைய ராஜ்யம் வருவதாக"

தங்கவாக்கியம்:— "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல; அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது" ரோம 14. 17

போனமாதம் தேவனுடைய பரிசுத்த நாமத்தைப்பற்றிச் சிந்தித்தோம். இந்தமாசம் அவருடைய ராஜ்யத்தைப்பற்றி கவனிப்போம்.

1. தேவனுடைய ராஜ்யம் எவைகளைக்குறிக்கும்? தேவனுடைராஜ்யம் என்பது நமது இருதயத்தையும், பூமியிலே திருச்சபையையும், இனி வரும் மோட்சமகிமையையும் குறிக்கும். 1-வது நமது இருதயம் பரி. லூக். 17. 21. பார். தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வரும் என்று கேட்டவர்களுக்கு நமதாண்டவர் "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" என்கிறார். இயேசுவை நமது இராஜாவாக ஏற்றுக்கொண்டு அவருடைய சட்டங்களுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கும்போது நமது இருதயம் தேவனுடைய ராஜ்யமாகிறது. 2-வது பூமியிலிருக்கும் திருச்சபை. திருச்சபைக்கு ராஜா இயேசுவே. தேவ ஊழியர் யாவரும் இந்தராஜ்யத்தின் உத்தியோகஸ்தர். "மனந்திரும்புங்கள்; பரலோக ராஜ்

கை வாங்குகிற ஒருவர் அந்த மனிதனை ஒருநாள் தற்செயலாய்க்கண்டு 'இந்தவருஷம் உம்மிடம் காணிக்கை வாங்கவா. எனக்கு மனமில்லை, ஏனென்றால் உங்களுக்கு அதிக நஷ்டம் உண்டாகிவிட்டது" என்று சொன்னார். "இல்லை, இல்லை. தேவனுடைய ராஜ்யம் விருத்தியாவதற்கு நான் கொடுக்கும் காணிக்கையை நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே ஒரு பெட்டியைத்திறந்து பத்து வெள்ளி நாணயங்களை எடுத்து அவரிடம் கொடுத்தான். இந்தப்பணம் எப்படி சம்பாதிக்கப்பட்டது தெரியுமா? அந்த மனிதன் பலஇடங்களுக்கு வேலைவிஷயமாய்ப்போகும்போது வண்டிவாடகைக்காக பிள்ளைகள் கொடுக்கும் பணத்தை செலவழிக்காமல், நடந்து, அந்த பணத்தை மீதிபிடித்தான். தொழில் நஷ்டப்படாமலிருந்தால் தன் வருமானத்திலிருந்து அதை கொடுத்திருப்பான். இப்பொழுதோ தேவனுடைய ராஜ்யம் பூமியிலே விர்த்தியடையவேண்டுமென்ற ஆசையினால் 78-வயதுள்ள அவன் 120-மைல் நடந்து அந்த பணத்தை சம்பாதித்தான் இவ்விதமான சுயவெறுப்பு உனக்கு உண்டா?

---

## ஜீவநதி.

சூரியன் கடும் வெயிலுடன் உதிக்கிற உஷ்ணகாலத்தின் ஒருநாள் அதிகாலையில் ஓர் சீமான் ஆற்றங்கரைஓரத்தில் நின்று கொண்டிருந்தான் ஆற்றில் அலங்காரமாய் கட்டப்பட்டிருக்கும் பாலமும், பெருவாரியாய் ஓடிக்கொண்டிருக்கும் வெள்ளமும், ஊடேஊடே எழும்பும் நீர்க்குமிழிகளும் பளிங்குபோல் தெளிவாய்த்தோன்றும் தண்ணீரும் அவன் கவனத்தை இழுத்துக்கொண்டிருந்தன. அவ்வழியேவந்த தெய்வபக்தியுள்ள ஒரு அம்மாள், அவனைப்பார்த்து " இதைவிட நேர்த்தியான ஒரு ஆறு உண்டு. அதைப்பற்றி உமக்கு ஏதாவது தெரியுமா? " என்று கேட்டுவிட்டு தன்மட்டில் போய்விட்டாள். சில வருஷங்கள் சென்றபின் அந்த சீமான் தற்செயலாய் அவளைக்கண்டு " அம்மா, ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தை சந்தோஷிப்பிக்கும்" நீ அன்று என்னிடம் கேட்ட கேள்வி என்னை அந்த நதியினிடத்துக்கு வழிநடத்திவிட்டது. அதை நினைக்கநினைக்க என் உள்ளத்தில் ஆனந்தம் பொங்குகிறது. நீ சொன்ன அந்த மேலான நதியைக்கண்டுபிடித்தேன்" என்றான். இயேசுவின் ஒப்பற்ற அன்புதான் அந்த மேலான நதி. நீ அதைக்கண்டடைந்திருக்கிறாயா?

**"பாவம் போக்கும் ஜீவநதியை**
**பாராய் வந்து பாராய்"**

---

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

The
# Children's Herald.
# பாலர் தூதன்

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்" நீதி. 8: 32.

Vol. X. மே, ஜூன் 1915. No. 5, 6.

7 - DEC 19

## கர்த்தருடைய ஜெபம்.

### 3-வது விண்ணப்பம்.

### " உம்முடைய சித்தம். செய்யப்படுவதாக "

**தங்க வாக்கியம்.** " *நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது* " 1 தெச. 4. 3.

முதல் மூன்று விண்ணப்பங்களும் எப்படி ஒன்றோடொன்று, சம்மந்தப்பட்டிருக்கிறது பார். தேவனுடைய சித்தம் செய்யப்படாவிட்டால் தேவனுடைய ராஜ்யம் விருத்தியாக மாட்டாது. அவருடைய ராஜ்யம் விருத்தியாகா விட்டால் அவருடைய நாமம் பரிசுத்தப் படமுடியாது. ஆகையால் தேவதூதர் பரலோகத்திலே தேவ சித்தத்தை சந்தோஷமாய் நிறைவேற்றுகிறதுபோல பூலோகத்திலே நாமும், மற்ற எல்லா மனிதரும் தேவ சித்தத்தின்படி நடந்து வருவதற்காக நாம் ஜெபம்பண்ணவேண்டும்.

i. தேவன் தமது சித்தத்தை நமக்கு எப்படி வெளிப்படுத்துகிறார்? 1. பரிசுத்த வேதாகமத்தின் மூலமாய் வெளிப்படுத்துகிறார். சங். 119: 105 பார். " உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என்பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" 2. பரிசுத்த ஆவியின் மூலமாய் வெளிப்படுத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய உள்ளத்திலே தங்கி, நமது மனச்சாட்சியிலே தேவ சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். 3. திருச்சபையின் மூலமாய் வெளிப்படுத்துகிறார். திருச்சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது. அது நமக்கு வழி காட்டவும்

நமக்குப் போதிக்கவும் நமதாண்டவரால் அதிகாரம் பெற்றிருக்கிறது சபைக்கு செவி கொடாதவன் அஞ்ஞானியைப் போலிருக்கக்கடவன். (பரி. மத். 18. 17.) 4. கிறிஸ்துவானவரின் சிறந்த முன்மாதிரியினாலே தேவன் தமது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். "நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி வரும்படி அவர் நமக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்" (1 பேது. 2. 21.) 5. நமக்கு மேற்பட்டவர்கள் மூலமாயும் தேவன் தமது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். பெற்றோர், உபாத்திமார், எஜமான்கள் முதலியோர் நமக்கு மேற்பட்டவர்கள் அவர்களுக்கு நாம் கீழ்படிய வேண்டும் என்பது தேவசித்தம்.

ii. தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படியாதபடி நம்மைத் தடுக்கிற 2 முக்கிய தடைகளேவை ? 1வது நம்முடைய அறியாமை, அநேக சமயங்களில் மனுஷர் தேவ சித்தத்தை அறியாமலே பாவஞ்செய்கிறார்கள். "ஆகையால் நீங்கள் மதியற்றவர்களாயிராமல் கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்". (எபே. 5: 17.) 2வது நம்முடைய சுய இஷ்டம். அநேகர் தங்கள் சொந்த விருப்பத்தின்படி செய்ய நினைக்கிறதினாலே தேவ சித்தத்துக்கு கீழ்ப்படியாமற் போகிறார்கள். "என் சித்தத்தின் படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது".

iii. எந்த இரண்டு வகையாய் நாம் தேவசித்தத்தை நிறைவேற்ற வேண்டும்? 1வது நம்முடைய நினைவினாலும் வார்த்தையினாலும், செய்கையினாலும் தேவ சித்தத்தை நிறை வேற்ற வேண்டும். 2வது தேவன் நம்மை எந்த நிலைமையில் வைக்கச் சித்தமாயிருக்கிறாரோ அந்த நிலைமையில் தேவ சித்தத்துக்கு அமைந்து பொறுமையாயிருக்க வேண்டும். யோபு, ஏலி, தாவீது, எல்லாவற்றிற்கு மேலாக நமதாண்டவர், இவர்கள் தேவ சித்தத்துக்கு அமைந்து நடந்தவர்கள்.

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே, என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை", பரி. மத் 7.21.

## இயேசு வரமுடியாத இடத்துக்குப்போகாதே.

ஒரு நல்ல மனிதன் ஒரு தடவை தன் இனத்தாரில் ஒருவர் வீட்டுக்கு விருந்துக்குப்போயிருந்தார். அந்த வீட்டுக்கார அம்மாள் சன்மார்க்கமாய் நடக்கிறவர்கள். ஒழுங்காய் கோவிலுக்குப் போவார்கள். நாள் தோறும் வேதம் வாசிப்பார்கள். ஆனால் உல்லாசப் பிரியம் அவர்களை விட்டுப் போகவில்லை. அந்த நல்ல மனிதன் தன் வீட்டுக்கு விருந்துக்கு



வந்த காலத்தில் அந்த அம்மாள் தன் வீட்டில் அதிக சந்தோஷம் கொண்டாடினார்கள். பல வேடிக்கைகளும், நடனங்களும் ஒரு நாடகமும் அங்கே வைக்கப்பட்டது. அந்த நல்ல மனிதன இவை ஒன்றிலும் பிரியப்படவில்லை. இது அந்த அம்மாளுக்கு அதிக வருத்தமாயிருந்தது. "பரியாச நாடகமும், நடனமும் மெய்க் கிறிஸ்தவர்களுக்கு ஏற்றதல்ல" என்று அந்த நல்ல மனிதன் சொன்னார். "அவைகளைச் செய்வதில் என்ன குற்றமிருக்கிறது ? என்று அம்மாள் கேட்டாள். அதற்கு அவர் "தெய்வ சித்தம் இன்னதென்று அறியுமுன்னே நான் ஒன்றிலும் பிரவேசிக்கிறதில்லை" என்றார் "தெய்வ சித்தம் இன்னதென்று நீர் எப்படி அறிந்து கொள்வீர் ?". என்று அந்த அம்மாள் கேட்டாள். அதற்கு அவர் நான் எதைச் செய்தாலும் ஜெபத்தோடேயே செய்யத் தொடங்குவேன். ஜெபத்தோடு தொடங்கத் தகாத எந்தக் காரியத்திலும் நான் பிரவேசிக்கிறதில்லை. தெய்வ சித்தம் இன்னதென்பதை அறியும்படி நான் அனுசரிக்கிறமுறை அதுவே. தேவனே! இந்தப் பரியாசமான நடனத்தையும், நாடகத்தையும் நீர் ஆசீர்வதிக்கும்படி எங்கள் நடுவில்வாரும் என்று நாம் கேட்க முடியுமா ?" என்றார்.

## தெய்வ சித்தத்துக்கு சந்தோஷமாய்க் கீழ்படி.

பதினாறும் நூற்றாண்டில் கில் பின் என்ற ஒருவர் இங்கிலாந்தில் இருந்தார். மார்க்கசீர்திருத்தம் உண்டானபோது அவர்மிகுந்த வைராக்கியமாய் ரோமான் மார்க்கத்தின் தவறுகளைக் கண்டித்து சுத்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வந்தார். அவருடைய ஊக்கமான ஊழியத்தைக் கண்ட ஆறாவது எட்வர்ட் அரசன் அவரை ஒரு பெரிய பட்டணத்துக்கு குருவாக நியமித்தார். அங்கே அவர் உத்தம ஊழியம் செய்து வந்தபடியால் அநேகர் ரோமைச் சபையின் தவறுகளை விட்டு மனந்திரும்பினார்கள்.

எட்வர்ட் இராஜ மரணமடைந்தபின் பட்டத்துக்கு வந்த மேரி இராணியின் காலத்தில் மெய் விசுவாசிகளுக்கு மிகுந்த உபத்திரவம் உண்டாயிற்று. அநேகர் சுட்டெரிக்கப்பட்டு, இரத்தச் சாட்சிகளாய் மரித்தார்கள். இரத்த மேரி எனனப்பட்ட அந்த இராணி கில்பின் என்பவரையும் பிடித்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டாள். அப்படியே ரோமான் மார்க்கத்தைச் சேர்ந்த சில பொல்லாத மனுஷர் அவரைப்பிடித்துக் கட்டி சுட்டெரிப்பதற்காக லண்டன் பட்டணத்துக்கு கொண்டு போனார்கள். இந்த துயரக் காட்சியைக்கண்ட அவருடைய சபையார் மருகி அழுது புலம்பினார்கள். அப்பொழுது அவர் தமது சபையாரைப் பார்த்து. "இது தெய்வ சித்தம். என் பிதாவின் சித்தத்துக்கு நான் சந்

தோஷமாய்க் கீழ்ப்படியவேண்டும்" என்றார். அவரைக்கட்டினவர்கள் ஒரு குதிரை வண்டியில் வைத்து அவரைக்கொண்டு போனார்கள். வழியிலே குதிரை எதையோ கண்டு மிரண்டு வழிவிலகி ஓடினதினால் வண்டியுடன் கில்பின் கீழே விழுந்தார். அவருடைய கால் முறிந்துபோயிற்று அப்பொழுதும் அவர் "இது என் பிதாவின் சித்தம். இதிலும் நான் சந்தோஷப்படுகிறேன்" என்றார். அவருடைய கால் முறிந்துபோன சங்கதி இராணிக்கு எட்டினபோது, அவள் அவரை பக்கத்து ஊர் ஆஸ்பத்திரியில் வைத்து சுகமானபின் லண்டன் பட்டணத்துக்குக் கொண்டுவரக் கட்டளையிட்டாள். அப்படியே அவர் ஆஸ்பத்திரியில் இருக்கும்போது மேரி இராணி மரணமடைந்தாள். எலிசபேத் என்ற நல்ல இராணி பட்டத்துக்கு வந்தாள். மெய் விசுவாசிகளுக்கு க்ஷேமம் உண்டாயிற்று. கில்பின் சுகமானார். அவருக்கு பிஷப் பட்டம் கொடுக்க தீர்மானிக்கப்பட்டது. அவரோ தாம் முன்னிருந்த பட்டணத்தில் திரும்பவும் குருவாகவே இருக்கும்படி உத்தரவு கேட்டுக்கொண்டார். பிள்ளைகளே, நமக்கு எந்தத் துன்பம் வந்தாலும் அது தெய்வசித்தம் என்றும் அதினாலே நமக்கு எப்படியும் ஒரு நன்மையிருக்கும் என்றும் எண்ணி, எப்போதும் தெய்வ சித்தத்துக்கு அமைந்து நடப்போமாக.

---

## கர்த்தருடைய ஜெபம்.

### 4-வது விண்ணப்பம்.

**"அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்"**

**தங்க வாக்கியம் :--** "*அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்*",
(ஏசா, 33. 16.)

'உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்' என்று தேவன் மனுஷனுக்குச் சொன்னார். 'ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடலாகாது' என்று பரி. பவுல் சொல்லியிருக்கிறார். அப்படியே மனுஷன் தனக்கு ஆகாரம் சம்பாதிக்க அதிகப் பிரயாசம் எடுக்கிறான். என்றாலும் தேவ ஆசீர்வாதம் இல்லாவிட்டால் அவன் பிரயாசம் விருதா (சங். 127. 3) ஆகையால்தான் நாம் அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும் என்று ஜெபம் பண்ண வேண்டும்.

i. **அப்பம் என்பது எவைகளைக் குறிக்கும்?** அப்பம் என்பது ஞானோபதேச வினாவிடையில் சொல்லியபடி நமது சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் வேண்டிய எல்லாக்காரியங்களையும் குறிக்கும். ஆகாரம், உடை, வீடு முதலியன சரீரத்துக்குவேண்டிய காரியங்கள். கர்த்தருடைய வசனமும் பரிசுத்த நற்கருணையிலே நமக்கருளப்படும் கிறிஸ்துவின் சரீரமும்



இரத்தமும் நமது ஆத்துமாவுக்குவேண்டிய ஆகாரம் (பரி. மத். 44: பரி. யோவா 6. 51)

ii. **அன்றன்றுள்ள என்று ஏன் சொல்லுகிறோம்?** ஏனென்றால் ஒவ்வொரு நாளும் நமக்குவேண்டிய கிருபை தேவனிடத்திலிருந்துதான் வரவேண்டும். நாம் எப்போதும் அவரை எதிர்பார்த்து பிழைக்கவேண்டும் என்பதுதான் தேவசித்தம். அதினால் எல்லா நன்மைகளையும் அவர் தம்மிடத்தில் வைத்துக்கொண்டு அப்போதைக்கப்போது நமக்கு அருளுகிறார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் நமது சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் வேண்டிய எல்லா நன்மைகளுக்கும் நாம் அவரையே எதிர்பார்க்கவேண்டும். "எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கிறது; ஏற்றவேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரம் கொடுக்கிறீர்" சங். 145. 15.

iii. **இன்று தாரும் என்று ஏன் சொல்லவேண்டும்?** நாளைக்கு நடப்பது இன்னதென்று நமக்கு தெரியாது (யாக். 4. 14) நாளைக்கு நமக்கு ஆகாரம் அல்லது வேறு நன்மை அவசரமாயிருக்குமோ இல்லையோ நாம் அறியோம். நாளைக்காக கவலைப்படாதிருங்கள் என்றும் அந்த நாளைக்கு அதன தன்பாடுபோதும் என்றும் நமதாண்டவர் போதித்திருக்கிறார். ஆகையால் இன்றைக்கு நமக்குத் தேவையானதை மாத்திரம் கேட்கிறோம். மேலும் இன்று என்பதினால் நாம் ஒவ்வொருநாளும் இந்த ஜெபத்தைத் தவறாமல் செய்துவரவேண்டும் என்றும் அறிந்துகொள்ளுகிறோம்.

**போதனை.** 1. நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் தேவாசீர்வாதம் இருக்கும்படி கெஞ்சவேண்டும்.

2. ஒவ்வொரு நாளும் தவறாமல் ஜெபம் செய்யவேண்டும்.

3. நித்தமும் நமது சரீரத்துக்காக நாம் சாப்பிடுகிறதுபோல கர்த்தருடைய வசனத்தை தினமும் வாசித்துத் தியானித்து அதை நமது ஆத்துமாவுக்கு ஆகாரமாக்கிக்கொள்ளவேண்டும்.

**"நீர் உமது கையைத்திறந்து சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர் சங். 145. 16.**

---

## பரி. கத்பட்.

"நார்தம்பிரியாவின் அப்போஸ்தலன்" என்று அழைக்கப்பட்ட பரி. கத்பட் என்பவர் மூர் என்னப்பட்ட பொல்லாத ஜாதியாரால் ஒரு சமயம் துரத்தப்பட்டார். அப்படியே அவர் ஒரு குதிரையில் ஏறிக்கொண்டு ஓடிப்போனார். ஒரு காட்டிலே சேர்ந்தபோது அவர் அதிகப் பசியாயும் ஆயாசமாயுமிருந்தார். ஆயினும் சாப்பிடுகிறதற்கு அவரிடம்

ஒன்றுமில்லை. முழங்காலூன்றிக் கர்த்தருடைய ஜெபத்தைச்சொன்னார். ஜெபம்பண்ணி முடிந்ததும் தமது தலைக்குமேல் ஒருகிளையிலிருந்த ஒருசிறு மூட்டையைக் கண்டார். அது நல்ல வெள்ளைத் துணியினால் சுற்றிக்கட்டப்பட்டிருந்தது. அதை எடுத்து அவிழ்த்துப்பார்த்தார். நேர்த்தியான ரொட்டியும் பொரித்த இறைச்சியும் உள்ளே இருந்தது.

இன்னொரு சமயத்திலே அவரும் மற்றொரு வாலிபனுமாக மனுஷ சஞ்சாரம் இல்லாத ஒரு காட்டின் வழியாகப் பிரயாணஞ்செய்ய நேரிட்டது. பொழுது அஸ்தமிக்கிற நேரத்திலே இன்னும் அவர்கள் நடுக் காட்டிலேயே இருந்தார்கள். அப்பொழுது அந்த வாலிபன் அவரைப் பார்த்து "இன்று நாம் எங்கே தங்குவோம்? நமக்கு ஆகாரம் எப்படிக் கிடைக்கும்?" என்று கேட்டான். அதற்கு அவர் "என்மகனே, பயப்படாதே, அன்றன்றுள்ள நமது ஆகாரத்தை கர்த்தர் நமக்குத்தருவார்" என்றார். சிறிது நேரத்திற்குள் அவர்கள் தலைக்கு மேலாகப் பறந்து போன ஒரு கழுகு தான்கொண்டுபோன இறைச்சித்துண்டைக் கீழே நழுவ விட்டது. அப்பொழுது அந்த வாலிபன் சந்தோஷத்தோடு ஓடிப் போய் அதை எடுத்தான். அதில் பாதி அவர்கள் இருவருக்கும் போதுமானதாயிருந்தது ஆகையால் பாதியைமட்டும் வெட்டி எடுத்துக்கொண்டு போனார்கள். கொஞ்சதூரம் போனபோது ஒரு சிறு கிராமத்தைக்கண்டார்கள். அங்கேபோய் ஸ்தோத்திரத்தோடு தங்கள் ஆகாரத்தைப் புசித்தார்கள்.

## நித்தமும் வாசி.

சில வருஷங்களுக்கு முன்னே அத்லாந்திக் மஹா சமுத்திரத்திலே ஒரு கப்பல் போய்க்கொண்டிருந்தது. அக்கப்பலில் உள்ளவர்களுக்குக் குடிக்கத்தண்ணீர் இல்லாமல் போய்விட்டது என்னசெய்யலாமென்று அவர்கள் திகைத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது தூரத்திலே வருகிற ஒரு கப்பலைக்கண்டார்கள். அக்கப்பல் தங்களுக்குச் சமீபமாய் வரும்படி சைகை காட்டினார்கள். அவர்கள் கிட்டவந்து "உங்களுக்கு என்ன வேண்டும்" என்றுகேட்டார்கள். "நாங்கள் தண்ணீர் இல்லாமல் சாகப் போகிறோம்" என்று இவர்கள் சொன்னார்கள். அப்பொழுது அவர்கள் "உங்களுக்குத் தண்ணீர் வேண்டுமானால் நீங்கள் அங்கேயே கடலில் மொண்டுகொள்ளுங்கள். உங்களைச்சுற்றி முழுவதும் சுத்தமான நல்ல தண்ணீர்தானிருக்கிறது ஏனென்றால் நீங்கள் அமேசோன் நதியின் முகத்துவாரத்துக்கு நேரேயே இருக்கிறீர்கள்" என்றார்கள்.

பிரியமான பிள்ளைகளே! உங்களில் அநேகர் அமேசோன் நதியை பற்றி படித்திருக்கிறீர்கள். உலகத்திலுள்ள ஆறுகளில் இதுவே மிகப்



பெரிது. இந்த நதி வந்துவிழுகிற விசையினால் அதின் சுத்தமான தண்ணீர் சமுத்திரத்தில் சுமார் 200 மைல் தூரம் வரையில் பரவி நிற்கும். அந்த இடத்திலேதான் இந்தக்கப்பல் நின்றுகொண்டிருந்தது. தங்களைச் சுற்றிலும் ஏராளமான நல்லதண்ணீர் இருந்தும் அவர்கள் தாகத்தினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும் என்று நித்தமும் ஜெபம் பண்ணுகிறாய். உன் ஆத்தும தாகத்தைத் தீர்க்கக்கூடிய கர்த்தருடைய வசனமானது உன் கையிலும் உன் வீட்டிலும் உண்டே, நித்தம் அதை வாசித்து வருகிறாயா?

## கர்த்தர் போஷிப்பார்.

கானான் தேசத்திலே கர்த்தர் எலியாவுக்கு காகங்கள் மூலமாய் ஆகாரம்கொடுத்ததை வாசிக்கையில் நீ ஆச்சரியப்பட்டிருப்பாய். அந்தக்காலத்தில் மாத்திரமல்ல. எல்லாக்காலத்திலும் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு உதவி செய்துகொண்டே வருகிறார். 1572-ம் ௵த்தில் பிரான்சு தேசத்திலே சுத்த சுவிசேஷத்தை அனுசரித்த கிறிஸ்துவர்களுக்கு ரோமான் மார்க்கத்தாரால் பெரிய உபத்திரவம் உண்டாயிற்று. ராஜா அரண்மனையிலே நடந்த ஒரு கலியாணத்துக்கு அவர்கள் வந்திருந்தபோது பெரிய வன்கொலை நடந்தது. மூன்று நாட்களாய் பாரீஸ்பட்டணத்திலும் பிரான்சு தேசம் முழுவதிலும் உள்ள குற்றமற்ற ஜனங்களில் அநேகர் கொல்லப்பட்டார்கள். அவர்களில் அநேகர் பிரபுக்களும், பட்ட வர்த்தனருமாயிருந்தார்கள் காலிக்னி என்ற சேனாதிபதி ஒருவர் தமது சொந்த வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டார். அவருடைய காரியதரிசியாகிய மெர்லின் என்பவர் கொலைகாரருக்குத்தப்பும்படி ஒரு வைக்கோல் படப்புக்குள்போய் ஒளித்துக்கொண்டார். அந்த இடத்தில் ஒருவாரம் இருக்கும்படி நேரிட்டது. சாப்பிடுகிறதற்காக வெளியே வர ஏதுவில்லை. ஏனெனில் வெளியே வந்தால் மரணம் தவராது. அன்றன்றுள்ள அப்பத்தை எலியாவுக்கு காகங்களைக்கொண்டு அருளின தேவன் இவரை ஒரு பெட்டைக்கோழியின் மூலமாய் உயிரோடே காப்பாற்றினார். அது ஒவ்வொருநாளும் அவருக்குச்சமீபமாய் வந்து ஒவ்வொரு முட்டையிட்டது. அதைச்சாப்பிட்டு அவர் உயிர் பிழைத்தார். இப்படியே அற்பமான ஏதுக்களைக்கொண்டும் தேவன் தம்முடைய பிள்ளைகளைக் காப்பாற்றுகிறவராகயிருக்கிறார்.

## நமது சங்க விசேஷங்கள்.

சென்ற ஏப்பிரல்௴த்தில் இடையன்குடி, கூடன்குளம் சேகரங்களில் முதல் தடவையாக பாலர் பண்டிகை கொண்டாடப்பட்டது.

ஆரத்தை உத்தேசித்து இப்பண்டிகை 4 இடங்களில் வைக்கப்பட்டன. பண்டிகைக்கு முந்தின இரவில் ஒளி விசித்திரப்படங்களின் மூலமாய் போதனைகளும் பண்டிகை நாட்களில் விசேஷித்த ஆட்கள் மூலமாய் பிரசங்கங்களும் செய்யப்பட்டன. முதல் தடவையாக இருந்தும் பிள்ளைகள் மனமகிழ்ச்சியோடு தேவ சமுகத்தில் கூடிவந்து கர்த்தரை ஆராதித்தார்கள். காணிக்கை விஷயமாய் இடையன்குடி, கூடன்குளம் கஸ்பாவிலுள்ள பிள்ளைகள் செய்திருந்த ஆயத்தம் அதிக விசேஷமானது. யாக்கோபுரத்தில் பெற்றோர் யாவரும் தங்கள் வேலைகளை நிறுத்திவிட்டு, தங்கள் பிள்ளைகளுடன் தேவசமுகத்துக்கு வந்து, அந்த நாளை மனமகிழ்ச்சியின் நாளாக்கினார்கள். புதூரில் ஒருவர் அன்று தனக்குக் கிடைக்கும் பதனீர் முழுவதையும் பண்டிகைக்கு வந்த பிள்ளைகளுக்கு விருந்தளித்தார். எல்லாரும் சாப்பிட்டு மீதியும் இருந்தது. மொத்தக்காணிக்கை இடையன்குடி சேகரத்தில் ரூ. 45. கூடன்குளம் சேகரத்தில் ரூ. 24. இந்த ஆரம்பம் நாளுக்குநாள் வளர்ந்தேறி அநேக பிள்ளைகளின் ஆத்தும நன்மைக்கு ஏதுவாகும்படி ஜெபித்துவரக் கேட்கிறோம்.

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

The
Children's Herald.

பாலர் தூதன்.

“பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்” நீதி. 8: 32.

Vol. X. ஜூலை 1915 No. 7

## கர்த்தருடைய ஜெபம்.

### 5-வது விண்ணப்பம்

“எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்.”

தங்க வாக்கியம்:—“மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கு மன்னிப்பார்” பரி. மத். 6. 14.

நான்காவது விண்ணப்பத்தில் நமது சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் அவசியமான ஆகாரத்துக்காக ஆண்டவரிடம் கேட்கிறோம். ஐந்தாவது விண்ணப்பத்தில் நமது ரட்சிப்புக்கு அவசியமான பாவமன்னிப்புக்காகக் கெஞ்சுகிறோம்.

i. மன்னிப்புக்கு நமக்கு அவசியமா? ஆம், ஏனென்றால் பாவமன்னிப்புப் பெறாமல் வேறெந்த நன்மையையும் ஆண்டவரிடம் நாம் பெற்றுக்கொள்ள முடியாது. விசுவாசிகள் பரிசுத்த ஞானஸ்நானத்திலே, தாங்கள் முன்செய்த பாவங்களற சுத்திகரிக்கப்பட்டு பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஞானஸ்நானம் பெற்றபின்பும் நமது நாடோடிய ஜீவியத்திலே பல தவறுதல்கள் நம்மிடம் காணப்படுகின்றன. அந்தப் பாவங்களும் அப்போதைக்கப்போது மன்னிக்கப்படவேண்டும். எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும் என்று நாம் சொல்வது, பரி. ஞானஸ்நானத்திலே மன்னிக்கப்பட்டிருக்கிற பாவங்களுக்காகத் திரும்பவும் மன்னிப்புக் கேட்கிறதாயிராமல், நமது ஜீவியத்தில் அப்போதைக்கப்போது காணப்படும் பாவங்களுக்காகக் கேட்கும் மன்னிப்பாயிருக்கிறது.

ii. **எதினாலே தேவன் நமது பாவங்களை மன்னிக்கிறார்?** அவர் நம்மேல் வைத்த அன்பினாலே நமக்கு இரங்கி நமது பாவங்களை மன்னிக்கிறார் (பரி. மத். 18. 27) அந்த அன்பினாலே அவர் தமது குமாரனை நமக்காக ஒப்புக்கொடுத்தார். கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து நமக்காகப் பட்ட பாடுகளினாலே, அவருடைய பரிசுத்த இரத்தத்தின் மூலமாய் நமது பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. "இயேசுக்கிறிஸ்துவின் ரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோவா. 1. 7).

iii. **பாவமன்னிப்பைப் பெறுவதற்கு நாம் செய்யவேண்டியதென்ன?** பாவமன்னிப்பைப் பெறும்படி முதலாவது நாம் மனந்திரும்பவேண்டும். அதாவது நாம் செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, அவைகளை தேவனிடம் அறிக்கையிட்டு, அவைகளை விட்டுவிடவேண்டும். அதுமாத்திரம் அல்ல, நமக்கு விரோதமாய்த் தப்பிதம் செய்தவர்களுக்கு நாம் மனப்பூர்வமாய் மன்னிக்கவேண்டும். இரக்கமற்ற ஊழியக்காரனுடைய உவமை இதை நமக்குத் தெளிவாய்க் காட்டுகிறது. (பரி. மத். 18. 21 – 35 பார்). பதினாயிரம் தாலந்து அதாவது 2 கோடியே 82 லட்சம் ரூபாய் கடனை ராஜா இரக்கமாய் அவனுக்கு மன்னித்துவிட்டார். இவ்வளவு பெரிய மன்னிப்பைப் பெற்ற அவன் அதற்கு தன்னை அபாத்திரன் என்று காட்டினான். தன்னிடம் 100 வெள்ளிப் பணம் அதாவது தன் கடனில் ஆறு லட்சத்தில் ஒரு பாகம் கடன்பட்டவனுக்கு மன்னிக்க மனமற்றுப்போனான். அதினால் மன்னிக்கப்பட்ட தன் பெரிய கடன்முழுவதையும் அவன் திரும்பவும் தீர்க்கவேண்டியதாயிற்று. அப்படியே நாமும் மற்றவர்களுக்கு மன்னியாவிட்டால் தேவன் நமது பாவங்களையும் மன்னிக்கமாட்டார்.

**"மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்"** பரி. மத். 6. 15.

## எங்களுக்கு மன்னியும்.

ஒருநாள் அந்திரேயா தன் சகோதரியைப் பார்த்து "அக்கா, தயவு செய்து மன்னித்துக்கொள். இனி ஒருநாளும் அப்படிச் செய்யமாட்டேன்" என்று கெஞ்சினான். மாட்லின் என்ற அந்தப் பிள்ளையோ "என் பொம்மையை நீ தொடக்கூடாதென்று நான் சொல்லியிருந்தும், எனக்குத் தெரியாமலே நீ அதை எடுத்து உடைத்துப்போட்டாய், போ, நான் உனக்கு மன்னிக்கவேமாட்டேன்" என்று கோபத்தோடே அவனைத் தன் அறையிலிருந்து துரத்திவிட்டாள். பிற்பாடு அவள் படிக்கும்படி புஸ்தகத்தை விரித்துவைத்திருந்தும் வாசிக்க முடியவில்லை. தன் தம்பி தன்னைக் கெஞ்சினது அவள் மனதில் வந்தது. "அவன் எனக்குக் கீழ்ப்படியாமல் போனது மெய்தான், ஆனாலும் அதற்காக அதிகமாய்த் துக்



கப்பட்டானே ஆகையால் அவனுக்கு மன்னிக்கவேண்டாமா?" என்று நினைத்தாள். அச்சமயத்தில் தங்க எழுத்தால் எழுதி சுவரில் தூக்கப்பட்டிருந்த ஒரு வாக்கியத்தைக் கண்டாள். "எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்" என்பதே அந்த வாக்கியம். உடனே மாட்லின் கர்த்தருடைய ஜெபம் முழுவதையும் உணர்வோடு சொன்னாள். பின்பு தான் வெளியே துரத்திவிட்ட தன் தம்பியைத் தேடிப் போனாள். "அம்மா, தம்பியை வெளியே விடாமல் பார்த்துக்கொள்ளச் சொல்லியிருந்தார்களே! என் பொல்லாத கோபத்தினால் எல்லாவற்றையும் மறந்துவிட்டேனே" என்று நினைத்து அதிகமாய்த் துக்கப்பட்டாள். "என் தம்பிக்கு வாடாமல்லிகைப் புஷ்பம் அதிகப் பிரியமே, அதைப் பிடுங்கும்படி ஒருவேளை ஓடைக்கரைக்குத்தான் போயிருப்பான்" என்று நினைத்து ஓடினாள். வழியிலே சில ஆட்கள் ஒரு பையனை ஓடையிலிருந்து தூக்கிக்கொண்டு வந்தார்கள். அது யார்? அதுதான் அந்திரேயா. இதைக் கண்ட மாட்லின் அதிமமாய்த் துக்கப்பட்டு அழுதாள். "நான் ஒரு கெட்ட பிள்ளையல்லவா? உனக்கு மன்னிக்கமாட்டேன் என்று கோபத்தோடு உன்னைத் துரத்தினேனே! ஐயோ! தம்பி! நான் உன்னை நேசியாமல் போனேனே!" என்று அலறினாள். பக்கத்தில் நின்ற ஒரு ஆள் "மாட்லின் பயப்படாதே, தம்பி சாகவில்லை, உடனே தூக்கிவிட்டோம்" என்றார். கொஞ்சநேரத்தில் அந்திரேயா எழும்பி நின்றான். வாடாமல்லிகை புஷ்பக்கொத்து ஒன்று அவன் கையிலிருந்தது. அவன் சிரித்துக்கொண்டு "அக்கா, இதோ, பூ. இதை உனக்காகத்தான் பறிக்கப்போனேன். இப்போது எனக்கு மன்னிக்கிறாய் அல்லவா?" என்று கேட்டான். உடனே மாட்லின் தன் சகோதரனை முத்தமிட்டு "தம்பி நான் உன்னோடு கோபமாய்ப் பேசினதற்காக மிகவும் துக்கப்படுகிறேன். நீ எனக்கு மன்னிக்கவேண்டும்" என்று அழுதாள். பிள்ளைகளே, நீங்கள் ஒருவர் குற்றத்தை ஒருவர் மன்னித்து ஒருவரையொருவர் நேசியுங்கள்.

## ஞாபகப் புஸ்தகம்.

மார்கு என்பவன் ஒருநாள் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்தான். புஸ்தகப் பையைத் தொப்பென்று கீழே போட்டான். கோபத்தோடு "இனிமேல் என்னால் பொறுக்கமுடியாது, சும்மா கடுகடென்று விழுகிறான்" என்று தனக்குள்ளே முணுமுணுத்துக்கொண்டிருந்தான். அதைக் கண்ட அவன் சகோதரி ஆச்சரியப்பட்டு "ஒருநாளும் இப்படித் திடீரென்று கோபப்படமாட்டானே" என்று சொல்லிக்கொண்டு மெதுவாய்க் கிட்டப்போய் "தம்பி, என்ன சங்கதி?" என்று கேட்டாள். அதற்கு அவன் "தாசன் இன்றைக்கு முழுநேரமும் வகுப்பில் என்னைத்

தொந்தரவுசெய்துகொண்டே இருந்தான். அவனுக்கு இருக்கட்டும்" என்று வர்மம் கூறினான். இப்படிச் சொல்லிக் கொஞ்சநேரத்துக்குள் அவன் கோபமெல்லாம் ஆறிப்போய்விட்டது. இதைக் கவனித்துக் கொண்டிருந்த அவன் சகோதரி அவனைப் பார்த்து "என்ன, மாற்கு, அவனை என்னசெய்யப்போகிறாய்? என்று கேட்டாள். அதற்கு அவன் 'நான் ஒரு காரியத்தை மறந்துவிட்டேன். என்னுடைய ஞாபகப் புஸ்தகத்தை எடுத்துப் பார்க்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு தன் ஞாபகப் புஸ்தகத்தைத் திறந்தான். "மார்ச்சுமீ 8௳ தாசன் தன் பந்து மட்டையை எனக்கு இரவல் கொடுத்தான்; ஜூன்மீ 4௳ தாசன் தன் காகிதப் பென்சிலை எனக்கு இரவல் கொடுத்தான்." இந்த வார்த்தைகள் அவனுடைய ஞாபக நோட்டுப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்தன. இதை அவன் தன் சகோதரிக்குக் காட்டி "மாற்கு எனக்குச் செய்திருக்கிற உதவிகளைப் பார். அவன் செய்த தொந்தரவை நான் மன்னித்துவிடுவேன்" என்றான்.

மாற்குவினுடைய இந்த நோட்டுப் புஸ்தகம் முழுவதிலும் மற்றவர்கள் அவனுக்குச் செய்த அன்பான சிறு காரியங்கள் எழுதப்பட்டிருந்தன. அவன் தன்னுடைய கூட்டாளிகளோடு கோபப்படநேரிடும்போதெல்லாம் இந்தப் புஸ்தகத்தைத் திறந்து அவர்களுடைய அன்பான செய்கைகளைப் பார்ப்பான். அப்பொழுது அவனுடைய கோபக்குணம் நீங்கி, அவர்களைப்பற்றி அன்பான எண்ணங்கொள்ளுவான்.

பிள்ளைகளே! நீங்களும் இப்படிச் செய்யப் பாருங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக தேவன் நமது பாவங்களை மன்னித்திருப்பதால் நாமும் மற்றவர்களுக்கு மன்னிக்கவேண்டும் என்பதே நமது ஞாபகத்திலிருக்க வேண்டும்.

---

## பரீட்சைப் பாடங்கள்.

பரி. மத்தேயு சுவிசேஷம்.

1. சான்றிரிகன் சர்ப்பிப்பு.
2. சாத்தானால் சோதிக்கப் பட்டது.
3. சிறு பிள்ளைகள் சம்பந்தமாய் இதில் வரும் வாக்கியங்கள்.
4. இதில் வரும் எல்லா உவமைகளும்.

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

OFFICE OF THE RE… DEC 1915 … MADRAS

The

# Children's Herald.

# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்" நீதி. 8: 32.

Vol. X. ஆகஸ்ற்று 1915. No. 8.

## கர்த்தருடைய ஜெபம்.

### 6-வது விண்ணப்பம்.

" எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப் பண்ணாதேயும். "

தங்கவாக்கியம் :— "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" பரி. மத். 26. 41.

முந்தின விண்ணப்பத்தில் பாவ மன்னிப்பு நமக்கு எவ்வளவு அவசியம் என்றும் தேவன் அதை நமக்கு எத்தனை இலவசமாய் அருளுகிறார் என்றும் கவனித்தோம். இப்பொழுது பாவ சோதனையைப்பற்றிக் கவனிப்போம்.

I. சோதனை எத்தனை வகைப்படும்? சோதனை இரண்டு வகைப்படும். i. சோதனை என்றால் பரீட்சை என்று அர்த்தம். ஒரு மாணாக்கனுடைய கல்வியறிவை அவனுடைய உபாத்தியாயர் பரீட்சித்துப் பார்க்கிறார். அதுபோல ஒருவனுடைய பக்தியைப் பரீட்சிக்க தேவன் அடிக்கடி மனுஷருக்கு சோதனை அல்லது துன்பங்களை அனுப்புகிறதுண்டு. 'தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்' ஆதி. 22: 1. ஆபிரகாமின் விசுவாசம் பரீட்சிக்கப்பட்டுக் குறைவற்றதாகக் காணப்பட்டது. ii. சோதனை என்றால் ஆசைகாட்டி இழுக்குதல் அல்லது பாவத்துக்கு இணங்கப்பண்ணுதல் என்று அர்த்தம். இந்த விண்ணப்பத்தில் அப்படிப்பட்ட பாவ சோதனைக்கு உட்படாதபடிக்கு தேவன் நமக்கு உதவிசெய்ய வேண்டுமென்றுதான் கேட்கிறோம்.

II. பாவ சோதனை நமக்கு யாராலே உண்டாகிறது? பாவ சோதனை நமக்கு சாத்தானாலே உண்டாகிறது. அது நமக்கு உள்ளேயிருந்தும் வெளியேயிருந்தும் உண்டாகிறது. கோபம், பெருமை, சோம்பல், இச்சை முதலியவை உள்ளேயிருந்தும் கெட்ட சிநேகிதர், தகாத புஸ்தகங்கள் முதலியன வெளியேயிருந்தும் உண்டாகும். சோதிக்கப்படுவது பாவமல்ல, சோதனைக்கு இடங்கொடுப்பதே பாவம். தப்பிதமான ஒன்றைச் செய்ய ஒருவன் உன்னை ஏவுகிறான். அது சோதனை. நீ அதற்கு இணங்கினால் அது பாவம். சாத்தான் ஏவாளைச் சோதித்தான். அவள் இணங்கிவிட்டாள். அவன் நமதாண்டவரையும் சோதித்தான்; அவர் அவனுக்கு இணங்கவில்லை.

III. பாவ சோதனையை ஜெயிக்க நாம் என்ன செய்யவேண்டும்? 1-வது, பாவசோதனையை ஜெயிக்க நாம் விழித்திருக்கவேண்டும் (தங்க வாக்கியம் பார்). பாவமான ஆசை நம்மில் ஆரம்பிக்கிறதைக் குறித்தும், பாவ சோதனை உண்டாகக்கூடிய ஆட்கள் அல்லது இடத்துக்குப் போவதைக் குறித்தும் நாம் அதிக கவனமாயும் எச்சரிக்கையாயும் இருக்கவேண்டும். இதுதான் விழித்திருக்குதல். 2-வது, ஜெபம்பண்ணவேண்டும். பாவசோதனை உண்டானவுடன் அதை மேற்கொள்ள நமக்கு பெலன் போதாது. ஆகையால் தேவனுடைய உதவியை நாம் தேடவேண்டும். நிச்சயமாகவே சுவாமி சோதனையை ஜெயிக்க நமக்கு பெலன் தருவார்.

"அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" எபி. 2. 18.

## சோதனையுள்ள இடத்துக்குப் போகாதே.

ஒரு துரைக்கு வண்டியடிப்பதற்கு ஒரு ஆள் வேண்டியதாயிருந்தது. மூன்று பேர் அந்த வேலைக்காக துரையிடம் கேட்டார்கள். துரை அவர்களில் ஒருவனை தனியே அழைத்து "எனக்கு மிகவும் திறமையான ஒரு வண்டிக்காரன் வேண்டும், உன் திறமை எப்படிப்பட்டதென்று எனக்குத் தெரியாது, ஆயினும் உன்னிடம் கேட்டு அறியலாம் என்று விரும்புகிறேன். பாதையில் குடவண்டி விழத்தக்கதான மோசம் இருக்கும்போது வண்டியை அந்த மோசம் இருக்கும் இடத்துக்குச் சமீபமாய் எவ்வளவு தூரம்வரை நடத்துவாய்?" என்று கேட்டார். அதற்கு அவன் "ஐயா, மாட்டின் தலைக்கயிறு என் கையில் இருக்கும்வரை நான் பயப்படமாட்டேன். மோசமான இடத்துக்குச் சமீபமாய் ஒரு அடி தூரம் வரையிலும் தைரியமாய் வண்டியைவிட்டு மோசமில்லாமல் நடத்துவேன்", என்றான். "அப்படியானால் நீ என் வேலைக்கு உதவமாட்டாய்" என்று



சொல்லிவிட்டு, அடுத்தவனைக் கூப்பிட்டு "அப்பா பாதையில் குடவண்டி விழத்தக்கதான மோசம் இருக்கும்போது வண்டியை அந்த மோசமான இடத்துக்குச் சமீபமாய் எவ்வளவு தூரம்வரை நடத்துவாய்?" என்று கேட்டார். அவன் "மோசமான இடத்துக்கு ஒரு மயிர்க்கடை அளவு சமீபமாய்க்கூட வெகு சாமர்த்தியமாய் நடத்துவேன்" என்றான். துரை "நீயும் என் வேலைக்கு உதவமாட்டாய்" என்று சொல்லிவிட்டு மூன்றாவது மனுஷனை அழைத்து அதே கேள்வியைக் கேட்டார். அவன் "ஐயா, தாங்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது, மோசமான இடத்துக்கு எவ்வளவு தூரம் விலகிப்போகக்கூடுமோ, அவ்வளவு தூரம் விலகியே நடத்துவேன். இதுதான் என் சட்டம்" என்றான். "நீயே என் வேலைக்கு ஏற்றவன்" என்று துரை அவனைத் தன் வேலையில் வைத்துக்கொண்டார்.

பாவ சோதனைக்கு நாம் எவ்வளவு தூரம் விலகிப்போகிறோமோ அவ்வளவு நமக்கு மோசமில்லை.

## மங்கிப் போயிற்று.

ஒருநாள் இரவு புயல் எழும்பி கடல் கோஷ்டமாயிருந்தது. கடற்கரையோரமாயுள்ள தீபஸ்தம்பங்களில் எல்லாம் தீபம் ஏற்றப்பட்டு வெகு பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்தன. அந்த தீபஸ்தம்பங்களில் ஒன்றை மேல் பார்க்க இரண்டு பேர் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களிருவரும் தீபஸ்தம்பத்தின்மேலேறி, விளக்கை நன்றாய்ச் சுத்தம்பண்ணி, நிறைய எண்ணெய் விட்டு, ஒருவர் மாற்றி இன்னொருவர் விழித்து காத்திருந்தார்கள். என்றாலும் விடியற்காலத்திலே ஒரு பெரிய வெடிச் சத்தம் அவர்களுக்கு சமீபமாய்க் கேட்டது. அப்பொழுது இருவரும் திடுக்கிட்டு ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, "இது என்ன? கப்பல் ஏதாவது கரையில் உள்ள பாறையில் மோதிவிட்டதோ,! அப்படியிருக்கக் கூடுமா! விளக்கு நன்றாய் எரிந்து கொண்டிருக்கிறதே! என்று சொல்லிக்கொண்டே விளக்கைச் சுற்றியுள்ள கண்ணாடியைப் பார்த்தான். அவன் முகம் கறுத்துவிட்டது. ஏனென்றால் அந்தக் கண்ணாடியில் லட்சக் கணக்கான பூச்சிகள் தீபத்தின் பிரகாசத்தைக் கண்டு வந்து அடைந்திருந்தது; அதினால் அந்த வெளிச்சம் வெளியே தெரியாமல் போய்விட்டது. ஒரு கப்பலும் திசை தப்பி மோசத்துக்குள்ளாயிற்று.

ஆகையால் ஒரு சிறிய சோதனைக்கும் இடங்கொடாமல் அதிக விழிப்பாய் இருங்கள்.

## சோதனைக்கு இடங்கொடாதே.

ஒருநாள் காலையில் உல்பிரட் கடைத்தெருவில் நின்றுகொண்டிருந்தான். கடைக்காரன் சுடச்சுட ரொட்டிகளையும் பலகாரங்களையும் விற்பதைப் பார்த்து அவன் வாய் ஊறினது. ஏனெனில் அவன் ஒரு ஏழைப் பையன். அவர்கள் வீட்டில் சாப்பிட ஒன்றுமில்லை. "எனக்கு இந்த இடத்தில் ஒரு வேலை கிடைத்தால் நன்றாயிருக்குமே" என்று அவன் தன்மட்டில் சொல்லிக்கொண்டான். சற்று பொறுத்து ஒருவன் கூடை நிறைய ரொட்டிகளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். "இவ்வளவு ரொட்டியும் கிடைத்தால் என் தாயும் சகோதரியும் எவ்வளவாய் சந்தோஷப்படுவார்கள்" என்றான் உல்பிரட். அந்த மனுஷன் ரொட்டியைக்கொண்டு கடையை விட்டு கீழே இறங்கும்போது திடீரென்று கூடை தவறிவிழுந்து ரொட்டிகள் சிதறிப்போயின. அவன் அவைகளை பொறுக்கி எடுத்துக் கூடையில் போட்டுக்கொண்டு தன் வழியே போனான். கீழே விழுந்த ரொட்டிகளில் ஒன்று அவனுக்குத் தெரியாமலே படிக்கட்டில் மறைந்துகிடந்தது. உல்பிரட் "இது என் தாய்க்கும், தங்கைக்கும் நல்ல விருந்தாகும்" என்று சொல்லிக்கொண்டு அதை எடுத்தான். ஆனால் மற்றவர்களுடைய பொருளை எடுத்துக்கொள்வது பாவம் என்று தன் தாய் அவனுக்குப் போதித்திருந்த போதனை ஞாபகத்துக்கு வர, உடனே ஓடிப்போய் ரொட்டியை அந்த ரொட்டிக்காரனிடம் கொடுத்தான். இம்மட்டும் அவன் பேசினவைகளையும், செய்தவைகளையும் அவனுக்குத் தெரியாமலே ஒரு துரை கவனித்துக்கொண்டிருந்தார். அவர் அவனிடத்தில் வந்து "பையனே, நீ எடுத்த அந்த ரொட்டியை ஏன் உன் வீட்டுக்குக் கொண்டுபோகவில்லை?" என்று கேட்டார். உல்பிரட் தன் தாயின் போதனையை அவருக்குச் சொன்னான். துரை மறுபடியும் அவனைப் பார்த்து "நீ அந்தக் கடையண்டையில் நின்றதையும், பேசினதையும் செய்ததையும் நான் உனக்குத் தெரியாமலே கவனித்துக் கொண்டிருந்தேன். நீ அந்த ரொட்டியை எடுத்தபோது சோதனைக்கு இடங்கொடுக்கவில்லை. இடங்கொடுத்திருந்தாயானால் நான் உன்னைப் பிடித்து இதற்குள் சிறைச்சாலைக்கு அனுப்பியிருப்பேன்" என்றார். அப்புறம் துரை அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்து உதவிசெய்ததுமல்லாமல், ஒரு ஷாப்பில் வேலையும் வாங்கிக்கொடுத்தார். உல்பிரட் உண்மையோடும், சுறுசுறுப்போடும் உழைத்து, தேவ கிருபையினால் இப்போது ஒரு பெரிய வர்த்தகனாயிருக்கிறான்.

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission

The
# Children's Herald.
# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்" நீதி. 8: 32.

Vol. X. செப்ற்றெம்பர் 1915. No. 9.

## கர்த்தருடைய ஜெபம்

### 7-வது விண்ணப்பம்.

"தீமையினின்று எங்களை இரட்சித்தருளும்."

தங்க வாக்கியம்:— "அக்கிரமமான பாவங்களுக்கு உம்முடைய அடியேனை விலக்கிக் காரும்" சங். 19. 13.

ஆறாவது விண்ணப்பத்தில் சுவாமி நம்மைப் பாவ சோதனைக்கு விலக்கிக் காக்கவேண்டும் என்று கேட்கிறோம். இந்த விண்ணப்பத்தில் பாவத்தின் தண்டனையிலிருந்தும் கர்த்தர் நம்மைக் காக்கவேண்டுமென்று கெஞ்சுகிறோம்,

i. தீமை என்பது என்ன? தீமை என்பது ஞானோபதேச வினாவிடையில் சொல்லியிருக்கிறபடி எல்லாப் பாவத்தையும், துன்மார்க்கத்தையும், நமது ஆத்தும சத்துருவையும் நித்திய மரணத்தையும் குறிக்கும். எப்படியெனில் பாவமே எல்லாத் தீமைக்கும் காரணம். ஆகையால் தீமை என்பது எல்லாப் பாவத்தையும், துன்மார்க்கத்தையும் குறிப்பது சரியே. சாத்தான் தீமைக்குக் காரணமாகிய பாவத்தைச் செய்ய நம்மைத் தூண்டிவிடுகிறவனாயிருக்கிறான். ஆகையால் தீமை என்பது நமது ஆத்தும சத்துருவாகிய சாத்தானையும் குறிக்கிறது. மேலும் பாவத்தினால் வரும் தண்டனைகளில் எல்லாம் பயங்கரமானது நித்திய மரணமே. ஆகையால் தீமை என்பது நித்திய மரணத்தையும் குறிக்கிறது.

ii. பாவத்தினால் வரும் தீமைகள் எவை? பசி, தாகம், வியாதி, துன்பம், துக்கம், பயம், வெட்கம், மரணம் முதலிய யாவும் பாவத்தினால் வரும் தீமைகள்தான். ஆயினும் நித்திய மரணமே இவை எல்லாவற்றிலும் கொடிது. இது இரண்டாம் மரணம் என்றும், அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் என்றும், நரகம் என்றும் சொல்லப்படுகிறது. மேலே சொன்ன தீமைகளில் சிலவை இந்த உலகத்திலேயே மனுஷனுக்கு வந்தபோதிலும் மறுமையில் உண்டாகும் தீமையே பயங்கரமானது. ஏனெனில் இவ்வுலகத்தில் உண்டாகும் தீமை கொஞ்சக்கால மாத்திரம் இருக்கக்கூடியது. மறுமையில் மனுஷனுக்கு உண்டாகும் தீமை நித்தியமாயிருக்கும். 'தீமையினின்று எங்களை இரட்சித்தருளும்' என்று சொல்லும்பொழுது மேற்சொன்ன எல்லாத் தீமைகளினின்றும் கர்த்தர் நம்மை இரட்சிக்கும்படி கெஞ்சுகிறோம்.

iii. கர்த்தர் எப்போதாவது தம்முடைய பிள்ளைகளை தீமையினின்று இரட்சித்திருக்கிறாரா? ஆம், எத்தனையோ சமயங்களில் இரட்சித்திருக்கிறார். நோவாவை ஜலப்பிரளயத்தினின்றும் லோத்தை சோதோமின் அழிவினின்றும் இரட்சித்தார். அனனியா, அசரியா, மிஷாவேல் என்பவர்களை அக்கினிச் சூளையினின்றும், தானியேலை சிங்கக்குகையிலிருந்தும் காப்பாற்றினார். பரி. பேதுருவை ஏரோதின் கைக்கும் யூத ஜனங்களின் எண்ணத்துக்கும் தப்புவித்தார். இன்னும் எத்தனையோ உண்டு. அப்படியே நம்மையும் கர்த்தர் எல்லாத் தீமைக்கும் விலக்கிக் காக்க வல்லவராயிருக்கிறார்.

"சகல தீமையிலும், ஆபத்திலும் நின்றும், பாவத்திலும் பிசாசின் தந்திரங்களிலும் விரோதங்களிலும் நின்றும், உம்முடைய கோபத்திலும் நித்திய ஆக்கினையிலும் நின்றும்"

**"எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே."**

## இரட்சிப்பார்.

இங்கிலாந்து தேசத்துக்கு வடகிழக்கில் இருக்கும் கடலுக்கு வடகடல் என்று பேர். அது கோடை காலத்திலும், மாரிகாலத்திலும் ஒன்றுபோலவே கொந்தளிப்பாயிருக்கும். ஒரு தடவை டென்மார்க்கு தேசத்திலிருந்து ஒரு கப்பல் இங்கிலாந்துக்கு வந்துகொண்டிருந்தது. கடலின் மத்தியில் அது வந்துகொண்டிருக்கையில் ஒரு புயல் உண்டாயிற்று. அக்கடலின் தன்மையை நன்றாய் அறிந்தவர்கள் புயலைக் கண்டவுடன் மனம் தடுமாறிப்போனார்கள். இருக்க, இருக்க கப்பலில் இருந்த எல்லாருமே தங்களுடைய அபாயமான நிலைமையை அறிந்துகொண்டார்கள். சிலர் அங்கலாய்த்தார்கள். சிலர் வீரிட்டு அழுதார்கள். மாலுமி ஜனங்



களைப் பார்த்து "கப்பல் நினைத்திராத வேளையில் மூழ்கிப்போம். ஆகையால் ஜீவ அரைக்கச்சையை வாங்கி அணிந்துகொள்ளுங்கள்" என்று சொன்னான். இந்த வார்த்தைகள் பிரயாணிகளுடைய காதுகளில் எப்படித் தொனித்திருக்கும் என்பதைச் சற்றே யோசித்துப்பாருங்கள்.

இந்தக் கப்பலில் ஒரு தாயும் அவளுடைய சின்ன மகளும் பிரயாணஞ்செய்தார்கள். எல்லாரும் கலங்கிப் பயந்துகொண்டிருந்த இந்த சமயத்தில் அந்தச் சிறு பிள்ளை அமைதியாய் தன் படுக்கையில் படுத்திருந்தது. தாய் தன் பிள்ளையின் படுக்கையண்டை போனாள். அது தூங்குகிறதுபோல காணப்பட்டது. "என் மகளை நான் எழுப்பமாட்டேன், அவளோடேகூட நானும் தண்ணீருக்குள் போவேன்" என்று தாய் புலம்பினாள். அந்தப் பிள்ளையோ "அம்மா, நான் தூங்கவில்லை ஜெபம்பண்ணுகிறேன். தேவன் நம்மை இரட்சிப்பார்" என்று சொன்னாள். ஆ! இச்சிறுமியின் ஜெபம் கேட்கப்பட்டது. சுமார் மூன்று நிமிஷங்களுக்குள் மாலுமி திரும்பவும் பிரயாணிகளிடம் வந்து "காற்று மாறியடிக்கிறபடியால் நாம் தப்பினோம்" என்று சொன்னான்.

## "தீமை துன்மார்க்கனைக் கொல்லும்."

சர்ப்பம் அல்லது பாம்பு என்பது மனுஷனுக்குச் சத்துருவாகயிருக்கும் ஓர் பிராணி. பாம்புகளில் பலவகையுண்டு. உலகத்திலுள்ள எல்லாப் பாம்புகளிலும் பெரிது போவா என்று சொல்லப்பட்ட ஓர்வகைப் பாம்பு. அது அமெரிக்காக் கண்டத்திலேதான் உண்டு. அது சுமார் நாற்பதடி நீளமுள்ளது. அதன் நீளத்துக்குத்தக்கதாக அதன் பருமனும் இருக்கும். இந்தப் பாம்பு ஒரு மனிதனைக் கண்டால் முதலில் அவனை நன்றாய்ச் சுற்றிக்கொள்ளும். அப்பால் அவனை அப்படியே இறுக்கி நெருக்கி, கொன்று, திரட்டி, உருட்டி விழுங்கிவிடும்.

சில வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்து தேசத்திலுள்ள ஒரு மனிதன் இந்தப் பாம்புக் குஞ்சு ஒன்றை அது பொரித்த இரண்டாம் நாளிலேயே எடுத்துவந்து வளர்த்தான். இளமையிலேயே அவன் அதை நன்றாய்ப் பழக்கி, அப்பால் அதைக்கொண்டு வேடிக்கை காட்டிப் பணம் சம்பாதித்துவந்தான். அவன் ஒரு சைகை காட்டினால் அந்தப் பாம்பு தன் ஜாதி வழக்கப்படி அவனை நன்றாய்ச் சுற்றிக்கொள்ளும். பின்பு வேறொரு சைகை காட்டினால் அவனை விட்டுவிடும். இப்படியே இவன் தினமும் செய்துவந்தான். இதைப்பற்றி அவன் அதிகமாய்ப் பெருமை பாராட்டிக்கொள்வான். "பாருங்கள், இந்தப் பாம்பு நான் சொல்லுகிறபடி எல்லாம் செய்கிறது" என்று சொல்லுவான். இப்படி இருபது

வருஷக் காலமாக அந்தப் பாம்பை வைத்து வேடிக்கை காட்டிவந்தான். இதுபோலவே அநேக பிள்ளைகள் சிறுவயதிலேயே அற்பப் பாவங்களைச் செய்யப் பழகுகிறார்கள். இது மிகவும் அற்பக் காரியந்தானே! இதிலே என்ன தீமை இருக்கிறது? என்று சொல்லுகிறார்கள். தங்களுடைய கெட்ட பழக்கங்களைக் குறித்து சிலர் பெருமையும் பாராட்டிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் வளர வளர அந்தப் பாவங்களும் அவர்களில் பெலன் கொள்ளுகிறது. கடைசியாக, ஒருநாள் அந்த மனிதன் ஒரு பெரிய வேடிக்கை ஸ்தலத்துக்கு அந்தப் பாம்பைக் கொண்டுபோனான். திரளான ஜனங்கள் அதைப் பார்க்க வந்திருந்தார்கள். இருபது வருஷமாய்ச் செய்துவந்த வழக்கத்தின்படியே அவன் பாம்புக்கு சைகை காட்டினான். உடனே அது அவனைச் சுற்றி அவன் தலைக்குமேல் தன் தலையை உயர்த்தி நின்றது. பின்பு தன்னை விட்டுவிடும்படி சைகை காட்டினான். அதுவோ அவனை விட்டுவிடுவதற்குப் பதிலாக இறுக்கி, நொருக்கி, கொன்று விழுங்கிவிட்டது.

பாவத்தை அற்பமாய் நினைக்கிறவனே! எச்சரிக்கை. "பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்" பரி. யாக். 1. 15.

## பரீட்சைப் பாடங்கள்.

பரி. மத்தேயு சுவிசேஷம்:—தொடர்ச்சி.

1. நமதாண்டவர் மறுரூபமானது.
2. பரி. பேதுருவைப்பற்றிய சங்கதிகள்.
3. தர்மம், ஜெபம், மன்னிப்பு, உபவாசம், உலகக் கவலை—இவைகளைப் பற்றி நமதாண்டவரின் போதனைகள்.
4. இதில் வரும் எல்லா அற்புதங்களும்.

---

## கவனிப்பு.

கர்த்தருக்குச் சித்தமானால் நமது வருஷாந்தரப் பரீட்சை வழக்கம்போல நவம்பர், டிசம்பர் மாசங்களில் நடத்தப்படும்.

பாடங்கள்:—

1. பரி. மத்தேயு சுவிசேஷத்திலிருந்து பாலர் தூதனில் குறிப்பிட்டிருக்கும் பாகங்கள்.
2. வருஷ முழுவதுமுள்ள தங்க வாக்கியங்களும் அவைகளின் சந்தர்ப்பங்களும்.
3. " பாலர் தூதன் சரித்திரங்களும், போதனைகளும்.
4. திருச்சபை ஞானோபதேச வினாவிடை.

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

The
# Children's Herald.
# பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்" நீதி. 8: 32.

Vol. X. அக்டோபர் 1915. No. 10.

## கர்த்தருடைய ஜெபம்.

"ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமேன்"

**தங்கவாக்கியம்:**—"அவருக்குச் சபையிலே...... தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக" எபே. 3: 20, 21.

கர்த்தருடைய ஜெபத்தில் முகவுரை, விண்ணப்பங்கள், முடிவுரை என மூன்று பிரிவுகள் உண்டு. முதல் இரண்டு பிரிவுகளையும் முடித்து இப்பொழுது முடிவுரையைப்பற்றிப் படிக்கப்போகிறோம். இதை ஸ்தோத்திரம் என்றும் சொல்லலாம்.

i. கர்த்தருடைய ஜெபம் எப்போதும் முடிவுரையோடு வழங்கப்படுகிறதா? இல்லை. பரி. மத்தேயு சுவிசேஷத்தில் முடிவுரையோடும், பரி. லூக்காவில் முடிவுரையில்லாமலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நமது ஆராதனை முறைமைகளில் ஸ்தோத்திரப்போங்கான இடங்களில் முடிவுரையுடனும், மற்ற இடங்களில் முடிவுரையில்லாமலும் சொல்லும்படி திருச்சபை ஒழுங்குசெய்திருக்கிறது. காலை மாலை ஆராதனைகளில் பாவவிமோசனத்துக்குப்பின், தேவனுடைய மன்னிப்பின் வார்த்தைகளுக்கு ஸ்தோத்திரமாகவும், பரிசுத்த நற்கருணை ஆராதனையின் பின்பாகத்தில், விசுவாசிகள் அப்பொழுது பெற்றுக்கொண்ட தேவனுடைய பெரிய ஈவுக்கு மகிமையாதலும், பிரசவ ஸ்தோத்திரத்தில் பேறுகாலத்துக்குரிய மிகுந்த ஆபத்திலிருந்து

காப்பற்றப்பட்டதற்கு துதியாகவும் முடிவுரையுடன் கர்த்தருடைய ஜெபத்தை வழங்குகிறோம். மற்ற இடங்களில் முடிவுரையில்லாமல் வழங்குகிறோம்.

ii. முந்தின விண்ணப்பங்களுக்கும் இந்த முடிவுரைக்கும் என்ன சம்பந்தம் உண்டு? விண்ணப்பத்தில் 'உம்முடைய ராஜ்யம் வருவதாக' என்று ஜெபித்த நாம் முடிவில் 'ராஜ்யம் உம்முடையது' என்று ஸ்தோத்திரிக்கிறோம். விண்ணப்பத்தில் 'உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக,' 'எங்கள் அப்பத்தை எங்களுக்குத் தாரும்,' 'எங்கள் குற்றங்களை மன்னியும்', 'எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாதேயும்' 'எங்களைத் தீமையினின்று இரட்சித்தருளும்' என்று கேட்ட நாம் முடிவில் அப்படிச்செய்யக்கூடிய 'வல்லமையும் உம்முடையது' என்று ஒத்துக்கொள்ளுகிறோம். விண்ணப்பத்தில் 'உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக' என்று ஜெபித்த நாம் முடிவில் அதினால் வரும் 'மகிமையும் உம்முடையது' என்று தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்.

iii. முடிவுரையில் அடங்கிய பொருள்கள் எவை? முடிவுரையில் பல அருமையான பொருள்கள் அடங்கியிருக்கின்றன. 1. **ராஜ்யம்** தேவனுடையது. அதாவது பரலோகத்திலும் பூலோகத்திலும் உள்ள எல்லாவற்றிற்கும் தேவனே ராஜாவாக இருக்கிறார் என்பதே அதின் பொருள். 'அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது.' சங். 103. 19 ஆகையால் நாம் நமது ராஜாவாகிய ஆண்டவரிடம் போய் நமக்குத் தேவையானவைகளை தைரியமாய் கேட்டுக்கொள்ளவேண்டும். 2. **வல்லமை** தேவனுடையது. தேவன் ராஜாவாய்மாத்திரமல்ல சர்வவல்லவராகவும் இருக்கிறார். அதாவது எல்லாவற்றையும் செய்ய அவருக்கு வல்லமையுண்டு. "வல்லமை தேவனுடையது" சங். 62. 11. ஆகையால் நாம் கேட்கிறவைகளைக் கொடுக்கத்தக்க எல்லா வல்லமையும் அவருக்கு உண்டு என்று நம்பவேண்டும். 3. **மகிமை** தேவனுடையது. தேவன் ராஜாவாகவும் சர்வவல்லவராகவும் இருக்கிறபடியால் மகிமை அல்லது கனம் அவருக்கேத்தக்கது. முதல் கிறிஸ்மஸ் விடியற்காலத்திலே தேவதூதர் "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு **மகிமை**" என்று பாடினார்களே. 4. **என்றென்றைக்கும் உம்முடையவைகளே.** அதாவது ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் முடிவில்லாத காலமாய் தேவனுக்கே உரியவைகள். உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம்" சங். 145. 13. ஆம், நம்தாண்டவர் இதற்குமுன்னிருந்ததுபோலவே இப்போதும் இருக்கிறார். இனிமேலும் எல்லாக் காலங்களிலும் அப்படியே இருப்பார். 5 **ஆமேன்** யூதர் தங்கள் ஜெபத்தை ஆமென் என்று சொல்லியே முடித்துவந்தார்கள். 1 நாளா. 16. 36. பரிசுத்தவான்கள் பரலோகத்திலும் ஆமென் என்றே தங்கள்



ஸ்தோத்திரத்தை முடிக்கிறார்கள் வெளி. 19, 3, 4. நமதாண்டவரும் தாம சொல்லிக்கொடுத்த ஜெபத்தை 'ஆமென்' என்று முடிக்கக் கற்பித்திருக்கிறார். நாமும் நமது ஜெபங்களையும் விசுவாசப்பிரமாணங்களையும் 'ஆமென்' என்றே முடித்துவருகிறோம். **ஆமேன்** என்பதற்கு மெய்யாக அல்லது நிச்சயமாக என்று அர்த்தம். ஜெபத்தின் முடிவில் ஆமென் என்று சொல்லும்போது அப்படியே ஆகக்கடவது அதாவது நான் கேட்டுக்கொண்டபடி எனக்குக் கிடைக்கும்படி மெய்யாகவே விரும்புகிறேன் என்று அர்த்தம். ஆனால் விசுவாசப்பிரமாணத்தின் முடிவில் ஆமென் என்று சொல்லும்போது அப்படியிருக்கிறது அதாவது நிச்சயமாகவே நான் அதை நம்புகிறேன் என்று அர்த்தமாகும்.

## "எந்தக் கேட்டாலும் தருவேன்."

ஒருநாள் சாயந்திரம் ஒரு பெரிய உத்தியோகஸ்தன் ஒரு ஆற்றின் கரையில் நின்றுகொண்டிருந்தார். அவர் அந்த ஆற்றின் அடுத்த கரைக்கு அதிக அவசியமாய்ப் போகவேண்டியதாயிருந்தது. அங்கிருந்த ஒரு தோணிக்காரன் அவரைத் தன் வள்ளத்தில் ஏற்றி அக்கரைகொண்டுபோய்ச் சேர்த்தான். அப்போது அந்த துரை தோணிக்காரனைப் பார்த்து "உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள். நீ கேட்கிறதை நான் உனக்குத் தரக்கூடும் என்று நினைக்கிறேன்" என்றார். இவர்தான் அந்தக்காலத்தில் இங்கிலாந்து தேசத்தை ஆண்ட கிராம் வெல் என்னும் அதிபதி. ஆனால் இவர் யாரென்று அந்தத் தோணிக்காரனுக்குத் தெரியாது. அவர் கொடுத்த வாக்கிலிருந்து இவர் ஒரு பெரிய அதிகாரியாக இருக்கவேண்டும் என்று அவன் அறிந்துகொள்ளலாம். ஏனென்றால் 'உனக்குத் தேவையானதை என்னிடத்தில் கேள்' என்று எல்லாரும் சொல்லமுடியாதல்லவா? ஆனால் தோணிக்காரன் அதை உணராமல் சற்றுநேரம் சும்மாநின்றான். அப்பொழுது கிராம் வெல் துரை அவனைப்பார்த்து "சீக்கிரம் கேள், பொழுதுபோகிறது, நான் போகவேண்டும்" என்று சொன்னார். அப்பொழுது அந்தத் தோணிக்காரன், ஆற்றோரத்திலிருந்த தன்னுடைய நிர்ப்பந்தமான குடிசையையும் அதைச்சுற்றிலுமிருந்த சிறு தோட்டத்தையும் எட்டிப்பார்த்து, பெருமூச்சுவிட்டு "அதோ இருக்கிற அந்த நிலமும் வீடும் கூடுமானால் எனக்குச் சொந்தமாகும்படி செய்யும்" என்று கேட்டான். அப்பொழுது கிராம் வெல் அவனைப்பார்த்து "என்ன அற்பமான காரியத்தைக் கேட்டாய்! இந்தக் கொஞ்ச நிலத்தைக் கேட்டதற்குப் பதிலாக இந்தத் தாலுகா முழுவதையும் கேட்டிருந்தால் நன்றாய் இருந்திருக்கும். நீ கேட்டபடியே உன் வீட்டையும் நிலத்தையும் சொந்தமாய் எடுத்துக்கொள். நான் இத்தேசத்தின் அதிபதி" என்று சொல்லிவிட்டுப்போனார்.

பிரியமான பிள்ளைகளே! "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்டாலும் தருவேன்" என்று நமதாண்டவர் நமக்கு வாக்குச்செய்திருக்கிறார். நமக்கு அவசியமான எதையும் கொடுக்க அவரால் முடியும். நாம் அவருடைய வல்லமையை நம்பி நமக்கு வேண்டியதை அவரிடம் கேட்போமாக.

---

## தனி ஜெபம்.

அநேக வருஷங்களுக்குமுன்னே அங்கிலேத்தாருக்கும், அமெரிக்கா தேசத்தாருக்கும் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. இரண்டு சேனைகளும் ஒன்றுக்கொன்று சமீபமாய் பாளயமிறங்கியிருந்தார்கள். இங்கிலீஷ் பட்டாளத்தைச்சேர்ந்த ஒருவன் எதிரிகளின் பாளயத்துக்கு சமீபமாயிருந்த ஒரு புதருக்குள்ளிருந்து வெளியே வந்தான். இவன் கள்ளத்தனமாய் சத்துருக்களுக்கு செய்தி சொல்லிவிட்டு வருகிறான் என்று சந்தேகப்பட்டு, காவல்காரர் அவனைப் பிடித்து தளகர்த்தன்முன் நிறுத்தினார்கள். அவனுடைய துரோகத்தினிமித்தம் அவன் உடனே கொல்லப்படவேண்டுமென்று தளகர்த்தன் தீர்ப்புச்செய்தார். அவனோ "நான் சத்துருக்களிடம் போகவில்லை. என் வழக்கத்தின்படி காட்டிலே போய் ஜெபம்பண்ணிவிட்டு வந்தேன்" என்றான். அதிபதி "அடிக்கடி ஜெபம்பண்ணுகிறது உனக்கு வழக்கந்தானோ?" என்று கேட்டார். "ஆம், ஐயா, சமயங்கிடைக்கும்போதெல்லாம் தனித்துப்போய் ஜெபம் செய்வேன்" என்றான். அதிபதி அதைக் கொஞ்சமும் நம்பாமல் "இப்போ உன் உயிரை வாங்கிப்போடக்குத்திருக்கும் ஆனபடியால் இங்கே முழங்காலில் நின்று ஜெபம் செய் பார்ப்போம்" என்றார். அவன் உடனே அதிக உருக்கமாய் ஜெபம் செய்யத் தொடங்கினான். அந்த ஜெபம் அதிபதியின் மனதை மாற்றிவிட்டது. அதிபதி அவனைத் பார்த்து "நீ அதிகமாய் ஆண்டவரோடு நெருங்கிப் பழகினவன் என்பதற்கு வேறே அத்தாட்சி தேவையில்லை. நீ ஜெபம்பண்ணப்போனது உண்மையென்றே நம்புகிறேன். அதிக சந்தோஷத்தோடு உன்னை விடுதலைசெய்கிறேன்" என்றார்.

பிள்ளைகளே,! நீங்களும் அதிகமாய் ஜெபிக்கப் பழகவேண்டும். நமது எல்லா ஜெபத்தோடும் கர்த்தருடைய ஜெபத்தை அதிகக் கருத்தோடு சொல்லிவரவேண்டும்.

---

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

The
# Children's Herald.

பாலர் தூதன்.

"பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்" நீதி. 8: 32.

Vol. X. நவம்பர் 1915. No. 11.

## இயேசுவின் நாமம்.

ஒருநாள் ஒரு சேனாவீரன் யுத்தத்தில் குண்டுபட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார். காயத்தின் அகோரத்தினால் யுத்தத்தைப்பற்றி பலவாறாய்ப் புலம்பிக்கொண்டிருந்தார். அவர் உடன் உத்தியோகஸ்தர்களும் ஒரு குருவானவரும் அவருடைய படுக்கையண்டை நின்றுகொண்டிருந்தார்கள். குருவானவர் அவருடைய தலையணையின் பக்கமாய்க் குனிந்து "பிரிய சிநேகிதனே, யுத்தத்தைப் பற்றிப் பேசாமல் இயேசுவைப் பற்றிப் பேசுவோம்" என்று மெதுவாய்ச் சொன்னார். அந்த இனிய நாமம் அவர் காதுகளில் விழுந்தவுடன் காயத்தின் வேதனை மாயமாய்ப் பறந்தோடிவிட்டது. மரணக் குறிகள் தோன்றிய முகம் சந்தோஷத்தினால் மலர்ந்து ஜொலித்தது. "ஆ, என்னை இரட்சிக்கவந்த என் இன்ப இயேசுவே, எனக்கு நித்திய இளைப்பாறுதல் தாரும். உமது திருப்பாடுகளினிமித்தம் என் பாவங்களையெல்லாம் மன்னியும், என்னை நரக வேதனையினின்று இரட்சிக்க வந்த இயேசுவே, இயேசுவே, என் நேச இயேசுவே" என்று சொல்லி சில நிமிஷங்களாகுமுன் நித்திய இளைப்பாறுதலுக்குள்ப் பிரவேசித்தார்.

என் பிரியமான பிள்ளையே! இந்த நல்ல போர்வீரனுக்கு இயேசு என்ற நாமம் எத்தனை இனிமையாயிருந்தது. அந்தப் பரிசுத்த நாமம் உனக்கும் இனிமையாயிருக்கிறதா? உனக்குப் பாவ மன்னிப்பைத் தர அவர் தமது ஜீவனை விட்டார். உனக்கு நித்திய ஜீவனை அருளும்படி அவர் மூன்றும் நாளில் உயிரோடே எழுந்தார். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும், உனக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. அதாவது உனக்

ளுப் பாவ மன்னிப்பும், நித்திய ஜீவனும் உண்டு. அவர்களுக்கு அந்த நன்மைகள் இல்லை. நீ பரிசுத்த ஞானஸ்நானம் பெற்றபோதே பாவமன்னிப்பும், நித்திய ஜீவனும் உன்னில் ஆரம்பித்திருக்கின்றன. இனி அவை பூரணப்படவேண்டும். நித்தம் இயேசுவை நேசித்து, அவருக்குக் கீழ்ப்படிந்து, அவர் வழிகளில் நடப்பது உன் கடமை. அப்படிப்பட்டவர்களுக்கு கொடிய வேதனையின் மத்தியிலும் மரண நேரத்திலும் கூட அந்த நாமம் மதுரமாய் விளங்கும்.

---

## மரணபரியந்தம் கீழ்ப்படிதல்.

**காசாபியாங்கா** என்ற ஒரு வாலிபப் போர்வீரன் இருந்தான். அவன் தகப்பனார் பிரான்சு தேசத்தின் கடற்படையில் தளகர்த்தனாக இருந்தார். இவனும் அந்த சேனையில்தான் உத்தியோகம் செய்திருந்தான். நீலநதிச் சண்டையில் ஒருநாள் இரவு அத்தளகர்த்தன் தன் மகனை கப்பலின் மேல் தட்டில் நிறுத்தி "நீ இங்கே நில், என் உத்தரவில்லாமல் எங்கும் போகக் கூடாது" என்று கட்டளையிட்டார். கொஞ்ச நேரத்துக்குள் சண்டை ஆரம்பமாயிற்று. இரு பக்கத்திலிருந்தும் பீரங்கிச் சத்தங்கள் காதடைக்கும்படி குமுறிக்கொண்டிருந்தன. குண்டுகள் நாலா பக்கத்திலும் ரிவ், ரிவ் என்று பறந்தன. இருட்டோ மிகவும் கொடிதாயிருந்தது. காயப்பட்டவர்களின் கூக்குரலும், மரணத்தறுவாயிலிருப்பவர்களின் அலறுதலும் மிகப் பரிதாபமாயிருந்தது. சண்டையின் மத்தியில் தளகர்த்தனும் குண்டு பட்டு மரித்துப்போனார். கப்பலிலும் தீப்பற்றிவிட்டது. போர்வீரர் எல்லாரும் படவுகளில் இறங்கி ஓடினார்கள். இருள் சூழ்ந்த அந்த நள்ளிரவில் கப்பலில் அக்கினி சுவாலை கொழுந்துவிட்டு எரிந்தது. பீரங்கிச் சத்தங்கள் நின்றுவிட்டன. எங்கும் வெகு அமைதியாயிருந்தது. ஓடிப்போனவர்கள் தூரத்தில் நின்று எரிகிற கப்பலைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் காசாபியாங்கா மாத்திரம் இன்னமும் மேல் தட்டிலே நின்றுகொண்டிருக்கிறான். ஏனென்றால் அவன் தகப்பனார் அவனை அங்கே நிற்கச் சொல்லியிருந்தார். அவர் மரித்துப்போனார் என்பது அவனுக்குத் தெரியாது. அவருடைய உத்தரவில்லாமல் தான் அந்த இடத்தை விட்டுப் போகக்கூடாது என்பதே அவன் அங்கே நின்றுகொண்டிருப்பதற்குக் காரணம். "என் தகப்பனே, என் வேலை முடிந்துவிட்டதா? இந்த இடத்தை விட்டு நான் போகலாமா?" என்று சத்தமிட்டுக் கேட்கிறான். மறு உத்தரவு ஒன்றுமில்லை. அக்கினி வரவர அவன் கிட்ட நெருங்குகிறது. ஆனால் அவன் நின்ற நிலையிலிருந்து அசையவில்லை. கப்பலின் மருந்தறையிலும் தீப் பிடித்துவிட்டது. ஒரு விநாடி நேரத்துக்குள் கப்பல் வெடித்து சுக்கல் சுக்கலாய்விட்டது. அந்தோ! தைரியசாலியான அவ்வாலிபனும் காணப்படாமல் நொறுங்கிப்போனான்.



பிரியமான பிள்ளைகளே! நீங்கள் மரணபரியந்தம் இயேசு சுவாமிக்கு உண்மையுள்ள போர்ச்சேவகராயிருக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். சில வேளைகளில் நீங்கள் அவருடைய அன்புக்குத் துரோகம்பண்ணி, அவருடைய கட்டளைகளை மீறி நடக்கத்தக்கதான சோதனைகளும், துன்பங்களும் உங்களுக்கு வரும். எந்த சோதனை வந்தாலும் மரண பரியந்தமும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற பிள்ளைகள் தேவை. நீ அவர்களில் ஒருவனாய் இருப்பாயா?

---

## மரணபாயந்தம் உண்மை.

லண்டன் மா நகரத்தில் ஏழைகள் குடியிருக்கும் ஓர் பாகம் உண்டு. அங்குள்ள உதவியற்றவர்களுக்கு ஏதாவது உதவிசெய்யும்படி ஒரு துரை அங்கே போனார். பலவீடுகளையும் பார்த்துக் கடைசியாய் நிர்ப்பந்தமான ஒரு குடிசைக்கு வந்துசேர்ந்தார். அந்த வீட்டில் ஒருவரும் இருக்கமாட்டார்கள் என்று நினைத்து அதைக் கடந்துபோகப் போனார். என்றாலும் திட்டமாய்ப் பார்த்துக்கொள்ளுவோம் என்று சொல்லி வீட்டு வாசலுக்கு வந்தார். வீட்டுக்குள் முழுவதும் இருட்டாய் இருந்தது. வாசலில் நின்றுகொண்டு "இங்கேயிருக்கிறது யார்?" என்று கேட்டார். "உள்ளே வாருங்கள்" என்ற மெதுவான ஒரு சத்தம் வீட்டுக்குள்ளிருந்து வந்தது. துரை உள்ளே போனார். அங்கே ஒரு சிறு பையனைக் கண்டார். அந்த வீட்டில் ஒரு கட்டிலுமில்லை. வேறு தட்டுமுட்டு சாமான்களும் இல்லை. பையன் உட்காரவும், படுத்துக்கொள்ளவும் தக்கதாக கொஞ்சம் வைக்கோல் மாத்திரமிருந்தது. நீ இங்கே ஏன் தனிமையாய் இருக்கிறாய்? உனக்கு தாய் தகப்பன் உண்டா? என்று துரை கேட்டார். "எனக்குத் தகப்பனார் உண்டு. தாயார் மரித்துப்போனார்கள்" என்று அந்தப் பையன் சொன்னான். "உன் தகப்பனார் எங்கே? இந்த இருட்டு வீட்டில் உன்னை விட்டு விட்டு அவர் எங்கே போனார்?" என்று கேட்டார். அதற்கு பையன் "ஐயா, என் தகப்பனார் ஒரு குடிகாரன் நித்தமும் ஏதாவது சிறு களவுகள் செய்து அவருக்குக் கொடுத்துவந்தேன். அவர் அதில் கொஞ்சம் என் சாப்பாட்டுக்குத் தந்து மீதியைக் குடிக்கக் கொண்டுபோவார். போனவாரம் நான் ஓய்வுநாள் பள்ளிக்கூடத்துக்குப் போனேன். அங்கே மோட்சம், நரகம் இவைகளைப்பற்றி எனக்குச் சொல்லிக்கொடுத்தார்கள். பொல்லாதவர்களை தேவன் தண்டிப்பார் என்றும் நல்லவர்கள்தான் அவருக்கு அதிகப் பிரியம் என்றும் அறிந்துகொண்டேன். அதினால் நான் இனி களவுசெய்யக்கூடாது என்று தீர்மானித்தேன். என் தீர்மானத்தை என் தகப்பனாருக்குச் சொன்னேன். அவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. திரும்பவும் களவுசெய்யச் சொன்னார். நான் ஒரே தீர்மானமாக மாட்டேன் என்று மறுத்துவிட்டேன்.

அவர் என்னை அடித்துத் துரத்திவிட்டார். அவருக்குப் பயந்து இங்கே வந்து ஒளித்திருக்கிறேன்" என்றான். "என் அருமையான பையனே, நீ மறுபடியும் களவுசெய்ய சம்மதிக்கிறதாயிருந்தால் உன் தகப்பன் உன்னைச் சேர்த்துக்கொள்வார் அல்லவா?" என்று துரை கேட்டார். "ஆம், ஐயா, ஆனால் என்னை நேசித்து, என் பாவங்களை மன்னித்து, என்னைச் சேர்த்துக்கொண்ட என் அருமை ரட்சகருக்குப் பிரியமில்லாத காரியத்தை நான் எப்படிச் செய்வேன்?" என்று அந்தப் பையன் சொன்னான். துரை அவனுக்காகப் பரிதபித்து, அவனுக்குக் கொஞ்சம் ஆகாரம் வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தார். மறுநாள் காலையில் தாம் திரும்பவும் வந்து அவனைப் பார்ப்பதாகச் சொல்லிவிட்டுப் போனார். அப்படியே அடுத்த நாள் காலையில் கொஞ்சம் ஆகாரமும் கொண்டுவந்தார். வாசலில் நின்றுகொண்டு "பையனே, உள்ளே வரலாமா?" என்று கேட்டார். ஒரு சத்தமும் பிறக்கவில்லை. ஆனாலும் துரை உள்ளே போனார். இதோ, அந்த வைக்கோல் படுக்கையிலே பையன் சத்தமின்றிப் படுத்திருந்தான். தட்டி எழுப்பினார். யாதொரு அசைவும் சத்தமுமில்லை. ஐயோ! பாவம், பையன் பட்டிருந்த அடிகளின் கொடுமையினால் மரித்துப் போயிருந்தான்.

"நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" வெளி. 2. 10.

---

## நோட்டீஸ்.

கர்த்தருக்குச் சித்தமானால் நாளது வருஷாந்தரப் பரீட்சை நாசரேத், சாயர்புரம், புதுக்கோட்டை, புதியம்புத்தூர் சேகரங்களில் நவம்பர் மாசத்திலும், முதலூர், கிறிஸ்தியான்நகரம், இடையன்குடி; இராதாபுரம் சேகரங்களில் டிசம்பர் மாதத்திலும் நடத்தப்படும். எல்லாரும் நன்றாய் ஆயத்தம்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

✠

# The Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. X. டிசம்பர், 1915. No. 12

OFFICE OF THE REGISTRAR OF ... 20 DEC 1915 MADRAS

## கிறிஸ்மஸ் கடிதம்.

என் பிரியமான பிள்ளைகளே,

வரப்போகிற இந்தக்கிறிஸ்மஸ் பண்டிகையானது உங்களெல்லாருக்கும் மிகுந்த ஆசீர்வாதமும் சந்தோஷமுமுள்ள காலமாயிருப்பதாக. கிறிஸ்மஸ் காலத்தில் நம்முடைய எண்ணங்கள் எப்போதும் பெத்லகேமின் முன்னணைக்குச் செல்லவேண்டும். கிறிஸ்துவானவர் பிறந்தபொழுது நாம் உயிரோடிருந்தால், நாம் அந்த முன்னணைக்குச்சென்று, அங்கே தமது தாயாரின் கரங்களில் கிடந்த நமது தேவனாகிய இயேசு என்னும் பாலகனை பணிந்துகொள்ள ஆசைப்பட்டிருப்போம். அந்த மூன்று சாஸ்திரிகளும் வெகு நீண்ட பிரயாணம்செய்து, அவருக்குப் படைக்க தங்கள் பொக்கிஷங்களில் சிரேஷ்டமானவைகளைக் கொண்டுவந்ததுபோல, நாமும் நம்முடைய அன்பைக்காட்ட, நம்மோடு சில காணிக்கைகளைக் கொண்டுபோக விரும்பியுமிருப்போம். இயேசுகிறிஸ்துவானவர் இப்போது பூலோகத்தைவிட்டு, பரலோகத்திற்கு எழுந்தருளியிருந்தாலும், நாம் இன்னும் அவரைக் கிட்டிச்சேர்ந்து ஆராதிக்கலாம். கிறிஸ்மஸ் அன்று அந்த ஆராதனை உண்மையான, அன்புள்ள ஆராதனையாயிருக்க நாம் எல்லாரும் பிரயாசப்படுவோமாக. அது மாத்திரமல்ல. நம்முடைய அன்பைக்காட்டவும், அவரைப்பிரியப்படுத்தவும் நாம் அவருக்குக் காணிக்கைகளையும் கொண்டுவரலாம். இந்தக் கிறிஸ்மஸ் பண்டிகையில் நாம் அவருக்கு என்ன காணிக்கைகளைக் கொண்டு வரப்போகிறோம்? அவருக்கு அதிகப்பிரியமானதென்ன? தாம் நாசரேத் ஊரில் வாசஞ்செய்தபோது, தமது ஜீவியத்தில் காட்டிய மாதிரியைப் பின்பற்றி நடக்க தமது பிள்ளைகள் பிரயாசப்படுவதைப் பார்ப்பதே அவருக்கு எல்லாவற்றிலும் அதிகப்பிரியமானது. ஆகையால் நம்முடைய பாவங்களில்

சிலவற்றை ஜெயிக்கவும், அவருடைய பாக்கியமுள்ள மாதிரியை அதிக உண்மையாய்ப் பின்பற்றவும் நாம் கிறிஸ்மஸ் காலையில் அவருக்கு முன்பாகத் தீர்மானங்கள் செய்வோமாக. இந்தத் தீர்மானங்களை நாம் முன்னமே ஒரு துண்டு காகிதத்தில் எழுதி, நம்முடைய ஜெப புஸ்தகத்துக்குள் வைத்து, கிறிஸ்மஸ் காலையில் நடக்கும் பக்திவிநயமான ஆராதனையில் நாம் தனி ஜெபம் செய்யும்போது, அவைகளை நாம் கைக்கொள்ளப் பிரயாசப்படும் வாக்குத்தத்தமாக தேவனுக்குச் செய்வோமாக. என்ன தீர்மானங்கள் அவருக்கு அதிகப் பிரியமாயிருக்குமென்று எண்ணுகிறீர்கள்? நான் உங்களுக்கு மூன்று தீர்மானங்களை யோசனையாகச் சொல்லுகிறேன்:—

1. நான் அதிகமாய் **உண்மை பேசப்** பிரயாசப்படுவேன்.

2. என்னுடைய போதகன்மாருக்கும் பெற்றோருக்கும் அதிகக் **கீழ்ப்படிதலுள்ளவனாயிருக்கப்** பிரயாசப்படுவேன்.

3. என்னுடைய நினைவிலும் வார்த்தையிலும் செய்கையிலும் எப்போதும் **சுத்தமாயிருக்கப்** பிரயாசப்படுவேன்.

ஒருவேளை நீங்கள் செய்ய விரும்பும் மற்ற தீர்மானங்கள் இருக்கலாம். உங்கள் சொந்த ஜீவியத்துக்கு அதிக அவசியமானது இன்னதென்று உங்களுக்குத்தான் நன்றாய்த் தெரியும். கிறிஸ்துவானவர் நமக்குக் காட்டிய பெரிய மாதிரியை நமக்கு முன்பாக வைத்துக்கொள்ளவும், அந்த மாதிரிக்கு விரோதமான எல்லாவற்றையும் நம்முடைய ஜீவியத்திலிருந்து வேரோடே பிடுங்கிப்போடவும் நாம் எப்போதும் பிரயாசப்படவேண்டும். நாம் அதிக மதிகமாய் அவரைப்போல ஜீவியம்செய்ய ஆரம்பிக்க, கிறிஸ்மஸ் காலையில் பயபக்தியாய் பிரயாசப்பட்டால், அதுவே அவருடைய முன்னணைக்கு முன்பாக நாம் படைக்கக்கூடிய சிரேஷ்டமான காணிக்கையாயிருக்கிறது. இப்படியாக நம்முடைய கிறிஸ்மஸ் மெய்யாகவே சந்தோஷமுள்ளதாயும், நம்முடைய காணிக்கை தேவனுக்கு ஏற்றதாயுமிருக்கும்.

தேவன் உங்களெல்லாரையும் ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,
உங்கள் பிரியமுள்ள சிநேகிதன்
C. G. ஸ்றேப்ளி.

## கிறிஸ்மஸ் அன்பு.

ஆப்பிரிக்கா கண்டத்தின் தென் பாகத்தில் ஒரு வகை குஷ்டரோக வியாதி உண்டு. ஒருவனுக்கு அவ்வியாதி வந்தால் ஒருபோதும் சுகமாகாது. அந்த வியாதியை சுகமாக்கத்தக்க மருந்தும் வைத்தியனும் உலகத்தில் இல்லை. அது முதலில் ஒருவகை புண்களாய் ஆரம்பிக்கும். கொஞ்சக் காலம் கழித்தவுடன் கைகால் நகங்களும், விரல்களும் கொஞ்சம் கொஞ்சமாய்



அழுகிவிழும். இப்படியே ஒவ்வொரு அவயவமாக விழுந்து, நிர்ப்பந்தமாய் சாக நேரிடும். மேலும் அது ஒட்டுவாரொட்டி வியாதி. அந்த வியாதிக்காரனைத் தொட்டவர்கள், கிட்டினவர்கள் எல்லாரையும் அது பிடிக்கும். ஆகையால் அத்தேசத்தில் குஷ்டரோகிகளுக்கென்று, பிரத்தியேகமாய், ஒரு பெரிய கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அது நாலு பக்கத்திலும் உயர்ந்த மதில்களால் சூழப்பட்ட விஸ்தாரமான கட்டடம். குஷ்டரோக வியாதி கண்டவர்களை உடனே அக்கட்டடத்துக்குள் அனுப்பிவிடுவார்கள். அப்புறம் அவர்கள் மரணபரியந்தம் அங்கேதான் இருக்கவேண்டும். சாப்பாடு முதலிய வசதிகள் எல்லாம் உள்ளே சரியாய்ச் செய்யப்பட்டிருக்கும். அக்கட்டடத்துக்குள் போகிறவர்கள் யாரானாலும் சரி மறுபடி வெளியே வரக்கூடாது. மரணபரியந்தம் அதற்குள்ளிருக்கச் சம்மதித்தால் அல்லாமல், சுகமுள்ளவர்கள் ஒருவரையும் உள்ளே விடமாட்டார்கள். ஆகவே அந்தக் கட்டடம் ஜீவனோடு மனுஷரை அடக்கம்செய்கிற ஒரு கல்லறையாயிருக்கிறது என்று சொல்லலாம்.

அந்தக் கட்டடத்துக்குள் ஏராளமான குஷ்டரோகிகள் இருந்தார்கள். அவர்களுக்குச் சரீர சாப்பாட்டுக்குரிய வசதிகள் இருந்தபோதிலும் ஆத்துமாவுக்குரிய வசதிகள் ஒன்றும் இல்லை. கோவிலாவது, குருமாராவது கிடையாது. அந்த தேசத்தில் ஒரு நல்ல குருவானவர் இருந்தார். அவர் இந்த ஏழைக் குஷ்டரோகிகளின் ஆத்தும நிலைமையை நினைத்துப் பரிதபித்தார். தாம் அவர்களுக்குள் போய் வாசஞ்செய்து, அவர்களுக்கு இயேசுவைப்பற்றிப் போதித்து, அவர்களை மோட்சத்துக்கு வழிநடத்தவேண்டும் என்று தீர்மானித்தார். அப்படியே தமது சிநேகிதரிடத்தில் கடைசித் தடவையாக வழியனுப்பிக்கொண்டு, இனி ஒருநாளும் வெளியே வரமுடியாத அந்த ஜீவனுள்ளோரின் கல்லறைக்குள் பிரவேசித்தார். இவர் எவ்வளவாய் அந்தக் குஷ்டரோகிகளை நேசித்தார் என்று நீ நினைப்பாய். ஆம், அவருடைய அன்பு ஆச்சரியமானதுதான். ஆனால் இயேசுவின் அன்பு இதைவிடப் பெரிது. இந்த உலகம் குஷ்டரோகிகள் நிறைந்த அந்தக் கட்டடத்துக்கு ஒப்பாயிருக்கிறது. உலகத்திலுள்ள எல்லா மனிதரும் பாவக் குஷ்டம் பிடித்தவர்கள்தான். மனுஷனுடைய நிர்ப்பந்த நிலைமையைப் பார்த்து, அவனுக்காகப் பரிதபித்து, அவனை மோட்சத்தில் சேர்க்கும்படி, இயேசு ரட்சகர் தம்மை மரணபரியந்தமும் தாழ்த்தி இவ்வுலகத்துக்கு வந்தார். ஆ! இது எவ்வளவு ஒப்பற்ற அன்பு! கிறிஸ்மஸ் பண்டிகை இந்தப் பெரிய அன்பை உனக்கு ஞாபகப்படுத்துகிறதல்லவா! நீ இயேசுவை நேசிக்கிறாயா!

## சாந்தமுள்ள ஆவி.

இங்கிலாந்து தேசத்தில் ஒரு சேனாவீரன் இருந்தார். எந்த விஷயத்தையும் சண்டையிட்டு முடிவு செய்துகொள்ளவேண்டும் என்பதுதான் அவருடைய பிரமாணம். அவருக்கு ஷார்லி என்று ஒரு மகன் இருந்தான். அவனுக்கும் அந்தக் குணம்தான் இருந்துவந்தது. அவன் படித்த பள்ளிக்கூடத்தில் தானியேல் என்ற ஒரு பையனும் படித்துவந்தான். தானியேல் ஏழைப் பையனாயிருந்தபோதிலும் மிக நல்லவன். வகுப்பில் எப்போதும் முதல் இடத்தில் நிற்பான். எல்லாப் பையன்களும் அவனுடைய நற்குணத்தினிமித்தம் அவனை நேசித்துவந்தார்கள். ஒரு தடவை ஷார்லியும் வேறு சில பையன்களும் சேர்ந்து ஒரு தப்பிதம் செய்துபோட்டார்கள். அது எப்படியோ உபாத்தியாயருக்குத் தெரிந்துவிட்டது. ஒரு குற்றமும் அறியாத தானியேல்தான் இதை உபாத்தியாயருக்குச் சொல்லியிருக்கவேண்டும் என்று ஷார்லி நினைத்தான். நினைக்கவே தானியேல்மேல் அவனுக்குக் கோபம் பொங்கினது. "நான் யாரென்று அவனுக்குக் காண்பிக்கிறேன்" என்று குமுறினான். அவனை உதைக்கவேண்டியதுதான் என்று மற்றப் பையன்களும் சொன்னார்கள். உடனே ஷார்லி தானியேலைத் தேடிப் புறப்பட்டான. தானியேல் தோட்டத்தில் தன் சிறு தங்கையுடன் விளையாடிக்கொண்டிருந்தான். ஷார்லி கோபத்தோடு அவன் கிட்டப் போய் "ஏ, கோள்ச் சொல்லி, நீ எங்களைப் பற்றி உபாத்தியாயரிடத்தில் என்ன சொன்னாய்?" என்று கேட்டான். தானியேல் கோபப்படவுமில்லை. பயப்படவுமில்லை. சாந்தமாய் அவனை ஏறிட்டுப்பார்த்துக்கொண்டு அமைதலாய் நின்றான். மறுபடியும் ஷார்லி அதிகக் கோபத்தோடு, கையை ஓங்கிக்கொண்டு "உபாத்தியாயரிடம் என்ன சொன்னாய், சொல்லு. இல்லையென்றால் இப்பொழுது உன்னைக் கொன்றுபோடுவேன்" என்றான். தானியேல் சற்று விலகி நின்று, அதிக சாந்தமாய் "ஷார்லி, உன் மனம்போல் என்னை அடித்துக்கொள். ஆனால் நான் உன்னைத் திருப்பி அடிக்கவும்மாட்டேன். உன்னை ஏசவும் மாட்டேன். சண்டையிடுவது ஒரு கேவலமான காரியம். உன் கோபம் தணிந்தபிற்பாடு உன்னோடு பேசுவேன்" என்றான். உடனே ஷார்லியின் கோபம் பறந்துவிட்டது. தனக்குள்ளேயே வெட்கப்பட்டு, தானியேலிடம் மன்னிப்புக் கேட்டான்; இருவரும் சமாதானமாய்ப் போனார்கள்.

இப்படிப்பட்ட சாந்தமுள்ள ஆவி உன்னிடம் உண்டா?

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

8 FEB 1916
MADRAS
160965

The
# Children's Herald.
# பாலர் தூதன்.
'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XI. ஜனுவரி, 1916. No. 1.

211, N06
N06. 2-12

### நமதருமை அத்தியக்ஷரவர்களின் நவவருடக்கடிதம்.

"பிஷப்ஸ்ற்றோவ்,"
பாளையங்கோட்டை,
1உ ஜனுவரிமீ 1916.

**என் அருமையான பிள்ளைகளே,**

உங்களுக்கு ஒரு நவவருட கடிதம் எழுதும்படி உங்கள் செக்ரற்றேரி என்னைக் கேட்டுக்கொண்டதினால் இக்கடிதத்தை அதிக சந்தோஷத்துடன் உங்களுக்கு எழுதலானேன். உங்கள் மத்தியில் நடந்துவரும் வேலையையும், நீங்கள் பரிசுத்த வேதத்தை தினந்தினம் வாசிக்கும்படி போதிக்கப்பட்டு வருவதையும் அறிந்து சந்தோஷப்படுகிறேன். நீங்கள் அன்றாடக பாகத்தை வாசிக்க மறந்து போகிறதில்லை யென்றும், நீங்கள் வாசிக்கிறவைகளின் கருத்தை உங்களுக்கு விளக்கிக் காட்ட தேவ ஒத்தாசையைத் தேடி வருகிறீர்கள் என்றும், அதோடுகூட நீங்கள் வாசிக்கிறவைகளுக்கு இசைய நடந்து வருகிறீர்கள் என்றும் நம்புகிறேன்.

**இந்த வருஷம் உங்களுக்கு பாக்கியமான நவ வருஷமாயிருப்பதாக!** இந்த 1916-ம் வருஷம் உங்களுக்கும், மற்ற எல்லாருக்கும் ஆசீர்வாதமான வருஷமாயிருக்க விரும்புகிறேன். இவ்வருஷத்தில் அநேக உயிர்கள் பயங்கரமான படுங்காயங்கள் படுவதற்கும், மடிந்து போவதற்கும் காரணமாயிருக்கிற இப் பெரிய யுத்தம் ஓய்ந்து, எல்லா ஜாதியாருக்கும் சமாதானம் உண்டாகும்

என்று நம்புகிறேன். நம்முடைய தலைச்சேனை, கடற்சேனைகளுக்காகத் **தினந்தினம் ஜெபிக்க** மறந்து போகாதிருப்போமாக! ஆண்டவர் சீக்கிரத்தில் சமாதானம் கட்டளையிடவும், இப்போது நடக்கும் ஆகாமியங்கள் ஒழிந்து, சத்தியமும் நீதியும் ஜெயம் பெறவும் அவரை நோக்கிப் பிரார்த்தித்து வருவோமாக!

உங்களிடம் நான் கேட்டுக்கொள்ளும் இன்னொரு விஷயம் உண்டு. மனிதர் தேவனுக்குக் கீழ்படியாமலும், அவர் கற்பிக்கும் விஷயங்களைச் செய்யாமலும், இருக்கிறபடியால் தேவன் இவ்வுலகத்தைத் தண்டித்து வருகிறார். மனிதர் துன்மார்க்கராயும், சுயநயமுள்ளவர்களாயும், தேவனுக்குச் சித்தமானவைகளைச் செய்யாதவர்களாயும் இருக்கும்போது இவ்வுலகத்துக்கு என்ன நேரிடும் என்பதைக்காட்ட தேவன் இந்தப் பெரிய யுத்தத்தை அனுப்பியிருக்கிறார். நம்மில் ஒருவராவது தேவனுடைய சித்தத்தைச்செய்ய முடியாத அவ்வளவு சிறுவர்கள் அல்ல. நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய ஒத்தாசையை முன்னிட்டு, **நல்லவர்களாய் நடக்கப்** பிரயாசப்பட்டால் இவ்வுலகத்தை நல்ல உலகமாக்குகிறவர்களாயிருப்போம். நாம் நல்ல விஷயங்களைச்செய்ய முயலுவதை நம்முடைய சகோதரர், சகோதரிகள், சிநேகிதர் பார்க்கும்போது அவர்களும் அப்படியே நற்காரியங்களைச்செய்ய முயற்சிப்பார்கள். இவ்விதமாய் நமது நண்பர் மாத்திரமல்ல, தேவனை அறியாதவர்களும்கூட அவரை அறியவும், அவருடைய சித்தத்தைச் செய்யவும் தக்க ஓர் கருவிகளாய் நாம் இருக்கக்கூடும் இப்படிச்செய்துவர நீங்கள் அனைவரும் பிரயாசப்படுவீர்களா? மேலும் தேவனைச் சேவியாதவர்கள் அவரை அறியவும், அவருக்குப் பிரியமானவைகளைச் செய்யவும் தேவன் அவர்கள் மனதைத் திருப்பியருள வேண்டுமென்று அவரை நோக்கி **ஜெபித்து வருவோமாக!** இந்த விஷயங்களை மறந்து விடாதேயுங்கள். இக்காரியங்களைச் செய்ய தேவன் உங்களுக்கு தம்முடைய கிருபையைத் தந்தருள வேண்டுமென்று நானும் உங்களுக்காக ஜெபித்து வருவேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள,
E. H. M. **உவாலர்**,
திருநெல்வேலி, மதுரை அத்தியக்ஷர்.

## ஞானோபதேச வினா விடை.

**தங்கவாக்கியம்** :— "அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசிப்பீர்

பரிசுத்த ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் தகுந்த வயது வந்தவுடன் திருச்சபை ஞானோபதேச வினா விடையைக் கற்றறிந்து கொள்ளும்



படி திருச்சபை நமக்குக் கற்பிக்கிறது. ஆகையால் அதைக் கொஞ்சம் கொஞ்சமாய் மாதந்தோறும் பாலர் தூதன் மூலமாய் நாம் கற்றறிந்துகொள்ள கர்த்தர் அருள் புரிவாராக!

I. **ஞானோபதேச வினா விடையாவது என்ன?** கிறிஸ்து மார்க்க உபதேசங்களை கேள்வியும் உத்தரவுமாக திருச்சபை நமக்குப் போதித்திருப்பதே ஞானோபதேச வினா விடையாம். ஞான உபதேசங்களை அதாவது ஆத்துமாவுக்கு வேண்டிய போதனைகளை கேள்விகளாலும், உத்தரவுகளாலும் வாய் மொழியாய்ச் சொல்லிக்கொடுத்தல் என்பது அதன் பொருள். பரிசுத்த ஞானஸ்நானம் பெற்றவர்கள் திடப்படுத்தல் பெறு முன்னே இதைப் படித்து அறிந்துகொள்ள வேண்டுமென்று திருச்சபை கட்டளை யிட்டிருக்கிறது. ஏனென்றால் நாம் ஒன்றும் அறியாத காலத்திலேயே பரிசுத்த ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். அதினால் நமக்குக் கிடைத்திருக்கிற ஆத்தும நன்மை இன்னதென்றும், அச்சமயத்தில் நமது ஞானத்தாய் தகப்பன்மார் நமக்காகச் செய்த பிரதிக்கினை இன்னதென்றும், அப்பிரதிக்கினைகளை நிறைவேற்ற நமக்கு வேண்டிய கிருபை இன்னதென்றும் சிறுவயதிலேயே நாம் போதிக்கப்படவேண்டியது அவசியம். ஆபிரகாமும் தன் பிள்ளைகளுக்குத் தேவனைப் பற்றிய விஷயங்களைப் போதித்து வந்தான் என்று நாம் பரிசுத்த வேதத்தில் வாசிக்கிறோம். (ஆதி. 18. 19) பின்னால் இஸ்ரவேல் ஜனங்களும் தங்கள் பிள்ளைகளுக்கு தேவ நியமங்களைப் போதித்து வரவேண்டுமென்று தேவனால் கட்டளை பெற்றிருந்தார்கள். (உபா. 4. 9)

II. இந்த ஞானோபதேச வினா விடை நமக்கு **ஏன் அவசியம்?** ஏனென்றால் 1-வது பரிசுத்த வேதாகமத்திலுள்ள உபதேசங்களை நாமே கிரகித்து அறிந்துகொள்ளக் கூடாதவர்களாயிருக்கிறோம். ஆகையால் அவைகளைத் திரட்டிக் காட்டியிருக்கும் இந்த ஞானோபதேச வினா விடை நமக்கு அவசியம். 2-வது படிக்கத் தெரியாதவர்களும் புஸ்தகமில்லாதவர்களும் எளிதில் அறிந்துகொள்வதற்கு அவை வினா விடையாக இருப்பதும் அவசியம். 3-வது கிறிஸ்துமார்க்க மூலஉபதேசங்களை திட்டமாய் நமது மனதில் பதியச்செய்வதற்கு சுருக்கமும் தெளிவுமான இந்த ஞானோபதேச வினா விடை நமக்கு வேண்டியதே. 4-வது இரட்சிப்புக்கு அவசியமான சத்தியங்களை பலரும் பலவிதமாய் அர்த்தப்படுத்தி, பிசகான உபதேசத்துக்குள்ளாகிக் கெட்டுப் போகாதபடி திருச்சபை நமக்குத் தந்திருக்கிற இந்த ஞானோபதேச வினா விடை நமக்கு அவசரமே.

III. ஞானோபதேச வினா விடையில் **எத்தனை பாகங்கள் உண்டு?** ஞானோபதேச வினா விடையில் மூன்று பாகங்கள் உண்டு. 1-வது உடன்படிக்கை. இதில் பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாய் தேவன் நமக்கு அருளியிருக்கும் நன்மைகளும், அதில் நாம் செய்திருக்கும் பிரதிக்கினைகளும் அடங்கியிருக்கிறது. 2-வது **உடன்படிக்கையின் விஸ்தரிப்பு** நாம் விசுவாசிக்க வேண்டியவைகளும், கைக்கொள்ள வேண்டியவைகளும்

இந்த பாகத்தில் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. 3-வது **உடன்படிக்கையை நிறை வேற்ற நமக்கு வேண்டிய பேலன்.** ஜெபத்தின் மூலமாயும், பரிசுத்த சாக்கிர மெந்துக்கள் மூலமாயும் நாம் இந்த பெலனைப் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆகையால் இந்த பாகத்தில் கர்த்தருடைய ஜெபத்தையும், பரிசுத்த சாக்கிர மெந்துக்களையும் பற்றிச் சொல்லியிருக்கிறது.

**போதனை.** திருச்சபை நமக்குத் தந்திருக்கிற ஞானோபதேச வினாவிடையை நாம் கற்றறிந்து, ஜீவகாலமெல்லாம் அவைகளை நமது ஞாபகத்தில் வைத்து, அவைகளின்படி நடந்துவரவேண்டும்.

**"இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து, அவைகளை தங்கள் பிள்ளைகளுக்கு அறிவிக்கும்படி நம்முடைய பிதாக்களுக்குக் கட்டளையிட்டார்" (சங். 78: 5).**

## சரியான பாதை.

உவேல்ஸ் நாட்டில் **லான்வேர்** என்னும் ஓர் அழகிய கிராமம் உண்டு. அக்கிராமத்திலுள்ள சில பையன்கள் ஒருநாள் மீன் பிடிக்கும்படி ஓர் மலைப் பக்கம் போனார்கள். பகலெல்லாம் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து அந்த நாளைச் சந்தோஷமாய்க் கழித்து, சாயங்காலத்தில் வீட்டுக்குத் திரும்பினார்கள். திரும்புகையில், திசை தப்பி வழியை விட்டு, வேறோர் பாதையில் வந்து, திகைத்து நின்றனர். அப்பொழுது தூரத்திலே ஒரு துரை நிற்கிறதைக் கண்டு, அவரிடத்தில் போய் "ஐயா, நாங்கள் லானவெர் என்ற ஊருக்குப் போகவேண்டும், தயவுசெய்து எங்களுக்கு வழி திருப்பி விடுவீர்களா?" என்று கேட்டார்கள். துரை பையன்களைப் பார்த்து "நீங்கள் வந்திருக்கிற பாதை சரியானதல்ல; இந்த வழியாய்ப் போனால் ஊர் போய்ச் சேரமாட்டீர்கள்; அதோ, தெரிகிற வீடுமட்டும் என்னுடன் வாருங்கள்; அதின் பக்கமாய் உங்கள் ஊருக்கு நேரான ஒரு பாதை போகிறது, அதிலே திருப்பிவிடுகிறேன்" என்றார். அப்படியே பையன்கள் துரையோடு போனார்கள். வழியிலே, தாங்கள் அந்தப் பகலைக் கழித்த விதத்தை துரைக்குச் சொல்லிக்கொண்டே போனார்கள். அவர்களில் ஒரு சிறுவன் "ஐயா, எல்லாம் நன்றாய்த்தான் இருந்தது; பாதையைத் தவறவிட்டபோதுதான் பயமுண்டாகிவிட்டது. எங்களில் சிலர் நாமே போய்விடலாமே; அந்தத் துரையினிடத்தில் ஏன் கேட்கவேண்டும்? என்றுகூடச் சொன்னார்கள்" என்றான். இதைக் கேட்ட துரை பையன்களைப் பார்த்து "நீங்கள் வழிதப்பி சங்கடப்பட நேரிடாதபடி பாதை எதுவென்று விசாரிக்க ஒரிபோதும் வெட்கப்படாதேயுங்கள். நான் இங்கு குடியிருக்கவந்த ஆரம்பத்தில் அக்கம்பக்கம் போக நேரிடும்போதெல்லாம் மற்றவர்களிடத்தில் வழியைக் கேட்டுத்தான் போகவேண்டியதாயிருந்தது என்றார். இப்படியாக துரை அவர்களோடு பேசிக்கொண்டுவந்து, தமது வீட்டுக்குச் சமீபமாயுள்ள பாதையிலே அவர்களைத் திருப்பிவிடும் சமயத்தில், அவர்களைப் பார்த்து "எனது பிரிய பாலியரே! நாம் எல்லாரும் போகவேண்டிய இன்னொரு சிறந்த பட்டணம் இருக்கிறது. அது மோட்ச நகர். அதற்கு நேரான ஒரே பாதைதான் உண்டு. இந்த உலகத்திலோ பலவித கோணலும் பயங்கரமுமான வழிகள் செல்லுகின்றன. உங்கள் ஜீவியத்தில் நீங்கள் வழிதப்பி, அந்தக் கோணலான வழிகளில் சென்று, கடைசியில் மோக்ஷ



நகரை, இழந்துவிடாதபடி அந்த நேரான பாதையைக் கேட்டு நடக்க வெட்கப்படாதேயுங்கள் பரிசுத்த வேதாகமத்தில் அந்த வழி தெளிவாய் காட்டப்பட்டிருக்கிறது. திருச்சபையானது நாம் அந்த வழியை லேசாய் அறிந்து, அதிலே நடக்கத்தக்கதாக ஞானோபதேச வினாவிடையில் அதைக் காட்டியிருக்கிறது. உங்களை நடத்தும் தேவ ஊழியரிடம் நீங்கள் அதைக் கேட்டு; அறிந்து, அதில் நடப்பீர்களானால் நிச்சயமாய் மோட்ச நகரில் சேருவீர்கள்" என்று சொல்லியனுப்பினார்.

## 1915-ம் வருஷத்தில் பரிசு பெற்றவர்கள் ஜாபிதா.

| நம்பர். | பேர். | பரிசு. |
|---|---|---|
| | **நாசரேத் சேகரம்.** | |
| | Girls' High School. | |
| 1 | L. ராஜம்மாள் | I |
| 2 | K. அன்னாள் பாக்கியம் | ,, |
| 3 | D. செல்லம்மாள் | ,, |
| 4 | J. நகோமி | II |
| 5 | M. A. ஞானமணி | ,, |
| 6 | D. S. கிரேஸ் எமிலி | ,, |
| 7 | J. A. நேசமணி | ,, |
| 8 | J. மனோரஞ்சிதம் | ,, |
| 9 | J. V. புஷ்பம் | ,, |
| 10 | M. சாந்தம் | ,, |
| 11 | A. அன்புமணி | ,, |
| 12 | S. அலிஸ் | ,, |
| 13 | J. B. ரோஸ் | ,, |
| 14 | M. G. ரஞ்சிதம் | ,, |
| 15 | V. தங்கமுத்து | ,, |
| 16 | J. வடிவம்மாள் | ,, |
| 17 | G. மரகதம் | ,, |
| 18 | A. ராஜம்மாள் | III |
| 19 | P. F. ரோஸ் | ,, |
| 20 | T. அன்னப்பழம் | ,, |
| 21 | S. ரஞ்சிதம் | ,, |
| 22 | J. H. வசந்தம்மாள் | ,, |
| 23 | A. S. அன்னத்தாய் | ,, |
| 24 | P. மரியம்மாள் | ,, |
| 25 | L. கமலம் | ,, |
| 26 | V. செல்வ சிரோமணி | ,, |
| 27 | S. K. தபசு | ,, |
| 28 | A. கிரேஸ் | ,, |
| 29 | D. தேவ திரவியம் | ,, |
| 30 | M. ஜோதி | ,, |
| 31 | S. ராஜம்மாள் | ,, |
| 32 | K. நகோமி | ,, |
| 33 | J. நேசம் | III |
| 34 | J. சஞ்சீவி | ,, |
| 35 | S. மேரி | ,, |
| 36 | S. K. ராஜம்மாள் | ,, |
| 37 | G. நேசமணி | ,, |
| 38 | A. செல்வம் | ,, |
| | Girls' Training School. | |
| 1 | M. செல்வம் | II |
| 2 | S. ஞானமணி | III |
| 3 | A. முத்து பாக்கியம் | ,, |
| 4 | I. அன்னம்மாள் | ,, |
| 5 | G. தீபமணி | ,, |
| 6 | S. ஞான சுந்தரம் | ,, |
| 7 | S. நேசமணி | ,, |
| 8 | S. அன்னவடிவு | ,, |
| | Girls' Model School. | |
| 1 | M. J. அருள் மணி | I |
| 2 | A. ஞானரஞ்சிதம் | ,, |
| 3 | D. Y. சாந்தம் | ,, |
| 4 | A. புஷ்பம் | II |
| 5 | Y. ஜெபமணி | ,, |
| 6 | E. சுசி | ,, |
| 7 | M. ரோஸ் | ,, |
| 8 | D. மரியம்மாள் | ,, |
| 9 | M. ராஜம்மாள் ii | ,, |
| 10 | P. தங்கரத்தினம் | ,, |
| 11 | J. பாக்கியமணி | II |
| 12 | V. சிரோமணி | ,, |
| 13 | K. செல்லத்தாய் | ,, |
| 14 | K. ஞானாபரணம் | ,, |
| 15 | J. ராகேல் | ,, |
| 16 | J. கிரேஸ் i | ,, |
| 17 | J. மெர்சி | ,, |
| 18 | ரூபிபாக்கியம் | |

19 K. ஏசுவடியாள் ... III
20 G. கிரேஸ் ... ,,
21 K. மேரி ... ,,
22 A. ருத்எலிசபெத் ... ,,
23 J. கிரேஸ் ii ... ,,
24 D. நேசமணி ... ,,
25 J. சகிர்தம் ... ,,
26 S. மனோமணி ... ,,
27 A. சமாதானம் ... ,,
28 S. எஸ்தர் ... ,,
29 S. சுவிசேஷ ரத்தினம் ... ,,
30 P. ஜீவநேசம் ... ,,
31 J. ஞானம்மாள் ... ,,
32 S. நல்லம்மாள் ... ,,
33 K. மரியாள் ... ,,
34 Y. அன்னாள் ... ,,

## Boys' Secondary School.

1 J. மனாசே ... I
2 A. சாமுவேல் ... ,,
3 ஜாண் தேவசகாயம் ... ,,
4 P. காபிரியேல் ... II
5 S. சுவிசேஷமுத்து ... ,,
6 S. தியாகராஜ் ... ,,
7 M. மெல்கிசேதேக் ... ,,
8 K. மோசே ... III
9 D. தேவபாதம் ... ,,
10 D. ஞானாயுதம் ... ,,
11 D. பெஞ்யமீன் ... ,,
12 M. J. செல்லையா ... ,,
13 A. E. யோசேப்பு ... ,,
14 S. எட்வர்ட் ... ,,
15 S. சவுந்தரபாண்டியன் ... ,,
16 J. பொன்னையா i ... ,,
17 V. தங்கசாமி ... ,,

## Boys' Model School.

1 J. S. கிறிஸ்தியான் ... I
2 V. ஏசுவடியான் ... II
3 V. தாவீது ... III
4 Y. பொன்னையா ... ,,
5 L. சாமுவேல் தியோடோர் ... ,,

## A. I. Boys' School.

1 V. செல்லையா ... II
2 Y. ஆசிர்வாதம் ... ,,
3 P. பாலய்யா ... III
4 A. கிறிஸ்தியான் ... ,,
5 S. சாலோமோன் ... ,,
6 M. சுந்தரம் ... ,,

## கஸ்பா.

1 K. ஞானதீபம் ... II
2 K. மரியம்மாள் ... ,,

## மூக்குப்பீரி.

1 E. செல்வம் ... I
2 A. பூமணி ... ,,
3 N. சாராள் ... ,,
4 Y. ராஜம்மாள் ... ,,
5 M. செல்லம்மாள் ... II
6 K. சிரோமணி ... ,,
7 J. சுவாமியடியான் ... ,,
8 S. செல்வம் ... II
9 K. அன்னாள் ... ,,
10 P. நல்லமுத்து ... ,,
11 I. ஞானக்கண் ... ,,
12 M. தேவ இரக்கம் ... ,,
13 Y. சவுந்தரம் ... ,,
14 G. முத்து ... ,,
15 M. பிச்சைமணி ... ,,
16 V. சாமுவேல் ... ,,
17 S. பொன்னம்மாள் ... ,,
18 G. M. நேசம் ... ,,

## ஒய்யான்குடி.

1 D. தவமணி ... I
2 Y. சொர்ணம் ... ,,
3 P. ஜெபமணி ... II
4 A. துரைராஜ் ... ,,
5 P. கோவில்பிள்ளை ... ,,
6 A. பரிபூரணம் ... ,,
7 A. பாக்கியம் ... ,,
8 J. ருத் ... ,,
9 A. மேரி ... ,,

## எருசலேம்.

1 I. ஞானமணி ... I
2 A. சொர்ணம் ... ,,
3 P. பொன்னம்மாள் ... ,,
4 J. அன்னமணி ... II
5 A. திரவியம் ... ,,
6 V. ஜெயராஜ் ... ,,
7 S. துரைராஜ் ... ,,
8 V. ஏசுவடியாள் ... ,,
9 A. துரைசாமி ... ,,
10 J. பாக்கியமுத்து ... II
11 A. செல்வம் ... ,,
12 V. நேசமணி ... ,,
13 S. வெள்ளையம்மாள் ... ,,
14 P. பாலம்மாள் ... ,,



## வெள்ளரிக்காயூரணி.

1 Y. பாக்கியம் ... II
2 I. ரஞ்சிதம் ... III

## அகப்பைகுளம்.

1 S. சாலோமோன் ... II
2 A. ஞானமலை ... III
3 A. மாணிக்கம் ... ,,
4 J. தாவீது ... ,,

## வாழையடி.

1 J. தேவபாக்கியம் ... I
2 A. நேசம் ... III
3 A. கிரேஸ் ... ,,

## முதலைமொழி.

1 S. பாக்கியம் ... II
2 M. பாலய்யா ... III

## வெள்ளமடம்

1 J. திரவியம் II
2 J. பொன்னையா ,,
3 D. மோசே ,,
4 P. பாலம்மாள் III
5 P. நவமணி ,,
6 J. ஜெபமணி ,,
7 D. மரியம்மாள் ,,
8 A. சாமுவேல் ,,
9 P. செல்லையா ,,

## பிள்ளையன்மனை.

1 Y. N. கனகமணி I
2 அருமை. பொன்னம்மாள் ,,
3 M. நல்லம்மாள் II
4 I. யாக்கோபு III
5 D. பிச்சமணி ,,
6 G. பாக்கியம் ,,
7 D. வெள்ளையம்மாள் ,,
8 M. செல்லம்மாள் ,,
9 K. ராஜய்யா ,,
10 G. சொர்ணம் ,,
11 G. தேவ இரக்கம ,,

## உடையார்குளம்.

1 S. ஈசாக்கு I
2 S. துலாசாமி ,,
3 P. பொன்னுசாமி II
4 A. பிச்சமணி ,,
5 I. தோமாஸ் III
6 S. பொன்னுசாமி ,,
7 S. யோசேப்பு ,,
8 I. மனுவேல் ,,

## கடையனோடை.

1 V. பேதுரு II
2 V. பிச்சமுத்து III
3 G. ஈசாக்கு ,,
4 K. தங்கையா ,,

## குளத்துக்குடி.

1 S. ஞானப்பூ I
2 M. பொன்னம்மாள் ,,
3 A. D. சாமுவேல் ,,
4 A. தங்கையா ,,
5 S. செல்வம் II
6 D. ரஞ்சிதம் ,,
7 D. தேவஇரக்கம் ,,
8 S. கோவில் பிள்ளை ,,
9 S. ஆபிரகாம் ,,
10 S. தேவசகாயம் III
11 A. ஜெபசுந்தரம் ,,
12 S. யோசுவா ,,
13 K. தங்கையா ,,

## பன்றிமடல்.

1 K. தங்கம்மாள் II
2 K. அற்புதம் ,,
3 S. சுந்தரம் ,,
4 V. ஞானக்கண் III

## குருகாட்டூர்.

1 S. சீனி III

## Greater Catechism, Nazareth.

1 J. மனாசே ... I
2 A. சாமுவேல் ... ,,
3 ஜாண் தேவசகாயம் ... ,,
4 P. காபிரியேல் ... II
5 S. சுவிசேஷமுத்து ... ,,
6 S. தியாகராஜ் ... ,,
7 M. மெல்கிசேதேக் ... ,,
8 K. மோசே ... III
9 D. தேவபாதம் ... ,,
10 D. ஞானாயுதம் ... ,,
11 D. பெஞ்யமீன் ... ,,
12 M. J. செல்லையா ... ,,
13 A. E. யோசேப்பு ... ,,
14 S. எட்வர்ட் ... ,,
15 S. சவுந்தரபாண்டியன் ... ,,
16 J. பொன்னையா i ... ,,
17 V. தங்கசாமி ... ,,

| | | | |
|---|---|---|---|
| 3 | J. ஏசுவடியான் | T. S. | II |
| 4 | P. அதிசயமணி | G. H. S. | ,, |
| 5 | J. தேவநேசி | ,, | ,, |
| 6 | L. ராஜம்மாள் | ,, | ,, |
| 7 | W. மேரிசுந்தரம் | A.I.G.S | Special |

Little Catechism, Nazareth.

| | | | |
|---|---|---|---|
| 1 | சாமுவேல் தியாகராஜ் | B. S. S. | III |
| 2 | A. I. தேவசகாயம் | ,, | ,, |
| 3 | S. தேவரம் | ,, | ,, |
| 4 | D. M. துரைராஜ் | ,, | ,, |
| 5 | A. மெல்கிசேதேக் | ,, | ,, |
| 6 | V. தங்கசாமி | ,, | ,, |
| 7 | Y. ஆசிர்வாதம் | A. I. B. S. | ,, |
| 8 | A. கிறிஸ்தியான் | ,, | ,, |
| 9 | D. தேவ இரக்கம் | A. I. B. S. | III |
| 10 | V. செல்லையா | ,, | ,, |
| 11 | S. சாலோமோன் | ,, | ,, |
| 12 | P. பாலய்யா | ,, | ,, |
| 13 | S. ஏசுதாசன் | ,, | ,, |
| 14 | A. செல்லையா | B. M. S. | ,, |
| 15 | V. சாமுவேல் | ,, | ,, |
| 16 | S. நிக்கலஸ் | ,, | ,, |
| 17 | K. S. ரத்தினராஜ் | ,, | ,, |
| 18 | R. மார்ட்டின் | ,, | ,, |
| 19 | A. செல்லையா i | ,, | ,, |
| 20 | Y. பொன்னையா | ,, | ,, |
| 21 | A. ஜான் | ,, | ,, |
| 22 | A. தேவதாசன் | ,, | ,, |
| 23 | S. K. ராஜம்மாள் | G. H. S. | ,, |
| 24 | D. ராஜம்மாள் | ,, | ,, |
| 25 | K. நகோமி | ,, | ,, |
| 26 | J. ராகேல் | G. M. S. | ,, |
| 27 | A. சிரோமணி | ,, | ,, |
| 28 | K. ஞானபூரணம் | ,, | ,, |
| 29 | A. புஷ்பம் | ,, | ,, |
| 30 | K. பாக்கியம் | ,, | ,, |
| 31 | K. செல்லத்தாய் | ,, | ,, |
| 32 | A. மனோமணி | ,, | ,, |
| 33 | Y. அன்னத்தாய் | ,, | ,, |
| 34 | M. J. அருள்மணி | ,, | ,, |
| 35 | J. மெர்சி | ,, | ,, |
| 36 | A. பாலம்மாள் | ,, | ,, |
| 37 | P. ஜீவரேசம் | ,, | ,, |
| 38 | S. ஜெயசேகர ரத்னம் | ,, | ,, |
| 39 | M. ரத்தினம் | G. M. S. | ,, |
| 40 | D. லிலி எஸ்தர் | ,, | III |
| 41 | M. மேரி | ,, | ,, |
| 42 | P. தங்கரத்தினம் | ,, | ,, |
| 43 | Y. அன்னாள் | ,, | ,, |

மூக்குப்பேரி. Catechism

| | | |
|---|---|---|
| 1 | D. S. செல்வம் | III |
| 2 | A. பூமணி | ,, |
| 3 | Y. பாக்கியம் | ,, |
| 4 | P. நல்லமுத்து | ,, |
| 5 | N. சாராள் | ,, |
| 6 | A. பரமாயி | ,, |
| 7 | Y. பொன்னம்மாள் | ,, |
| 8 | Y. ராஜம்மாள் | ,, |
| 9 | S. பொன்னம்மாள் | ,, |
| 10 | K. அன்னாள் | ,, |
| 11 | Y. பொன்னையா | ,, |
| 12 | M. தேவ இரக்கம் | ,, |
| 13 | K. கிறிஸ்தியான், | ,, |
| 14. | A. துரைசாமி | ,, |
| 15. | N. பாலையா | ,, |

Infant Catechism, Nazareth.

| | | |
|---|---|---|
| 1 | J. D. ஞானதுரை | B. M. S. |
| 2 | J. நவமணி | ,, |
| 3 | S. சாமுவேல் | ,, |
| 4 | H. உல்லியம் | ,, |
| 5 | P. தேவதாசன் | ,, |
| 6 | J. மார்ட்டின் | ,, |
| 7 | K. தானியேல் | ,, |
| 8 | J. கோவில்பிள்ளை | ,, |
| 9 | J. ராஜம்மாள் | G. M. S. |
| 10 | K. நக்ஷத்திரம் | ,, |
| 11 | A. ரத்னமணி | ,, |
| 12 | E. மேரி | ,, |
| 13 | M. செல்லம்மாள் | ,, |
| 14 | M. ராஜம்மாள் | ,, |
| 15 | J. தங்கரத்தினம் | ,, |
| 16 | K. P. அன்னா மரியாள் | ,, |
| 17 | N. சுந்தரம் | ,, |
| 18 | K. எஸ்தர் | ,, |
| 19 | M. பாப்பாத்தி | ,, |
| 20 | J. கிரேஸ் | ,, |
| 21 | J. மார்த்தாள் | ,, |
| 22 | S. கிரேஸ் | ,, |
| 23 | மேரி பங்காரி | ,, |

குறிப்பு:-மற்ற சேகரங்களின் பிள்ளைகள் லிஸ்ற் அடுத்த சஞ்சிகையில் பிரசுரமாகும்.

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

14 MAR 191


# The Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XI. பெப்ருவரி, 1916. No. 2.


## கிறிஸ்தவ உடன்படிக்கை.

ஙகவாக்கியம்:—"ஞானஸ்நானமானது...தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சி
டன்படிக்கையாயிருக்கிறது" 1 பேதுரு 3: 21.

பான மாசம் ஞானோபதேச வினாவிடையின் மொத்தப் பொருளைக் ந்தோம். இந்த மாசம் அதின் முதல் பாகமாகிய கிறிஸ்தவ உடன் கையைப்பற்றிக் கவனிப்போம்.

உடன்படிக்கையாவது என்ன? இரண்டு பட்சத்தார் சில நிபந் னின்பேரில் தங்களுக்குள் செய்துகொள்ளும் ஓர் ஏற்பாட்டுக்கு படிக்கை என்று பேர். ஒருவருக்கொருவர் விரோதமுள்ள இரு ரோதம் நீங்கி சமாதானமாகும் சமயத்தில் அவர்களுக்குள் ஓர் படிக்கை செய்துகொள்ளுகிறதுண்டு. அவ்வுடன்படிக்கையின்படி ட்சிக்காரரும் சில நிபந்தனைகளை நிறைவேற்ற ஒப்புக்கொள்ளுவார் மது ஆதிப்பெற்றோர் தேவ கட்டளையை மீறினதுமுதல் தேவனுக் ருஷனுக்கும் உள்ள ஐக்கியம் நீங்கி, அவர்கள் தேவ சமுகத்தைவிட் த்தப்பட்டு, தேவனுக்குச் சத்துருக்களானார்கள். ஆகவே, மறு தேவனோடு ஒப்புரவாக தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையில் ன்படிக்கை ஏற்படவேண்டியதாயிருந்தது.

கிறிஸ்தவ உடன்படிக்கையாவது என்ன? பரிசுத்த ஞானஸ் தில் தேவன் நம்மோடு செய்திருக்கும் உடன்படிக்கை கிறிஸ்தவ

டன்படிக்கையாம். இந்த உடன்படிக்கையில் தேவன் ஒருபட்சத்திலும்; னுஷராகிய நாம் அடுத்தபட்சத்திலும் இருக்கிறோம். பரிசுத்த ஞானஸ் நானம் இந்த உடன்படிக்கையின் முத்திரையாயிருக்கிறது. அப்போது நமக்கு ஒரு கிறிஸ்தவ பேர் கொடுக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கை யினால் தேவன் நமக்கு அருளுகிற நன்மைகள் எவையென்றால்:-1. நம்மை கிறிஸ்துவின் அவயவமாக்குகிறார். 2. தேவனுடைய பிள்ளைகளாக்கு கிறார். 3. பரலோக ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளிகளாக்குகிறார். நாம் நிறைவேற்றவேண்டியவைகள்:—1. பிசாசு, உலகம், மாம்சம் இவைகளை வெறுக்கவேண்டும். 2. கிறிஸ்துமார்க்க சத்தியங்களை விசுவாசிக்கவேண் டும். 3. தேவசித்தத்தையும் கற்பனைகளையும் கைக்கொள்ளவேண்டும்.

iii. மற்ற உடன்படிக்கைகளைவிட கிறிஸ்தவ உடன்படிக்கையில் இருக்கிற விசேஷம் என்ன? உலக உடன்படிக்கைகளில் இருபட்சத்தா ரும் ஏறக்குறைய சமமான நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டியதுவரும். ஆனால் பரிசுத்த ஞானஸ்நான உடன்படிக்கையில் தேவன் நமக்கு அருளும் நன்மைகள் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற அந்த மூன்று நிபந்தனைகளினா லும் நமக்குக் கிடைக்காமல் இலவசமாய் நமக்கு அருளப்படுகிறது. அந்த நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நமது நிபந்தனைகள் தகுதியானவைக ளும் அல்ல. தேவன் நமக்கு அருளுகிற அந்த ஒப்பற்ற நன்மைகள், நாம் செய்யும் எந்த நற்கிரியைகளினாலும் வராமல் கிறிஸ்துவின் புண்ணியங்க ளினால் கிருபையாய், பரிசுத்த ஞானஸ்நானத்தில் நமக்குக் கிடைக்கிறது. ஆகையால் அது கிருபையின் உடன்படிக்கையாயிருக்கிறது.

போதனை. பரிசுத்த ஞானஸ்நானத்தில் தேவன் தமது நன்மைகளை கிருபை யாய் உனக்கு அருளிச்செய்திருக்கிறார். ஆகையால் நீ அதிக நன்றியறிதலோடு, அவருடைய உதவியைத் தேடி, உன் மூன்று கடமைகளையும் நிறைவேற்றிவரப் பிரயாசப்படு.

"நான் அவர்கள் அநியாயங்களை கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும், அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" எபி. 8: 12.

---

## உடன்படிக்கையின் பிள்ளை.

சுமார் மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னே பலஸ்தீன நாட்டில், கர்த்தருக்குப் பயந்து நடந்த ஒரு மனுஷன் இருந்தான். அவன் மனைவி யும் மிகத் தேவபக்தியுள்ளவள். அவளுக்கு அநேக காலமாகப் பிள்ளை இல்லை. அப்படியிருக்க ஒருநாள் அவளுக்குத் தேவதரிசனம் கிடைத் தது. ஒரு ஆண்குழந்தையைக் கொடுப்பதாக தேவன் தயவாய் அவளுக்கு வாக்குப்பண்ணினார். அந்தப் பிள்ளை சில நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிந் நடக்கவேண்டும் என்றும் சொன்னார். அந்த நிபந்தனைகள் என்னவென் றால்: அந்தப் பையன் திராட்சரசம் குடிக்கக்கூடாது. அவன் தலைமயிரை



14 MAR 191[illegible] MADRAS

ஒருநாளும் சவரம் செய்யவுங்கூடாது என்பவைகளே. இந்த நிபந்தனை களை ஏற்றுக்கொண்டு பெற்றோர் தேவனோடு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். சிலகாலத்துக்குள் தேவனுடைய வாக்கின்படி அவர்க ளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர் அப்பிள்ளையை அதிகக் கரிசனையோடு வளர்த்துவந்தார்கள். பிள்ளை வளர்ந்து பெரியவனான போது, பெற்றோர் அவனுக்காக தாங்கள் தேவனோடு செய்திருக்கும் உடன்படிக்கையைப்பற்றிச் சொன்னார்கள். "என்ன புத்தியீனம் செய் தீர்கள்; திராட்சரசம் சாப்பிட்டால்தானே தேக பலமும் அழகும் உண்டா கும், நீங்கள் அதைக் கெடுத்துப்போட்டீர்கள். மேலும் என் தலைமயிர் எல்லாம் வளர்ந்து, சடை விழுந்து, பண்டாரம்போல் அவலட்சணமாயிருக் கிறது; என் சம்மதியில்லாமல் நீங்கள் ஏன் அந்த உடன்படிக்கைக்கு ஒப்புக் கொண்டீர்கள்!" என்று அவன் சொல்லாமல் அந்த உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தான். இவன் யார்? இவன்தான் மகா பலசாலி யான சிம்சோன்.

பிள்ளைகளே! நீங்கள் சிசுக்களாயிருந்தபோது உங்கள் ஞானப் பெற்றோர் உங்களுக்காக தேவனோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். அந்த உடன்படிக்கையில் நீங்கள் நிறைவேற்றவேண்டிய மூன்று காரி யங்களையும் உங்கள் ஜீவகாலமெல்லாம் கைக்கொண்டுவரவேண்டியது உங்கள் கடமை. சிம்சோன் தன் உடன்படிக்கையின்படி நடந்துவந்த காலமெல்லாம் உலகத்தில் பலசாலியாயிருந்தான். தேவ ஆவியானவர் அவனோடிருந்தார். அவன் அதை மீறினபோது தேவன் அவனை விட்டு விலகினார். அவன் பெலன் குறைந்துவிட்டது. சிறுமையடைந்தான். என் அருமையான பிள்ளைகளே, உங்கள் உடன்படிக்கையின் நிபந்தனை களை ஒருபோதும் அலக்ஷியம் செய்யாதிருங்கள்.

---

## 1915-ம் வருஷத்தில் பரிசு பெற்றவர்கள் ஜாபிதா.

(தொடர்ச்சி.)

| நம்பர். | பேர். | மார்க்கு. | நம்பர். | பேர். | மார்க்கு. |
|---|---|---|---|---|---|
| | முதலூர் சேகரம் கன்யா. | | 9 | D. கடைத்திரம் | 72 |
| 1 | J. தேவகிருபை | 91 | 10 | I. அன்னாள் பாக்கியம் | 71 |
| 2 | J. குணாயி | 89 | 11 | J. முத்தாபரணம் | 70 |
| 3 | Y. கோவில்பிள்ளை | 80 | 12 | G. நல்லாயி | 66 |
| 4 | J. செல்வம் | 78 | 13 | L. பரிபூரணம் | 64 |
| 5 | K. பொன்னம்மாள் | 75 | 14 | S. நேசமணி | 60 |
| 6 | D. அன்னம்மை | 75 | | முதலூர், ஆண் பாடசாலை. | |
| 7 | M. வசுவடியாள் | 74 | 1 | D. தங்கப்பாண்டியன் | 97 |
| 8 | N. தேவ இரக்கம் | 73 | 2 | S. தங்கப்பழம் | 90 |
| | | | 3 | G. ஷார்ல்ஸ் செல்லையா | 87 |

| | | |
|---|---|---|
| 4 | J. லாசரு | 82 |
| 5 | D. நவமணி | 82 |
| 6 | P. ஞானமணி | 81 |
| 7 | S. சாலோமோன் | 73 |
| 8 | S. தேவதாசன் | 73 |
| 9 | S. தோமாஸ் | 67 |
| 10 | D. தோமாஸ் | 65 |
| 11 | K. பிச்சைமுத்து | 63 |
| 12 | J. யோசேப்பு | 61 |
| 13 | S. யாக்கோபு | 60 |
| 14 | M. ஞானசிகாமணி | 60 |
| 15 | K. ஏசுவடியான் | 60 |
| 16 | K யோவான் | 60 |

## முதலூர் பெண் பாடசாலை.

| | | |
|---|---|---|
| 1 | D. சாலோமை | 98 |
| 2 | A. நல்லம்மாள் | 94 |
| 3 | D. ஞானதீபம் | 92 |
| 4 | G. எமிலி ரத்னபாய் | 87 |
| 5 | D. மேரி | 86 |
| 6 | D. நல்லம்மாள் | 84 |
| 7 | S. ஞானதீபம் | 75 |
| 8 | K. செல்வம் | 75 |
| 9 | J. கனகமணி | 72 |
| 10 | M. தவமணி | 67 |
| 11 | J. ரஞ்சிதம் | 61 |
| 12 | Y. தேவ இரக்கம் | 60 |
| 13 | J. செல்வம் | 60 |

## அடையல்.

| | | |
|---|---|---|
| 1 | D. சுவாமியடியாள் | 71 |
| 2 | G. சுவாமிக்கண் | 66 |

## புதூர்.

| | | |
|---|---|---|
| 1 | K. தங்கரத்தினம் | 79 |
| 2 | J. ஞானசிகாமணி | 78 |
| 3 | K. சமாதானம் | 72 |
| 4 | S. செல்வம் | 70 |
| 5 | P. தங்கரத்தினம் | 63 |
| 6 | A. சொர்ணம் | 63 |
| 7 | P. மரியம்மாள் | 61 |
| 8 | A. பாக்கியம் | 61 |
| 9 | V. யோவன்னாள் | 60 |

## போத்தக்காலன் விளை.

| | | |
|---|---|---|
| 1 | S. ஆபிரகாம் | 70 |

## கண்காணியார்புரம்.

| | | |
|---|---|---|
| 1 | D. ஏசுதாசன் | 82 |
| 2 | V. துரைசாமி | 60 |

## டக்கர்புரம்.

| | | |
|---|---|---|
| 1 | P. ஞானதீபம் | 7[illegible] |
| 2 | K. பரஞ்சோதி | 7[illegible] |
| 3 | P. ஜோதி | 6[illegible] |
| 4 | P. தங்கப்பழம் | 6[illegible] |

## காலன்குடி.

| | | |
|---|---|---|
| 1 | G. கோவில்பிள்ளை | 7[illegible] |
| 2 | Y. பொன்னம்மாள் | 6[illegible] |
| 3 | Y. பாலம்மாள் | 6[illegible] |

## கிறிஸ்தியாநகரம் சேகரம்

## கஸ்பா பள்ளிக்கூடம்.

| | | |
|---|---|---|
| 1 | G. ஞானய்யா | 61 |

## கஸ்பா பெண்கள்.

| | | |
|---|---|---|
| 1 | V. செல்லம்மாள் | 84 |
| 2 | P. செல்வம் | 7[illegible] |
| 3 | S. சர்பூரணம் | 7[illegible] |
| 4 | Y. பொன்னம்மாள் | 6[illegible] |
| 5 | V. பரமாயி | 60 |

## சந்தையடியூர்.

| | | |
|---|---|---|
| 1 | K. ஞானப்பிரகாசி | 6[illegible] |
| 2 | S. சொர்ணம் | 6[illegible] |

## பண்டாரஞ்செட்டி விளை.

| | | |
|---|---|---|
| 1 | G. சந்தோஷம் | 60 |

## வேதக்கோட்டை விளை.

| | | |
|---|---|---|
| 1 | Y. ஆபிரகாம் | 63 |
| 2 | V. ஞானமணி | 60 |

## வடக்கூர்.

| | | |
|---|---|---|
| 1 | S. கோவில்பிள்ளை | 6[illegible] |
| 2 | S. ஞானக்கண் | 6[illegible] |
| 3 | P. சகேயு | 6[illegible] |

## இடையன்குடி சேகரம்.

## கஸ்பா ஆண் பாடசாலை.

| | | |
|---|---|---|
| 1 | D. ஏசுதாசன் | 7[illegible] |
| 2 | K. ஏசுவடியான் | 7[illegible] |
| 3 | P. S. பவுல் | 7[illegible] |
| 4 | M. P. ராஜமணி | 74 |
| 5 | S. சந்தோஷம் | 73 |
| 6 | K. ஜாண் பொன்னையா | 73 |
| 7 | A. லாசரு | 71 |
| 8 | D. சாமுவேல். | 68 |
| 9 | P. தாவீது | 67 |
| 10 | D. H. முதற்பலன் | 66 |



| | | |
|---|---|---|
| 11 | G. ஈசாக்கு அப்பாவு | 63 |
| 12 | S. G. R. கோவில்பிள்ளை | 63 |
| 13 | D. கோவில்பிள்ளை | 62 |
| 14 | M. சுவாமிநாதன் | 60 |

## கஸ்பா பெண் பாடசாலை.

| | | |
|---|---|---|
| 1 | G. சுகிர்தம் | 86 |
| 2 | G. அன்னமணி | 85 |
| 3 | V. மேரி | 83 |
| 4 | R. அன்னத்தாய் | 83 |
| 5 | V. கிரேஸ் | 82 |
| 6 | J. தங்கமணி | 81 |
| 7 | V. E. எபெனேசர் | 80 |
| 8 | S. A. பூரணமணி | 78 |
| 9 | M. தங்கம்மாள் | 78 |
| 10 | S. பாலம்மாள் | 75 |
| 11 | D. S. மாணிக்கமுத்து | 72 |
| 12 | R. செல்லம்மாள் | 71 |
| 13 | Y. எமிமாள் | 71 |
| 14 | S. ஜோதிமணி | 65 |
| 15 | S. ஜெபமணி | 65 |
| 16 | S. ஏசுவடிவு | 65 |
| 17 | T. V. தாய் இரத்தினம் | 64 |
| 18 | D. தங்கம்மாள் | 64 |
| 19 | S. நக்ஷத்திரம் | 64 |
| 20 | G. தேவ பாக்கியம் | 63 |
| 21 | S. ஞானம்மாள் | 63 |
| 22 | A. அருமையம்மாள் | 62 |
| 23 | S. தேவகிருபை | 61 |
| 24 | V. ரோஸ் | 60 |
| 25 | P. தாயம்மாள் | 60 |

## லேஸ் ஸ்கூல்.

| | | |
|---|---|---|
| 1 | A. நேசம் | 65 |
| 2 | J. நல்லாயி | 63 |
| 3 | J. ரூத் | 61 |
| 4 | P. அன்னவடிவு | 60 |

## ஆனைகுடி.

| | | |
|---|---|---|
| 1 | D. யோசேப்பு | 77 |
| 2 | A. செல்லம்மாள் | 61 |
| 3 | S. தேவ[illegible]சன் | 60 |
| 4 | S. இச[illegible]ா | 60 |
| 5 | S. செல்லையா | 60 |

## புதூர்

| | | |
|---|---|---|
| 1 | A. எலிசபெத் | 87 |
| 2 | G. சுவாமிதாசன் | 78 |
| 3 | I. ஷண்முகம் | 74 |
| 4 | A. முத்துப்பாண்டியன் | 61 |
| 5 | S. அற்புதம் | 60 |

## தூண்டல்.

| | | |
|---|---|---|
| 1 | A. தங்கையா | 60 |

## கோடாவிளை.

| | | |
|---|---|---|
| 1 | G. துரைசாமி | 70 |
| 2 | S. துரைசாமி | 63 |

## Greater Catechism.

| | | | |
|---|---|---|---|
| 1 | S. தேவதாசன் | Boys. | I |
| 2 | J. ஏசுதாசன் | ,, | ,, |
| 3 | P. தானியேல் | ,, | II |
| 4 | S. தானியேல் | ,, | ,, |
| 5 | G. அப்பாவு | ,, | III |
| 6 | A. சுவாமிநாதன் | ,, | ,, |
| 7 | P. தாவீது | ,, | ,, |
| 8 | D. சுவாமிக்கண் | ,, | ,, |
| 9 | M. சுவிசேஷமுத்து | ,, | ,, |
| 10 | S. சந்தோஷம் | ,, | ,, |
| 11 | D. S. மாணிக்கமுத்து | Girls | I |
| 12 | D. சுகிர்தம் | ,, | II |
| 13 | R. செல்லம்மாள் | ,, | ,, |
| 14 | G. அன்னமணி | ,, | III |
| 15 | S. பூரணமணி | ,, | ,, |
| 16 | T. ரத்தினம் | ,, | ,, |
| 17 | V. எபெனேசர் | ,, | ,, |

## Little Catechism.

| | | | |
|---|---|---|---|
| 1 | D. ராபர்ட் | | I |
| 2 | V. யோசேப்பு | | II |
| 3 | M. சிரோமணி | | ,, |
| 4 | M. திரவியம் | | ,, |
| 5 | R. S. தேவதாசன் | | ,, |
| 6 | Y. அப்பாத்துரை | | ,, |
| 7 | G. P. சாலோமோன் | | ,, |
| 8 | T. ஞானப்பிரகாசம் | | ,, |
| 9 | G. J. தேவதாசன் | | III |
| 10 | S. மதுரம் | | ,, |
| 11 | P. தங்கையா | | ,, |
| 12 | J. அதனுஷியஸ் | | ,, |
| 13 | J. தங்கையா | | ,, |
| 14 | D. தங்கையா | | ,, |
| 15 | J. தானியேல் | | ,, |
| 16 | S. பால்துரை | | ,, |
| 17 | D. தேவாசீர்வாதம் | | ,, |
| 18 | S. நேசமணி | Girls | I |
| 19 | S. ஜெபமணி | ,, | II |
| 20 | V. நேசமணி | ,, | ,, |
| 21 | A. நக்ஷத்திரம் | ,, | ,, |
| 22 | S. பாலம்மாள் | ,, | ,, |
| 23 | Y. எமிமாள் | ,, | III |

**கூடன்குளம் சேகரம்**

**கஸ்பா லேஸ் ஸ்கூல்.**

1 S. தெய்வப்பழம் 90
2 A. அன்னப்பழம் 76
3 N. மேரி 75
4 V. சொர்ணம் 74
5 P. அன்னாள் பாக்கியம் 69
6 A. தெய்வப்பழம் 69
7 A பாக்கியம் 66
8 Y. பொன்னம்மாள் 64
9 G. அழகம்மாள் 61
10 S. தங்கம் 60
11 S. அற்புதம் 60

**கஸ்பா ஆண்பாடசாலை.**

1 S. ஞானய்யா 60

**யாக்கோபுபுரம்**

1 J. ஞானய்யா 76
2 D. அருளய்யா 67

**பண்ணை**

1 S. பேதுரு 73
2 P. ஞானமுத்து 60
3 G. பொன்னையா 60

**ஆவரைகுளம்.**

1 S. பரிபூரணம் 65

**சாயர்புரம் சேகரம்**

**சாயர்புரம்**

1 G. சமாதானம் 84
2 P. ஜேம்ஸ் 78
3 Y. மகராஜ் 77
4 J. காந்தி 77
5 J. ஆக்னஸ் 75
6 I. எட்வர்ட் ஞானம் 75
7 E. ஜான் பொன்னையா 74
8 G. செல்லையா 74
9 M. F. பக்கின் 73
10 P. E. கனகமணி 72
11 D. S. ராஜமணி 72
12 Y. பூபால் ராஜ் 68
13 V. அப்பாத்துரை 68
14 J. ஞானசிகாமணி 67
15 Y. சற்குணம் 66
16 P. லிங்கராஜ் 66
17 Y. எட்வர்ட் 65
18 P. G. அமிர்தமணி 65
19 P. S. ஞானய்யா 64
20 P. A. தாமஸ் 64
21 G. விக்டர் 64
22 D. ஞானம் 64
23 S. D. பால் 63
24 I. R. தோமாஸ் 62
25 B. அனி 61
26 V. சந்தோஷம் 61
27 I. ஞானசெல்வம் 60
28 P. தர்மராஜ் 60
29 V. அன்னாள் 60

**S. Mary's School.**

1 M. A. ஜேன் 87
2 S. செல்வம் 80
3 V. கிரேஸ் 79
4 J. நல்லம்மாள் 76
5 G. கிரேஸ் 72
6 G. பூமணி 71
7 M. பொன்னம்மாள் 70
8 A. பூமணி 68
9 M. மணியம்மாள் 68
10 M. சுந்தரி 67
11 V. அன்னக்கனி 67
12 M. பொன்னம்மாள் 65
13 P. தாயம்மாள் 65
14 A. தேவகிருபை 64
15 S. முத்தம்மாள் 63
16 S. A. டார்லிங் 62
17 G. விக்டோரியா 61
18 D. தாயம்மாள் 61
19 R. ருக்மணி 61
20 C. செல்லம்மாள் 60
21 D. செல்லம்மாள் 60
22 M. புஷ்பம் 60

**சுப்பிரமணியபுரம்**

1 M. நவமணி 88
2 A. தங்கையா 8
3 I. பாலாஜி 84
4 G. அருமைநாயகம் 8
5 G. தங்கரத்தினம் 7
6 G. தவமணி 7
7 Y. பொன்னுத்தாய் 6
8 V. ஞானஜெபசுந்தரவடிவு 6
9 M. தவமணி 6
10 D. அன்னமரியாள் 6
11 D. கோவில்பிள்ளை 6
12 S. அன்னக்கனி 6



V. செல்லக்கனி 64
Y. மேரி 62
S. வேதமாணிக்கம் 62
S. ரத்தினமணி 61
D. M. ராஜய்யா 60
A. பாக்கியம் 60

**முள்ளன்விளை**

Y. சாமுவேல் 81
G. முத்தம்மாள் 71
Y. வேதமாணிக்கம் 61

**குமாரபுரம்**

K. S. அன்னத்தாய் 85
K. S. பொன்னம்மாள் 78
C. அன்னாள் 76
K. Y. அன்னமுத்து 74

**கட்டாலன்குளம்**

S. பொன்னையா 85

**சேத்தியம்பலம்**

1 J யோவான் 72
2 J. பொன்னையா 67
3 M. யோவான் 64

**நடுவக்குறிச்சி**

1 G. ஞானசுந்தரம் 85
2 P. புஷ்பமணி 85
3 B. ஞானம்மாள் 73
4 A. வேதக்கண் 68
5 S. ரஞ்சிதம் 65
6 Y. ராஜம்மாள் 63
7 D. G. ராஜமணி 60

**புளியநகர்**

1 S. பால் 83
2 D. S. ரத்தினமணி 76
3 V. சந்தோஷராஜ் 72
4 S. பாலசுந்தரம் 66

**செபத்தியாபுரம்**

1 I. ஞானதீபம் 73
2 M. ராஜய்யா 67
3 I. ஏசுதாசன் 66
4 M. P. ரத்னசிரோமணி 61
5 M. ஆரோன் தாவீது 60

**இடையர்காடு**

1 A. ஞானமாணிக்கம் 77
2 M. தங்கையா 71
3 M. செல்லம்மாள் 66
4 V. தேவ இரக்கம் 61
5 P. துரைராஜ் 60

**காவல்காடு**

1 Y. மேரி தங்கப்பூ 93
2 S. ரஞ்சிதம் 80
3 G. சொர்ணம் 79
4 G. பரமாயி 67
5 Y. செல்லக்கனி 64
6 Y. ராஜமணி 62

**அகரம்**

1 V. ராஜபாண்டியன் 75

**புதுக்கோட்டை சேகரம்**

**புதுக்கோட்டை பெண்பாடசாலை.**

1 D. ரோஸ் ஜெமிமாள் 95
2 A. பாக்கியம் 93
3 S. அன்னம்மாள் 80
4 A. தங்கம்மாள் 77
5 T. கண்ணம்மாள் 71
6 S. தேவகிருபை 67
7 S. அலிஸ் 67
8 R. புஷ்பம் 66

**புதுக்கோட்டை ஆண்பாடசாலை**

1 A. ராமகிருஷ்ணன் 80
2 J. சுருத்தையா 70
3 A. கிருஷ்ணன் 70
4 K. வீரியப்பெருமாள் 69
5 J. P. உல்லியம் 64
6 S. சுந்தரம் 60
7 A. எபெனேசர் 60
8 V. செல்லையா 60
9 S. குசை 60

**நாட்சியாபுரம்**

1 M. யோவான் 89
2 A. P. அரசம்மாள் 88
3 A. பாலம்மாள் 86
4 D. தேனம்மாள் 86
5 T. ராஜதங்கம் 82
6 T. முத்தம்மாள் 82
7 V. அன்னபாக்கியம் 74
8 P. ஞானமுத்து 71
9 V. செல்வமணி 68

**மறவன்மடம்.**

1 P. பெரியசாமி 77
2 Y. தேவ இரக்கம் 72
3 M திரவியம் 66

**கோரம்பள்ளம்.**

2 G. துரை ஆபிரகாம் 79
2 G. அன்னபூரணம் 63

### ராமசாமிபுரம்

| | | |
|---|---|---|
| 1 | V. யாக்கோபு | 90 |
| 2 | N. செல்லையா | 77 |
| 3 | G. சுப்பையா | 73 |
| 4 | G. முத்தையா | 68 |
| 5 | T. தங்கவேல் | 65 |
| 6 | D. செல்லையா | 65 |
| 7 | A. சுப்பையா | 64 |
| 8 | S. சுப்பையா | 64 |
| 9 | A. தாவீது | 60 |
| 10 | S. ஆள்வார் | 60 |

### தலையன்கரிசல்.

| | | |
|---|---|---|
| 1 | P. மாசனமுத்து | 88 |
| 2 | P. சாமுவேல் | 84 |
| 3 | S. N. ரஞ்சிதம் | 80 |
| 4 | G. நல்லம்மாள் | 80 |
| 5 | P. தங்கமணி | 77 |
| 6 | T. காசி | 74 |
| 7 | I. முத்து | 72 |
| 8 | A. மாடசாமி | 71 |
| 9 | S. செல்லசாமி | 65 |
| 10 | M. பாலசுந்தரம் | 64 |

### சேர்வைகாரன்மடம்.

| | | |
|---|---|---|
| 1 | M. ஜிம்மியம்மாள் | 86 |
| 2 | S. அண்ணாமலை | 84 |
| 3 | M. சுந்தரபாண்டியன் | 78 |
| 4 | M. சிந்தாமணி | 76 |
| 5 | A. G. பென்யமீன் | 75 |
| 6 | P. துரைசாமி | 73 |
| 7 | P. டேய்ஸி | 70 |
| 8 | D. தேவநேசம் | 69 |
| 9 | K. பவுல் | 64 |
| 10 | G. எட்வின் | 62 |
| 11 | A. ஜெபராஜ் | 60 |
| 12 | G. T. காட்வின் | 60 |

### தங்கம்மாள்புரம்.

| | | |
|---|---|---|
| 1 | S. தங்கையா | 87 |
| 3 | V. ஜெபமணி | 66 |
| 3 | R. அந்தோணிமுத்து | 65 |
| 4 | J. ஞானமணி | 60 |
| 5 | S. பெரியநாயகம் | 60 |

### ஜெபஞானபுரம்.

| | | |
|---|---|---|
| 1 | J. ஜெபஸ்தியான் | 71 |
| 2 | S. பாதாளமுத்து | 66 |
| 3 | T. கோவில்பிள்ளை | 64 |
| 4 | A. சுப்பையா | 62 |

### புதியப்புத்தூர் சேகரம்.
### கஸ்பா போர்டிங் ஸ்கூல்

| | | |
|---|---|---|
| 1 | T. தாயம்மாள் | 90 |
| 2 | T. நாகூரியார் | 88 |
| 3 | M. செல்லையா | 79 |
| 4 | S. தானியேல் | 79 |
| 5 | A. மதுரம் | 77 |
| 6 | D. எட்வர்ட் | 76 |
| 7 | A. ஆபிரகாம் | 76 |
| 8 | M. ஆபிரகாம் | 73 |
| 9 | D. சொர்ணம் | 73 |
| 10 | S. A. பாலய்யா | 69 |
| 11 | A. தவமணி | 68 |
| 12 | S. ஆக்னஸ் | 67 |
| 13 | G. செல்வபாக்கியம் | 64 |
| 14 | D. சாமுவேல் | 63 |
| 15 | S. A. சாலொமோன் | 62 |

### Day School

| | | |
|---|---|---|
| 1 | S ரத்தினம் | 82 |
| 2 | A. உலகநாதன் | 72 |
| 3 | S. ராமசாமி | 65 |
| 4 | R. அழகிரி | 61 |

### தட்டப்பாறை.

| | | |
|---|---|---|
| 1 | J. அலெக்சாந்திரா | 70 |

### குளத்தூர் சேகரம்.
### குளத்தூர்

| | | |
|---|---|---|
| 1 | S. D. பாணிபெஸ் | |
| 2 | P. யோசேப்பு | |

### வேப்பலோடை.

| | | |
|---|---|---|
| 1 | A. தேவப்பிரியம் | |
| 2 | S. தாவீது | |
| 3 | A. சுவாமிதாசன் | |
| 4 | S. எபெனேசர் | |

### சக்கம்மாள்புரம்.

| | | |
|---|---|---|
| 1 | K. தவமணி | |
| 2 | P. முத்துநாயகம் | |
| 3 | S. தாவீது | |
| 4 | R. சாலொமோன் | |

### மாத்தாண்டன்பட்டி.

| | | |
|---|---|---|
| 1 | G. நேசமணி | |
| 2 | D. ஆர்தர் | |

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

# The Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

THE REGISTRAR OF ... JUL 1916 MADRAS

Vol. XI. மார்ச்சு, ஏப்ரல் 1916. Nos. 3, 4

## கிறிஸ்தவப்பேர்

**தங்கவாக்கியம்:**—*'பரலோகத்திலே பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கு......வந்து சேர்ந்தீர்கள்'* எபி. 12: 23, 24.

பரிசுத்த ஞானஸ்நானத்தில், தேவன் நமக்கு அருளிச்செய்திருக்கும் நன்மைகளும், நாம் தேவனுக்குச் செய்திருக்கும் பிரதிக்கினைகளும் இன்னதென்று நமக்குத்தெரியும். அவைகளை நாம் ஒவ்வொன்றாய் சிந்திக்குமுன்னே, ஞானஸ்நானத்தில் நாம் தரித்துக்கொண்ட நாமத்தைப் பற்றி சற்று கவனிப்போம்.

1. உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனுஷருக்கும் பேர் உண்டு. ஆதியில் பேர்கள் அர்த்தமுள்ளவைகளாகக் கொடுக்கப்பட்டு வந்தன. சில சமயங்களில் தேவனே மனுஷருக்குப் பேர் கொடுத்தார்: தமது அருமைக்குமாரன் பூலோகத்தில் மனுஷனாக அவதரிக்க வந்தபோது அவருக்கு இயேசு என்றும், அவருடைய முன் தூதனுக்கு யோவான் என்றும் பேரிடச்சொன்னார். ஆபிராமுக்கு ஆபிரகாம் என்றும் யாக்கோபுக்கு இஸ்ரவேல் என்றும் பேர், மாற்றிக்கொடுத்தார். இஸ்மவேல், ஈசாக்கு, சாலொமோன், யோசியா, கோரேஸ் முதலிய நாமங்கள் அவர்கள் பிறப்பதற்குமுன்னமே தேவனால் கொடுக்கப்பட்டன. ஆகவே பேரிடுதல் எண்ணமற்ற சிந்தையோடு செய்யப்படுகிறதாயிராமல் பயபக்தியோடு செய்யப்படும் ஒரு விஷயமாயிருக்கிறது.

2. ஞானோபதேச வினா விடை 'உன் பேர் என்ன?' என்ற கேள்வியைக்கொண்டு ஆரம்பிக்கிறது. ஏனென்றால்: 1. பரிசுத்த ஞானஸ்நா

8-2-16

ணத்தில் நீ தேவனோடு உடன்படிக்கை செய்து, கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்பட்டபோது உன் ஞானத்தாய் தகப்பன்மார் இந்தப்பேரை உனக்கு இட்டார்கள். 2. அப்பொழுது உன்பேராலே சில வாக்குகளும் பிரதிக்கினைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. 3. குருவானவர் உன்னைத் தமதுகைகளில் ஏந்தி 'பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தினாலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்' என்று சொன்னபோது இந்தப் பேராலேயே உன்னை அழைத்தார். ஆகவே இந்தப் பேர், நீ கிறிஸ்துவின் அவயவமும், தேவனுடைய பிள்ளையும், பரலோக ராஜ்யத்துக்கு சுதந்தரவாளியுமாயிருக்கிறாய் என்று உனக்கு ஞாபகப்படுத்துகிறது. மேலும் நீ பிசாசையும் அதின் கிரியைகளையும் வெறுத்துவிடவும், கிறிஸ்து மார்க்க சத்தியங்களையெல்லாம் விசுவாசிக்கவும், தேவனுடைய சித்தத்தின்படியே நடக்கவும் கடமைப்பட்டிருக்கிறாய் என்று உனக்கு நினைப்பூட்டுகிறது. சுருக்கிச்சொன்னால் ஞானஸ்நானத்தில் உனக்குக் கிடைத்திருக்கும் சலாக்கியங்களையும், உன் கடமைகளையும் உனக்கு நினைப்பூட்டுவதற்கே 'உன் பேர் என்ன' என்ற கேள்வி முதலாவது கேட்கப்படுகிறது.

3. நீ ஞானஸ்நானத்தில் பெற்ற அந்தப்பேர் மேன்மையும் மகிமையுமானது. ஏனென்றால் உன் பேர் பரலோகத்தில் தேவனுடைய ஜீவ புஸ்தகத்தில் முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையின் பேரோடு சேர்த்து எழுதப்பட்டிருக்கிறது (பிலி. 4: 3; எபி. 12: 23). அருமை இரட்சகரும் உன்னைப் பேர் சொல்லியே அழைக்கிறார், அவர் நல்ல மேய்ப்பன். நீ அவருடைய ஆட்டுக்குட்டி, நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளைப் பேர்சொல்லி அழைக்கிறான் (பரி. யோவா. 10: 3) ஆகவே உன் பேர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதினாலும், இயேசு சுவாமி உன்னைப் பேர் சொல்லி அழைக்கிறதினாலும் நீ பெற்றிருக்கும் நாமம் மகிமையானது என்பதை மறந்துபோகாதே.

**போதனை.** ஜீவபுஸ்தகத்திலிருந்து உன் பேர் கிறுக்கப்பட்டுப்போகாதபடிக்கு, நீ அழைக்கப்பட்டிருக்கிற அழைப்புக்குப் பாத்திரமாய், ஞானஸ்நானத்தில் நீ ஏற்றுக்கொண்டிருக்கிற கடமைகளைக் கைக்கொண்டு நடந்துவரவேண்டும்.

'ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ, அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும், ஜீவபுஸ்தகத்திலிருந்து அவன் நாமத்தை நான் கிறுக்கிப் போடமாட்டேன்' வெளி. 3: 15.

---

## என்பேருக்கு அவகீர்த்தி உண்டாக்காதே

ஜேம்ஸ் என்னும் கீர்த்திபெற்ற வியாபாரி யொருவர் இருந்தார். அவர் ஒருநாள் கடைவீதி வழியே போகும்போது, துக்கமுகத்தோடு நிற்கிற ஒரு மனிதனைக் கண்டார். 'சிநேகிதனே, நீ ஏதோ சங்கடத்தில்



சப்பட்டிருக்கிறதுபோல் தோன்றுகிறது, நான் உனக்குச் செய்யக்
டிய உதவி ஏதாவது உண்டானால் சொல்' என்று கேட்டார். உடனே
வன் சற்று தைரியமடைந்து 'ஐயா, நான் ஐந்து வருஷங்களுக்குமுன்
ந்தப் பட்டணத்தில் ஒரு வியாபாரியின் கைக்குள் கணக்குவேலை பார்த்
க்கொண்டிருந்தேன். அப்பொழுது என் எஜமானுடைய பணத்தில்
காஞ்சம் திருடிவிட்டேன். அதை அவர் கண்டுபிடித்து, என்னைப்
பாலீஸ் அதிகாரிகளிடம் ஒப்புவித்தார். கடந்த ஐந்து வருஷங்களாய்
ன் சிறைச்சாலையில் இருந்துவிட்டு, இப்பொழுதுதான் வெளியேறி
ருக்கிறேன். இனிமேல் ஏதாவது வேலையில் அமர்ந்து உண்மையாய்
விக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் பல இடங்களிலும் வேலைக்
ரகப் பிரயாசப்பட்டேன். என் பேரைக் கேட்டவுடனே ஒருவரும்
னக்கு வேலை கொடுக்க ஏதுவில்லை' என்றான். இப்படிச்சொல்லி
டிந்ததும் வெட்கம் நிறைந்தவனாய் அவ்விடம் விட்டுப் போகப்புறப்பட்
ான். ஜேம்ஸ் என்ற அந்த நல்ல துரை அவன் கையைப்பிடித்து 'நான்
னக்கு உதவி செய்யக்கூடும் என்று நினைக்கிறேன். நீ இந்தப் பட்
ணத்தில் இருக்கக்கூடாது, உடனே புறப்பட்டு நான் சொல்லுகிற
டத்துக்குப்போ, அந்த இடத்திலுள்ள வியாபாரிகள் எல்லாரும் என்
பரை நன்றாய் அறிவார்கள். இனி உன் பேரை விட்டு என்னுடைய
பரையே உனக்குப் பேராகத் தரித்துக்கொள். இந்தப் பேரைக் கேட்
வுடனே உனக்கு யாதொரு தடையுமின்றி வேலை கிடைக்கும். ஆனால்
ரு காரியத்தைமட்டும் மனதில் வைத்துக்கொள். என்பேருக்கு அவ
ர்த்தி உண்டாக்காதே' என்றார். அந்த வாலிபன் புதுப்பேர் தரித்தவ
ாக அவர் தனக்குச் சொன்ன வியாபாரப்பட்டணம் போய்ச் சேர்ந்தான்
ல்ல வேலையில் அமர்ந்து, உண்மையாய் வேலைசெய்து வந்தான். நல்
றிவும் வேலைத்திறமையும் உள்ளவனாயிருந்ததினாலும் உண்மையாய்
டந்துகொண்டதினாலும் தேவ கிருபையால் வெகு சீக்கிரத்துக்குள்ளா
ர்த்திபெற்ற மனிதனானான்.

சில வருஷங்களுக்குப்பின் அவன்தான் முன்னிருந்த பட்டண
க்கு வந்து, தனக்குப் பேர் தரிப்பித்த துரையைப் பார்க்கப்போனான்
வரிடம் போய் 'ஐயா, நீங்கள் சொன்னபடியே ஜேம்ஸ் என்னும் தங்
ள் பேரைத் தரித்துக்கொண்டு அவ்விடத்திலிருந்தேன். அந்தப்
பருக்கு அவகீர்த்தியுண்டாக்காதபடிக்கு கர்த்தர் எனக்கு உதவி செ
ார்' என்றான். பிள்ளையே! பரிசுத்த ஞானஸ்நானத்தில் நீ பெற்றிரு
ம் கிறிஸ்தவ நாமம், மகிமையான நாமம், நீ பாவஞ்செய்யும்போது அ
னுடைய நாமத்துக்கு அவகீர்த்தி உண்டாகிறது. அந்த மகிமையான
ாமத்துக்கு அவகீர்த்தி உண்டாக்காதே.

---

## பாவஞ்செய்யாதே

அனி, டாரதி என்று இரு சகோதரிகள் இருந்தார்கள். அவர்கள் இருவரும் தங்கள் ஊருக்கு பத்து மைலுக்கு அப்பாலிருந்த ஒரு பட்டணத்துக்கு தினந்தோறும் காலையில் ரெயில் ஏறிப்போய், அங்குள்ள ஒரு பாடசாலையில் படித்துவிட்டு மாலையில் திரும்பி வருவார்கள். ஒருநாள் காலையில் அவர்கள் பாடசாலைக்குப் போகவேண்டிய நேரம் வந்தபோது அவர்கள் இருவருக்கும் போகப்பிரியமில்லை. ஏனென்றால் அன்று அவர்கள் தாயாரின் பிறந்தநாள். அன்று சாயந்தரம் 4 மணிக்கு பல இனத்தாரும், சிநேகிதரும் அவர்கள் வீட்டுக்கு வந்து, சந்தோஷம் கொண்டாடுவார்கள். அந்த நேரத்தில் தாங்களும் கூட இருக்கவேண்டுமென்பது இந்தப் பிள்ளைகளின் ஆசை. ஆனால் அன்று தங்களுக்கு ரஜா வேண்டுமென்று, முந்தினநாளிலேயே உபாத்திச்சியம்மாளிடம் உத்தரவு பெற்றுக்கொள்ளாததால், அன்று கட்டாயமாய்ப் பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டியதாயிருந்தது. அதிக மனவருத்தத்தோடு புறப்பட்டுப்போனார்கள், போனவுடன் தலைமை உபாத்திச்சியம்மாளிடம், அன்று மத்தியானம் தங்களுக்கு ரஜா வேண்டும் என்று கேட்டார்கள். உங்கள் பெற்றோரிடமிருந்து நீங்கள் கடிதம்கொண்டுவராதபடியால் உங்களுக்கு லீவ் கொடுக்கமுடியாதென்று அந்த அம்மாள் சொல்லிவிட்டார்கள். இருவரும் மிக வருத்தத்தோடு வகுப்புகளில் போய் உட்கார்ந்தார்கள். அவர்கள் மனம் பாடத்தில் போகவில்லை. எண்ணமெல்லாம் வீட்டின்மேலேயே இருந்தது. காலை படிப்பு முடிந்து மத்தியான சாப்பாட்டுக்காக வெளியே வந்தார்கள். அனி தன் சகோதரியிடம் 'வீட்டுக்குப்போகிறதற்கு வழி கண்டுபிடித்துவிட்டேன். ஒருவருக்கும் தெரியாமல் ஓடிப்போய்விடலாம் வா' என்றாள். அப்படியே இருவரும் புறப்பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போனார்கள். அந்த நேரத்தில் அவர்கள் ஊர்ப்பக்கம் போகிற ரெயில் புறப்பட்டது. உடனே அதில் ஏறி வீட்டுக்குப் போய் விட்டார்கள். தாயாரும், மற்றவர்களும் இவர்கள் உத்தரவு கேட்டுக் கொண்டுதான் வந்திருப்பார்கள் என்று எண்ணி சந்தோஷப்பட்டார்கள். அன்று விருந்தும் விளையாட்டுமாக எல்லாரும் வெகு சந்தோஷம் கொண்டாடினார்கள். ஆனால் அந்தப் பிள்ளைகளிருவரும் கள்ளத்தனமாய் ஓடிவந்துவிட்டபடியால் அவர்கள் மனம் வாதித்துக்கொண்டே இருந்தது. அவர்கள் மனதில் கொஞ்சமாவது சந்தோஷமே இல்லை. சாயங்காலக்கொண்டாட்டம் எல்லாம் முடிந்து இருட்டாகிவிட்டது. எல்லாரும் படுக்கைக்குப் போகிற நேரம் வந்தது. பிள்ளைகளுக்கு மனதில் ஆறுதலே இல்லை. இருவரும் தங்கள் தாயாரிடம் போய், தாங்கள் செய்த தப்பிதத்தைச் சொல்லி அழுதார்கள். தாய் அவர்கள் கண்ணீரைத் துடைத்து, ஆறுதல் சொல்லிப் படுக்கைக்கு அனுப்பினாள். மறுநாள் உபாத்திச்சியம்மாளுக்கு, இவர்கள் குற்றத்தை மன்னிக்கும்படி



தகப்பனார் ஒரு கடிதம் எழுதிக்கொடுத்து அனுப்பினார். அந்த அம்மாள் இவர்கள் குற்றத்தை மன்னித்துவிட்டபோதிலும், அப்புறம் இவர்கள் வார்த்தையை முன்போல நம்பவில்லை.

பிரியமான பிள்ளைகளே! நாம் செய்யும் பாவங்களை உண்மையாய் அறிக்கையிட்டு, அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டால் தேவன் அவைகளை மன்னிக்கிறார். என்றாலும் பாவஞ்செய்து, அப்புறம் மன்னிப்புக்காகக் கெஞ்சுவதைவிட பாவஞ்செய்யாமலிருக்க தேவ உதவியால் பிரயாசப்படுவதே மேலானது. ஏனென்றால் பாவஞ்செய்து மன்னிப்பைப் பெற்றுக்கொண்டபோதிலும், முந்தின நிலைமை ஞாபகத்துக்கு வரும்போதெல்லாம் நான் இன்னின்ன பாவங்களைச் செய்யாமலிருந்திருப்பேனானால் எவ்வளவு உத்தமமாய் இருந்திருக்கும் என்று ஆயாசப்பட நேரிடும்.

---

## கிறிஸ்துவின் அவயவம்

**தங்கவாக்கியம்.**—'நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும்........ இருக்கிறோம்' எபே. 5: 30.

அவயவம் என்றால் உறுப்பு அல்லது தேகத்தின் ஒருபாகம் என்பது பொருள். கண், காது, வாய், கை, கால், விரல் முதலியன தேகத்தின் அவயவங்களாயிருக்கின்றன. நாம் கிறிஸ்துவின் அவயவம் என்று சொல்லும்போது நாம் அவரோடு ஒன்றாய் ஐக்கியப்பட்டிருக்கிறோம் என்பதே.

1. நாம் எப்போது கிறிஸ்துவின் அவயவமாகிறோம்? பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவின் அவயவமாகிறோம். மனுஷன் பாவஞ்செய்ததுமுதல் அவன் தன் ஆத்தும ஜீவனை இழந்து, தேவனைவிட்டுப் பிரிந்துபோனான். ஏதேனில் மனுஷன் இழந்துபோன ஜீவனை அவனுக்குக் கொடுக்கவும், அந்த ஜீவன் எப்போதும் அவனில் நிலைத்து வளரும்படி அவனைத் தம்மோடு ஐக்கியப்படுத்திக்கொள்ளவும் தேவகுமாரன் பூவுலகத்துக்கு வந்தார். பரிசுத்த ஞானஸ்நானத்தில், கிறிஸ்துவின் பாடுகள் மூலமாய் பரிசுத்த ஆவியினாலே நாம் அந்த ஜீவனைப்பெற்று கிறிஸ்துவோடு ஐக்கியமாகிறோம். திருச்சபையை கிறிஸ்துவின் சரீரத்துக்கு ஒப்பிட்டிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் அந்த சபையாகிய சரீரத்தில் ஒவ்வொரு அவயவங்களாயிருக்கிறோம். கிறிஸ்துவானவர் இந்த சரீரத்தின் தலையாயிருக்கிறார். 'அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்' (கொலோ. 1: 18). நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே அவயவங்களாயும் இருக்கிறீர்கள் (1 கொரி. 12: 27). இந்த சலாக்கியம் பரிசுத்த ஞானஸ்நானத்திலே நமக்கு அருளப்படுகிறது. 'உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே' (கலா. 3: 27).

2. கிறிஸ்துவின் அவயவமாக கிறிஸ்துவுக்கும் நமக்கும் இருக்கும் சம்பந்தம் என்ன? 1-வது சரீரத்துக்கு ஒருவருத்தம் உண்டானால் தலையும் சேர்ந்தே அந்த வருத்தத்தை அனுபவிக்கிறது. அப்படியே நமக்கு துன்பங்கள் உண்டாகிறபோது நமது அருமை இரட்சகர் அவை தமக்கே நேரிடுகிறதாகப் பாவிக்கிறார். சவுல் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினபோது, நமதாண்டவர் அவருக்குத் தரிசனமாகி 'சவுலே, சவுலே, நீ ஏன் என்னைத் துன்பப்படுத்துகிறாய்?' என்று கேட்டார் (அப். 9: 5). 2-வது நமதாண்டவர் அவருக்கும் நமக்கும் இருக்கும் ஐக்கியத்தைப்பற்றி திராட்சச்செடியின் உவமையில் போதித்திருக்கிறார் (பரி. போவா. 15 அதி). அவர் செடி, நாம் கொடிகள், கொடியானது செடியோடு ஒன்றாய் ஐக்கியப்பட்டிருக்கிறதினால்தான் பிழைக்கிறது. அப்படியே நாம் நமதாண்டவரோடு ஐக்கியப்பட்டிருப்பதினால்மாத்திரம் பிழைக்கக்கூடியவர்களாயிருக்கிறோம். ஆகவே தலைக்கும் சரீரத்துக்கும், செடிக்கும் கொடிக்கும் எவ்வளவு சம்பந்தம் உண்டோ அவ்வளவு சம்பந்தம் நமக்கும் நமதாண்டவருக்கும் உண்டு.

3. கிறிஸ்துவின் அவயவமாக நமது கடமை என்ன? 1-வது நமது சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் நம்முடைய சித்தத்துக்கு உடனே கீழ்ப்படிகிறதுபோல, நாம் நமது தலையாகிய கிறிஸ்துநாதரின் சித்தத்துக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். 2 வது, சரீரமானது தலையோடு இசைந்திருக்கும்போதுதான் அதில் உயிர் இருக்கும். அப்படியே நாம் ஆவிக்குரிய ஜீவனுள்ளவர்களாயிருக்கவேண்டுமானால் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். அதாவது, அவரை வணங்கி, அவரை நோக்கி ஜெபம்பண்ணி, அவரை நேசித்து, அவர் வழிகளில் நடக்கவேண்டும். 3-வது சரீரத்தின் அவயவங்கள் ஒன்றோடொன்று சண்டைபோடுகிறதில்லை. ஒன்றுக்கொன்று உதவியே செய்கிறது. அப்படியே கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரோடொருவர் சண்டை போடக்கூடாது ஒருவருக்கொருவர் உதவிசெய்யவேண்டும்.

'உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள் என்று அறியீர்களா! ......கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே! ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்' 1 கொரி. 6: 15, 20.

## கிறிஸ்துவோடு இணைக்கப்படுதல்

சில வருஷங்களுக்குமுன்னே, பாளையங்கோட்டை சி. எம். எஸ். ஆபீசுக்குக் கிழக்காய்க் கவனித்த ஒரு காட்சியைப்பற்றி உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஜூன் மாசத்தில் மழையில்லாமல் கடும் வெயில்



அடித்துக்கொண்டிருந்தது. காங்கையினால் பயிர் பச்சை, புற்பூண்டுகள் இலையற்றுக் கருகிப்போயிருந்தன. பெரிய மரங்களில் மாத்திரம் கொஞ்சம் இலைகள் காணப்பட்டது. ஆனால் சில செடிகள் ஒரு அடி இரண்டு அடி உயரமுள்ளதாயினும் மிகப் பசுமையாய்க் காணப்பட்டன. இது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. என்ன! எல்லாப்பூண்டுகளும் பட்டுப்போயிருக்க, இவைகள் மாத்திரம் பசுமையாய் இருப்பானேன்! இது என்ன செடி என்று பார்க்க விரும்பி கிட்டப்போனேன். அது கார்க்குச் செடி என்று அழைக்கப்படும் பன்னீர்ப்பூமரத்தின் கன்றுகள். பன்னீர்ப்பூமரம் மகா வரண்ட காலத்திலும் செழிப்பாய் இருக்கும்போலிருக்கிறதே. சிறு கன்றாயிருக்கும் இந்தச் செடிகளே இவ்வளவு செழிப்பாயிருக்கிறதே! என்று ஆச்சரியப்பட்டேன். இன்னும் சற்று நான் அவைகளைக் கவனித்தபோது, அந்தக் கன்றுகள் எல்லாம் ஒரே நேர் வரிசையில் நிற்கிறதைப் பார்த்தேன். இதென்ன? எல்லாம் ஒரே வரிசையில் முளைக்கத்தக்கதாய் இவ்வளவு நேராகப் போட்டது யார்? எப்போ போட்டிருக்கும் என்று யோசித்தேன், கொஞ்சநேரம் ஒன்றும் துலங்கவில்லை. வரிசையின் ஒரு ஓரத்தில் நின்றுகொண்டு வரிசையின் நேர்மையைக் கவனித்தேன். பிசகாமல் ஒரே நேராய், ஒரே வரிசையில் முளைத்திருந்தன. அந்த வரிசைக்கு அப்பால் ஒரு பெரிய மரம் நின்றது. அதுவும் பன்னீர்ப்பூமரம்தான்.

ஒரு பெரிய பன்னீர்ப்பூமரமும் அதற்கு இப்புறத்தில் ஒரே நேர் வரிசையில் அதே ஜாதியான பல சிறு செடிகளும் நிற்பதைக் கண்டவுடன், அந்த சிறு செடிகள் செழிப்பாயிருந்ததற்குக் காரணம் தெளிவாய்விட்டது. அவைகள் அந்தப் பெரிய பன்னீர்ப்பூமரத்தின் வேரிலிருந்து வெடித்த கன்றுகள். அம்மரத்தின் வேரினால் பெரிய மரத்தோடு அக்கன்றுகள் இணைக்கப்பட்டிருந்தன. ஆகையால் பெரிய மரத்தின்சாரம் இச்சிறு கன்றுகளுக்கும் வரக்கூடியதாயிருந்தது. அதினால்தான் மற்றச் செடிகளெல்லாம் பட்டுக் காய்ந்துபோயிருக்க, அக்கன்றுகள் மாத்திரம் பெரிய மரத்தைப்போலவே பசுமையும், செழிப்புமாயிருந்தன. நமது ஆவிக்குரிய ஜீவியத்திலும் காரியம் இப்படியே இருக்கிறது. பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். நம்மையும், கிறிஸ்துவையும் ஒன்றாய் இணைத்திருக்கிறவர் பரிசுத்த ஆவி. இனி நாம் நமது சொந்த வேராகிய சுய பெலன், சுய நீதி இவைகளில் நடக்காமல், இயேசு சுவாமியின் கிருபையில் சார்ந்து, அவரில் நிலைத்திருக்கவேண்டும். அவரோ 'பச்சைமர'மாகிய 'ஈசாயின் அடிமரம்' அவரில் நிலைத்திருக்கிறவன் அவருடைய சாரத்தால் போஷிக்கப்பட்டு, 'தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்'. 'ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்'.

## இரண்டு கடிகாரங்கள்

மிகுந்த ஐசுவரியமுள்ள ஒரு துரை இருந்தார். ஒருநாள் அவர் தமது குதிரைக்காரனிடம் ஆபீஸ் வேலைக்கு ஒரு பையன் வேண்டும் என்று கேட்டார். அவன் தோமாஸ் என்ற தன் மகனை அவ்வேலைக்கு அனுப்பினான். தோமாஸ் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையை ஒழுங்காய்ச் செய்துவந்தான். விசேஷமாய் மணித்திட்டம் தவறாமல் வேலைக்கு வந்துவிடுவான். துரை 12-மணிக்கு வரச்சொன்னால் மணி அடிக்கும் நேரத்தில் தவறாமல் ஆபீசில் போய நிற்பான். எந்த நேரம் வரச்சொன்னாலும் அந்த நேரத்துக்கு ஒரு நிமிஷங்கூடப் பிந்தமாட்டான். ஒருநாள் துரை அவனைப் பார்த்து 'தோமாஸ், உன் கடிகாரத்தைப் பார்ப்போம். அது வெகு திட்டமாய் மணி காட்டும்போல் தோன்றுகிறது. நீ எப்பொழுதும் குறித்த வேளைக்கு ஒரு நிமிஷங்கூடப் பிந்தாமல் வந்துவிடுகிறாயே! என்றார். உடனே அவன் தன் சேப்பிலிருந்த கடிகாரத்தை எடுத்துக் காட்டி 'இதுதான் ஐயா, என் கடிகாரம், இது மிகவும் சொற்பக்கிரயம் தான்' என்றான். துரை தமது சேப்பிலிருந்த, தங்கக் கடிகாரத்தை எடுத்துக் காண்பித்து, இதை நான் அதிக விலை கொடுத்து வாங்கினேன் என்றாலும் இது உன்னுடையதைப்போல அவ்வளவு திட்டமாய் மணி காட்டுகிறதில்லை. நான் ரெயில்வண்டி ஏறிப்போக அவசியமிருக்கும் போது, இந்த கடியாரத்தைப் பார்த்துக்கொண்டு, ஸ்டேஷனுக்குப் போனால் நான் போகுமுன் அடிக்கடி வண்டிபோய்விடுகிறது. ஆகையால் நான் இந்த விலைபெற்ற கடிகாரத்தை உனக்குத் தந்துவிடுகிறேன். நீ உன்னுடைய கடிகாரத்தை எனக்குத் தந்துவிடு' என்றார். அப்படியே இருவரும் தங்கள் கடிகாரங்களை மாற்றிக்கொண்டார்கள். இப்படி இருவரும் மாற்றிக்கொண்டபிறகும் தோமாஸ் மணித்திட்டம் தவறாமல் வேலைக்கு வந்துவிடுவான். துரையோ மறுபடியும் நேரம் பிந்திப்போய் கஷ்டப்பட்டார். அவருக்கு இந்தக் கடிகாரமும் சரியான நேரம் காட்டவில்லை. அதினால் அந்தப்பையனை அவர் அழைத்து 'தோமாஸ், எந்த கடிகாரமானாலும் உனக்குச் சரியான மணி காட்டுகிறது. எனக்கோ ஒன்றும் சரியான மணி காட்டுகிறதில்லை. நீ எப்படி ஒரு நிமிஷங்கூடத் தவறாமல் வந்துவிடுகிறாய்?' என்று கேட்டார். அப்பொழுது அவன் 'ஐயா, நான் ஒவ்வொருநாளும் தெருவழியாய்ப் போகும்போதும், வரும் போதும், என் கடிகாரம் கோபுரத்திலிருக்கும் பெரிய மணிக்கு சரியாய் இருக்கிறதா என்று பார்த்து, திருத்திக்கொள்ளுகிறேன். அதினால்தான் என் கடிகாரம் எப்போதும் சரியாய் இருக்கிறது' என்றான்.

பிரியமான பிள்ளைகளே, அருமை இரட்சகரோடு ஐக்கியப்பட்டிருக்கிற நீங்கள், உங்கள் தினசரி நடக்கையை அவருடைய ஜீவியத்தோடு ஒப்பிட்டுப்பார்த்து, திருத்திக்கொள்வீர்களா?

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

JUL 19.. MADRAS

The
# Children's Herald.
# பாலர் தூதன்.
'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XI. மேய், ஜூன் 1916. Nos 5, 6.

## தேவனுடைய பிள்ளை.

**தங்க வாக்கியம்:**—"நான் .... உங்களுக்குப் பிதாவாயிருப்பேன்; நீங்கள் எனக்கு குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள் என்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" 2 கொரி. 6: 18.

பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவின் அவயவமாகிறோம் என்பது நமக்குத்தெரியும். அதிலே நாம் தேவனுடைய பிள்ளைகளாவது நமக்குக் கிடைக்கும் இன்னோர் பெரிய சலாக்கியம். சுபாவத்தின்படி கோபாக்கினையின் பிள்ளைகளான நாம் கிறிஸ்துவின் மரணத்தினாலே பரிசுத்த ஞானஸ்நானத்தில் தேவனுடைய பிள்ளைகளாகும் சலாக்கியத்தைப் பெறுகிறோம்.

1. பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் தேவனுடைய பிள்ளைகளாவது எப்படி? பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவின் அவயவமாகிறபடியினால் கிறிஸ்துவானவர் நம்மைத் தமது சகோதரர் என்று அழைக்கிறார். எபி. 2, 11-ல் "அவர்களை (கிறிஸ்தவர்களை) சகோதரர் என்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை" என்று வாசிக்கிறோம். பரி. யோவா. 20: 17-ல் சீஷர்களை சகோதரர் என்றே சொல்லுகிறார். ஆகவே நாம் கிறிஸ்துவின் சகோதரராயிருக்கிறோம். கிறிஸ்துவானவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார் ஆகையால் தேவன் நம்மை கிறிஸ்துவின் மூலமாய்த் தம்முடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளுகிறார். "நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" கலா. 3: 24. கிறிஸ்துவானவர் தேவனுடைய சொந்தக் குமாரன். நாம் அவருடைய திரு ரத்தத்தால் மீட்கப்பட்ட சுவிகாரப் பிள்ளைகள்.

6-6-16

2. **தேவன் நமது பிதாவாக நமக்குச் செய்கிறதேன்ன?** 1. நாம் அவருடைய பிள்ளைகளாயிருந்து, அவரை பிதாவே என்று அழைக்கும் சலாக்கியத்தை நமக்குத் தந்திருக்கிறார்." நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால் அப்பா பிதாவே என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார் (கலா. 4: 6). 2. அவர் நமக்கு இரங்கி உதவிசெய்கிறார்." தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்" (சங். 103: 3) 3. அவர் நம்மைக் காப்பாற்றுகிறார். "அவர்களை உமது நாமத்தினாலே காத்துக்கொள்ளும் (பரி. யோவா 17: 11). 4 நமக்கு வேண்டியவைகளைத் தந்து நம்மை ஆதரிக்கிறார் "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" (பரி. மத். 7: 11), 5. நம்மைத் தண்டித்துச் சீர்ப்படுத்துகிறார். "கர்த்தர் . . . . தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்." (எபி. 12: 6).

3. **தேவனுடைய பிள்ளைகளாக நமது கடமை என்ன?** 1. நாம் தேவனை நேசித்து, அவரைக் கனம்பண்ணி, அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். "நான் பிதாவானால் என் கனம் எங்கே?" (மல் 1: 6). 2. பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் தேவனுடைய குடும்பத்தில் சேர்க்கப்பட்டு தேவனுக்குப் பிள்ளைகளாயிருக்கிறபடியால், கிறிஸ்தவர்கள் ஜாதிவித்தியாசம் பாராட்டுவது நாங்கள் பெற்றிருக்கும் சலாக்கியத்தை அவமதிப்பதாகும்.

**"உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே; யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை . . . நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்"** கலா. 3: 27, 28.

## ராஜகுமாரன்.

அநேக வருஷங்களுக்கு முன்னே நமது இந்து தேசத்தில் ஒரு பெரிய ராஜா இருந்தார். அவர் மிக நல்லவரும், குடிகளைப் பட்சமாய் ஆளுகிறவருமாயிருந்தார். செல்வத்திலும், சிறப்பிலும் அவருக்கு ஒரு குறைவுமில்லை. என்றாலும் பிள்ளையில்லாக்குறை ஒன்று இருந்தது. தனக்குப்பின் தேசத்தை ஆள, ஒரு குமாரன் வேண்டுமே என்று அதிகக் கவலைப்பட்டார். அநேக புண்ணியஸ்தலங்களுக்குப் போய், தானதர்மங்களைச் செய்தார். ஒரு பலனுமில்லை. கடைசியாக ஒரு நல்ல பையனைத் தத்துப்புத்திரனாக எடுத்து வளர்க்கும்படி தீர்மானித்தார். அரமனை உத்தியோகஸ்தருடைய பிள்ளைகள் ஒன்றும் அவருக்குத் திருப்தியாயிருக்கவில்லை. ஆகையால் ராஜதானிப் பட்டணத்தைவிட்டுப் பல ஊருக்கும் போய்த் தமது மனதுக்கேற்ற ஒரு பையனைக்



கண்டுபிடிக்க யோசித்தார். ராஜகோலத்துடன் போனால், தமது நோக்கத்தை அறிந்திருக்கும் ஜனங்கள் அதற்கேற்றபடி நடந்துகொள்வார்கள். அவர்களுடைய சரியான குணத்தை அறிந்துகொள்ளமுடியாது என்று நினைத்து, ராஜ வஸ்திரங்களைக் களைந்துவிட்டு, காவிவஸ்திரம் தரித்து, ஒரு சந்நியாசி போல புறப்பட்டுப்போனார். பல ஊர்களிலும் திரிந்து அலைந்து, கடைசியாக ஒரு கிணற்றோரத்தில் வந்து உட்கார்ந்தார். அப்பொழுது மிகவும் ஏழையான ஒரு ஸ்திரியும் 12 வயதுள்ள அவள் மகனும் அந்த வழியாய் வந்தார்கள். ராஜா அந்தப் பையனைப் பார்த்தவுடனே, இவன்தான் ராஜகுமாரனாவதற்கு ஏற்றவனாயிருக்கலாம் என்று நினைத்து, அவர்களைப் பின்தொடர்ந்துபோய் அவர்கள் வீட்டுப்பக்கத்தில் சில நாள் இருந்து, அந்தப் பையனுடைய குணசீலங்களை எல்லாம் திட்டவட்டமாய்க் கவனித்து, திருப்தியடைந்து, அரமனைக்குத் திரும்பினார்.

அப்பால் தமது ஊழியக்காரரை அவ்வூருக்கு அனுப்பி, சில ஒழுங்குகளோடு, அந்தப் பையனை அரமனைக்கு அழைத்துக்கொண்டுவரத் திட்டம் செய்தார். அப்படியே அரமனை உத்தியோகஸ்தர் புறப்பட்டுப்போய், அந்தப் பையனைக் கண்டுபிடித்து, அவனுக்குக் கிடைத்திருக்கும் பெரிய சலாக்கியத்தை அவனிடம் சொன்னார்கள். அப்பால் அவன் சில வாக்குகள் கொடுக்க வேண்டியதாயிருந்தது. இனி தன் பழைய வீட்டையும், சோலிகளையும் மறந்துவிட்டு, ராஜாவின் வார்த்தைகளில் முழு நம்பிக்கைவைத்து, அவருடைய விருப்பத்தின்படியே நடப்பேன் என்று வாக்குக்கொடுத்தபின், அவனை முழுக்காட்டி, உயர்ந்த வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, அரமனைக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்படியே பரம ராஜாவும் தம்முடைய ராஜ்யத்தைவிட்டு வேஷமாறி, இவ்வுலகில் ஓர் ஏழையாக அலைந்துதிரிந்து, பரலோகஞ்சென்று, தமது ஊழியக்காரரை அனுப்பி, ஒரு பையனை மாத்திரமல்ல, மனமான எல்லாரையும் ராஜகுமாரர் ஆகும்படி அழைக்கிறார். பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாய் உண்மையாய் அவரிடத்தில் வருகிற ஒவ்வொருவரையும் அவர் தமக்குப் பிள்ளையாக ஏற்றுக்கொள்ளுகிறார்.

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் **தேவனுடைய பிள்ளைகளாகும்படி** அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" பரி. யோவா. 1: 12.

## ஞாபகஸ்தம்பம்.

இங்கிலாந்தின் தென்பாகத்தில் உவைட் என்று சொல்லப்பட்ட ஓர் அழகிய தீவு உண்டு. அங்குள்ள ஓர் ஆலயத்தில் சலவைக் கற்களால் செய்யப்பட்ட ஒரு ஞாபகஸ்தம்பம் இருக்கிறது. ஒரு சிறு பெண் உருவம் சாய்ந்து படுத்திருக்கிறாப்போலவும், அவளுக்கு முன்னே ஒரு வேதாகமம் விரித்து வைத்திருக்கிறதாகவும், அவளுடைய விரல்கள் அதிலுள்ள ஒரு வாக்கியத்

தின்மேல் வைக்கப்பட்டிருக்கிறதுபோலவும் காட்டியிருக்கிறது. இந்த ஞாபகஸ்தம்பம் காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியவர்களால் செய்யப்பட்டது.

முதலாவது சார்ல்ஸ் அரசனுக்கு எலிசபெத் என்ற ஒரு குமாரத்தி இருந்தாள். அவ்வரசனுக்கு துன்பம் உண்டான காலத்தில், அவருடைய சத்துருக்கள் எலிசபெத் இளவரசியை உவைட் தீவிலுள்ள காரிஸ் புருக் அரமனையில் சிறையாக அடைத்துவைத்தார்கள். அவள் தன் பந்துக்களையும், சிநேகிதரையும்விட்டுப் பிரிக்கப்பட்டு தனிமையாய் அங்கே இருக்க நேரிட்டது. அதினால் மனஞ்சோர்ந்து, வியாதிப்பட்டாள். ஒருநாள் காலையில் தன் படுக்கையிலே மரித்தவளாய்க் காணப்பட்டாள். அவளுடைய வேதாகமம் அவளுக்குமுன்னே விரித்து வைக்கப்பட்டிருக்கிறதையும், "வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்ற வாக்கியத்தில் அவளுடைய விரல்கள் ஊன்றியிருக்கிறதையும் கண்டார்கள். இதைக் காட்டுவதற்காகவே அந்த ஞாபகஸ்தம்பம் கட்டப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வசனம் உனக்கும் இவ்வளவு அருமையாயிருக்கிறதா?

## பரலோக ராஜ்யத்துக்கு சுதந்தரவாளி.

**தங்கவாக்கியம்** "நீ புத்திரனேயானால் கிறிஸ்துவின் மூலமாய் சுதந்தரனுமாயிருக்கிறாய்" கலா. 4. 7.

பரிசுத்த ஞானஸ்நானத்தில் நமக்குக் கிடைக்கிற இரண்டாவது சலாக்கியத்தைப்பற்றிக் கவனித்தோம். இப்பொழுது மூன்றாவது சலாக்கியம் என்னவென்று பார்ப்போம். நாம் பரலோக ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளிகளாகிறதே மூன்றாவது சலாக்கியம்.

1. **சுதந்தரமாவது என்ன?** சுதந்தரம் என்பது உரிமை அல்லது பாத்தியதையைக் குறிக்கும். ஒரு மகன் தகப்பனுடைய சொத்துக்கு சுதந்தரவாளியாகிறான், ராஜாவின் மூத்தகுமாரன் தகப்பனுடைய பட்டத்துக்கு உரிமையுள்ளவனாகிறான். அப்படியே பரிசுத்த ஞானஸ்நானத்தில் நமக்கு தேவனோடு ஒரு பாத்தியதை அல்லது உரிமை உண்டாகிறது.

2. **பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் எதற்கு சுதந்தரவாளிகளாகிறோம்?** பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் பரலோக ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளிகளாகிறோம். பரலோக ராஜ்யம் என்பது இருவகைப்படும். ஒன்று கிருபையின் ராஜ்யம், இன்னொன்று மகிமையின் ராஜ்யம். **கிருபையின் ராஜ்யம்** என்பது பூமியிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தேவனுடைய பரிசுத்த சபை. பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாய் திருச்சபையின் சகல சலாக்கியங்களையும் அனுபவிக்க நமக்கு சுதந்தரம் உண்டு. பரிசுத்த நற்கருணை, மற்ற ஆராதனைகள், நல்ல



போதனைகள். கிறிஸ்தவ அடக்கம் முதலியன திருச்சபையில் நமக்குக் கிடைக்கும் சலாக்கியங்கள். **மகிமையின் ராஜ்யம்** என்பது இனிவரும் மோட்சமகிமையைக் குறிக்கும். அங்கே துன்பம், துக்கம், பசி, பட்டினி, கண்ணீர், கவலை, மரணம் முதலியவை இல்லை. மோட்சத்துக்குப்போகிற ஒவ்வொருவருக்கும் மகிமையின் கிரீடம் சூட்டப்படும், கிறிஸ்துவின் சமுகம் எப்போதும் அங்கே இருப்பதால் பரிபூரண ஆனந்தம் உண்டு சங். 16. 11.

3. **பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் எப்படி பரலோக ராஜ்யத்துக்கு சுதந்தரவாளிகளாகிறோம்?** சுபாவத்தின்படி கோபாக்கினையின் பிள்ளைகளான நாம் கிறிஸ்துவின் பாடுகளினால் பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாய் தேவனுடைய குடும்பத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவானவர் இந்தக் குடும்பத்தின் முதல்வராயிருக்கிறார். எபி. 1, 2-ல் தேவன் இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார் என்று வாசிக்கிறோம். நாம் கிறிஸ்துவின் அவயவமாயிருக்கிறபடியால் நாமும் அவரோடுகூட சுதந்தரவாளிகளாகிறோம். மேலும் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதினாலும் அந்த சுதந்தரம் நமக்குண்டு. "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" ரோம. 8: 17.

**போதனை.** உனக்குக் கிருபையாய்க் கிடைத்திருக்கிற இந்த சுதந்தரத்தை நீ இழந்துபோகாதபடி பரிசுத்தமாய் நடந்துகொள்ளவேண்டும்.

**"பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே"** எபி. 12: 14.

## பிதாவின் வீடு.

**நியுசிலாந்து தீவில் தால்மாஹு** என்று ஒரு தலைவன் இருந்தான். அவன் ஒரு நல்ல கிறிஸ்தவன். சில வருஷங்களுக்குமுன் அவன் இங்கிலாந்து தேசத்தைப் பார்க்கப்போனான். ஒரு நாள் ஒரு துரை அவனை தமது அலங்கார மாளிகைக்குக் கூட்டிக்கொண்டுபோனார். இந்த மாளிகை லண்டன் பட்டணத்திலுள்ள சிறந்த கட்டடங்களில் ஒன்று. தன் அரமனையைப் பார்த்தவுடன் தலைவன் ஆச்சரியத்தினால் பிரமித்துவிடுவான் என்று துரை நினைத்தார். ஆனால் தலைவன் தான் பார்த்தவைகளில் எதிலும் கவனம் செலுத்தவே இல்லை. துரை ஓர் சிறந்த அறையைக் காண்பித்து "இது எவ்வளவு அழகாயிருக்கிறது பாரும்" என்றார். தலைவன் சற்றுநேரம் மவுனமாயிருந்துவிட்டு, "என் தகப்பன் வீடு இதைவிட அழகானது" என்றான். அவனுடைய தகப்பன் ஓர் சிறு மண்குடிசையில் குடியிருந்தான் என்பது அந்தத் துரைக்குத் தெரியும். ஆகையால் அவர் "உமது தகப்பன் வீடு இதைவிட மேலானதோ? என்று இகழ்ச்சியாய்க் கேட்டார். "ஆம், என் தகப்பன் வீடு இதைவிட எத்தனையோ மடங்கு மேலானது" என்று சொல்லி, தன் சேப்பிலிருந்து, ஒரு புதிய ஏற்பாட்டை எடுத்து, பரிசுத்த வேதாகமத்தின்

கடைசி இரண்டு அதிகாரங்களையும் வாசித்துக்காட்டினான். அருமையான பிள்ளையே, நீயும் அதை வாசித்துப்பார். உன் பரமபிதா உனக்கு வைத்திருக்கும் சுதந்தரம் எப்படிப்பட்டது என்று அங்கே நீ கண்டுகொள்வாய்.

## நிலையான சுதந்தரம்

இங்கிலாந்து தேசத்திலே ஜாண் என்ற ஒரு வாலிபன் இருந்தான். அவன் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். ஆனால் ஒரு சீமானுடைய மகளை அவன் விவாகம் செய்தான். அவள் மூலமாய் அவனுக்குத் திரண்ட ஐசுவரியம் கிடைத்தது. அவனுக்கு அழகான ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. உலகத்தில் கிடைக்கக்கூடிய நன்மைகளில் ஒன்றும் அவனுக்குக் குறைவாயிருக்கவில்லை. கொஞ்சக்காலம் அவன் ஒரு ராஜகுமாரனைப்போல் வாழ்ந்துவந்தான். ஒருநாள் ஒரு சிநேகிதன் அவன் வீட்டுக்கு வந்தான் தன் சம்பத்துகளையெல்லாம் அவனுக்குக் காட்டி, சந்தோஷப்பட்டான். ஆனால் ஒரு வாரத்துக்குள் அவனுடைய அழகு மனைவியும் அருமைப் பாலகனும் கல்லறைக்குள் சென்றார்கள், மனைவியும் பிள்ளையும் போனதோடு சொத்தும் போய்விட்டது. ஒரு வாரத்துக்குமுன்னே பெரிய சீமான். அடுத்த வாரத்தில் பிச்சைக்காரனானான். ஆம், உலகம் கொடுக்கிற சுதந்தரம் இப்படிப்பட்டதுதான். ஒரு நிமிஷத்திலே அது மனுஷனைவிட்டு எடுபட்டுப்போகிறது. மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை அல்லது சுதந்தரத்தைத் தெரிந்துகொண்டாள். அந்த நல்ல பங்கு என்ன? கர்த்தராகிய இயேசுவை தரிசித்துக்கொண்டிருக்கும் பாக்கியமே. "**கர்த்தர் என் சுதந்தரமும்** என் பாத்திரத்தின் **பங்குமானவர்**; என் சுதந்தரத்தை தேவரீர் எப்போதும் காப்பாற்றுகிறீர். நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்குகிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு (சங். 16: 5, 6). இந்த சுதந்தரத்தை நீ இழந்துபோகாதபடி எச்சரிக்கையாயிரு.

---

## உயர்ந்த இடத்தில்

உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் சந்தோஷமுள்ளவர்களாய் அல்லது மனப்பாக்கியமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் சிலர்மாத்திரம் மனப்பாக்கியமாயிருப்பதற்குரிய சரியான வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் பேர்போன ஒரு அரசன் இருந்தான். அவனுக்குத் திரண்ட ஐசுவரியமும் வல்லமையும் இருந்தது. ஆனாலும் மனப்பாக்கியமற்றவனாயிருந்தான். அந்த தேசத்திலே வயதுசென்ற ஒரு குரு இருந்தார். அவர் பக்தியிலும், ஞானத்திலும் சிறந்தவர். மனுஷர் மனப்பாக்கியம் அடையும் வழியை அவர் போதித்து வந்தார். ஆகையால் அந்த அரசன் குருவைத்தேடிப் புறப்பட்டான். ஒரு பெரிய மலையடிவாரத்



திலிருந்த அற்பமான கெபி ஒன்றில் அந்தக் குரு வாசஞ்செய்தார். அரசன் அவரிடம் போய், 'ஐயா, நான் மனப்பாக்கியம் அடையும் வழியை தாங்கள் தயவுசெய்து எனக்குப் போதிக்கவேண்டும்' என்று கேட்டான். வயது சென்ற அந்தக் குரு யாதொரு உத்தரவும் சொல்லாமல் அரசனைக் கூட்டிக் கொண்டு, மலையடிவாரத்தில் நெடுகப்போனார். கடைசியாக, ஒரு செங்குத்தான பாறையின் அடியில் இருவரும் வந்து சேர்ந்தார்கள். அந்தப் பாறையின் உச்சியில் ஒரு கழுகு கூடுகட்டியிருந்தது.

குருவானவர் அரசனை உயர எட்டிப்பார்க்கச்செய்து, 'ஓ, அரசனே, கழுகு ஏன் இவ்வளவு உயர்ந்த இடத்தில் தன் கூட்டைக்கட்டியிருக்கிறது? எனக்குச் சொல்லும்' என்று கேட்டார். அரசன் மாறுத்தரமாக, 'எவ்வித மோசமும் நேரிடாதபடி அவ்வளவு உயர்ந்த இடத்தில் தன் கூட்டைக்கட்டியிருக்கிறது' என்றான். 'சரிதான், நீரும் கழுகின் மாதிரியைப் பின்பற்ற வேண்டும் மோட்சத்திலே உம்முடைய வீட்டைக் கட்டவேண்டும் அப்படியானால், அதற்கு ஒருமோசமும் நேரிடாது. அப்பொழுது நீர் உமது ஜீவகாலமெல்லாம் மனப்பாக்கியமும் சமாதானமுமாய் இருக்கலாம்' என்று அந்த ஞானி சொன்னார். 'நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது' என்ற திருவாக்கை இந்தச் சரித்திரம் நமக்கு ஞாபகப்படுத்துகிறதல்லவா. பரிசுத்த ஞானஸ்நானத்தின் மூலமாய் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு பிள்ளைக்கும், ஒரு சுதந்தரம் பரலோகத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. அதை அடையும்படி பரிசுத்த வழியில் நடப்பது நமது கடமை.

## மற்றவர்களைச் சந்தோஷப்படுத்து.

ஒரு நாள் சாயங்காலம் ஒரு உபாத்தியாயரும் ஐசுவரியவானான ஒரு வாலிபனும் உலாவப்போனார்கள். அந்த உபாத்தியாயர் கர்த்தருக்குப் பயந்து நடக்கிற ஒரு நல்ல மனுஷன். ஆனால், அந்த வாலிபனோ உல்லாசப் பிரியன். அவர்கள் இருவரும் நெடுக நடந்துபோகையில் வழியோரத்தில் இருந்த ஒரு ஜோடி சப்பாத்தைக் கண்டார்கள். அந்தச் சப்பாத்து பக்கத்து வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு ஏழை மனுஷனுடையதாயிருந்தது. அந்த ஏழை அப்பொழுதுதான் தன் வேலையை முடித்துக்கொண்டிருந்தான்.

வாலிபன் உபாத்தியாயரைப்பார்த்து, 'ஐயா, நாம் இங்கே ஒரு வேடிக்கை செய்வோம். இந்த இரண்டு சப்பாத்துகளையும் எடுத்து அந்தப் புதருக்குள் ஒளித்து விடுவோம். அவன் தன் சப்பாத்தைக் காணாமல் தேடித் திரிகிறதைப் பார்த்துச் சந்தோஷப்படலாம்' என்றான். அதற்கு உபாத்தியாயர், 'மற்றவர்களுக்கு வேதனையை உண்டாக்கி நாம் சந்தோஷப்படுகிறது சரியல்ல. அதைவிட மற்றவர்களை சந்தோஷப்படுத்தி நாமும் சந்தோஷ

படுகிறது நல்லது. இந்த ஒவ்வொரு சப்பாத்துக்குள்ளும் ஒவ்வொரு வெள்ளி நாணயத்தை வைத்துவிட்டு நாம் ஒளித்துக்கொள்வோம்' என்றார். வாலிபன் அப்படியே செய்தான். பின்பு இருவரும் பக்கத்திலிருந்த ஒரு புதருக்குள் ஒளித்துக்கொண்டார்கள். சில நிமிஷங்களுக்குள், அந்த ஏழை மனிதன் தன் வேலையை முடித்து பாதையோரத்திற்கு வந்தான். ஒரு சப்பாத்தைக் காலில் மாட்டினான். உள்ளே, ஏதோ ஒரு பொருள் இருக்கிறதாகத் தெரிந்தது. அது என்னவென்று எடுத்துப் பார்த்தான். அது ஒரு வெள்ளி நாணயம் யாராவது அதை அங்கே வைத்திருப்பார்களாவென்று சுற்றிலும் பார்த்தான். ஒருவரையும் காணவில்லை. பின்பு அடுத்த சப்பாத்தை மாட்டினான். அதிலும் ஒரு வெள்ளி நாணயம் இருந்தது. ஆ, அந்த ஏழை மனுஷனின் சந்தோஷத்தை என்ன சொல்ல! அவனுடைய இருகண்களிலுமிருந்து ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. வியாதியாயிருக்கிற தன் ஏழை மனைவிக்கும் பசியாயிருக்கிற தன்பிள்ளைகளுக்கும் உதவிசெய்ய எதிர்பாராத விதமாய் சுவாமி இந்தப் பொக்கிஷத்தைத் தனக்கு அனுப்பினதற்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த வாலிபனும் அதிகமாய் சந்தோஷப்பட்டு உபாத்தியாயருடைய நல்ல ஆலோசனைக்காக அவருக்கு நன்றியறிதல் கூறி, அவரவர் தம் தம் வழியே போய்விட்டார்கள்.

---

## பரீட்சைப் பாடங்கள்.

### பழைய ஏற்பாடு.

1. யோனாவின் சரித்திரம்.
2. கோரேஸ் ராஜாவின் விளம்பரம்.
3. இரண்டாம் தேவாலயம் கட்டினது.
4. எஸ்றாவின் நற்குணங்கள்.
5. நெகேமியா செய்த நல்ல வேலைகள்.

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

MADRAS

The
# Children's Herald.
# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32

Vol. XI. ஜூலை 1916. No 7.

## பிசாசையும், அதின் கிரியைகளையும் வெறுத்துவிடுவேன்.

**தங்கவாக்கியம்:**—"பிசாசுக்கு எதிர்த்துநில்லுங்கள்" பரி. யாக். 4: 7.

நாம் பரிசுத்த ஞானஸ்நானம் பெற்றபோது மூன்று காரியங்களை **வெறுத்துவிடுவோம்** என்று தேவனுக்குமுன்பாகப் பிரதிக்கினைபண்ணி வாக்குக்கொடுத்திருக்கிறோம். அம்மூன்றையும் சுருக்கிச்சொன்னால் **பிசாசு உலகம், மாம்சம்** என்று சொல்லலாம். இவை மூன்றும் நமது ஆத்தும சத்துருக்களாயிருக்கிறபடியால் அவைகளை வெறுத்துவிடவேண்டியது நமது கடமையே. அவைகளில் பிசாசையும் அதின் கிரியைகளையும் வெறுத்துவிடுவதைப்பற்றி இப்போது கவனிப்போம்.

1. **பிசாசைப்பற்றி நாம் அறிந்துகொள்ளுகிறதென்ன?** பிசாசு பாவம் செய்யும்படி மனுஷரைத் தூண்டிவிடுகிறவன் என்று அறிந்துகொள்ளுகிறோம். நமது ஆத்தும சத்துருக்களில் பிரதான சத்துரு பிசாசுதான். அவன் ஏதேன் தோட்டத்தில் ஏவாளைப் பாவம் செய்யத் தூண்டிவிட்டான். நமது ஆதித் தாய் சாத்தானுடைய சொல்லுக்கு இணங்கிப் பாவத்துக்கு இடங்கொடுத்தாள். அவன் நமது அருமை ரட்சகரையும் வனாந்தரத்திலே பாவம் செய்யும்படி தூண்டிப்பார்த்தான். ஆனால் அவர் அவனுக்கு இணங்கவில்லை. அப்பொழுது அவன் அவரைவிட்டு விலகிப்

போனான். நீயும் பரிசுத்த ஞானஸ்நானம் பெற்றபோது இறி போர்வீரன் ஆகியிருக்கிறாய். பிசாசு உன்னைப் பாவம் செய்யத் தூண்டும்போது நீ அவனோடு போராடவேண்டும்.

2. **பிசாசின் கிரியைகளேவை?** பாவமான யாவும் பிசாசின் கிரியைகளே. பெருமை, பொறாமை, பொய், மற்றவர்களைக் கெடுத்தல் முதலியன அவைகளில் முக்கியமானவை. **பெருமையினால்** பிசாசு தன் ஆதி மேன்மையை இழந்தது. **பொறாமையினால்** மனுஷனைப் பாவஞ்செய்யத் தூண்டிவிட்டது. பிசாசு பொய்யனும், பொய்க்குத் தகப்பனுமாயிருக்கிறான் என்று நமதாண்டவர் சொல்லுகிறார். இந்தப் பாவங்களும் இன்னம் இது போலொத்த மற்றப் பாவங்களும் யாரிடத்தில் காணப்படுகிறதோ அவர்கள் பிசாசின் கிரியைகளைச் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். நீ இப்படிப்பட்டவைகளை முற்றிலும் வெறுத்துவிடவேண்டும்.

3. **பிசாசையும் அதின் கிரியைகளையும் வெறுக்கிறதென்றால் என்ன?** பாவசோதனைகள் நேரிடும்போது தேவஉதவியால் அவைகளை ஜெயிக்கிறதே பிசாசின் கிரியைகளை வெறுக்கிறது: **வெறுத்தல்** என்றால்விட்டு விடுதல் அல்லது சம்பந்தமில்லாமலிருக்குதல் என்று மாத்திரமல்ல எதிர்த்துப் போராடுதல் என்றும் அர்த்தமாம். பாவத்தைப்பற்றிய வெறுப்பு எப்போதும் நமக்கு வேண்டும். பாவ சோதனை உண்டாகும்போது எதிர்த்துப் போர்புரிந்து ஜெயிக்கவேண்டும். எபே. 6: 11-ல் சொல்லியபடி பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். நமதாண்டவர் வேதவாக்கியங்களினால் சாத்தானை ஜெயித்தார். அப்படியே நாமும் கர்த்தருடைய வசனத்தை நன்றாய் வாசித்து, தியானித்து, மனப்பாடம் செய்துகொண்டால் சோதனையை ஜெயிக்க அது நமக்கு அதிக உதவியாயிருக்கும் மேலும், "சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்" என்று நமதாண்டவர் கற்பித்திருக்கிறார். ஆகையால் பாவசோதனை உண்டானவுடன் ஜெபம்பண்ணினால் சாத்தான் ஓடிவிடுவான்.

பிசாசு வந்து சோதித்தால் **மேலே** நோக்கிப்பார்.
பிசாசு வந்து சோதித்தால் **எதிர்த்து** நின்றுபார்.
பிசாசு வந்து சோதித்தால் **தேவ வார்த்தை**ப் பார்.
பிசாசு வந்து சோதித்தால் **ஜெபம்** செய்துபார்.
பிசாசு வந்து சோதித்தால் **பாட்டுப்** பாடிப்பார்,

**"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்"**



## சத்துருவுக்கு எதிர்த்து நில்.

நூறு வருஷங்களுக்கு முன்னே இங்கிலீஷ்காரருக்கும் பிரான்சுக்காரருக்கும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது. இங்கிலீஷ் யுத்தக் கப்பல்களுக்குத் தளகர்த்தனாயிருந்த **நெல்சன்** என்பவர் தம்முடைய யுத்தக் கப்பல்களை **ஜிப்ரால்ற்றர்** தீவுக்குச் சமீபமாய் நிறுத்திக்கொண்டிருந்தார். அவர் இருந்த கப்பலின் மாலுமி அவரிடம் வந்து "ஐயா, தூரத்தில் அநேக பாய்மரங்கள் தெரிகிறது" என்றான். இப்பொழுது தளகர்த்தன் "சத்துருக்கள் திரள் கூட்டமாய் வருகிறார்கள்போலிருக்கிறது" என்றார். அதற்கு மாலுமி "ஐயா, நாம் ஓடிவிடவேண்டாமா?" என்று கேட்டான். தளகர்த்தனோ "கூடுமானால் ஓடாமலிருப்பது நல்லது" என்றார். இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே எதிரிகளின் யுத்தக் கப்பல்கள் ஏராளமாய் வந்துவிட்டது. அவர்களை எதிர்க்கத்தக்கதான அவ்வளவு அதிகக் கப்பல்கள் இங்கிலீஷ்காரருக்கு அந்த இடத்தில் இல்லை. அதினால் தங்கள் கப்பல்கள் ஓடிவிடும்படி தளகர்த்தன் உத்தரவு கொடுத்தார். இங்கிலீஷ் கப்பல்கள் ஓடுகிறதைக் கண்ட பிரான்சுக் கப்பல்கள் அவர்களை அதிவேகமாய்த் துரத்திக்கொண்டுவந்தன. இங்கிலீஷ்க் கப்பல்கள் ஓடிக்கொண்டிருக்கும்போது நெல்சன் இருந்த கப்பலின் மாலுமி தவறிக் கடலில் விழுந்துவிட்டான். உடனே கப்பல்களை நிறுத்தி யுத்தத்துக்கு ஆயத்தப்படவும், விழுந்த மாலுமியைத் தூக்கிவிடவும் தளகர்த்தன் உத்தரவுசெய்தார். இங்கிலீஷ் கப்பல்கள் திடீரென்று எதிர்த்து யுத்தத்துக்கு ஆயத்தப்படுகிறதைக் கண்ட சத்துருக்கள் பயந்து அவர்களோடு எதிர்க்காமல் திரும்பிவிட்டார்கள். அப்படியே பிசாசு நம்மை பாவஞ்செய்யப்பண்ணப் பிரயாசப்படும்போது நாம் தேவ உதவியால் அவனுடைய சோதனைகளுக்கு எதிர்த்துநின்றால் அவன் நம்மைவிட்டு ஓடிப்போவான்.

## காட்டு மாடு.

நமது ஜில்லாவிலிருக்கும் மேல்காத் மலைகளில் ஒரு நாள் ஒரு துரை வேட்டையாடும்படி போயிருந்தார். அப்போது ஒரு மூர்க்கமான காட்டு மாடு அவருக்கு நேரே வந்தது. அவர் தமது துப்பாக்கியை நீட்டி அதைச் சுட்டார். ஆனால் அது அதினால் லேசாய் மாத்திரம் காயப்பட்டது. ஆகையால் அது அதிவேகமாய் அவர்மேல் பாய்ந்து வந்தது. துரை தப்புகிறதற்கு வழியில்லை. காட்டுமாடு சாதாரணமாய் மிகவும் மூர்க்கமான மிருகம் மனிதர் அதனிடத்தில் அகப்பட்டால் அது அவர்களைத் தும்பு தும்பாய்க் கிழித்துப்போடும். துரை இவ்வளவு கொடிய மோசத்தில் இருக்கும்போது தன் பக்கத்திலிருந்த பாறையில் ஆழமான நீண்ட வெடிப்பு ஒன்றை கண்டார். மாடு தன் கிட்டவரு முன்னமே அதிவேகமாய் அதற்குள் நுழைந்து

பதுங்கிக் கொண்டார். காட்டு மாடும் அவரண்டை வந்து விட்டது. தன் கொம்புகளால் அவரைப் பீறிவிடலாம் என்று பார்த்தது. ஆனால் அதின் தலை உள்ளே நுழைய ஏதுவில்லை. மிகுந்த கோபத்தினால் பாறையின் மேல் முட்டினது. பாறை கொஞ்சமும் அசையவில்லை. சற்று பின் வாங்கிப் போய் ஓடி வந்து விசையாய் பாறையில் முட்டினது. இப்படியே மாடு திரும்பத்திரும்ப பாறையின் மேல் மோதிக்கொண்டிருக்கையில் துரை துப்பாக்கியில் மருந்து போட்டு கெட்டித்துக்கொண்டார். துப்பாக்கி ஆயத்தமானவுடன் மாட்டைக் குறிப்பாய்ச் சுட்டு விட்டார். அந்த மிருகம் செத்துப் போயிற்று. துரை சுகமாய் வீட்டுக்குப் போனார். இப்படியே சாத்தான் நம்மை பாவத்தினால் மோசம் செய்யப் பார்க்கையில் நாம் கிறிஸ்துவாகிய பிளவுண்ட கன்மலையின் அடைக்கலத்தில் ஒதுங்கியிருந்து பிசாசின் சோதனையை ஜெயிக்க வேண்டும்.

---

## கண்ணி.

குருவிகள் சில வேளைகளில் மரங்களில் கூட்டங்கூட்டமாய் உட்கார்ந்திருப்பதை நீங்கள் அடிக்கடி பார்த்திருப்பீர்கள். அச்சமயத்தில் உங்களில் யாராவது மெதுவாய்ப்போய் அந்தக் குருவிகளைப் பிடித்துக்கொள்ள முடியுமா! நீங்கள் கிட்டப்போகு முன்னே அவைகள் பறந்து விடுமல்லவா! ஆனால் சிலவேளைகளில் மனுஷர் அவைகளைத் தந்திரமாய்ப் பிடித்து விடுகிறார்கள். குருவி பிடிக்கிற வகைகளில் ஒன்றை மாத்திரம் இப்பொழுது சொல்லுகிறேன். குருவி பிடிக்கிறவன், குதிரை அல்லது மாடு இவைகளின் முடியினால் கண்ணி முடிந்து, அவைகளைக் குருவிகளிருக்கும் இடத்தில் தரையில் பதித்து, அதின் மேல் குருவிகளுக்குப் பிரியமான இரையைத்தூவி வைக்கிறான். தரையில் கிடக்கும் இரையை குருவிகள் கண்டவுடன் தங்களுக்கு நல்ல வேட்டை வாய்த்தது என்று மரத்தை விட்டுக் கீழே இறங்குகின்றன. முதலில் கண்ணியைப் பார்த்து பயந்த போதிலும், இரையின் மேலுள்ள ஆசையினால் கண்ணிக்குள்போய் இரையைப் பொறுக்குகின்றன. அப்படிப் பொறுக்கும்போது அவைகளின் காலாவது, தலையாவது, சிறகாவது கண்ணியில் பட்டுக்கொள்ளுகிறது. அப்படியே அநேக பிள்ளைகள் சாத்தானுடைய பாவக்கண்ணியாகிய தந்திரங்களுக்குள் அகப்பட்டுக்கொள்ளுகிறார்கள். பரி. ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நீ பாவமான எல்லாவற்றையும் வெறுத்து விடவேண்டும். **"பாவிகள் நயங்காட்டினாலும் சம்மதியாதே".**

---

## பரீட்சைப் பாடங்கள்.

1. பரி. மாற்கு சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கும் அற்புதங்களும், உவமைகளும்.

2. எஸ்தர், ஆமான், மொர்தேக்காய், அக்கினிச்சூளை, சிங்கக்கெபி இவைகளைப்பற்றி நீ வாசித்திருக்கும் காரியங்கள்.

---

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

The
# Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XI. ஆகஸ்டு 1916. No. 8.

## உலகம்.

**'இந்தப் பொல்லாத உலகத்தின் ஆடம்பரத்தையும், வீண் பெருமையையும் வெறுத்துவிடுவேன்.'**

**தங்கவாக்கியர்.** 'உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்' 1 யோவா. 2. 15.

நாம் வெறுத்துவிடவேண்டிய மூன்று காரியங்களில் முதல் காரியமாகிய பிசாசைப்பற்றி போன மாசம் கவனித்தோம். இந்த மாசம் இரண்டாவது காரியமாகிய உலகத்தைப்பற்றிக் கவனிப்போம்.

1: **உலகமாவது என்ன?** நாம் வாசம்பண்ணுகிற இந்த உலகத்தை உங்களில் அநேகர் படத்தில் பார்த்திருக்கிறீர்கள். அது ஐரோப்பா, ஆசியா முதலிய ஐந்து கண்டங்களை உடையதாயிருக்கிறது. பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் வெறுத்துவிடுவோம் என்று வாக்குப்பண்ணியிருக்கிறது இந்த உலகத்தையல்ல. இதைப்பற்றி 'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத்......தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்' (பரி. யோவா. 3: 16) என்று வாசிக்கிறோம். தேவனால் நேசிக்கப்படுகிற இந்த உலகம் நமக்குச் சத்துருவாகுமா? அப்படியல்ல. உலகம் என்பது இந்த பூமியில் நமக்கு நேரிடும் ஒரு வகை **சோதனைதான்.** நாம் வெறுத்துவிடவேண்டிய மூன்று காரியங்களும் மூன்றுவிதமான சோதனைகளே. முதலாவது சோதனை பிசாசினால் உண்டாகிறது. இதைப்பற்றி போனமாசம் படித்தி

25-7-16

ருக்கிறோம். மூன்றாவது சோதனை நமது சரீரத்திலிருந்து உண்டாகிறது. இவைகளைத் தவிர இந்த உலகத்திலிருந்து நமக்கு உண்டாகிற சோதனை உண்டு. அவை நமது நாடோடிய ஜீவியத்தினாலும், நமது பழக்க வழக்கங்களினாலும், நம்மோடிருக்கும் மனுஷரின் அபிப்பிராயங்களினாலும் நமக்கு உண்டாகக்கூடியவை. இதுவே இரண்டாவது சோதனை இந்த சோதனை மனுஷனை தேவனை விட்டுப் பிரித்து, உலகப்பற்றுள்ளவர்களாக்கிவிடுகிறது. ஆகையால் உலகம் என்பது நாம் குடியிருக்கும் பூமியை அல்ல, மனுஷன் தேவனைவிட்டுப் பிரிந்து நடக்கும் ஜீவியத்தைக் குறிக்கும்.

2. இந்தப் பொல்லாத உலகத்தின் ஆடம்பரம், வீண்பெருமை என்பவைகள் எவை? தெய்வத்தை விட்டு நம்மைப் பிரிக்கிற உலகக் காரியங்களே ஆடம்பரமும் வீண்பெருமையுமாம். ஜாதி வித்தியாசம் பாராட்டுதல், உத்தியோகம், பணம், பெலன் இவைகளைப்பற்றிய பெருமை, பகட்டான உடை, விலையுயர்ந்த ஆபரணங்களைப்பற்றிய ஆசை, நாடகம் பார்த்தல், நாள் பார்க்குதல், எப்போதும் உலகக் காரியத்திலேயே நாட்டம், உலகத்தாரின் அபிப்பிராயத்துக்கு இணங்கி சத்தியத்தை விட்டுத் தவறுதல், தனக்கு மேற்பட்டவர்களைப் பிரியப்படுத்தும்படி மனச்சாட்சியை விற்றுப்போடுதல், வயிற்றுப்பிழைப்புக்காகவே தேவ ஊழியத்தில் தலையிட்டுக்கொள்ளுதல் முதலியன உலகத்தின் ஆடம்பரமும் வீண் பெருமையுமாம்.

3. உலகத்தின் ஆடம்பரத்தையும் வீண் பெருமையையும் நாம் ஏன் வெறுத்துவிடவேண்டும்? அவை நம்மை தேவனைவிட்டுப் பிரித்து, பாவத்துக்கு இழுக்கிற நமது ஆத்தும சத்துருவாயிருக்கிறபடியால் நாம் அவைகளை வெறுத்துவிடவேண்டும். உலகம் நம்மை இழுக்கிற விதம் மகா மோசமானது. அது நமக்கு நயங்காட்டி மோசத்துக்குள்படுத்துகிறது. உலகம் கொடுக்கும் நன்மை ஒன்றும் இல்லை. ஆனாலும், உள்ளே ஒன்றுமில்லாதிருந்தும், நன்மை இருக்கிறதுபோல வெளிக்குக்காட்டி மனுஷனை வஞ்சிக்கிறது. (Outward Show) ஆகையால் நாம் உலகத்தைப் பின்பற்றி நடந்து நமது ஆத்துமாவை நஷ்டப்படுத்திவிடாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

**‘உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்.’ ‘ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.’**

## விஷமுள்ள புஷ்பம்.

ஒரு துரையும், துரைசானியும் சீமை தேசத்திலிருந்து சில காலங்களுக்குமுன் இலங்கையில் வந்து இறங்கினார்கள். அவர்கள் தங்களோடு கொண்டுவந்திருந்த சாமான்களைப் பார்த்து வேலைக்காரர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். இலங்கை அதிகச் செழிப்பான நாடுதான். ஆனாலும் அதின் சிலபாகங்களில் வாசம்செய்வது அதிகக் கஷ்டம். ஏனென்றால் அந்த பாகங்கள் அதிக உஷ்ணமும் வறட்சியுமான இடம். பூச்செடிகளைத் தங்கள் வீடுகளுக்கு முன் வைத்து உண்டாக்க அவ்விடங்களிலுள்ள அநேகருக்கு வெகு பிரீதி. ஆனால் கடும் பிரயாசம் எடுத்தால்தான் அவைகள் வளர்ந்து, பூக்கும் அப்படிப்பட்ட இடத்தில்தான் அந்த துரையும் துரைசானியும் குடியிருந்தார்கள். ஒருநாள் சாயந்தரம் அவர்கள் இருவரும் ஒரு ஏரிக்கரையோரமாய் உலாவப்போனார்கள். அவ்விடத்தில் நற்கந்தம் வீசப்பெற்ற அழகிய வெண்ணிறப் புஷ்பங்களையுடைய சில செடிகளைக் கண்டார்கள். அவைகள் தளதளவென்றுபசேலென்றிருந்த இலைகளோடு கொத்துக்கொத்தாய் பூத்து மலர்ந்திருந்திருந்தன. அந்த அழகான பூஞ்செடிகளைக்கொண்டுபோய் தங்கள் வீட்டின்முன் வைத்து வளர்க்கலாமா என்று யோசித்தார்கள். பார்வைக்கு அவைகள் நலமாயிருந்தபோதிலும் விஷம் நிறைந்தவைகள் என்று கண்டு அந்த எண்ணத்தை விட்டுவிட்டார்கள். அந்தப் பூக்களைக் கொய்து அரைத்து, போஜனத்துடன் கலந்து கொடுத்துவிட்டால் உடனே உயிர்போய்விடும். சிறு பிள்ளைகள் தெரியாமல் அந்தப் பூவைத் தின்றுவிட்டாலும் உடனே செத்துப்போவார்கள். பிள்ளைகளே, இந்த உலகமும் அதின் ஆசாபாசங்களும் பார்வைக்கு நன்றாயும், சந்தோஷமாயும் இருந்தபோதிலும் விஷம் நிறைந்ததாகவே இருக்கிறது. உலக ஆடம்பரத்திலும் வீண்பெருமையிலும் சிக்கிக்கொள்ளுகிறவர்கள் தங்கள் ஆத்துமாவைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். நீ இப்படிப்பட்ட சோதனையில் அகப்பட்டுக்கொள்ளாதபடி எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திரு.



## நீரோட்டம்

கடற்கரையோரமாயுள்ள ஒரு பட்டணத்தில் பக்தியுள்ள ஒருதாய் இருந்தாள். அவளுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள். ஒருநாள் காலையில் மூத்தவள் இளையவளைப் பார்த்து ‘நாம் கொஞ்சநேரம் வள்ளம் ஏறித் தண்டு வலித்து கடல்நீரில் ஸ்நானம்பண்ணி வரலாம், வருகிறாயா?’ என்று கூப்பிட்டாள். இளையவள் ‘எனக்கும் அது மெத்தப் பிரியம்தான். ஆனால் நாம் வள்ளம் ஏறி கடலுக்குப் போகக்கூடாதென்று அம்மா சொல்லியிருக்கிறார்கள் அல்லவா! அங்கே ஏதாவது அபாயம் இருக்கலாம், நான் வரமாட்டேன்’ என்றாள். அப்பொழுது மூத்தவள் அவளைப் பார்த்து, நீ வெறும் கோழை, என் சிநேகிதி அலிஸ் என்பவளும் வருவேன் என்று சொல்லியிருக்கிறாள். தண்டுவலிப்பதில் அவள் பந்தயம் கெலித்தவள் அல்லவா? அவள்கூட இருக்கும்போது என்ன அபாயம் நேரிடும்!’ என்றாள். இளையவளோ ‘வரமாட்டேன்’ என்று சொல்லிவிட்டாள். மூத்தவள் தன் ஸ்நானத்துக்கு வேண்டிய உடுப்புகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டுப்

போனாள். அன்று பகற்போஜனம் சாப்பிடும் நேரம்வரை அவள் திரும்பி வரவில்லை. பெற்றோருக்கு அவளைப்பற்றிய கவலை உண்டாயிற்று. இளையவள் தன் சகோதரியைத் தேடிக் கடற்கரைக்குப் போனாள். கண்ணெட்டும் தூரம் வரை வள்ளத்தைக் காணோம். தன் சகோதரிக்கும் அவள் சிநேகிதிக்கும் ஏதோ ஆபத்து நேரிட்டிருக்கும் என்று பயந்தாள். வெகு நேரத்துக்குப்பின் இருவரும் கரைவந்து சேர்ந்தார்கள். 'ஏன், அக்கா இவ்வளவு நேரம் தாமதம்?' என்று கேட்டாள் இளையவள். அப்பொழுது அவர்களிருவரும் தங்களுக்கு நேரிட்ட ஆபத்தைப்பற்றி அவளுக்குச் சொன்னார்கள். அதாவது:—அவர்கள் இருவரும் தண்டுவலித்துக் கொஞ்சத்தூரம் போனபின், தண்ணீரில் குதித்து, நீந்தி, விளையாடி, ஸ்நானம் செய்தார்கள். விளையாடிச் சலித்துப்போனபின் மறுபடியும் வள்ளத்தில் ஏறி, கடலில் இன்னமும் கொஞ்சத்தூரம் போய்த் திரும்பி வரலாம் என்று எண்ணி, தண்டுவலித்துப் போனார்கள். அவர்கள் கரையைவிட்டு வெகுதூரம் போனதும் அவர்கள் இருந்த வள்ளம் அங்கிருந்த நீரோட்டத்தில் அகப்பட்டுக்கொண்டது. அந்த இடத்தில் நீரோட்டம் உண்டென்று இவர்களுக்குத் தெரியாது. அவர்கள் அன்று காலையில் துறைமுக ஆபீசிலிருந்த படத்தைப் போய்ப் பார்த்திருப்பார்களானால், அவ்விடத்தில் நீரோட்டமுண்டு என்பதை அறிந்திருப்பார்கள். தங்கள் சுயபுத்தியின்படியே போனார்களாதலால் ஆபத்தில் அகப்பட்டார்கள். அந்த நீரோட்டத்தை விட்டு வெளியேறும்படியாக தங்கள் கைசலிக்குமட்டும் கூடிய பிரயத்தனம் பண்ணியும் அவர்களால் வெளியேறக் கூடவில்லை. நீரோட்டம் வேறு திசையாக வள்ளத்தை வேகமாய் இழுத்துக்கொண்டு போயிற்று. அப்படியே வள்ளம் நெடுகப் போய்க்கொண்டிருக்குமானால் கொஞ்சத்தூரத்துக்கு அப்பாலிருந்த பறையில் மோதி சின்னபின்னமாய்ப்போம். இப்படிப்பட்ட ஆபத்தான நிலமையில் இவர்கள் கஷ்டப்படுகிறதை தற்செயலாய் அவ்வழியே வந்த ஒரு கப்பலிலுள்ளவர்கள் கண்டு, அவர்களைக் காப்பாற்றினார்கள்.

இவ்வுலக ஜீவியத்தில் தங்கள் மனம்போல் நடந்து இன்பம் அனுபவிக்கலாம் என்று பல சிறுவர் நினைக்கிறார்கள். ஆனால் உலகமாகிய சமுத்திரத்தில் நமக்கு அபாயம் உண்டாக்கும் பல நீரோட்டங்களும் பாறைகளும் உண்டு. அப்படிப்பட்ட ஆபத்திலிருந்து நம்மைக் காப்பாற்றக் கூடியவர் நமது அருமை ரட்சகர் ஒருவர்தான். அவருடைய **சத்தியவசனமாகிய** படத்தை ஒவ்வொரு அதிகாலையிலும் பார்த்துப் படித்து, அதின்படி நடந்தால் மட்டும் அந்த அபாயங்களுக்கும் சோதனைகளுக்கும் தப்பலாம். ஆகையால் கர்த்தருடைய வசனம் நம்மை நடத்துவதாக! அதுவே நம்முடைய பாதைக்கு வெளிச்சமும் கால்களுக்குத் தீபமுமாம்.

---

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

The

# Children's Herald.

# பாலர் தூதன்

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XI. செப்டெம்பர் 1916. No. 9.

OFFICE OF THE REGISTRAR OF ... 22 SEP 1916 MADRAS.

## மாம்சம்

'பாவமான மாம்ச இச்சைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுவேன்'.

**தங்கவாக்கியம்:**—'என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்' 1 கொரி 9: 27.

பிசாசையும் உலகத்தையும் வெறுத்துவிடுவதைப்பற்றி இதற்கு முன்னே கவனித்திருக்கிறோம். மாம்சத்தை வெறுப்பதைப்பற்றி இப்பொழுது கவனிப்போம். முதல் இரண்டு சோதனைகளும் நமக்கு வெளியே இருந்து உண்டாகிறது. இந்த மூன்றாவது சோதனை நமக்குள்ளே இருந்து உண்டாகிறது.

1. **மாம்சம் என்பது எதைக் குறிக்கும்?** மாம்சம் என்பது நமது சரீரத்தைக் குறிக்கும். தேவனுடைய மகிமைக்கென்று உபயோகிக்கும்படி சுவாமி இந்த சரீரத்தை நமக்குத் தந்திருக்கிறார். கை, கால், வாய், கண், மூக்கு, செவி முதலிய நமது சரீரத்தின் எல்லா அவயவங்களாலும் தேவனை மகிமைப்படுத்தி, அவருக்கு ஊழியம்செய்யவேண்டும். 'நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்' (1 கொரி. 10: 31). என்று வேதம் சொல்லுகிறது.

2. **இச்சையாவது என்ன?** இச்சை என்றால் ஆசை என்று சொல்லலாம். ஆனால் நியாயமான ஒரு காரியத்தை நாம் விரும்பி, ஆசைப்படும்

25-8-16

போது, சாதாரணமாய் அது இச்சை என்று சொல்லப்படுகிறதில்லை.' உதாரணமாக, பசியுண்டாகும்போது சாப்பிட ஆசைப்படுகிறோம். தாகம் உண்டாகும்போது தண்ணீர் குடிக்க விரும்புகிறோம். பசி, தாகம் முதலியவை இச்சை என்று சொல்லப்படுகிறதில்லை. ஆனால் ஒன்றைத் தப்பிதமாய் அல்லது மட்டுக்குமிஞ்சி அனுபவிக்க ஆசைப்படுவது இச்சையாம். ஆகவே இச்சை என்றால் **தகாத ஆசை** என்று பொருள்படும். **இந்த ஆசை** நமது சரீரத்தைப் பாவத்துக்கு உட்படுத்தி விடுகிறபடியால் இது பாவமான மாம்ச இச்சை என்று சொல்லப்படுகிறது. பெருந்தீனி, அதிகத் தூக்கம், சோம்பல், சுயநயம், கெட்டநினைவு, கெட்டவார்த்தை, கெட்டபார்வை, குடிவெறி, விபசாரம் இவைகள் எல்லாம் பாவமான மாம்ச இச்சைகளாம்.

3. **பாவமான மாம்ச இச்சைகளை வெறுப்பதெப்படி?** அருமை ரட்சகரின் பரிசுத்த மாதிரியைப் பின்பற்றி நடக்கப் பிரயாசப்படுகிறதினால் பாவமான மாம்ச இச்சைகளை வெறுக்கலாம். கிறிஸ்துவானவர் தமது பிரியத்தின்படியல்ல, தமது பிதாவின் சித்தத்தின்படியே எப்போதும் நடந்து வந்தார். அப்படியே நாமும் நமது மாம்சமும், மனசும் விரும்புகிறவைகளுக்கு இடங்கொடாமல் தேவசித்தத்துக்கு முழுவதும் இணங்கி நடக்க வேண்டும் 'கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்' (**கலா.** 5: 24). இதற்கு நமது சுயபெலன் போதாது. ஜெபத்தினால், பரிசுத்த **ஆவி**யைப் பெற்று, அவருடைய உதவியால் நமது சுய இஷ்டத்தை வெறுத்து, தேவ சித்தத்தை நிறைவேற்றி வரவேண்டும்.

**ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள்; அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்'** கலா. 5: 16.

## உன் கண்கள் இச்சியாதிருப்பதாக

ஒரு வர்த்தகனுக்கு ஒரே மகன் இருந்தான். அவனுக்குப் பதினாறு வயதாயிருக்கும்போது ஒருநாள் மலையிலுள்ள காட்சிகளைக் கண்டு களிகூரும்படி விரும்பினான். அதற்காக நன்றாய் வழிதெரிந்த ஒரு ஆளையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டான். அநேக மயில்தூரம் வண்டிப்பிரயாணம் செய்து கடைசியில் மலையடிவாரத்தில் வந்துசேர்ந்தான். அங்கே வண்டியை நிறுத்திவிட்டு இருவரும் மலையில் ஏறினார்கள். மலையில் அவன் கண்ட ஒவ்வொரு காட்சியும் அவன் மனதுக்கு அதிகசந்தோஷத்தைக் கொடுத்தது கடைசியாக மலையின் உச்சிக்கு வந்து சேர்ந்தான். அந்த இடத்திலிருந்து மலை முழுவதையும் தாராளமாய்ப் பார்க்கலாம். அப்படி அவன் பார்த்துக் கொண்டு நிற்கையில் சற்று தூரத்தில், மலைச்சரிவிலே அழகான ஒரு புஷ்பத்தைக் கண்டான். அந்தப் பூவைக் கண்டவுடனே அவன் ஆசை முழுவ



தும் அதின்மேல் சென்றது. எப்படியும் அந்தப் பூவைப் பிடுங்கி, வீட்டுக்குக் கொண்டுபோக வேண்டும் என்று நினைத்து, அது இருக்கும் திசைக்கு நேரே போனான். இதைக் கவனித்த அவனுடைய வழிகாட்டி, அவனைத் தடுத்து, 'நீ செய்யப்போகும் வேலை மகா பயங்கரமானது. நீ நினைக்கிறபடி அந்தப் பூஞ்செடி தரையின்மேல் அல்ல, கெடுபாதாளத்தின்மேல் படர்ந்திருக்கிறது. நீ அதின் கிட்டப்போனால் படுகுழியில் விழுந்து மோசம் ஆவாய்' என்றான். வர்த்தகன் மகனோ அந்த ஆலோசனையைக் கேட்கவில்லை. பூவின் அழகு அவன் கண்களை மயக்கி, அவன் மனதை முழுவதும் கவர்ந்து கொண்டது. எப்படியாவது அதைப் பறிக்கவேண்டும் என்று விரும்பினான். அந்த நல்ல வழிகாட்டி அவனை மல்லுக்கட்டி இழுத்துப் பார்த்தான். வாலிபன் அவனைத் தட்டிவிட்டு பூவைப் பிடுங்கவேண்டுமென்ற ஆசையால் பூவின் கிட்டப்போய்விட்டான். ஆனால் ஐயோ, பரிதாபம்! பூ அவன் கையில் கிட்டவில்லை. பூவைப் பறிக்க இன்னம் ஒரு அடிமாத்திரம் எடுத்து வைத்தால் போதும். அதற்குள், அதோகதியாய்க் கீழே இருந்த பெரியபாதாளத்தில் விழுந்து நொறுங்கிப்போனான். தங்கள் மாம்சமும் மனசும் விரும்பினவைகளுக்கு இடங்கொடுக்கிறவர்கள் இப்படியே கெட்டு நரக பாதாளம் போய்ச் சேருவார்கள்.

## மறதி

ஒரு வீட்டிலே **வயலெற்** என்று பெயருள்ள ஒரு பிள்ளை இருந்தாள். இவள் மகா சோம்பேறி, எதையும் லேசாய் மறந்துவிடுவாள். கவனம், சுறுசுறுப்பு முதலிய நற்குணங்கள் இவளிடத்தில் கடுகளவும் கிடையாது. என் மகளுடைய மறதியும் சோம்பலும் என்றைக்கு நீங்குமோ என்று அவளுடைய தாய் அடிக்கடி துக்கப்படுவாள். தாய் பல காரியங்களைச் செய்யும்படி அவளுக்குச் சொல்லுவாள். அவைகளைச் செய்தாயா என்று அப்புறம் கேட்டால் நான் மறந்துபோனேன் என்பாள். அவள் மூலமாய் யாருக்காவது செய்தி சொல்லி அனுப்பிவிட்டுப் பின்பு கேட்டால் நான் சொல்ல மறந்துவிட்டேன் என்பாள்.

அவள் ஒரு அழகான குருவியை அதிக அருமையாய் வளர்த்து வந்தாள். அது அழகான மஞ்சள் நிறமான குருவி; அவள் கையிலிருந்து சந்தோஷமாய்த் தானியம் கொத்திச் சாப்பிடும். அவளுடைய தோளிலிருந்து இனிமையாய்ப் பாட்டுப்பாடும். அவளுடைய மடிக்குள்ளே நுழைந்து படுத்துக் கொள்ளும். தோட்டத்திலிருந்த தண்ணீர்த் தொட்டியிற்போய் மூழ்கிக் குளித்து பின்பு வீடு முழுவதும் பாடிக்கொண்டு திரிந்து ஆகாரஞ் சாப்பிட்டு விட்டு தன் கூட்டுக்குட்போய் உட்கார்ந்துகொள்ளும். வயலெற் அதை அதிகமாய் நேசித்து வந்தாள். அதைக் காணாமல் கொஞ்ச நேரமாகிலுமிருக்க மாட்டாள்.

ஒரு நாள் வயலெற் தன் தாயிடம் தனக்கு ஒரு பூனைக்குட்டி வேண்டுமென்று கேட்டாள். தாய் அவளைப் பார்த்து 'நீ மறதியுள்ள பிள்ளை; ஒரு பூனைக்குட்டியை உனக்குக் கொடுத்தால் உன்னுடைய குருவியை அது

கடித்துக் கொன்று போடும்படி கவலையீனமாய் விட்டுவிடுவாய்' என்றாள். அவளோ வெகு கவலையாயிருப்பேனென்று வாக்குப்பண்ணி ஒரு பூனைக் குட்டியைப் பெற்றுக்கொண்டாள். ஆனால் ஒருநாளில் வழக்கம்போல மறந்து போய், குருவியிருந்த அறையின் கதவைத் திறந்து போட்டுவிட்டு, தோட்டத்துக்குள்போய், அதற்குத் தானியம் பொறுக்கிக்கொண்டிருந்தாள். ஒரு மணி நேரமாய்த் தன் குருவியை நினைக்கவில்லை. திடீரெனக் கதவைத் திறந்து போட்டுவிட்ட ஞாபகம் வந்தது. இவள் விரைவாய் வீட்டிற்கு ஓடி வந்தாள். ஆனால் அவளுடைய பூனை அந்தக் குருவியைக்கொன்று போட்டது. அவளுடைய சின்ன சகோதரன் செத்த குருவியைக் கையிலெடுத்துக்கொண்டு அவளிடம் ஓடிவந்து: ஐயோ, வயலெற் என் உன்னுடைய அறையின் கதவைத் திறந்து வைத்துவிட்டுப் போனாய்; பூனை குருவியைக் கொன்றுபோட்டதேயென்று சொன்னான். வழக்கம்போல அவள்: ஐயோ, மறந்து போனேனே என்று சொன்னாள். அவள் சாப்பிடப்போன போது அதிக துக்கத்தோடே போனாள். அவளுடைய தாய் அதிகமாய் அவளைக் கண்டித்தாள். தகப்பன் கோபத்தோடே எட்டிப்பார்த்தார். சாப்பிட்டு முடிந்தபின் தகப்பனார் அந்தக் குருவியை எடுத்து, அதன் தோலை இறக்கைகளோடு கவலையாய் உரித்து, உமிவைத்துத் தைத்து அதன் கழுத்தில் '**வயலெற் மறந்து போனபடியினால் நான் செத்தேன்**' என்று ஒரு சீட்டில் எழுதி, தொங்கவைத்து, அதை அவள் மேசையின்மேல் வைத்தார். வயலெற் அதைப் பார்த்து எச்சரிப்படைந்து, அதிகமாய் ஜெபித்து, தேவ உதவியைப் பெற்று, மறதிக்குணத்தினின்று விடுதலையடைந்தாள். பிள்ளைகளே! உங்கள் ஆத்துமா அந்தக் குருவியைப்போலிருக்கிறது. நீங்கள் சோம்பல், பெருந்தீனி, சுயநயம் முதலிய பாவமான மாம்ச இச்சைகளுக்கு இடங்கொடுக்கும்போது, உங்கள் ஆத்துமா பிசாசின் கையில் சிக்கிக்கொள்ளுகிறது. ஆகையால் பாவ சோதனைகளுக்கு இடங்கொடாமல் அதிக கவலையாயிருங்கள். மேலும் ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் வேதம் வாசித்து, ஜெபம் பண்ண மறந்துவிடாதே. தங்கவாக்கியத்தைப் பாராமல் படிக்க மறவாதே. நாள் முழுவதும் அதை ஞாபகத்தில் வைக்கத் தவறாதே.

---

**கவனிப்பு.** கர்த்தருக்குச் சித்தமானால் நமது வருஷாந்தரப் பரீட்சை வழக்கம்போல் நாளது நவம்பர், டிசம்பர் மாசங்களில் நடத்தப்படும்.

**பாடங்கள்.**
1. பாலர்தூதனில் குறிப்பிட்டிருக்கும் வேதாகமப்பாகங்கள்
2. தங்கவாக்கியங்களும், அவைகளின் சந்தர்ப்பங்களும்
3. பாலர்தூதனிலுள்ள போதனைகளும் சரித்திரங்களும்
4. திருச்சபை ஞானோபதேச வினாவிடை.

---

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

✠

The

# Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32

Vol. XI. அக்ற்றோபர் 1916 No. 10.

## கிறிஸ்தவ விசுவாசம்.

'நான் கிறிஸ்துமார்க்கச் சத்தியங்கள் எல்லாவற்றையும் விசுவாசிப்பேன்.'

**தங்கவாக்கியம்:**—"பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டும்". யூதா. 3.

நமது ஞானஸ்நான உடன்படிக்கையின்படி நமது கடமைகள் மூன்று:-

(1) பிசாசு, உலகம், மாம்சம் இவைகளை வெறுத்தல், (2) கிறிஸ்து மார்க்க சத்தியங்கள் எல்லாவற்றையும் விசுவாசித்தல், (3) ஜீவகாலமெல்லாம் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல். இவைகளில் நமது முதலாவது கடமையைப்பற்றி இதற்குமுன் கவனித்திருக்கிறோம். நமது இரண்டாவது கடமையைப்பற்றி இப்பொழுது கவனிப்போம்.

1. **கிறிஸ்துமார்க்க சத்தியங்கள் என்றால் என்ன?** கிறிஸ்தவர்கள் எல்லாரும் விசுவாசிக்கவேண்டிய சத்தியங்களே கிறிஸ்துமார்க்க சத்தியங்கள். நாம் விசுவாசிக்கிற சத்தியங்களுக்கும் நமது நடக்கைக்கும் சம்மந்தம் உண்டு. பழுதற்ற விசுவாசம் பழுதற்ற நடக்கைக்கும், பழுதுள்ள விசுவாசம் பழுதுள்ள நடக்கைக்கும் ஏவும். ஆகையால் நாம் விசுவாசிக்கிற சத்தியங்கள் சரியான சத்தியங்களாயிருக்கவேண்டும். அவைகளை நாம் இலேசாய் அறிந்துகொள்ளத்தக்கதாக நமது தாயாகிய திருச்சபை அவைகளை எளிதான நடையில் நமக்கு எழுதித் தந்திருக்கிறது. அவைகள் விசுவாசப்பிரமாணத்தில் அடங்கியிருக்கிறது. நாம் விசுவாசிக்கவேண்டிய சத்தியங்களை சுருக்கமாயும் தெளிவாயும் காட்டுகிற முறையே விசுவாசப்பிரமாணம்.

நமது ஜெபபுஸ்தகத்தில் கண்டிருக்கிறபடி மூன்று விசுவாசப்பிரமாணங்கள் உண்டு. அவையாவன:— (1) அப்போஸ்தலருடைய விசுவாசப்

4
10-11-16

பிரமாணம், (2) நிசேயா விசுவாசப்பிரமாணம், (3) பரிசுத்த அதநாஷியஸ் என்பவரின் விசுவாசப்பிரமாணம்.

இவைகளில் அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தை காலே, மாலை ஆராதனைகளில் ஒவ்வொருநாளும் சொல்லுகிறோம். அப்போஸ்தலர் போதித்த உபதேசங்கள் இதில் அடங்கியிருப்பதால், இது அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணம் என்று அழைக்கப்படுகிறது. பிந்தினது இரண்டும் இந்த விசுவாசப் பிரமாணத்தின் விஸ்தரிப்பு என்று சொல்லலாம். மூன்றின் பொருளும் ஒன்றே. கள்ளப்போதகர்கள் எழும்பி, தப்பிதமான உபதேசங்களைப் போதித்தார்கள். அப்படிப்பட்ட தப்பிதமான உபதேசங்களைக்கண்டிக்கும்படி பிந்தினது இரண்டும் எழுதப்பட்டன.

**நிசேயா விசுவாசப்பிரமாணத்தை** பரிசுத்த நற்கருணை ஆராதனையில் சொல்லுகிறோம். **நிசேயா** பட்டணத்தில் கூடிய பொதுவான சங்கத்தில் இது வாசித்து ஒப்புக்கொள்ளப்பட்டபடியால் இது நிசேயா விசுவாசப்பிரமாணம் என்று சொல்லப்படுகிறது.

**பரிசுத்த அதநாஷியஸ்** என்பவரின் விசுவாசப்பிரமாணத்தை, வருஷத்தில் பதிமூன்று தடவை, சில திருநாட்களில், காலைஜெபம் செய்யும்போது, அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்துக்குப் பதிலாகச் சொல்லுகிறோம். கள்ளப்போதகர்களுக்கு விரோதமாய், பரி: அதநாஷியஸ் என்பவர் போதித்த சுத்த உபதேசங்கள், அவர் போதித்த விதமாய் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அது பரி: அதநாஷியஸ் என்பவரின் விசுவாசப்பிரமாணம் என்று சொல்லப்படுகிறது.

(2) **விசுவாசிக்கிறேன்என்றால் என்ன?** நிசம் என்று ஒப்புக்கொள்ளுகிறேன் என்று அர்த்தம். விசுவாசப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிற ஒவ்வொன்றையும் நாம் நிசம் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். அவைகளில் நாம் நினைத்தபிரகாரம் சிலவற்றை ஒப்புக்கொண்டு, மற்றவைகளைத் தள்ளிவிடுவது கூடாது. அவைகள் நமது புத்திக்கு விளங்கினாலும், விளங்காவிட்டாலும் அவைகளை நிசம் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். கிறிஸ்து மார்க்க சத்தியங்கள் எல்லாம் பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியிருக்கிறதினாலே நாம் அவைகளை எல்லாம் விசுவாசிக்கவேண்டும்.

**"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு."** (எபே. 2. 8.)

---

## விசுவாசத்துக்கு ஒரு திருஷ்டாந்தம்.

1857-ம் வருஷத்தில் நமது தேசத்துச்சிப்பாய்களில் அநேகம் ஆயிரம் பேர் இராஜ துரோகஞ்செய்து, கலகம் பண்ணினார்கள். அப்போது நம்மை ஆண்டது **விக்டோரியா இராஜாத்தி.** அவர்களுடைய உப்பைத்தின்று சம்பளம் வாங்கின அந்தத் துரோகிகள் அவர்களுடைய அதிகாரத்தைத் தள்ளி, ஆயுத சாலைகளைக் கொள்ளையிட்டு, ஸ்திரீ, புருஷர், குழந்தைகள் அநேகரைக் கொன்று போட்டார்கள்.



அப்போது இராணியவர்கள் தமது சேனையை அனுப்பி, டில்லிபட்டணத்திலும், பற்பல இடங்களிலும் அந்தத் துரோகிகளை முற்றிகை செய்து, அவர்களை ஜெயித்து, நொறுக்கிச் சிதறடித்துப்போட்டார்கள். பின்பு சிதறிப் போனவர்கள் முற்றுங் கெட்டுப்போகாதபடிக்கு அவர்களுக்கு மகா இரக்கமுள்ள விளம்பரம் பண்ணினார்கள்.

எப்படியென்றால், ஒரு நாளைக்குறித்து, அந்த நாளுக்குள்ளாக எத்தனை பேர் தங்கள் துரோகத்தை விட்டு,விட்டு மன்னிப்புக் கேட்பார்களோ, அவர்களுக்கு மன்னிப்புத் தருவோம். எவர்கள் அந்த நாளுக்குள்ளாக மன்னிப்புக் கேளாமல், கலகத்திலே நிலைகொண்டு, தங்கள் ஆயுதங்களோடு அகப்படுவார்களோ, அவர்களுக்கு இரக்கங்கிடையாது. மன்னிப்புக்காக வாருங்கள் என்பதாய் விளம்பரம்பண்ணி தேசம் எங்கும் கூறி அறிவிக்க வேண்டுமென்று இராணியவர்கள் சித்தம் இரங்கினார்கள்.

அப்போது சிலர் இ ரா ணி ய வ ர் க ள் விளம்பரத்தைக்கேட்டு, அதில் சொல்லியிருக்கிறபடியெல்லாம் இராணியவர்கள் செய்வார்கள் என்று நம்பி, தங்கள் கலகத்தைவிட்டு விட்டு, தங்கள் ஆயுதங்களை ஒபபுக்கொடுத்து, மன்னிப்புக்கேட்க வந்தார்கள். அவர்கள் இராணியவர்களை விசுவாசித்தவர்கள் என்று சொல்ல வேண்டும். அவர்கள் மன்னிப்புப்பெற்று, உயிரோடே காப்பாற்றப்பட்டார்கள். ஆதலால் அவர்கள் **இராணியவர்களுடைய கிருபையினாலே, தங்களுடைய விசுவாசத்தின் மூலமாய்ப் பிழைத்தார்கள்** என்று சொல்ல வேண்டும்.

---

## அவஸ்தைப்பட்ட இருவரில் ஒருவன் மற்றவனைத் தேற்றினான்

ஒருகாலத்தில் ஒரு யுத்தம் நடந்தது. அதில் திரளான ஜனங்கள் நாசமடைந்தார்கள். இரண்டு பட்டாளத்து உத்தியோகஸ்தரும் படுகாயப்பட்டு ஒருவர் பக்கத்தில் ஒருவர் கிடந்தார்கள். அவர்களில் ஒருவன் வேதனை பொறுக்கமாட்டாமல் சத்தமிட்டான். மற்றவன் அதைக்கேட்டு, அவனை நோக்கி: "சிநேகிதனே, நீர் யாராயிருந்தாலும் சரி, நமது ரட்சகர் சிலுவையில் மரித்து உயிரோடெழுந்தார் என்பதையும், நமக்கும் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் பாவமன்னிப்பும், சரீர உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்பதையும் மறந்துவிடாதேயும். காயப்பட்ட என் கால்களைப்பாரும், [illegible] களே இப்போது என்னை ஆறுதல் படுத்துகிறது" என்று சொல்லி அவனை ஆறுதல் படுத்தினான். கொஞ்ச நேரத்தில் இரண்டு பேரும் சந்தோஷமாய் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

## பரிசுத்த வேதாகமத்தின் மாட்சிமை.

பிரியமான பிள்ளையே! இதின் அடியில் அச்சிட்டிருக்கிற பாட்டில் பரிசுத்த வேதாகமத்தினால் நமக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளைக் காட்டியிருக்கிறது. அதில் சொல்லியிருக்கிறபடி வேதமானது: 1-வது ஞான ஆகாரம். (எரே. 15: 16). நீ அதை நித்தமும் வாசித்துத் தியானித்து, உன் ஆத்துமாவுக்கு அதை ஆகாரமாக்கிக்கொள்ளவேண்டும். 2-வது: அது ஞான தீபம். (சங். 119: 105) அதின் வெளிச்சத்திலே நீ நித்தமும் நடந்துவரவேண்டும். 3-வது: அது ஞான ஆயுதம். (எபே. 6. 17.) பாவசோதனை நேரிடும்போது நீ அதைக்கொண்டே சாத்தானை ஜெயிக்கவேண்டும் 4-வது: அது ஞானக்கண்ணாடி. நீ அதின் மூலமாய் இயேசுவைப்பார்க்கலாம். உன் சொந்த நிலைமையைப்பார்த்து சீர்திருத்திக்கொள்ளலாம். இந்நான்கு பொருளும் அடங்கிய இந்தப்பாட்டை மனப்பாடம் செய்துகொள்வது உனக்குப் பிரயோஜனமாயிருக்கும்.

### பாட்டு.

**பல்லவி.**

சத்திய வேதத்தை நித்தமும் தியானியும்
நித்திய ஜீவனுமக் கங்குண்டு நிச்சயம்.

**சரணங்கள்.**

1. பாலரே பாரில்நற் பாலுமக் கதுவாகும்
சாலவே ஞாலத்தில் ஜீவனுமக் கீந்திடும் —சத்.

2. ஆவியின் பட்டயம் அமர்புரி ஆயுதம்
தாவிகைப் பற்றியே சாத்தானைச் சிதைத்திடும் —சத்.

3. இருள்தனை யோட்டிட ஏற்ற ஞானதீபமே
மருள்தனை மாற்றிட மா மெஞ்ஞான தீபமே —சத்.

4. பாவியின் நிலைமையைக் காட்டும் கண்ணாடியாம்
பாவநாசரன்பைப் பகரும் கண்ணாடியாம் —சத்.

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. M. G. Children's Mission.

OFFICE OF THE REGISTRAR ... 2 - DEC 1916 ... MADRAS.

The
# Children's Herald
# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XI. நவம்பர் 1916. No. 11.

## நெகேமியா.

"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" நீதி. 3: 6.

சுமார் 2300 வருஷங்களுக்கு முன்னே, பாரசீக தேசத்துராஜ அரண்மனையில் ஓர் யூதப்பிரபு ஆடம்பரமான வஸ்திரம் தரித்து அங்குமிங்கும் உலாவுகிறார். அவர் முகத்தில் சந்தோஷமே இல்லை. ஏன்? அன்று அவருடைய சகோதரனாகிய ஆனானி என்பவன் எருசலேமிலிருந்து வந்து தங்கள் பிதாக்களின் நகரம் பாழாய்க் கிடக்கிறதென்று அறிவித்தான். அதினால் தான் அவர் துக்கமாயிருக்கிறார். இவர் யார்? இவர்தான் நெகேமியா என்ற தேசாபிமானி.

நான்கு மாசங்களுக்குப்பின் அதே அரண்மனையைப் பார்ப்போம். அர்தசஷ்டா ராஜா போஜனபானம் பண்ணிக்கொண்டிருக்கிறார். நெகேமியா அவருக்கு பானம் கொடுக்கிறார். அவர் முகம் துக்கமாயிருக்கிறதை ராஜா கவனித்து விட்டார். "நீ துக்கமாயிருக்கிறதென்ன?" என்று ராஜா கேட்கிறார். என் பிதாக்களின் நகரம் பாழாய்க் கிடப்பதினால் தான் என்று நெகேமியா உத்தரவு சொன்னார். அப்படியானால் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று ராஜா கேட்டார். அதற்கு உத்தரவு சொல்லு முன், நெகேமியா தேவனை நோக்கி தன் மனதில் ஜெபித்தார். அந்தச் சின்ன ஜெபம் உடனே பரலோகத்துக்கு எட்டினது. எருசலேமுக்குப் போய் அதின் அலங்கத்தைக் கட்டுவதற்கு நெகேமியா உத்தரவு கேட்டார். இராஜா உடனே சம்மதம் கொடுத்தார். நாம் எதைச் செய்தாலும் ஜெபசிந்தையோடு துவக்கினால் நிச்சயமாகவே காரியம் சித்தியாகும்.

நெகேமியா எருசலேமுக்கு வந்தார். தமது ஜனங்களை உற்சாகப்படுத்தி அலங்கத்தைக் கட்டத்துவக்கினார். சத்துருக்கள் அவரைப் பகைத்து, பரியாசம்பண்ணி, தீமைசெய்ய ஆரம்பித்தார்கள். இராஜ அனுமதி பெற்று அவர் வந்தது அவர்களுக்கு விசனமாயிருந்தது. (2. 10) அலங்கத்தைக் கட்டுவது அவர்களுக்கு எரிச்சலாயிருந்தது. (4. 7) இடையூறு செய்தார்கள் (4. 8) ஆனால் நெகேமியா ஜனங்களைப் பார்த்து "அவர்களுக்குப் பயப்படாதிருங்கள். நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினையுங்கள் (4. 14) என்று சொல்லி, ஜனங்களை உற்சாகப்படுத்தினார். வேலை வளர்ந்தேறிற்று, தேவனை நினைத்து அவரை நம்புவதினால் மாத்திரம் சத்துருவுக்கு நாம் பயப்படாதிருக்கலாம். தங்களைக் காக்கக் கர்த்தர் தங்களோடிருக்கிறார் என்பதை மறந்துவிடுவதினாலேயே பிள்ளைகள் பலசமயங்களில் பயத்துக்கு இடங்கொடுத்துப் பாவத்துக்கு உட்படுகிறார்கள்.

இன்னோர் நாள் நெகேமியா தன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறார். சத்துரு எழுதின ஒரு கடிதம் அவருக்கு வந்தது. அதிலே "நாம் ஓனோப் பள்ளத்தாக்கிலே ஒருவரையொருவர் கண்டு பேசுவோம் வாரும்" என்று எழுதியிருந்தது. தீமை செய்வதற்காக சிநேகம் பாராட்டி சத்துருக்கள் அவரை அழைத்தார்கள். "நான் பெரிய வேலையைச் செய்கிறேன். நான் வரக்கூடாது" (6. 3) என்று தைரியமாய்ச் சொல்லி அனுப்பி விட்டார். பாவசோதனை நேரிடும்போது நீ தைரியமாய் கூடாது என்று சொல்வாயா? பெரியவேலை 52 நாள்களுக்குள் முடிந்து விட்டது. இந்தக் கிரியை தேவனால் கைகூடிவந்ததென்று சத்துருக்கள் அறிந்தார்கள் (6. 16)

இதன்பின் ஒருநாள் காலையில் ஒரு பெரிய விசேஷத்திற்கென்று திரள் ஜனங்கள் கூடிவந்தார்கள். எஸ்றா கர்த்தருடைய புஸ்தகத்தை வாசித்தார். காலமே தொடங்கி மத்தியானமட்டும் வாசிக்கப்பட்டது. சகல ஜனங்களும் கவனமாய்ச் செவிகொடுத்தார்கள். (8. 3) தேவவசனத்தைக் கேட்க மறுநாளிலும் கூடி வந்தார்கள். முதலாம்நாள் தொடங்கி கடைசிநாள் மட்டும் ஏழுநாளும் தினம் தினம் தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகம் வாசிக்கப்பட்டது. ஜனங்கள் சோர்ந்து போகவுமில்லை தவிப்படையவுமில்லை. ஐயோ! பாலியர் மிஷனைச்சேர்ந்த எத்தனை சிறுவர் தேவவசனத்தின் மேல் தாகமற்றவர்களாயிருக்கிறார்கள்! அந்தப் பரிசுத்த வசனம் முதலாவது ஜனங்களை அழச்செய்தது. அப்புறம் சந்தோஷப்படுத்தினது. (8. 9—12) தேவ வசனத்தினால் நீ பாவ உணர்வடைந்து துக்கப்பட்டதுண்டா? பாவமன்னிப்பாகிய மெய்ச்சமாதானத்தை அதின் மூலமாய்க் கண்டடைந்திருக்கிறாயா?

இப்படியாக நெகேமியாவுடைய இரண்டு பெரிய வேலைகளும் செய்து முடிந்தது. 1-வது அலங்கத்தின் வேலை. 2-வது ஜனங்களை தேவனிடத்திற்குத் திருப்புகிற வேலை. இன்னம் பலவேலைகளும் அவரால்



செய்யப்பட்டன, ஐசுவரியவான்களுடைய கொடுமையினின்று எளியவர்களை விடுவித்தார். (அதி. 5.) தேவாலயத்தைச் சுத்திகரித்தார் (13. 7—9) தேவாராதனை சரிவர நடக்க ஒழுங்கு செய்தார். (13. 10—14) ஓய்வுநாள் மீறுதலை ஒழித்துவிட்டார். (13. 15—22) அஞ்ஞானக் கலியாணங்களை அகற்றினார். (13. 23—31).

கடைசியாக ஒரு காரியத்தை மட்டும் சொல்லி முடிப்போம். நெகேமியா எல்லாவற்றிலும் கர்த்தரையே முக்கியப்படுத்துகிறவராயிருந்தார். உபத்திரம் நேரிடும்போது பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபிக்கிறார். (1. 4) க்ஷேமம் வரும்போது "என் தேவனுடைய கரம் என்மேல் இருந்தபடியால்" (2. 8) என்கிறார். தளர்ச்சியடையும்போது "தேவனே, என் கைகளைத் திடப்படுத்தியருளும்" (6. 9) என்று ஜெபிக்கிறார். சத்துருக்கள் பயமுறுத்தும்போது "நம்முடைய தேவன் நமக்காக யுத்தம் பண்ணுவார்" (4. 20) என்கிறார். எந்த நல்ல வேலையைச் செய்தாலும் "தேவனே என்னை நினைத்தருளும்" என்கிறார். நாமும் இவ்விதமாய் தேவனைச் சார்ந்துகொள்வோமாக.

## விசுவாசம்.

ஹாலந்து தேசத்தில் ஒரு ஏழை விதவை இருந்தாள். ஒருநாள் இரவு அவளுடைய பிள்ளைகள் பசியால் வருந்தி, சாப்பாடு கேட்டார்கள். அவள் கண்ணீர் வடித்து, தன் பிள்ளைகளைப் பார்த்து, "என் அருமைப் பிள்ளைகளே, வீட்டில் ஒன்றும் இல்லையே, நான் என்ன செய்வேன்!" என்றாள். அப்பால் அவள் தன் பிள்ளைகளைக்கூட்டி வைத்து "ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக்கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்" (சங். 50. 15) என்று வரும் சங்கீதத்தை வாசித்து, ஜெபம் பண்ணினாள். ஜெபம் முடிந்தவுடன் அவளுடைய மூத்தமகன் "அம்மா, எலியா பசியாயிருந்தபோது தேவன் காகங்களைக்கொண்டு அவருக்கு ஆகாரம் கொடுத்தார் அல்லவா?" என்று கேட்டான், "ஆம், மகனே" என்றாள் தாய். உடனே பையன் நமக்கும் அவைகள் ஆகாரம் கொண்டுவரத்தக்கதாக நாம் வாசலைத் திறந்து வைக்கவேண்டும் என்று சொல்லி, வீட்டுக்கதவைத் திறந்து வைத்தான். வீட்டிலுள்ள வெளிச்சம் தெருவின் அடுத்த பக்கத்துச் சுவரில் பிரகாசித்தது. அச்சமயத்தில் பட்டணத்து அதிகாரி அந்த வழியே வந்தார். அவ்வீட்டுக் கதவு திறந்திருப்பதற்காக ஆச்சரியப்பட்டார். வீட்டுக்குள் போனார். "இந்தக் குளிர்ச்சியான நேரத்தில் ஏன் கதவைத் திறந்து வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "நாங்கள் பசியாயிருக்கிறோம், காகங்கள் ஆகாரம் கொண்டு வருகிறதற்காகக் கதவைத் திறந்து வைத்திருக்கிறோம்" என்றான் சிறுவன். அவர்களுடைய [illegible] அறிந்துகொண்ட அதிகாரி "என் சிறுபையனே, உங்களுக்கு ஆகாரம் கொடுக்கும்படி கர்த்தர் ஏற்கனவே ஒரு காகத்தை அனுப்பிவிட்டார். பயப்படாதே; என் பின்னே வா" என்று சொல்லி, அவனைக்கூட்டிக்

கொண்டுபோய், ஒரு கூடை நிறைய ரொட்டி, பழம், வெண்ணெய் முதலிய ஆகாரம் கொடுத்து அனுப்பினார். பையன் அதிக நன்றியறிதலோடு வாங்கி வந்தான். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். திரும்பவும் ஓர் முறை பையன் கதவைத்திறந்து வெளியே வந்து, வானத்தை அண்ணாந்து பார்த்து "பரலோகத்திலிருக்கிற எங்கள் நல்ல பிதாவே நீர் அனுப்பின ஆகாரத்துக்காக உமக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லி தேவனைத் துதித்தான்.

## சிறு நக்ஷத்திரம்.

பென்னி என்ற சிறு பெண் தன் பாட்டனாரை அதிகமாய் நேசித்தாள். ஒருநாள் அவள் அவரைப் பார்த்து "பாட்டையா, என் கதையை உங்களுக்கு வாசித்துக் காட்டட்டுமா?" என்று கேட்டாள். என் கதை என்று அவள் சொன்னது அவளுடைய சொந்தச் சரித்திரத்தையல்ல. 'இயேசுவானவர் பெத்லெகேமில் பிறந்தபொழுது கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்தார்கள்' என்று தொடங்கி பரி. மத்தேயு 2-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் சரித்திரத்தையே "என் கதை" என்று அவள் சொன்னாள். ஏனென்றால் அந்தச் சரித்திரம் அவளுக்கு அதிகப்பிரியமாயிருந்தது. அவள் அதை வாசித்துக் காட்டினபின் "பாட்டையா, நீங்கள் ஒரு சாஸ்திரி என்று வைத்துக்கொள்வோம். இயேசு சுவாமியை வணங்குவதற்கு அந்த சாஸ்திரிகளைப்போல நீங்கள் நெடுந்தூரம் பிரயாணம் செய்ய வேண்டியதில்லை. இயேசு சுவாமி எப்போதும் நமது பக்கத்தில் இருக்கிறார். இந்த இடத்திலேயே நீங்கள் அவரைத்தொழுதுகொள்ளலாம்" என்றாள். இவ்வளவு காலமாய் இயேசுவைப்பற்றி நினையாத அந்த மனிதன் இந்த சிறுமியின் வார்த்தைகளால் உணர்வடைந்து இயேசுவின் தாசன் ஆனான்.

சில மாசங்களுக்குப் பின் அந்தப் பெரியவர் வியாதிப் படுக்கையில் இருந்தார். அவருடைய மரணநேரம் கிட்டியிருந்தது. குடும்பத்தார் அவரை வழியனுப்பிக்கொள்ளும் பாவனையாய் அந்தப் படுக்கையைச் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் அப்பெரியவர் சில ஆலோசனைகள் சொல்லி முடித்தார். சின்ன பென்னி அவர் முன்பாக நின்றுகொண்டிருந்தாள். அவர் அவளைப்பார்த்து "என் பிரியபெ[illegible] இயேசு சுவாமியை நான் முகமுகமாய் தரிசித்தவுடனே, நீ என்னுடைய நக்ஷத்திரமாயிருந்தாய் என்பதை அவருக்குச் சொல்லுவேன்" என்றார். "நான் எப்படி உங்களுக்கு நக்ஷத்திரமாயிருந்தேன்?" என்று அச்சிறுமி கேட்டாள். "என் அருமையான பிள்ளையே, நீ அன்று வாசித்துக் காட்டினபடி அந்த நக்ஷத்திரம் சாஸ்திரிகளை இயேசுவினிடம் வழிநடத்தினது போல [illegible] அவரிடம் வழிநடத்திவிட்டாய்" என்றார் அப்பெரியவர்.

---

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

14 AUG 1917 MADRAS

# The Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XII. ஜனுவரி 1917. No. 1.

நமது அருமை அத்தியக்ஷரவர்களின்

## நவவருடக் கடிதம்.

என் அருமையான பிள்ளைகளே,

1917-ம் வருஷம் உங்களுக்குப் பாக்கியமும் சந்தோஷமுமான வருஷமாயிருக்குமென்று நம்புகிறேன். யுத்தத்தின் கொடுமையினால் அநேகம் பிள்ளைகள் இக்காலத்தில் துக்கம் அடைந்திருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவர்களில் பலருக்குச் சாப்பிட ஆகாரம் இல்லை. அவர்கள் வீடுகள் பாழாக்கப்பட்டன. அநேகருடைய தகப்பன்மார், அண்ணன்மார் யுத்தத்தில் மாண்டுபோனார்கள். அவர்களை ஆற்றித் தேற்றிக் காப்பாற்றும்படியாகவும், இந்தக் கொடிய யுத்தம் சீக்கிரம் முடியும்படியாகவும்; உலகத்திலுள்ள ஆண்கள், பெண்கள் யாவரும் அவருடைய சித்தத்தின்படி நடந்து, அவருக்கு ஊழியஞ்செய்யும்படியாகவும் நமது பரம பிதாவை நோக்கி நாம் ஜெபம்பண்ணவேண்டியது நமது கடமை.

பரிசுத்த வேதாகமத்தை ஒழுங்காய் வாசித்துவர ஒத்தாசைசெய்யும் ஒரு சங்கத்தை நீங்கள் சேர்ந்திருக்கிறீர்கள். ஆகையால் இவ்வருஷத்தில் உங்கள் மனதில் வைத்து சிந்திக்கத்தக்கதாக ஒரு காரியத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அதென்னவெனில்:—பரிசுத்த வேதாகமத்தில் பல வித்தியாசமான ஆட்களைப்பற்றி நீங்கள் வாசிப்பீர்கள். அவர்களில் சிலர் ஆண்டவரைச் சேவிக்கப் பிரயாசப்பட்டவர்கள். மற்றவர்கள் அவ்விதம் பிரயாசப்படாதவர்கள். ஆண்டவரைச் சேவிக்கப் பிரயாசப்படாதவர்கள் பொல்லாதவர்கள் என்னப்படுகிறார்கள். ஆனால் அவருக்கு ஊழியஞ்செய்யப் பிரயாசப்பட்டவர்கள்தான் நமக்கு நல்ல மாதிரிகள். அவர்களுடைய ஜீவியத்தினாலே நாமும் ஆண்டவருக்காக எப்படி வேலை

30-1-17

செய்யவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ளலாம். சிலவேளை பிள்ளைகளிடத்தில் 'தேவனுக்காக நாம் செய்யவேண்டிய வேலை என்ன'? என்று கேட்கும்போது அவர்கள் பிரசங்கிப்பதும், ஜெபிப்பதுமே நாம் செய்ய வேண்டிய வேலை என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் பிரசங்கம் பண்ண ஏலாத சிறுவர் ஆண்டவருக்காக ஒன்றும் செய்ய முடியாதல்லவா? வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற நல்லவர்களை நீங்கள் கவனித்துப் பார்ப்பீர்களானால் அவர்கள் ஆண்டவருக்காகப் பற்பல விதமான வேலைகளைச் செய்தார்கள் என்று பார்க்கலாம். சிலர் ராஜாக்களாயும், சிலர் சமுசாரிகளாயும், சிலர் தச்சராயும், சிலர் வியாபாரிகளாயும், சிலர் வேலைக்காரராயுமிருந்தார்கள். அவர்கள் எந்த உத்தியோகம் பார்த்தாலும் அந்த உத்தியோகத்திலேயே ஆண்டவருக்கு ஊழியம் செய்யக்கூடும். நாம் எல்லா நேரத்திலும் அவருக்கு ஊழியம் செய்வதே அவருக்குப் பிரியம். வகுப்பில் வாசிக்கும்போதும், விளையாடும்போதும், வேலைசெய்யும்போதும் அவருக்கு ஊழியம் செய்யலாம். அவரைப்போலாகப் பிரயாசப்படுவதும், சண்டைபோடாமல் அன்புள்ளவர்களாயிருப்பதும், வெட்கமான காரியங்களைப் பேசாமலும் செய்யாமலும், வாக்கிலும் செய்கையிலும் சுத்தமாயிருப்பதும், விளையாட்டிலும் வேலையிலும் பொய் பேசாமலும் ஏமாற்றாமலும் திருடாமலுமிருப்பதும், தன்னயமில்லாமலும் தன் மனம்போலவே எல்லாக் காரியங்களும் நடக்கவேண்டும் என்று பிரயாசப்படாமல் மற்றவர்களுக்கு இசைந்துபோவதும், வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் சோம்பலுக்கிடங்கொடாமல் சுறுசுறுப்பாயிருப்பதும் ஒருவகையாய் பையன்களும் பிள்ளைகளும் ஆண்டவருக்குச் செய்கிற ஊழியமாகும். அந்த விதமான ஊழியஞ்செய்கிறவர்களாயிருக்கவே தேவன் நம்மை கிறிஸ்துவின் அவயவம் (கையும் காலும்) ஆக்குகிறார்.

இந்தக் காரியங்களை உங்களுக்கு நினைப்பூட்டத்தக்கதாக நீங்கள் உபயோகிக்கக்கூடிய ஒரு ஜெபத்தை எழுதி இதை முடிக்கிறேன்.

### ஜெபம்.

"என் பிதாவாகிய தேவனே, நான் மற்றவர்களை நேசிக்கச்செய்யும். என்னை நேசித்து, எனக்காக உயிரைக்கொடுத்த இயேசுக்கிறிஸ்துவைப் போல நான் தன்னயமற்றவனாயிருக்கச்செய்யும். அவரைப்போல நான் உண்மையுள்ளவனும், சுத்தமுள்ளவனுமாய் இருக்கப் பண்ணும். நான் சுறுசுறுப்புள்ளவனாயிருந்து உமக்கென்று வேலைசெய்ய எனக்கு உதவி செய்யும். இயேசுவினிமித்தம் என் எல்லாப் பாவங்களையும் மன்னியும். ஆமென்."

உங்களுக்கு என் வாழ்த்துதலைச் சொல்லுகிறேன்.

உங்கள் பட்சமுள்ள,

திருநெல்வேலி மதுரை அத்தியக்ஷர்,

E. H. M. உவாலர்.



# அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்.

## முதலாவது சத்தியம்.

"வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்."

**தங்கவாக்கியம்:**—"பிதாவாகிய ஒரே தேவன் நமக்கு உண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது." 1 கொரி. 8. 6.

"கிறிஸ்துமார்க்க சத்தியங்கள் எல்லாவற்றையும் விசுவாசிப்பேன்" என்பது பரிசுத்த ஞானஸ்நானத்தில் நாம் செய்திருக்கும் இரண்டாவது பிரதிக்கினை. கிறிஸ்துமார்க்க சத்தியங்களெல்லாம் பரிசுத்த வேதாகமத்தில் அடங்கியிருக்கின்றன. அவைகளை திருச்சபை விசுவாசப்பிரமாணங்களில் நமக்கு எழுதித் தந்திருக்கிறது. அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணத்தில் 12 சத்தியங்கள் உண்டு. அவைகளில் முதலாவது சத்தியம் "வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்" என்பதே.

i. தேவனை விசுவாசிக்கிறேன் என்றால் அர்த்தம் என்ன? தேவனை விசுவாசிக்கிறேன் என்றால் தேவனை பூரணமாக நம்பி அவரைப் பற்றிக்கொண்டிருக்கிறேன் என்று அர்த்தம். தேவன் ஒருவர் இருக்கிறார் என்று நம்பிக்கொள்வது மட்டும் போதாது. அப்படிப்பட்ட விசுவாசம் பிசாசுகளுக்கும் உண்டு. (பரி. யாக். 2. 19) உன் இருதயத்தில் அவரைப் பற்றிப்பிடித்துக்கொள்வது தான் விசுவாசம். ரோமர் 10: 10 பார். "நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும்" விசுவாசப்பிரமாணத்தில் தேவனை விசுவாசிக்கிறேன் என்று அறிக்கையிடும்போது என் இருதயத்தில் அவரை உறுதியாய்ப் பற்றிப்பிடித்திருக்கிறேன் என்று அறிக்கையிடுகிறோம்.

ii. தேவனைப்பற்றி நாம் விசுவாசிக்கிறதென்ன? தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தவர் என்றும், சர்வவல்லமையுள்ளவர் என்றும் நமக்கு அவர் பிதாவாயிருக்கிறார் என்றும் விசுவாசிக்கிறோம்.

**வானத்தையும் பூமியையும் படைத்தவர்.** ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அப்பால் 1. வெளிச்சம், 2. ஆகாய விரிவு, 3. புல்பூண்டு விருக்ஷங்கள், 4. சூரிய, சந்திர நக்ஷத்திரங்கள் 5. பறவைகள், மச்சங்கள், 6. ஊரும் பிராணிகள், மிருகங்கள் இவைகளையும் கடைசியாக மனுஷனையும் உண்டாக்கினார் என்று வேதம் சொல்லுகிறது. (ஆதி. 1-ம் அதி.) வானத்தையும் பூமியையும் காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிற தேவன்" என்று நீசேயா விசுவாசப்பிரமாணம் நமக்குக் காட்டுகிறது. "என்னையும் உலகம் அனைத்தையும் படைத்த தேவன்" என்று திருச்சபை, ஞானோபதேச வினாவிடையில், நமக்குப் போதிக்கிறது. ஆகவே வானமும் பூமி

யும் அவைகளிலுள்ள யாவும் தேவனால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. சிருஷ்டித்தல் என்றால் ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றை உண்டாக்குதல் என்று அர்த்தமாம். ஆம், தேவன் இவைகளை எல்லாம் வேறெந்தப் பொருள்களைக் கொண்டும் அல்ல, தமது வார்த்தையின் மூலமாகவே உண்டாக்கினார் (சங். 33. 6.) மனுஷனுக்காகவே இவைகளை உண்டாக்கினார். மனுஷனையோ தம்மை மகிமைப்படுத்த உண்டாக்கினார்.

**சர்வவல்லமையுள்ளவர்.** சர்வவல்லமையுள்ளவர் என்பது இவைகளையெல்லாம் சிருஷ்டித்தது மாத்திரமல்ல, அவைகளை ஆண்டு நடத்தவும் தேவன் வல்லமையுள்ளவராயிருக்கிறார் என்று நமக்குக் காட்டுகிறது. பரி. அதனாஷியஸ் விசுவாசப்பிரமாணத்தில் தேவன் அளவிடப்படாதவர், நித்தியர், சர்வவல்லவர் என்று நாம் அறிக்கையிடுகிறோம். அளவிடப்படாதவர் என்றால் அவரை அடக்கிக்கொள்ள எதாலும் கூடாது என்றும் (1 ராஜா. 8. 27.) நித்தியர், என்றால் துவக்கமும் முடிவும் இல்லாதவர் என்றும் (சங். 90. 2.) சர்வவல்லவர் என்றால் எல்லாவற்றையும் செய்யவும் ஆளவும் சக்தியுள்ளவர் என்றும் (எரே. 32. 17 ) அர்த்தம். ஆம் "தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" (பரி. லூக். 1 37.) "நான் சர்வவல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு" (ஆதி. 17. 1.) என்று அவர் சொல்லுகிறார்.

**பிதா.** 1. இயேசுவானவர் தேவனைப் பிதாவென்று அழைத்திருப்பதினாலும் (பரி. யோவா. 14. 6.), 2. எல்லா மனுஷரும் அவரால் உண்டாக்கப்பட்டிருப்பதினாலும் 3. நாம் விசேஷமாய் பரிசுத்த ஞானஸ்நானத்தில் அவருக்குப் பிள்ளைகளாகி இருப்பதினாலும் விசுவாசப்பிரமாணத்தில் அவரைப் பிதாவென்று அறிக்கையிடுகிறோம். மேலும் எல்லாவற்றையும் சிருஷ்டித்து ஆண்டு நடத்துகிற தேவன் நம்மை நேசிக்கிற நமது அன்புள்ள தகப்பன் தான் என்று இது நமக்குக் காட்டுகிறது.

iii. முதலாம் சத்தியத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியதென்ன? 1. தேவன் எல்லாவற்றையும் படைத்து அவைகளை ஆண்டு நடத்துகிறார். சிருஷ்டியானது சிருஷ்டிகரின் வல்லமையையும் அன்பையும் காட்டுகிறது. அவைகளை நினைத்து எப்போதும் தேவனை துதிக்கவேண்டும். 2. தேவனை உன் சிருஷ்டிகராக நினை. உன்னை ஒரு விசேஷ நோக்கத்துக்காக உண்டாக்கியிருக்கிறார். நீ அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதே அந்த நோக்கம். ஆகையால் நீ எதைச்செய்தாலும் அவருடைய மகிமைக்கென்றுசெய்.

"கர்த்தாவே, தேவரீர் மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர்." (வெளி. 4. 11.)

---



## விசுவாசமுள்ள சிறுவன்.

அநேக வருஷங்களுக்கு முன்னே, அமெரிக்காக் கண்டத்திலே மஞ்சள் ஜுரம் என்னப்பட்ட வியாதியினால் அநேகர் வாதிக்கப்பட்டார்கள். அக்காலத்தில் நியூ ஆர்லியன்ஸ் பட்டணத்துக்கு வெளியே ஓர் புல் மைதானத்தில் ஒரு சிறுவன் படுத்திருந்தான் அவ்வழியாய் வந்த பக்தியுள்ள ஒரு துரை அவனைக்கண்டு, 'நீ இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்'? என்று கேட்டார். "தேவன் எனக்கு உதவி செய்ய வருவாரென்று இங்கே காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று அப்பையன் சொன்னான். அவனுடைய பரிதாபமான குரலைக்கேட்டு துரையினுடைய உள்ளம் இளகிற்று. மஞ்சள் ஜுரம் அவனையும் பிடித்திருக்கிறதைத் துரை கண்டார். "நீ சொல்வதின் அர்த்தம் எனக்கு விளங்கவில்லையே" என்று துரை பையனைக் கேட்டார். அதற்குப் பையன் "ஐயா! தேவன் என் தாயாரையும் தகப்பனையும் என் சின்னத்தம்பியையும் தம்மிடத்துக்கு அழைத்துக்கொண்டார், என் தாயார் அவரிடத்துக்குப் போகுமுன்னே என்னைப்பார்த்து தேவன் என்னை பாதுகாத்துக்கொள்ள வருவார் என்று சொன்னார்கள், எனக்கு இங்கே வீடுமில்லை, ஏதாகிலும் கொடுக்க இனத்தாருமில்லை, ஆனபடியினால் என் தாயார் சொன்னபடி எனக்கு உதவிசெய்ய தேவன் வருவாரென்று காத்துக்கொண்டிருக்கிறேன்; அவர் நிச்சயமாகவே வருவார், ஐயா! அவர் வராமலிருக்கவே மாட்டார், தாயார் ஒருபோதும் பொய் சொன்னதில்லை" என்றான். "ஆம், என் அருமைப்பையனே! தேவன் உனக்கு உதவிசெய்யும்படியாக என்னை அனுப்பி வைத்தார்' என்றார் அந்த நல்ல துரை. பையனுடைய முகம் சந்தோஷத்தால் பூரித்தது. ஆ! அந்த அருமையான பையன் தேவனை விசுவாசித்து, அவரை மகிமைப்படுத்தினான். தேவன் அவனைப்பாதுகாத்தார்.

---

## 1916-ம் வருஷத்தில் பரிசுபெற்றவர்கள் ஜாபிதா.

### நாசரேத் சேகரம்.

### நாசரேத்.

#### Girls' High School.

| | | பரிசு. |
|---|---|---|
| 1 | L. ராஜம்மாள் | ... 1-ம் |
| 2 | D. Y. தயசு | ... ,, |
| 3 | D. K. ரஞ்சிதம் | ... ,, |
| 4 | M. A. ஞானமணி | ... 2-ம் |
| 5 | P. F. ரோஸ் | ... ,, |
| 6 | J. நகோமி | ... ,, |
| 7 | S. மாணிக்கம் | ... ,, |
| 8 | M. கிரேஸ் | ... ,, |
| 9 | J. ராகேல் | ... ,, |
| 10 | J. பாக்கியமணி | ... ,, |
| 11 | J. நேசம் | ... ,, |
| 12 | A. ராஜம்மாள் | ... 3-ம் |
| 13 | A. மேரி | ... ,, |
| 14 | J. V. புஷ்பம் | ... ,, |
| 15 | A. S. அன்னத்தாய் | ... ,, |
| 16 | D. செல்லம்மாள் | ... ,, |
| 17 | A. செல்வம் | ... 3-ம் |
| 18 | J. வடிவு | ... ,, |
| 19 | A. மனோமணி | ... ,, |
| 20 | D. கிரேஸ் சௌந்தரம் | ... ,, |
| 21 | K. ஞானாபரணம் | ... ,, |
| 22 | D. எப்சிபா | ... ,, |

#### Girls' Training School.

| | | பரிசு |
|---|---|---|
| 1 | G. தீபமணி | ... 3-ம் |
| 2 | P. ஞானவடிவு | ... ,, |
| 3 | V. அன்னாள் பாக்கியம் | ... ,, |
| 4 | S. ஞானமணி | ... ,, |
| 5 | M. செல்வம் | ... ,, |
| 6 | S. ஞானசுந்தரம் | ... ,, |

#### Girls' Model School.

| | | பரிசு |
|---|---|---|
| 1 | A. ஞானரஞ்சிதம் | ... 2[illegible] |
| 2 | M. J. அருள்மணி | ... [illegible] |
| 3 | I. ரஞ்சிதம் | ... [illegible] |
| 4 | D. Y. சாந்தம் | ... [illegible] |

5 ரூபி பாக்கியம் ... 3-ம்
6 E. சுசி ... ,,
7 S. மனோமணி ... ,,
8 D. மேரி சொர்ணம் ... ,,
9 D. நேசமணி ... ,,
10 J. மெர்சி ... ,,
11 D மரியம்மாள் ... ,,
12 Y. அர்ஞள் ... ,,
13 சுவி சேஷ ரத்னம் ... ,,
14 மேரி அற்புதம் ... ,,
15 நேசம் மேரி ... ,,
16 N. சௌந்தரம் ... ,,
17 S. ராஜமணி ... ,,
18 K. நக்ஷத்திரம் ... ,,
19 ஜெபமணி பேரின்பம் ... ,,
20 M. எஸ்தர் ... ,,

## Boys' Secondary School.

1 கிறிஸ்த்தியன் டேவிட் ... 1-ம்
2 M. J. செல்லையா ... 2-ம்
3 S. எட்வர்ட் தேவவரம் ... ,,
4 A. ஜாண் தேவசகாயம் ... ,,
5 C. K. தேவவரம் ... 3-ம்
6 G. தேவ இரக்கம் ... ,,
7 S. தாவீது ... ,,
8 S. பாண்டியன் ... ,,
9 J. மதுரம் ... ,,

## Boys' Model School.

1 V. சாமுவேல் ஜெயராஜ் ... 1-ம்
2 L. சாமுவேல் தியோடோர் ... 2-ம்
3 J. உல்லியம் ... ,,
4 மோசே விசுவாசம் ... ,,
5 A. செல்லையா i. ... ,,
6 A. சிவசுப்பிரமணியன் ... ,,
7 M. ஜாண் ... ,,
8 D. ரத்னராஜ் ... ,,
[illegible] J. D. ஞானதுரை ... ,,
9 [illegible] தேவதாசன் ... ,,
[illegible]0 P. [illegible]ணியேல் ... 3-ம்
[illegible]1 M. தா[illegible] ... ,,
[illegible]2 Y. பொ[illegible]ன்னையா ... ,,
13 V. அற்புத[illegible]மணி ... ,,
14 J. தேவப்பி[illegible]ரியம் ... ,,
15 K. சந்தோ[illegible]ஷம் ... ,,
16 A. அற்புதசி[illegible]காமணி ... ,,
17 K. ஜெபமணி ... ,,
18 P. தேவசகாயம் ... ,,
19 A. D. தானியேல் ... ,,
20 T. கோவில்பிள்ளை ... ,,

21 J. ராஜமணி ... 3-ம்
22 L. ஜாண் உல்பிரட் ... ,,
23 M. ஜெபமணி ... ,,

## A. I Boys' School.

1 M. சாமுவேல் ... 2-ம்
2 P. பாலய்யா ... 3-ம்
3 P. சாமுவேல் ... ,,
4 M. சுந்தரம் ... ,,
5 Y. ஆசீர்வாதம் ... ,,
6 J. சாமுவேல் ... ,,

## மூக்குப்பீரி.

1 N. சாரான் ... 1-ம்
2 A. பூமணி ... ,,
3 K. சிரோமணி ... ,,
4 T. ஏசுவடியான் ... ,,
5 V. சாமுவேல் ... ,,
6 D. ஞானமணி ... ,,
7 A. ஞானம் ... ,,
8 G. மேரி ராஜம்மாள் ... 2-ம்
9 S. பிச்சைமணி ... ,,
10 M. பிச்சைமணி ... ,,
11 J. சுவாமியடியான் ... ,,
12 S. செல்வம் ... ,,
13 J. ராஜம்மாள் ... ,,
14 S. ஞானம் ... ,,
15 P. யாக்கோபு ... ,,
16 K. ராஜம்மாள் ... ,,
17 K. தேவசுந்தரம் ... 3-ம்
18 A. பாக்கியநாதன் ... ,,
19 K. மதுரம் ... ,,
20 D. பூரணம் ... ,,
21 N. தவமணி ... ,,
22 D. தாவீது ... ,,
23 V. ஞானமணி ... ,,
24 N. தங்கம் ... ,,
25 K. நக்ஷத்திரம் ... ,,
26 Y. சாரான் ... ,,
27 K. நவமணி ... ,,
28 Y. தாவீது ... ,,

## ஒய்யான்குடி.

1 A. மேரி ... 1-ம்
2 Y. சொர்ணம் ... ,,
3 A. பரிபூரணம் ... ,,
4 A. யோவான் ... 3-ம்
5 I. செல்லையா ... ,,
6 K. ராஜய்யா ... ,,
7 J. ருத் ... ,,



## எருசலேம்.

1 A. சொர்ணம் ... 3-ம்
2 J. அன்னமணி ... ,,
3 P. பாலஃமாள் ... ,,
4 A. திரவியம் ... ,,
5 A. துரைசாமி ... ,,

## வெள்ளரிக்காயூரணி.

1 S. நக்ஷத்திரம் ... 2-ம்
2 Y. பாக்கியம் ... 3-ம்

## அகப்பைகுளம்.

1 Y. மாணிக்கம் ... 2-ம்
2 S. சாலோமோன் ... ,,
3 T. கெத்சி ... 3-ம்
4 V. நேசமணி ... ,,

## வாழையடி.

1 V. பொன்னையா ... 3-ம்

## முதலைமொழி.

1 S. பாக்கியம் ... 2-ம்

## வெள்ளமடம்.

1 பொன்னையா யோசேப்பு ... 1-ம்
2 J. திரவியம் ... ,,
3 D. மோசே ... 2-ம்
4 P. நவமணி ... 3-ம்
5 P. பாலம்மாள் ... ,,
6 J. ஈசாக்கு ... ,,
7 A. பொன்னம்மாள் ... ,,

## பிள்ளையன்மனை.

1 Y. N. கனகமணி ... 2-ம்
2 A. பொன்னம்மாள் ... ,,
3 D. பிச்சைமணி ... 3-ம்
4 A. பூமணி ... ,,

## உடையார்குளம்.

1 J. பாக்கியத்தாய் ... 2-ம்
2 P. பொன்னுசாமி ... ,,
3 S. யோசேப்பு ... 3-ம்
4 S. ஈசாக்கு ... ,,
5 S. நவமணி ... ,,
6 N. தவமணி ... ,,
7 A. செல்லையா ... ,,
8 S. சினி ... ,,

## கடையனோடை.

1 S. அற்புதம் ... 2-ம்

## குளத்துக்குடி.

1 D. தேவ இரக்கம் ... 1-ம்
2 A. தங்கையா ... ,,
3 D. சாமுவேல் ... ,,
4 A. கோவில்பிள்ளை ... ,,
5 D. ரஞ்சிதம் ... 2-ம்
6 V. தாவீது ... ,,
7 G. H. ஞானதுரை ... ,,
8 S. தேவசகாயம் ... ,,
9 N. சாலோமோன் ... ,,

## கல்லாம்பாறை.

1 D. பாக்கியவதி ... 1-ம்
2 D. தாவீது ... 3-ம்
3 D. நவமணி ... ,,
4 D. சுந்தரி ... ,,

## Greater Catechism Nazareth.

1 G. தங்கையா B. S. S. ... 1-ம்
2 M. A. பீற்றர் ,, ... ,,
3 எட்வர்ட் தேவதாசன் ,, ... ,,
4 ஜாண் தேவசகாயம் ,, ... 2-ம்
5 G. எட்வர்ட் ,, ... ,,
6 S. சாலோமோன் A.I.B.S. ... ,,
7 M. லூயிஸ் ,, ... ,,
8 J. ரோஸ் G. H. S. ... 1-ம்
9 M. சாந்தம் ,, ... ,,
10 P. F. ரோஸ் ,, ... ,,
11 M. செல்வம் ,, ... ,,
12 S. ராஜம்மாள் ,, ... 2-ம்
13 A. N. ரத்தினம ,, ... ,,
14 J. சொர்ணம் ,, ... ,,
15 V. தங்கரத்தினம் ,, ... ,,
16 A. சொர்ணம் A. I. G. S. ... 1-ம்
17 A. புஷ்பம் ,, ... 2-ம்

## For Highest Number of Red Seals

1 எட்வர்ட் தேவதாசன் B.S.S.... 2-ம்
2 G. எட்வர்ட் ,, ... ,,
8 M. சாந்தம் G. H. S. ... ,,
4 M. செல்வம் ,, ... ,,
5 V. தங்கரத்தினம் ,, ... ,,
6 J. ரோஸ் ,, ... ,,

## Little Catechism

### நாசரேத்.

1 அகதாஸ் B. S. S.
2 J. மதுரம் ,,
3 G. சார்ல்ஸ் ,,
4 எட்வர்ட் உல்லிங்டன் ,,

5 கிறிஸ்தியன் டேவிட் ,,
6 J. தாமஸ் B. M. S.
7 D. தானியேல் ,,
8 K. செல்லையா ,,
9 K. ஜெபமணி ,,
10 சாமுவேல் தியோடோர் ,,
11 J. ராஜமணி ,,
12 S. நல்லையா A. I. B. S.
13 M. சுந்தரம் ,,
14 Y. ஆசீர்வாதம் ,,
15 V. ரத்தினம் ,,
16 J. ராகேல் G. F. S.
17 M. முத்தாபரணம் ,,
18 K. ஞானாபரணம் ,,
19 M. கிரேஸ் ,,
20 K. செல்லத்தாய் ,,
21 K. பாக்கியம் ,,
22 Y. ராஜம்மாள் G. M. S.
23 Y. அன்னத்தாய் ,,
24 ரூபி பாக்கியம் ,,
25 M. J. அருள்மணி ,,
26 மேரி அற்புதம் ,,
27 ஜெசி கமலம் ,,

மூக்குப்பீரி.

1 K. சிரோமணி
2 A. பூமணி
3 Y. ராஜம்மாள்
4 M. தாயம்மாள்
5 N. சாராள்
6 S. செல்வம்
7 S. P. யாக்கோபு
8 Y. தாவீது
9 A. பரமாயி
10 A. யாக்கோபு
11 S. பாக்கியநாதன்

ஒய்யான்குடி.

1 Y. சொர்ணம்
2 A. யோவான்
3 A. மேரி

வெள்ளரிக்காயூரணி.

1 S. நக்ஷத்திரம்
2 G. இன்பநாயகம்

அகப்பைகுளம்.

1 Y. A. கிரேஸ்
2 Y. A. ஜியார்ஜ்

3 Y. மாணிக்கம்
4 S. சாலோமோன்

குளத்துக்குடி

1. G. ஞானதுரை
2. V. தாவீது
3. S. தங்கம்மாள்
4. D. தேவஇரக்கம்
5 P. தங்கையா

பன்றிமடல்.

1 V. ஞானக்கண்
2 K. கிறிஸ்தியான்
3 K. தங்கம்மாள்

Infant Catechism.

நாசரேத்.

1 A. பொன்னையா B. M. S.
2 G. ஞானமுத்து ,,
3 K. எட்வர்ட் ,,
4 J. சாமுவேல் ,,
5 M. பென்யமீன் ,,
6 A. மோசே ,,
7 D. ஜெபமணி ,,
8 M. D. தேவதாசன் ,,
9 M. யோசேப்பு ,,
10 S. நல்லம்மாள் G. M. S.
11 மேரி ராஜம்மாள் ,,
12 V. ஏவாள் ,,
13 லிலி மார்க்ரெற் ,,
14 மேரி பங்காரி ,,
15 J. கிரேஸ் ,,
16 N. நவஞானவடிவு ,,
17 V. சிரோமணி ,,
18 J. தங்கமணி ,,
19 E. எபெனேசர் ,,
20 K. எஸ்தர் ,,
21 Y. பாக்கியம் ,,
22 S. புஷ்பம்மாள் ,,
33 மேரி கமலம் ,,
24 J. Fancy ,,
25 S. கமலம் ,,
26 ஜெசி அணி ,,

கவனிப்பு:—மற்ற சேகரங்களின் பரிசு ஜாபிதா அடுத்த சஞ்சிகையில் வரும்

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

# The Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XII. பெப்ருவரி 1917. No. 2.

OFFICE OF THE REGISTRAR ... 14 AUG 19..

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்.

### இரண்டாவது சத்தியம்.

"அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்."

**தங்க வாக்கியம்.** இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார்; அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்" (1 யோவா. 4. 15).

பரிசுத்த திரித்துவத்தின் முதல் ஆளாகிய பிதாவாகிய தேவனைப்பற்றி முதலாம் சத்தியத்தில் படித்தோம். இந்த சத்தியத்திலே இரண்டாவது ஆளாகிய தேவனாகிய குமாரனைப்பற்றிப் படிக்கப்போகிறோம். அவரை தேவனுடைய ஒரே குமாரன் என்றும், நம்முடைய நாதர் என்றும், இயேசு என்றும், கிறிஸ்து என்றும் இந்த சத்தியம் நமக்குப் போதிக்கிறது.

i. இயேசுவானவர் தேவனுடைய ஒரே குமாரன் என்பது நமக்கு எதைக் காட்டுகிறது? இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்பது அவர் மெய்யான தேவன் என்பதை நமக்குக் காட்டுகிறது. "ஆதியிலே வார்த்தை இருந்தது . . . . அந்த வார்த்தை தேவனாய் இருந்தது" (பரி. யோவா. 1. 1) என்றும், "இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்"(i. யோவா. 5. 20) என்றும் பரிசுத்த வேதம் நமக்குச் சொல்லுகிறது. நிசேயா விசுவாசப்பிரமாணத்தில் அவர் "தெய்வத்தில் தெய்வமானவர், மெய்த் தேவனில் மெய்த் தேவனானவர், பிதாவோடே ஒரே தன்மையுடையவர்"

2-3-17

என்றும், பரி. அதனாஷியஸ் விசுவாசப்பிரமாணத்தில் அவர் "பிதாவின் தன்மையையுடைய தேவன்" என்றும் திருச்சபை நமக்குப் போதிக்கிறது.

ii. **நம்முடைய நாதர்** என்று என் சொல்லுகிறோம்? நாதர் என்றால் ஆண்டவர் அல்லது எஜமான் என்று அர்த்தம். அவர் நித்திய தேவனாக இருப்பதினாலும், சர்வ அதிகாரமும் உண்டயவராயிருப்பதினாலும் (எபி. 1. 3) அவரை நாதர் என்றும், அவர் நம்மை மீட்டுக்கொண்டு, நம்மைத் தமக்குச் சொந்தமானவர்களாக்கியிருப்பதினால் நம்முடைய நாதர் என்றும் சொல்லுகிறோம்.

iii. **இயேசு** என்றால் அர்த்தம் என்ன? இயேசு என்றால் இரட்சகர் என்று அர்த்தம். பிதாவாகிய தேவன், பரி. காபிரியேல் தூதன் மூலமாய் இந்தப் பேரை அவருக்குக் கொடுத்தார். இது வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோர் யாவரும் வணங்கவேண்டிய மேலான நாமம் (பிலி. 3. 11). அவர் நம்மைப் பாவத்தினின்றும் அதின் தண்டனையினின்றும் இரட்சிக்கிற படியினால் இரட்சகர் என்று அர்த்தமுள்ள இந்தப் பேர் அவருக்கு இடப்பட்டது (பரி. மத். 1. 21; ரோ. 6. 23). இந்தப் பரிசுத்த நாமத்தை உச்சரிக்கையில் நாம் தலைகுனிந்து அவரைக் கனப்படுத்துவது தகுதியே.

iv. **கிறிஸ்து** என்பதின் பொருள் என்ன? கிறிஸ்து என்பதும் மேசியா என்பதும் ஒரே பொருள் உள்ள வார்த்தைகளே. அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்பது அதின் அர்த்தம். தீர்க்கதரிசிகளும், ஆசாரியரும், ராஜாக்களும் அபிஷேகம்பண்ணப்படுவது வழக்கம். 1 ராஜா. 19. 16ல் எலிசா தீர்க்கதரிசியாகவும், லேவி. 8. 12ல் ஆரோன் ஆசாரியனாகவும், 1 சாமு. 16. 13ல் தாவீது ராஜாவாகவும் அபிஷேகம்பண்ணப்பட்டதாக வாசிக்கிறோம். நமதாண்டவர் இந்த மூன்று உத்தியோகங்களுக்காகவும் அபிஷேகம்பண்ணப்பட்டார். அவர்கள் பரிசுத்த ஆவியின் வரத்துக்கு அடையாளமாகிய எண்ணெயால் அபிஷேகம் பெற்றார்கள். இவர் ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த ஆவியினாலேயே அபிஷேகம் பெற்றார். (1) தேவனைப் பற்றி ஜனங்களுக்குப் போதிக்கிறதும்; சில சமயங்களில் பின்வரும் காரியங்களை முன் அறிவிக்கிறதும் தீர்க்கதரிசியின் வேலை. நமதாண்டவர் தீர்க்கதரிசியாக தேவனைப்பற்றி, விசேஷமாய் தேவன் நம்மேல் வைத்திருக்கும் அன்பைப்பற்றி தமது கிருபைநிறைந்த வார்த்தைகளினாலும், சுயநயமற்ற பரிசுத்த நடக்கையினாலும் நமக்குப் போதித்திருக்கிறார். (2) தேவனுக்குப் பலிசெலுத்துவதும், ஜனங்களுக்காக ஜெபம்பண்ணுவதும் ஆசாரியனுடைய வேலை. கிறிஸ்துவானவர் ஆசாரியராக நமக்காகத் தம்மைத்தாமே சிலுவையின்மேல் பலியாகச் செலுத்தி, பிதாவின் வலதுபாரிசத்தில் நமக்காக மன்றாடிக்கொண்டிருக்கிறார். (3) குடிகளை ஆண்டு நடத்தி, அவர்களைப் பாதுகாப்பது ராஜாவின் வேலை. அப்படியே அவர் நமது ராஜாவாக நம்மை ஆண்டுநடத்தி, காத்துவருகிறார்.



### போதனை.

1. *இயேசு சுவாமி தேவனுடைய குமாரன். ஆகையால் அவரை தேவனாகத் தொழுது கனப்படுத்து.*

2. *அவர் நமது நாதர். அதாவது எஜமான். அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நட.*

3. *அவர் நமது ரட்சகர் பாவத்திலிருந்து நம்மை ரட்சிக்கிறவர். பாவங்களை நாம் வெறுக்காவிட்டால் அவர் நம்மை அதிலிருந்து ரட்சிக்கமாட்டார். ஆகையால் பாவத்தை வெறுத்துவிடு.*

## வெட்கப்படாதே.

ஒரு தடவை சில மனுஷர் ரெயில்மார்க்கமாய்ப் பிரயாணஞ்செய்யும்படி ஒரு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போனார்கள். ரெயில் வரக் கொஞ்சம் தாமதமாகிவிட்டபடியால், எல்லாரும் ரெயில்வே ஸ்டேஷனில் ஒருபக்கத்தில் இருந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் இயேசுசுவாமியின் நாமத்தை அவமதித்து, அவரைப்பற்றிக் குறைவாய்ப் பேசினான். வரவர அவன் சத்தம் அதிகரித்தது, அந்தக் கூட்டத்தில் பக்தியுள்ள சிலரும் இருந்தார்கள். அவர்களுக்கு அவனுடைய வார்த்தைகள் மிக மனநோவாய் இருந்தது. அவர்களில் ஒருவர், மெய்த் தெய்வத்தை அவன் குறைவாய்ப் பேசுவதைச் சகிக்கமுடியாமல்,

"இயேசு! நேச நாயகா! வெள்ளம்போன்ற துன்பத்தில்
திக்கில்லா என் ஆத்துமா தடுமாறிப் போகையில்
தீங்கில்லாமல், மீட்பரே! திவ்ய மார்பில் காருமேன்,
அப்பால் மோட்ச வீட்டிலே சேர்த்துப் பாக்யம் தாருமேன்."

என்ற பாட்டை சத்தமிட்டுப் பாடினார். படித்து முடிந்தபின் எல்லாரும் அமரிக்கையாய்த் தமது பாட்டையே கவனித்துக்கொண்டிருந்தார்கள் என்று கண்டார். அந்தப் பொல்லாதவனும் தன் பேச்சை நிறுத்திவிட்டு, அவரையே கவனித்துக்கொண்டிருந்தான். சற்று பொறுத்து, அந்த மனுஷன் அவரிடத்தில் வந்து, "நான் உங்களோடு கொஞ்சம் தனித்துப் பேச விரும்புகிறேன்" என்றான். அப்படியே இருவரும் கூட்டத்தை விட்டு சற்று விலகிப்போனார்கள். 'இந்தச் சமயத்தில் ஏன் அந்தப் பாட்டைப் பாடினீர்' என்று அந்த மனிதன் கேட்டான். 'நீ இயேசு சுவாமியின் பரிசுத்த நாமத்தை நிந்தித்தாய், அவரை நேசிக்கிற சிலரும் இங்கே இருக்கிறோம் என்பதை நீ அறியும்படி அதைப் பாடினேன்' என்று அந்த மனுஷனானவர் சொன்னார். அப்பொழுது அவன் 'என் சகோதரி மரிக்கும்போது இதே பாட்டைப் பாடினாள்; எப்படியாவது நான் அவளை மோட்சத்தில் சந்திக்கத்தக்கதாக இயேசுவை தெய்வமாக ஏற்றுக்கொள்ளும்படி அப்போது அவள்

எனக்குச் சொன்னாள். உம்முடைய பாட்டு அவன் மரணநேரத்தில் எனக்குச் சொன்னபோதனையை ஞாபகப்படுத்திவிட்டது. நான் இது முதல் இயேசுவை என் தெய்வமாக விசுவாசிக்கிறேன்' என்றான். இருவரும் அந்த இடத்திலேயே முழங்காலில் நின்று ஜெபம் பண்ணினார்கள்.

பிரியமான பிள்ளைகளே, கெட்ட பிள்ளைகளின் மத்தியில் நாம் இருக்கும்போது நமது வார்த்தையினாலும் செய்கையினாலும் நாம் **இயேசு சுவாமியை நேசிக்கிறோம் என்பதை வெட்கப்படாமல்** காட்டுவோமாக.

## கிறிஸ்துவே நல்ல எஜமான்.

1750 வருஷங்களுக்குமுன்னே, சிமிர்னாப் பட்டணத்தில் **போலிக்கார்ப்** என்ற ஓர் அத்தியக்ஷர் இருந்தார். அவர் மிகத் தேவபக்தியுள்ளவர். அக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு இராஜாங்கத்தாரால் அதிகத் துன்பம் உண்டாயிற்று, கிறிஸ்தவர்கள் உயிர்பிழைக்கும்படி பல இடங்களுக்கும் ஓடிப்போனார்கள். போலிக்கார்ப்பும் சிமிர்னாவுக்குச் சமீபத்திலிருந்த ஒரு சிறு கிராமத்தில் போய், கிறிஸ்தவர்களுக்காக ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார். சத்துருக்கள் அவர் இருக்கும் இடத்தை அறிந்து அவரைப் பிடித்துக்கொண்டு வரும்படி சேவகரை அனுப்பினார்கள். அவர்கள் அவரைப் பிடித்து, அவர் நடக்க ஏலாத விருத்தாப்பியனாய் இருந்தபடியால், அவரை ஒரு கழுதையின் மேல் வைத்து, அதிகாரியின் முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அதிகாரி அவரைப் பார்த்து 'நீர் வயது சென்ற கிழவனாயிருக்கிறீர், உம்மைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது. கிறிஸ்துவானவரைப்பற்றி ஒரு வார்த்தை மட்டும் கேவலமாய்ச் சொல்லும், நான் உம்மை விட்டுவிடுகிறேன்' என்றான். அதற்கு அவர் 'எண்பத்தாறு வருஷம் நான் அவரைச் சேவித்திருக்கிறேன். இவ்வளவு காலமும் அவர் எனக்கு ஒரு தீமையும் செய்யவில்லை. அப்படிப்பட்ட என் ஆண்டவரை நான் எப்படிப் பழித்துப்பேசுவேன்' என்றார். நியாயாதிபதி கோபமடைந்து, அவரை அக்கினியினால் சுட்டெரிக்கும்படி தீர்ப்புச்செய்தான். பிள்ளைகளே, பரி. போலிகார்ப்பைப்போல நீங்களும் அருமை ரட்சகரை உங்களுக்கு நல்ல எஜமானாகக் கண்டுபிடித்திருக்கிறீர்களா?

## முன்னேறிச் செல்.

உங்களில் அநேகர் துவி சக்கரவண்டி அல்லது கால் வண்டி பார்த்திருப்பீர்கள். இங்கிலாந்தின் மலை நாடுகள் ஒன்றில் ஓர் ரஸ்தா வழியாய் ஒரு துரைசானியும் அவளுடைய சிநேகிதர் சிலரும் அப்படிப்பட்ட கால்வண்டிகளில் ஏறிக்கொண்டு ஒரு ஊருக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் போய்க்கொண்டிருந்த பாதை முழுவதும் சமதரையல்ல. அவர்கள் குன்றுகளையும்



பள்ளத்தாக்குகளையும் கடந்துபோகவேண்டியதாயிருந்தபடியால் பாதை அடிக்கடி ஏற்றமும் இறக்கமுமாயிருந்தது. முதலில் பாதை ஒரு மலை இறக்கத்தில் சென்றது. ஆகவே அவர்களுடைய வண்டிச்சக்கரங்கள் யாதொரு பிரயாசமும் இல்லாமல் வேகமாய்ச் சுழன்றன. இதைக் கண்டு துரைசானி ஆனந்த சந்தோஷமடைந்து 'ஆ! ஆ! என்ன நேர்த்தியான பாதை! கொஞ்சமும் வருத்தமில்லாமல் இரவும் பகலும் சவாரி போகலாம் போலிருக்கிறதே!' [illegible]ர். அப்பொழுது அவளுடைய சிநேகிதர் 'ஆம், இங்கே நன்றாய்த் [illegible] இருக்கிறது. ஆனால் இன்னமும் கொஞ்சநேரத்துக்குள் நாம் மலையேற்றத்தில் போகவேண்டியதிருக்கும். அப்பொழுதுதான் பாதையின் கஷ்டம் தெரியும்' என்றார்கள். இப்படி அவர்கள் பேசிப்பேசி மலையேற்றத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஏற்றத்தில் போகப்போக சக்கரங்களைச் சுழலச்செய்வது கஷ்டமாயிற்று. எல்லாரும் களைத்துப்போனார்கள். துரைசானி முன்னேறிச் செல்லச் சக்தியற்று வண்டியை நிறுத்திக் கீழே இறங்கினாள். 'இதற்கப்பால் என்னால் வரமுடியாது; நீங்கள் போய் விட்டு வாருங்கள்; நான் திரும்பிப்போகிறேன்' என்று தன் சிநேகிதரிடம் சொன்னாள். அப்பொழுது அவர்கள் அவளைப் பார்த்து 'நீ எங்களோடு வராவிட்டால் அந்த நேர்த்தியான ஊரைப் பார்க்க உன்னால் முடியுமா? இதைப்போல இன்னொரு சமயம் வாய்க்குமா? எப்படியும் எங்களோடுகூட வா' என்றார்கள். துரைசானியோ 'அல்ல, அல்ல, இனி முன்னேறிச் செல்ல என்னால் முடியாது. பாதை மகா கஷ்டமாயிருக்கிறது' என்றாள். 'இன்னமும் சற்று பிரயாசப்பட்டு இந்த மலையின் உச்சி மட்டும் வா, அதற்கப்பால் கஷ்டம் தோன்றாது' என்று சிநேகிதர் அவளை தைரியப்படுத்தினார்கள். துரைசானி மறுபடியும் வண்டியிலேறி, சற்று பிரயாசத்துடன் குன்றின் உச்சிக்கு வந்து சேர்ந்தாள். அங்கு வந்தவுடன் அவளுக்கிருந்த ஆனந்தம் கொஞ்சமல்ல. அதன்பின் சலியாமல் பாதையைக் கடந்து, சேரவேண்டிய இடம் சேர்ந்து சந்தோஷித்தாள்.

என் பிரிய பாலிய சிநேகிதரே, இதோ, ஒரு புது வருஷத்தை துவக்கியிருக்கிறோம். இவ்வருஷத்தில் நாம் கடந்து செல்லவேண்டிய மேடுபள்ளத்தையும் ஏற்றமும் இறக்கமுமான பாதைதான். நல்ல பிள்ளைகளாய் நடக்கப் பிரயாசப்படும்போது எத்தனையோ கஷ்டங்களும் சங்கடங்களும் [illegible]கும். நாள் முழுவதும் நல்ல பிள்ளையாய் நடக்க என்னால் முடியா[illegible] பின்வாங்கிப் போகாதே. தேவ உதவியை முன்னிட்டு இன்னும் கொஞ்சம் பிரயாசப்படு. அப்பொழுது உன் நடக்கை நன்றாயிருக்கும்: [illegible] ஜீவகரையை அடையலாம்.

# பரிசு ஜாபிதா

(தொடர்ச்சி)

## முதலூர் சேகரம்.

### கஸ்பா பெண்கள்.

| | | மார்க்கு. |
|---|---|---|
| 1 | J. குணோயி | ... 99 |
| 2 | J. செல்வம் | ... 96 |
| 3 | N. தேவ இரக்கம் | ... 91 |
| 4 | J. தேவகிருபை | ... 84 |
| 5 | D. அன்னம்மாள் | .. 79 |
| 6 | Y. கோவில்பிள்ளை | ... 77 |
| 7 | P. ராஜம்மாள் | ... 72 |
| 8 | G. நல்லாயி | ... 62 |
| 9 | L. பரிபூரணம் | ... 61 |

### ஹை ஆண்பாடசாலை.

| | | |
|---|---|---|
| 1 | S. சாலொமோன் | ... 79 |
| 2 | S. லாசரு | ... 74 |
| 3 | S. தேவதாசன் | ... 71 |
| 4 | D. நவமணி | ... 69 |
| 5 | J. மணி | ... 68 |
| 6 | G. தேவாசீர்வாதம் | ... 65 |
| 7 | J. யோசேப்பு | ... 64 |
| 8 | K ஏசுவடியான் | ... 64 |
| 9 | G. மனோமணி | ... 63 |
| 10 | D. ராஜசிங்கம் | ... 62 |

### ஹை பெண் பாடசாலை.

| | | |
|---|---|---|
| 1 | D. மேரி | ... 92 |
| 2 | A. நல்லம்மாள் | ... 74 |
| 3 | M. தவமணி | ... 74 |
| 4 | V. நல்லம்மாள் | ... 73 |
| 5 | G. எமிலிரத்னபாய் | ... 66 |
| 6 | K. ராஜம்மாள் | ... 65 |
| 7 | D. சாலோமை | ... 62 |
| 8 | P. R. முத்தாபரணம் | ... 60 |

### அடையல்.

| | | |
|---|---|---|
| 1 | V. சுவாமியடியான் | ... 64 |

### கண்காணியார்புரம்.

| | | |
|---|---|---|
| 1 | D. ஏசுதாசன் | ... 74 |
| 2 | S. அன்னமரியாள் | ... 70 |
| 3 | J. ஞானசிகாமணி | ... 63 |
| 4 | V. துரைசாமி | ... 62 |

### டக்கர்புரம்.

| | | |
|---|---|---|
| 1 | P. ஜோதி | ... 63 |
| 2 | P. ஞானதீபம் | ... 60 |

## கிறிஸ்தியானகரம் சேகரம்.

### கிறிஸ்தியானகரம்.

| | | மார்க்கு |
|---|---|---|
| 1 | V. செல்லம்மாள் | ... 83 |
| 2 | G. செல்லம்மாள் | [illegible] |
| 3 | S. சம்பூரணம் | ... 60 |

### வடக்கூர்.

| | | |
|---|---|---|
| 1 | S. கோவில்பிள்ளை | ... 61 |

## இடையன்குடி சேகரம்..

### கஸ்பா ஆண்பாடசாலை.

| | | |
|---|---|---|
| 1 | D. சாமுவேல் | ... 82 |
| 2 | S. சந்தோஷம் | ... 78 |
| 3 | M. P. ராஜமணி | ... 78 |
| 4 | D. S. சிமோன் | ... 77 |
| 5 | J. தங்கையா | ... 73 |
| 6 | V. யோசேப்பு | ... 72 |
| 7 | G. தங்கையா | ... 70 |
| 8 | D. கோவில்பிள்ளை | ... 70 |
| 9 | G. J. தேவதாசன் | ... 70 |
| 10 | K. ஜாண் பொன்னையா | ... 65 |
| 11 | S. G. R. கோவில்பிள்ளை | ... 64 |
| 12 | R. துரைசாமி | ... 63 |
| 13 | A. லாசரு | ... 61 |
| 14 | P. S. பவுல் | ... 61 |
| 15 | D. சுவாமிக்கண் | ... 61 |
| 16 | D. தங்கப்பாண்டியன் | ... 60 |
| 17 | D. ஏசுதாசன் | ... 60 |

### ஹை பெண்பாடசாலை.

| | | |
|---|---|---|
| 1 | P. அன்னத்தாய் | ... 98 |
| 2 | R. M. பொன்னம்மாள் | ... 92 |
| 3 | Sol. செல்லம்மாள் | ... 82 |
| 4 | S. ஜெபமணி | ... 81 |
| 5 | T. ரத்தினம் | ... 78 |
| 6 | S. தாயம்மாள் | ... 76 |
| 7 | R. செல்லம்மாள் | ... 73 |
| 8 | M. தங்கம்மாள் | ... 73 |
| 9 | M. லேசாள் | ... 70 |
| 10 | M. புஷ்பம் | ... 70 |
| 11 | A. ஜோதிமணி | ... 69 |
| 12 | J. ரஞ்சிதம் | ... 68 |
| 13 | S. க்ஷேத்திரம் | ... 67 |
| 14 | G. மேரி | ... 67 |
| 15 | S. பாலம்மாள் | ... 65 |



| | | மார்க்கு |
|---|---|---|
| 16 | G. இசபெல்லா | ... 61 |
| 17 | G. தேவபாக்கியம் | ... 60 |
| 18 | P. மதுரம் | ... 60 |
| 19 | G. சுகிர்தம்மாள் | ... 60 |
| 20 | D. சொர்ணம் | ... 60 |
| 21 | D. தங்கம்மாள் | ... 60 |
| 22 | A. பிச்சமுத்து | ... 60 |

### ஹை லேஸ் ஸ்கூல்.

| | | |
|---|---|---|
| 1 | D. சௌந்தரம் | ... 76 |
| 2 | K. லூய்ஸா | ... 74 |
| 3 | D. பூரணம் | ... 68 |
| 4 | M. மரியம்மாள் | ... 67 |
| 5 | J. ராகேல் | ... 63 |
| 6 | அற்புதநேசம் | ... 63 |
| 7 | D. ரஞ்சிதமணி | ... 62 |
| 8 | M. சாராள் | ... 62 |
| 9 | V. அமிர்தம் | ... 61 |
| 10 | V. யோவன்னாள் | ... 60 |
| 11 | J. அமுதாயி | ... 60 |

### குட்டம்.

| | | |
|---|---|---|
| 1 | S. தங்கத்துரை | ... 73 |
| 2 | A. அழகானந்தம் | ... 62 |

### புதூர்.

| | | |
|---|---|---|
| 1 | S. ஏசுவடியான் | ... 79 |
| 2 | A. எலிசபெத் | ... 77 |
| 3 | G. சுவாமிதாசன் | ... 64 |
| 4 | S. அற்புதம் | ... 60 |

### கோடாவிளை.

| | | |
|---|---|---|
| 1 | S. துரைசாமி | ... 63 |
| 2 | G. துரைசாமி | ... 63 |

### மணியன்குடி.

| | | |
|---|---|---|
| 1 | A. V. கமலம் | ... 75 |

## கூடன்குளம் சேகரம்.

### கூடன்குளம்.

| | | |
|---|---|---|
| 1 | Y. பொன்னம்மாள் | ... 94 |
| 2 | N. அற்புதம் | ... 92 |
| 3 | N. அன்னப்பழம் | ... 90 |
| 4 | V. P. சொர்ணம் | ... 83 |
| 5 | N. பாக்கியலட்சுமி | ... 79 |
| 6 | A. பாக்கியம் | ... 77 |
| 7 | J. அன்னத்தாய் | ... 76 |
| 8 | S. ஞானவடிவு | ... 75 |
| 9 | S. தெய்வுப்பழம் | ... 69 |
| 10 | P. ஆனந்தநாயகம் | ... 66 |
| 11 | J. தேவநேசம் | ... 65 |
| 12 | S. வள்ளிக்கண் | ... 64 |
| 13 | P. அன்னாள்பாக்கியம் | ... 63 |
| 14 | Y. முத்தாபரணம் | ... 61 |
| 15 | J. அனிசௌந்தரம் | ... 61 |

### திருவம்பலபுரம்.

| | | |
|---|---|---|
| 1 | D. முத்தையா | ... 62 |

### யாக்கோபுபுரம்.

| | | |
|---|---|---|
| 1 | G. ஞானையா | ... 72 |
| 2 | A. பாக்கியம் | ... 64 |
| 3 | I. தங்கம்மாள் | ... 64 |
| 4 | P. தங்கம்மாள் | ... 60 |

### பண்ணை.

| | | |
|---|---|---|
| 1 | P. குருபாதம் | ... 67 |
| 2 | S. அருமைநாயகம் | ... 63 |

### ஆவரைகுளம்.

| | | |
|---|---|---|
| 1 | S. K. பரிபூரணம் | ... 70 |
| 2 | S. நவமணி | ... 63 |
| 3 | S. வேதநாயகம் | ... 63 |
| 4 | G. பரமானந்தம் | ... 60 |

## சாயர்புரம் சேகரம்.

### சாயர்புரம்.

| | | |
|---|---|---|
| 1 | S. எப்பிராயிம் | ... 82 |
| 2 | S. மாசில்லாமணி | ... 82 |
| 3 | M. யோவான் | ... 80 |
| 4 | S. ஏசுதாசன் பாண்டி | ... 78 |
| 5 | P. J. தியாகராஜ் | ... 77 |
| 6 | S. ராஜேந்திரம் | ... 77 |
| 7 | M. ராஜய்யா | ... 75 |
| 8 | J. காந்தி | ... 74 |
| 9 | P. J. அமிர்தமணி | ... 72 |
| 10 | A. அருமைநாயகம் | ... 72 |
| 11 | D. ஞானம் | ... 70 |
| 12 | D. எபெனேசர் | ... 70 |
| 13 | P. பிலிப்பு | ... 69 |
| 14 | G. சமாதானம் | ... [illegible] |
| 15 | G. செயின்ம் | ... [illegible] |
| 16 | R. சாமுவேல் | ... [illegible] |
| 17 | J. சாமுவேல் | ... 61 |
| 18 | P. யாக்கோபு | ... 61 |
| 19 | P. A. தாமஸ் | ... 61 |
| 20 | Y. எட்வர்ட் | ... 60 |

## S. Marry's School. மார்க்கு

1 G. பூமணி ... 84
2 G. கிரேஸ் ... 81
3 S. செல்வம் ... 73
4 V. மேரி ... 73
5 D. ரோஸ் ஜெமிமா ... 70
6 A. பூமணி ... 70
7 J. ரஞ்சிதம் ... 62
8 G. தைரியம் ... 62
9 J. நல்லம்மாள் ... 61
10 C. செல்லம்மாள் ... 60
11 M. பொன்னம்மாள் ... 60
12 G. அன்னபூரணம் ... 60

## சுப்பிரமணியபுரம்.

1 M. நவமணி ... 88
2 G. தங்கரத்னம் ... 82
3 S. ரத்னமணி ... 78
4 D. அன்னமரியாள் ... 76
5 V. ஞானஜெபசுந்தரவடிவு ... 65
6 G. அருமைநாயகம் ... 65
7 G. தவமணி ... 63
8 M. தாமஸ்ராஜ் ... 61
9 A. தங்கையா ... 60
10 Y. பொன்னுத்தாய் ... 60

## முள்ளன்விளை.

1 G. முத்தம்மாள் ... 67
2 G. ஜெபஞானம் ... 66

## கட்டாலங்குளம்.

1 S. P. தாவீது ... 60

## நடுவக்குறிச்சி.

1 D. S. ரத்னமணி ... 75

## புளியநகர்.

1 S. ரஞ்சிதம் ... 80
2 S. பாலசுந்தரம் ... 60

## காவல்காடு.

1 [illegible] ... 76
2 [illegible] ... 76
3 M. [illegible]மரியாள் ... 73
4 G. [illegible] அம்மாள் ... 71
5 G. [illegible] ... 70
6 S. [illegible]தம் ... 65

7 G. சின்னசொர்ணம் ... 60
8 Y. சற்குணம் ... 60

## அகரம். மார்க்கு

1 M. கந்தசாமி ... 88
2 V. ராஜபாண்டியன் ... 81
3 K. ராஜேந்திரம் ... 71
4 G. நக்ஷத்திரம் ... 60

# புதியம்புத்தூர் சேகரம்.

## கஸ்பா ஆண் பாடசாலை.

1 K. தவமணி ... 83
2 G. யேசுதாசன் ... 64
3 A. மதுரம் ... 62
4 D. எட்வர்ட் ... 61
5 A. வேதமணி ... 60

## டை பெண் பாடசாலை.

1 T. தாயார் ... 91
2 H. ஜிம்மி ... 87
3 P. அன்னமரியாள் ... 82
4 T. நாட்சியார் ... 72
5 M. K. மரியாள் ... 71
6 A. தவமணி ... 65
7 D. சொர்ணம் ... 65
8 S. ஆக்னஸ் ... 60

## தட்டப்பாறை.

1 J. அலெக்சாந்திரா ... 73
2 J. எஸ்தர் ... 64

# குளத்தூர் சேகரம்.

## வேப்பலோடை.

1 S. தாவீது ... 88
2 A. தேவப்பிரியம் ... 80
3 A. யேசுதாசன் ... 78
4 S. எபெனேசர் ... 68
5 S. பால்ராஜ் ... 62

## சக்கம்மாள்புரம்.

1 P. முத்துநாயகம் ... 74
2 A. வேதநாயகம் ... 60

## பொம்மையாபுரம்.

1 G. [illegible] ... [illegible]
2 S. சுவாமிதாசன் ... 80

## மார்த்தாண்டன்பட்டி.

1 D. ஆசீர்வாதம் ... 61

(இன்னும் வரும்)

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

14 AUG 1917 MADRAS


# The Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XII. மார்ச்சு 1917. No. 3.


## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்.

### மூன்றாவது சத்தியம்.

"அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்"..

தங்கவாக்கியம். "*அந்த வார்த்தை மாம்சமாகி...நமக்குள்ளே வாசம் பண்ணினார்*" பரி. யோவா. 1. 14.

*இயேசுக்கிறிஸ்து மெய்யான தேவனாயிருக்கிறார் என்று இரண்டாவது சத்தியத்திலே கற்றுக்கொண்டோம். அவர் உலகத்தில் வந்து நமக்காக ஒரு மனுஷனாகப்பிறந்தார் என்பதை இந்த சத்தியத்திலே கற்றுக்கொள்ளுகிறோம்.*

1. *இயேசுநாதர் யாராலே உற்பவித்துப்பிறந்தார்? இயேசுநாதர் பரிசுத்த ஆவியினாலே உற்பவித்துப்பிறந்தார்.* இதைப்பற்றி பரி. லூக். 1: 26—38ல் தெளிவாய் வாசிக்கிறோம். பரி. காபிரியேல் என்னும் தேவதூதன் பலஸ்தீனாநாட்டிலுள்ள நாசரேத் என்ற சிற்றூரில் குடியிருந்த பரிசுத்தமுள்ள ஓர் ஏழைக்கன்னிகையிடம் வந்து "இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவா

30-3-17

யாக" என்று சொன்னார். அப்பொழுது அந்த அம்மாள் "நான் புருஷனை அறியேனே, இது எப்படியாகும்?" என்று பிரமித்தார்கள். அதற்கு தேவதூதன் "பரிசுத்த ஆவி உன்னிடத்தில் வரும், உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்" என்றார். அப்படியே இயேசுநாதர் பரிசுத்த ஆவியின் செயலினால் அதிசயமாய் உற்பவித்துப் பிறந்தார். டிசம் 25உ நாம் கொண்டாடும் மங்களவாக்குத் திருநாள் இந்த விசேஷத்தையே நமக்கு ஞாபகப்படுத்துகிறது. பரி. யோசேப்பு நமது ரட்சகரை வளர்க்கும் தந்தையாக மாத்திரம் இருந்தாரேயன்றி வேறல்ல.

2. நமதாண்டவர் யாரிடத்தில் உற்பவித்துப்பிறந்தார்? நமதாண்டவர் பரி. கன்னிமரியம்மாளிடத்தில் உற்பவித்துப்பிறந்தார். இந்த அம்மாள் தாவீதின் வம்சத்திலுள்ள யோசேப்பு என்னும் ஒருவருக்கு மனைவியாக நியமிக்கப்பட்டிருந்த தேவபக்தியுள்ள ஓர் கன்னிகை. இவர்களுக்குக் கலியாணம் ஆகுமுன்னமே அற்புதமான வகையாய் நமதாண்டவர் அந்த அம்மாளுடைய கெர்ப்பத்தில் உற்பவித்து, பெத்லகேம் ஊர்மாட்டுத்தொழுவில் பிறந்தார். (பரி. லூக். 2: 1—7.) "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெறுவாள்" என்று ஏசாயா தீர்க்கதரிசி முன் உரைத்தபடியே இது நடந்தது. (ஏசா. 7: 14).

3. அவர் உற்பவித்துப்பிறந்தார். குறிக்கப்படுகிற பொருள் என்ன? தேவன் மனுஷனானார் என்ற அதிசயப்பிறப்பு அதினால் குறிக்கப்படுகிறது. அதாவது இயேசு சுவாமி நித்தியகாலமாயுள்ள தமது தேவதன்மையோடு நமது மனுஷதன்மையையும் எடுத்துக்கொண்டார் என்பதே அதின் பொருள். பாவம் ஒன்று தவிர மற்றெல்லா விஷயத்திலும் அவர் நம்மைப்போல பூரண மனுஷனானார். அவர் எடுத்துக்கொண்ட மனுஷீகம் ஆதாம் பாவஞ்செய்யுமுன் இருந்த நிலைமைக்கு ஒப்பானது. ஆனால் அவர் வெறும் மனுஷனாக மட்டுமல்ல தேவனும், மனுஷனுமாக இருக்கிறார். பரிசுத்த அதனாஷியஸ் விசுவாசப்பிரமாணத்தில் 'அவர் குறைவற்ற தேவனும் குறைவற்ற மனுஷனுமாயிருக்கிறார்' என்று விசுவாசிக்கிறோம். ஆயினும் தேவன், மனுஷன் என்ற இரண்டு ஆட்களாயிராமல் தேவதன்மையும் மனுஷதன்மையும் பொருந்திய ஒரே ஆளாக இருக்கிறார். அந்த இரண்டு தன்மைகளும் அவரிடத்தில் ஒன்றாய் விளங்கினது என்பதை சுவிசேஷ சரித்திரங்கள் நமக்குத் தெளிவாய்க் காட்டுகின்றன. மனுஷனாகப்படவிலே தூங்கினார். தேவனாக காற்றையும் கடல் கொந்தளிப்பையும் அமர்த்தினார். (பரி. மத். 8: 24—27) மனுஷனாக மரித்த லாசருக்காக அழுதார். தேவனாக அவனை உயிரோடே எழுப்பினார். (பரி. யோவான். 11: 35, 43) மனுஷனாக சிலுவையிலே பாடுபட்டு



மரித்தார். தேவனாக மூன்றும் நாளில் உயிரோடே எழுந்தார். அதுமட்டும் அல்ல மனுஷனாக "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்" என்றும் (பரி. யோவான் 9: 28) தேவனாக "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்றும் (பரி. யோவான் 10: 30) அவர்தாமே சொல்லியுமிருக்கிறார்.

போதனை. 1. இயேசுசுவாமி மெய்யான மனுஷனாக நமது பலவீனங்களில் நமக்காக பரிதபிக்கக்கூடியவராயும் மெய்யான தேவனாக நமக்கு உதவிசெய்ய வல்லவராயுமிருக்கிறார்.

2. அவருடைய மனுஷாவதாரம் தெய்வத்தை மனுஷனுக்குக் காட்டுகிறதாயிருக்கிறது. "என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். பரி. யோவா. 14: 9.

## மகாராணியும் சிட்டுக்குருவியும்.

காலஞ்சென்ற விக்டோரியா மகாராணி அதிகக் காருண்யமும் அன்பும் நிறைந்தவர் என்று பிள்ளைகளாகிய நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒருசமயத்தில் அந்த அம்மாள் ஜெர்மன் கடல் எனப்பட்ட வட சமுத்திரத்தில் கப்பல் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்கள். கப்பல் நடுச் சமுத்திரத்தில் போய்க்கொண்டிருக்கையில், ஒரு சிட்டுக்குருவி கப்பலைச் சுற்றிச் சுற்றிப் பறந்து, பாய்மரத்தில் உட்காரப் பிரயாசப்பட்டும், கப்பல் அங்குமிங்கும் அசைந்துகொண்டேயிருந்தபடியால், உட்காரமுடியாமல் தவிக்கிறதைக் கண்டார்கள். மகாராணி அந்த ஏழைச் சிட்டுக்குருவிக்காகப் பரிதபித்து, கப்பலை நிறுத்தி, சிட்டுக்குருவிக்கு உதவிசெய்யக் கட்டளையிட்டார்கள். உடனே கப்பல் நிறுத்தப்பட்டது. சிட்டுக்குருவி அதிகநேரமாய்ப் பறந்து, தவித்து, சோர்ந்து போயிருந்தபடியால் உட்காரமுடியாமல் கப்பலில் விழுந்தது. அதைப் பத்திரமாய் எடுத்துக்கொண்டுபோய் மகாராணியின் கையில் கொடுத்தார்கள். ஆனால் அதிக இளைப்பினால் அதின் பிராணன் போய்விட்டது. அதற்கு உயிர் உண்டாக்கும்படி அந்த அம்மாள் எவ்வளவோ பிரயாசப்பட்டும் கூடாமல்போய்விட்டது. உலகத்தின் ஐந்தில் ஒரு பாகத்தை ஆண்டு நடத்திவந்த மகாராணி ஓர் சிறிய சிட்டுக்குருவிக்கு உயிர்கொடுக்க ஏலாதவர்களாயிருந்தார்கள்! அவர்களுக்கு மனமிருந்தது. ஆனால் பெலன் இல்லை. நமது அருமை ரட்சகரோ நமக்கு உண்டாகும் சோதனைகளிலும் துன்பங்களிலும் நமக்காக மனதுருகுகிறவராய்மட்டுமல்ல, ஏற்ற உதவிசெய்து நம்மைக் காப்பாற்றவும், உயிர்கொடுக்கவும் வல்லவராயிருக்கிறார்.

## சங்க விசேஷங்கள்.

நாளது ஜனுவரி 31௳ நாசரேத்திலும், பெப்ருவரி 6௳ சாயர்புரத்திலும், 15௳ கிறிஸ்தியானகரத்திலும், 16௳ முதலூரிலும், 20௳ இடையன்குடியிலும், 24௳ கூடன்குளத்திலும், 26௳ யாக்கோபுபுரத்திலும் பிள்ளைகளின் பண்டிகை சந்தோஷமாய்க் கொண்டாடப்பட்டன. எல்லா இடங்களிலும் வழக்கம்போல் பிள்ளைகள் உற்சாகமாய்க் கூடிவந்து, கர்த்தரைத் துதித்து, காணிக்கை செலுத்தி, நல்ல போதனை பெற்றுப்போனார்கள். அந்தந்த இடங்களில் பிள்ளைகளுக்கு விருந்தும், பரிசுகளும் அளிக்கப்பட்டன.

---

## பரிசு ஜாபிதா, (தொடர்ச்சி.)

பரிசு.

### புதுக்கோட்டை சேகரம்.

#### புதுக்கோட்டை.

1 P. தங்கையா 2-ம் ,,
2 S. அன்னம்மாள் ,,
3 A. தங்கம்மாள் 3-ம் ,,
4 A. எபெனேசர் ,,

#### ராமசாமியாபுரம்.

1 V. யாக்கோபு 2-ம் ,,
2 T. தங்கவேல் 3-ம் ,,
3 A. சுப்பையா ,,
4 V. பிரமுத்து ,,
5 V. தங்கசாமி ,,

#### நாட்சியாபுரம்.

1 D. வேதமாணிக்கம் 2-ம் ,,
2 A. பவுல் ,,
3 T. ராஜதங்கம் ,,
4 D. பாலம்மாள் 3-ம் ,,
5 V. செல்வமணி ,,
6 P. செல்வஜோதி ,,
7 P. சுந்தரராஜ் ,,
8 S. ஞானாபரணம் ,,
9 D. சாலோமோன் ,,

#### மறவன்மடம்.

1 P. ராமசாமி 3-ம் ,,
2 T. ஐயாத்துரை ,,

#### சேர்வைகாரன்மடம்.

1 S. மனுவேல் 2-ம் ,,
2 A. ஜெபராஜ் ,,

பரிசு.

3 A. தேவகிருபை 2-ம் ,,
4 P. டேய்ஸி ,,
5 M. ஜெமிமா ,,
6 G. எட்வின் ,,
7 J. K. பெரியநாயகம் ,,
8 P. துரைசாமி ,,
9 A. பெஞ்சமீன் ,,
10 G. T காட்வின் ,,
11 G. சுகிர்தம் 3-ம்
12 M. சுந்தரபாண்டியன் ,,
13 D. தேவநேசம் ,,
14 D. குணபாண்டியன் ,,
15 M. மணியம்மாள் ,,

#### தங்கம்மாள்புரம்.

1 S. பெரியநாயகம் 1-ம்
2 V. யோசேப்பு ,,
3 J. ஞானமணி 2-ம்
4 T. கோவில்பிள்ளை ,,
5 R. அந்தோணிமுத்து ,,
6 S. ராமசாமி 3-ம்
7 P. பள்ளிகொண்டபெருமாள்
8 V. ஜெபமணி ,,
9 K. ஷண்முகவேல் ,,
10 P. பாக்கியம் ,,

#### ஜெபஞானபுரம்.

1 K. பொன்னுசாமி 2-ம்
2 S. சுப்பிரமணியன் ,,
3 K. ராஜபாண்டியன் 3-ம்
4 T. பொன்னுசாமி ,,
5 T. கோவில்பிள்ளை ,,
6 P. ரத்னசாமி ,,

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

The
# Children's Herald
# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XII. ஏப்ரல், மே. 1917. No. 4

THE REGISTRAR OF ...
26 JUL 1917

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்.

### நான்காவது சத்தியம்.

"அவர்...பொந்தியுப் பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டார்."

**தங்கவாக்கியம்:** "கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டார்" 1 பேது. 2. 21.

மூன்றாவது சத்தியம் தேவகுமாரன் மனுஷாவதாரம் எடுத்த விபரத்தை நமக்குப் போதிக்கிறது. இந்த சத்தியம் அவருடைய பாடுகளை நமக்கு விவரிக்கிறது.

i. நமதாண்டவர் பட்டபாடுகளென்ன? நமதாண்டவரின் மனுஷாவதாரம் முழுவதும் பாடு நிறைந்ததாகவே இருந்தது. கன்னிகையின் கர்ப்பத்தை அருவருக்காமல் அதில் உற்பவித்தார். எளிய குடும்பத்தில், அனாதை போல், சத்திரத்தைச்சேர்ந்த மாட்டுத்தொழுவில் பிறந்தார், பசியாயிருந்தார், குடியிருக்க வீடற்றிருந்தார், அவமதிக்கப்பட்டார், சோதிக்கப்பட்டார். அதுமட்டுமல்ல, முதல் பெரிய வெள்ளிக்கிழமையிலும், அதற்கு முந்தின இரவிலும் அவர் பட்டபாடுகள் அனந்தம். கெத்சமனே தோட்டத்தில் இரத்த வேர்வை வடியத்தக்கதாக ஆத்தும வேதனையடைந்தார். யூதாசினால் காட்டிக்கொடுக்கப்பட்டார். குற்றவாளியைப்

1-6-17

போல கட்டிக்கொண்டு போகப்பட்டார். தமது சீஷர் எல்லாராலும் கைவிடப்பட்டார். பொய்யாய்க் குற்றஞ்சாட்டப்பட்டார். சேவகரால் நிந்திக்கப்பட்டார். பேதுரு அப்போஸ்தலனால் மறுதலிக்கப்பட்டார். ஏரோது ராஜாவினால் இகழப்பட்டார். பிலாத்துவினால் வாரால் அடிக்கப்பட்டார் முள்முடி சூட்டப்பட்டார். பரியாசம் பண்ணப்பட்டார். கடைசியாய் சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டு, பாவி! உன்னிமித்தம் தொங்கவிடப்பட்டார்.

**ii. யாருடைய காலத்தில் பாடுபட்டார்?** பொந்தியுப் பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டார். நமதாண்டவரின் ஜீவிய முழுவதும் பாடு நிறைந்ததாக இருந்தபோதிலும் கெத்சமனே தோட்ட முதலுள்ள அவருடைய பாடுகளே விசுவாசப்பிரமாணத்தில் விசேஷமாய்க் குறிக்கப்படுகின்றன. அக்காலத்தில் பிலாத்து யூதேயா நாட்டுக்கு தேசாதிபதியாக இருந்தபடியாலும், அவனே நமது ரட்சகரை சிலுவைப் பாடுகளுக்கு ஒப்புக்கொடுத்தபடியாலும் அவன் காலத்தில் பாடுபட்டார் என்று சொல்வது தகுதியே. அவர் பாடுபட்டது நிச்சயம் என்பதைக்காட்ட, அவர் பாடுபட்ட காலம் விசுவாசப்பிரமாணத்தில் திட்டமாய்க் காட்டப்படுகிறது. மேலும் தேவகுமாரனாகிய அவர் நமது பாவங்களினிமித்தம் ஒரு மனுஷனுடைய அதிகாரத்துக் கீழடங்கி பாடுபட்டார் என்பதும் நாம் தாழ்மையோடு சிந்திக்க வேண்டிய விஷயம்.

**iii. இயேசு சுவாமி என்னவிதமாய் மரித்தார்?** அவர் சிலுவையில் அறையுண்டு மரித்தார். சிலுவை மரணம் அவமானமும், நிந்தையும், வேதனையுமான மரணம். பிலாத்து அப்படிப்பட்ட மரணத்துக்கு நமதாண்டவரை ஒப்புக்கொடுத்தான். அவனுடைய கட்டளைப்படி போர்ச்சேவகர் இயேசுவை கல்வாரி மலைக்குக்கொண்டு போனார்கள். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். ஆறுமணி நேரம் சிலுவை மரத்தில் நமதாண்டவர் வதைத்து வதைத்துத் தொங்கினார். சிலுவையிலிருந்து ஏழுதரம் பேசினார். கடைசியாக "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று சொல்லி ஜீவனை விட்டார். அரிமத்தியா ஊர் யோசேப்பும் நிக்கொதேமுவும் அவருடைய திருச்சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்கினார்கள் யோசேப்பு தனக்காக வெட்டி வைத்திருந்த ஓர் புதிய கல்லறையிலே அவர் அடக்கம் பண்ணப்பட்டார்.

**போதனை 1.** உன்னைப் பாவத்தினின்றும் அதின் தண்டனையினின்றும் மீட்டு ரட்சிக்கும்படி உன் ஆண்டவர் உனக்காகப் பாடுபட்டு, மரித்தார். அந்த ரட்சிப்பை உனக்குச் சொந்தமாக்கிக்கொண்டிருக்கிறாயா! 2. அப்படியானால் உன்னிமித்தம் இத்தனை பாடுகளை சகித்து உனக்காக ஜீவன் விட்டவரை நேசிக்கிறாயா!

"கிறிஸ்து நமக்காகத் தம்மை......ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்" எபே. 5: 2.



## கடனைத் தீர்த்தார்.

கொஞ்சகாலத்துக்கு முன் ஒரு துரைசானி வேனிற்கால ரஜாவில் கடற்கரையோரமான ஒரு ஊரில்போய் இருந்தார்கள். அவ்வூரில் மாட் என்ற ஓர் ஏழைப்பையன் இருந்தான். அவனுக்கு எழுத்துப்படிக்கத் தெரியாது. இந்த அம்மாள் அவனைக்கண்டு, அவனுக்கு தேவனைப்பற்றியும் மோட்சத்தைப்பற்றியும் அடிக்கடி போதித்து வந்தார்கள். சிலநாள்களுக்குப்பின், அந்தப்பையன் தன்னை ஒரு பாவி என்று உணர்ந்து தன் பாவத்துக்காக மனவேதனைப்படுவதைக் கண்டார்கள். அப்பொழுது அந்த அம்மாள், அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "என் அருமைப் பிள்ளாய், நீ ஒரு பாவி என்பது உண்மைதான் உன்பாவம் எல்லாம் நீ தேவனுக்குச் செலுத்தவேண்டிய ஒரு கடன் போலிருக்கிறது. ஒருவன் இன்னொருவனிடத்தில் கடன்பட்டு, அதைச் செலுத்த ஏலாமலிருந்தால், அவன் சிறைச்சாலைக்குப்போக வேண்டியதிருக்கும், தேவனிடத்தில் ஒரு சிறைச்சாலை உண்டு. அதுதான் நரகம், உன் பாவத்தினிமித்தம் நீ அந்த சிறைச்சாலையில் போடப்பட வேண்டியது நியாயந்தான். ஆனால் தேவன் உன்னை நேசிக்கிறதினால், உன்னை அந்த சிறைச்சாலையில்போட அவருக்குப் பிரியமில்லை. ஆகையால் உனக்காக அவர் தமது அருமைக்குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்பினார். தேவகுமாரன் இந்த உலகத்தில் வந்து ஒரு மனிதனாய்ப் பிறந்து, இயேசு என்னும் இனிய நாமம் பெற்று சிலுவையிலேயே பாடுபட்டு, மரித்து, உன் கடனை எல்லாம் தீர்த்து விட்டார். ஆகையால் நீ அந்தச் சிறைச்சாலையில் போடப்படமாட்டாய்" என்று அவனுக்குச் சொன்னார்கள். அது முதல் அவன் தேவனையும் அவருடைய அன்பையும் தவிர மற்ற எல்லாவற்றையும் மறந்துவிட்டவனாகக் காணப்பட்டான். இன்னொரு நாள் அந்த அம்மாள் இயேசுவைப்பற்றி அவனுடன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது அவன் இருதயம் சந்தோஷத்தினால் நிறைந்தது. அவன் குதித்து, எழுந்து, தன் கையை வானத்துக்கு நேரே நீட்டி "கடனைத்தீர்த்த இயேசுவே! மாட் உமக்கு நன்றி சொல்லுகிறான்" என்று சத்தமிட்டுச் சொன்னான். அந்த நேரம் முதல் இயேசு தன் இரட்சகராயிருக்கிறார் என்ற சந்தோஷம் ஒருக்காலும் அவனைவிட்டு நீங்கவில்லை.

சில வருஷங்களுக்குப்பின் மாட் வியாதிப்பட்டு மரித்தான். மரிக்கும்போது "கடனைத்தீர்த்த இயேசுவே, மாட் எப்பொழுதும் உம்முடன் வந்து வசிக்கும்படி, அவனை உம்முடன் சேர்த்துக்கொள்ளும்" என்று சொல்லி ஜீவனைவிட்டான்.

## அநேகரைக் காப்பாற்றின ஒரு மனிதன்.

இங்கிலாந்திலுள்ள ஒரு மலை உச்சியில் சில ஜனங்கள் சுரங்கம் வைத்து கல்பேர்த்துக்கொண்டிருந்தார்கள். மலையின் அடிவாரத்தில் ஒரு மனிதன் உடைபட்ட கல்லுகளை வண்டியில் ஏற்றிக்கொண்டிருந்தான். அந்த மலைக்கு உள்ளே ரெயில் ஓடுவதற்கு ஒரு பாதை இருந்தது. வண்டியில் கல் ஏற்றிக்கொண்டிருந்த மனிதன் தற்செயலாய் அந்த ரெயில் பாதையை எட்டிப்பார்த்தான், அவர்கள் வைத்த சுரங்கத்தின் அதிர்ச்சியினால் ஒரு பிரமாண்டமான கல் பெயர்ந்து ரெயில் தண்டவாளத்தின் மேல் விழுந்துகிடக்கிறதைக் கண்டான். இதை உடனே உருட்டி தூரத் தள்ளாவிட்டால் ரெயில் பிரயாணிகளுக்குப் பெரிய மோசம் நேரிடுமே என்று பயந்தான். அந்தச் சமயத்தில் தூரத்தில் ரெயில் வருகிற சத்தம் கேட்டது. ரெயில் அந்த மலைக்குகையின் அடுத்த பக்கத்தில் உள்பிரவேசித்துவிட்டது. கல் குகையின் இந்தப் பக்கத்தில் கிடக்கிறது. சில நிமிஷங்களுக்குள், ரெயில் இந்தக் கல்லின்மேல் வந்து மோதிவிடும். மலை உச்சியில் நிற்கும் மனுஷரைக் கூப்பிட்டு, அவர்கள் வந்து கல்லைப் புரட்டுவதற்கு நேரமில்லை. தான் ஒருவனாய்க் கல்லைப்புரட்ட வேண்டுமானால் ஒருவேளை தன் உயிருக்கே மோசம் நேரிடலாம் என்று கண்டான் கல்லைப்புரட்டா விட்டாலோ ரெயிலில் வருகிற ஆயிரக்கணக்கான மனிதர் மாண்டு போவார்கள். ஆகையால் அநேக உயிர்களைக் காப்பாற்றுவதில் தன் உயிரைவிட்டுவிடத் தீர்மானித்தான். தன் கையிலிருந்த ஒரு இரும்புக்கம்பியால் கல்லைப்புரட்ட ஆரம்பித்தான். இதற்குள்ளாக ரெயில் சமீபத்தில் வந்துவிட்டது. ரெயிலை ஓட்டின மனிதன் தனக்கு முன்னே ஒரு பெரிய கல் கிடப்பதையும் ஒரு மனுஷன் அதைப்புரட்டப் பிரயாசப்படுவதையும் கண்டான். ஆனால் ரெயில் வெகு வேகமாய் வந்தபடியினாலும், அதிக சமீபத்தில் வந்து விட்டதினாலும் திடீரென்று அதை நிறுத்துவது கூடாததாக இருந்தது. தானும் ரெயிலிலிருந்த எல்லா ஜனங்களும் நிச்சயமாய் அழிந்துபோவோம் என்று எண்ணினான். இதற்குள்ளாக ரெயில் அந்த இடத்தில் வந்து மோசமின்றி அவ்விடத்தைக் கடந்து சென்றது. அவன் திரும்பிப்பார்த்தான். கல்லைப்புரட்டினவனுடைய தேகம் இரண்டாய் வெட்டுண்டு தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டான். காரணம் என்ன? கடைசி நிமிஷத்தில் தன் முழுப்பலத்தோடும் அவன் அந்தக் கல்லைப்புரட்டித் தள்ளிவிட்டான். ஆனால் தான் தப்புவதற்கோ நேரமில்லை.

வண்டியிலிருந்த ஒருவருக்காவது அவர்களுக்கு நேரிட இருந்த மோசம் தெரியமாட்டாது. அடுத்த ஸ்டேஷனில்போய்ச் சேர்ந்தவுடன் ரெயிலை ஓட்டின மனிதன் நடந்த சங்கதியைப் பிரயாணிகளுக்கெல்லாம் சொன்னான். அவர்கள் மிகுதியும் அனுதாபப்பட்டார்கள். தங்கள் நன்-



றியறிதலைக் காட்டும்படி அவர்கள் அதிகப்பணம் சேர்த்து அவன் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் கொடுத்தார்கள். அவன் மரித்த இடத்தில் ஒரு ஞாபகஸ்தம்பம் நிறுத்தி, அதில் "அநேக உயிரைக்காப்பாற்ற இவன் தன் உயிரைக்கொடுத்தான்" என்று எழுதி வைத்தார்கள் என் அருமைப் பிள்ளாய், உன்னை இரட்சிக்க இயேசுசுவாமி தம்முயிரைக் கொடுத்தாரே! நீ எவ்விதமாய் உன் நன்றியறிதலை அவருக்குக் காட்டுகிறாய்! அவருக்குப் பிரியமாய் நடப்பதும் அந்த ரட்சிப்பை மற்றவர்களுக்குச் சொல்லுவதும் நீ காட்ட வேண்டிய நன்றியறிதல்.

---

## வெட்டுண்ட கை

கடல் ஓரத்திலே அழகிய ஓர் பெரிய மாளிகை இருந்தது. அது யாருக்குப் பாத்தியப்பட்டது என்பதையிட்டு அயர்லாந்துக் காரருக்கும் ஸ்காட்லாந்துக் காரருக்கும் விவாதம் உண்டாயிற்று. சண்டையிட்டு இந்த விவாதத்தைத் தீர்த்துக்கொள்வதைவிட, ஒரு பந்தயம் வைத்து அதில் கெலித்துக்கொள்ளுகிறவர்கள் அந்த மாளிகையை எடுத்துக் கொள்ளலாம் என்று இருபட்சத்தாரும் ஒப்புக்கொண்டார்கள். அப்பந்தயம் என்னவென்றால்: அந்த இரண்டு தேசத்து தலைவர்களும் கடலில் ஒரு குறிப்பிட்ட எல்லையிலிருந்து, ஒரே நேரத்தில் பிரயாணம் செய்யத்தொடங்கி, யாருடைய கை முந்தி அவ்வரமண்மனையை வந்து தொடுகிறதோ அவர்கள் அந்த அரண்மனையை சுதந்தரித்துக் கொள்ளலாம் என்பதே.

பந்தயம் ஆரம்பித்தது, இருவரும் நான் முந்தி, நீ முந்தி என்று வெகு வேகமாய் தண்டுவலித்து ஓடினார்கள். எப்படியும் ஸ்காட்லாந்து தலைவனின் தோணி முந்திக்கொண்டது. கரைக்கும் கிட்டிவிட்டது ஆனால் ஏதோ ஒரு தடுக்கலில் அந்தத்தோணி மாட்டிக்கொண்டபடியால் கரைசேர ஏலாமல் நின்றுவிட்டது. தன்னால் கூடிய ப்ரயத்தனமெல்லாம் செய்தான். தோணி அசையவில்லை. இதற்குள்ளாக அயர்லாந்து தோணி முந்த ஆரம்பித்தது. உடனே ஸ்காட்லாந்து தலைவன் தோணியிலிருந்த தன் கைக்கோடரியை ஒரு கையில் பிடித்து, தன் மறுகையை தோணியின்மேல் வைத்து, அதை மணிக்கட்டிலிருந்து இறக்கி, வெட்டுண்ட கையை எடுத்து, அரண்மனைமேல் வீசி எறிந்தான். இவ்விதமாய் அவனுடைய கை முந்தி அரண்மனையைத் தொட்டபடியால் அந்தமாளிகை அவனுக்கும் அவன் ஜனத்தாருக்கும் சொந்தமாகிவிட்டது. வெட்டுண்ட அந்தக்கையைப் பார்க்கும்போதும், அதைக்குறித்து நினைக்கும்போதும் ஸ்காட்லாந்து தேசத்தார் எவ்வளவு அன்புடன் தங்கள் தலைவனை துத்தியம் செய்திருப்பார்கள்! இது அழிவுக்குரிய சுதந்தரம், என்றும் அழியாத நித்திய ஜீவசுதந்தரத்தை உனக்குத் தரும்படி உன் ஆண்-

டவரின் இருகரங்களும், கால்களும், தேகமும் பீறுண்டதே! நீ இதை நோக்கிப்பார்த்திருப்பதுண்டா! பார்த்து அவரில் அன்புகூருகிறாயா! இயேசு எனக்காகப் பீறுண்டார் என்று உன் இருதயத்தில் எழுதிக்கொள்.

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்

### ஐந்தாவது சத்தியம் (முன்பாகம்).

### 'அவர்...பாதாளத்தில் இறங்கினார்.'

தங்கவாக்கியம்:—'நான் மரணத்திற்கும் பாதாளத்திற்கும் முரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்' வெளி. 1: 18.

நான்காவது சத்தியத்தில் நமதாண்டவரின் சரீரம் கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டதை விசுவாசிக்கிறோம். இந்த சத்தியத்தில் அவருடைய ஆத்துமா பாதாளத்தில் இறங்கினதை விசுவாசிக்கிறோம்.

1. பாதாளமாவது என்ன? மரித்துப்போன நல்லார் பொல்லாருடைய ஆத்துமாக்கள் கடைசி உயிர்த்தெழுதல் நடக்கும் வரை தங்கி இருக்கும் இடமே பாதாளம். இதைக் குறித்து நமதாண்டவர் ஏழை லாசருவின் உவமையில் தெளிவாய்ப் போதித்திருக்கிறார். (பரி. லூக். 16: 19-31) பாதாளத்தில் இரண்டு பாகங்கள் உண்டு. ஒரு பாகத்தில் நல்லவர்களுடைய ஆத்துமாக்களும், மற்ற பாகத்தில் பொல்லாதவர்களின் ஆத்துமாக்களும், இருக்கின்றன. இவை இரண்டுக்கும் இடையில் ஓர் பிளப்பு உண்டு. பொல்லாதவர்களுடைய ஆத்துமாக்கள் இருக்கும் பாகம் வேதனையுள்ள இடம் என்றும், தாகத்தினாலும், அக்கினியினாலும் அந்த ஆத்துமாக்கள் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறது என்றும் தெரிகிறது. நல்லவர்களுடைய ஆத்துமாக்கள் இருக்கும் பாகம் 'ஆபிரகாமின் மடி' என்றும், 'பரதீஸ்' என்றும் சொல்லப்படுகிறது. (பரி லூக். 23: 43) அந்த இடத்தில் 'விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சரீரமாகிய சுமை நீங்கி விடுதலையடைந்து ஆனந்த சந்தோஷம் அனுபவித்து வாழுகிறது'. (மரித்தோர் அடக்கமுறைமை ஜெபம் பார்). (பிலி. 1: 23).

2. நமதாண்டவர் பாதாளத்தில் இறங்கினார் என்பதின் பொருள் என்ன? நமதாண்டவருடைய ஆத்துமா மரித்தோருடைய ஆத்துமாக்கள் போகிற இடத்துக்குப் போனது என்பதே இதின் பொருள். இயேசுசுவாமி பாவம் ஒன்று தவிர மற்ற எல்லா விஷயத்திலும் நம்மைப்போலவே இருந்தார். நம்மைப்போல அவருக்கு ஒரு சரீரமும் ஒரு ஆத்துமாவும் இருந்தது. அவர் மரித்தபோது அவருடைய சரீரம் கல்லறையில்



அடக்கம்பண்ணப்பட்டது. அவருடைய ஆத்துமா நாம ...க்கும்போது நம்முடைய ஆத்துமா போகிற இடமாகிய பாதாளத்துக்குப் ...னது.

3. பரதீஸ் என்பது எதைக்குறிக்கும்? பரதீஸ் என்பது பாதாளத்தில் நல்லவர்களுடைய ஆத்துமா வசிக்கும் இடத்தைக் குறிக்கும். சிலர் பரதீஸ் என்பதுதான் மோட்சம் என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல, ஏனென்றால் நமதாண்டவர் கள்ளனைப் பார்த்து 'இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்' என்று சொன்னார். மூன்றாம்நாளில் மகதலேனா மரியாளிடம் 'நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை' என்றார். (பரி. யோவா. 20: 17) ஆகவே நமதாண்டவர் சிலுவையிலே மரித்த அன்று அவருடைய ஆத்துமா பரதீசுக்குப் போனது. உயிரோடெழுந்தபின் தமது மகிமையின் சரீரத்தோடு மோட்சத்துக்குப் போனார். ஆகையால் பரதீஸ் என்பது மோட்சத்தையல்ல, பாதாளத்தின் ஓர் பாகத்தையே குறிக்கும். அங்கே நல்லவர்களின் ஆத்துமாக்கள், கடைசி உயிர்த்தெழுதல் வரைக்கும் இளைப்பாறிக்கொண்டிருக்கின்றன.

**போதனை.** நாம் மரிக்கும்போது நம்முடைய ஆத்துமா, நமதாண்டவரின் ஆத்துமா போன இடத்துக்கே போகிறபடியால் நாம் பயப்பட அவசியமில்லை.

'பயப்படாதே...நான் மரணத்துக்கும் பாதாளத்துக்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்'

## இனி பயம் இல்லை

எமிலி என்ற சிறுபெண் ஒருநாள் தெருவழியே நடந்துபோனாள், அவளுக்கு எதிரே ஒரு பிரேதம் கொண்டுவரப்பட்டது. அவள் பயந்து அலறி, வீட்டுக்கு ஓடினாள். தகப்பனாரிடத்தில் 'ஐயா, பிரேதத்தைக் காண்பது எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! என்றாள். இல்லை, அம்மா, நீ நினைக்கிறபடி அது பயங்கரமானதல்ல, உனக்கு ஒரு சரித்திரம் சொல்லுகிறேன் கேள்: 42 வருஷங்களுக்கு முன்னே ஒருநாள் ஒரு பிரேதத்தை அடக்கம்பண்ணக் கொண்டுபோனார்கள். 8 வயதுள்ள ஒரு சிறுவனும் அவர்களோடு அழுதுகொண்டே போனான். பிரேதம் கல்லறைக்குள் வைக்கப்பட்டது. அந்தச் சிறுவன் கொஞ்சமும் பயமில்லாமல் 'என்னையும் என் தகப்பனாரோடுகூட அடக்கம்பண்ணிவிடுங்கள்' என்று மருகி அழுதான். எல்லாரும் அதைப்பார்த்துப் பரிதாபித்தார்கள். அந்தப் பையன் பிரேதத்தைப் பார்த்துப் பயப்படவில்லையல்லவா? அந்தச் சிறுவன் இப்போது 50 வயதுள்ள பெரிய மனிதனாயிருக்கிறான். ஆகிலும் தன்னுடைய 8-ம் வயதில் நடந்த அந்த சங்கதியை நன்றாய்த் தன் ஞாபகத்தில் வைத்திருக்கிறான்' என்றார். அப்பொழுது எமிலி 'அந்தப்

மதைக் கண்டு பயப்படவில்லை என்பதும், இன்னமும் பையன் பிழைத்துவிடவில்லை என்பதும் உங்களுக்கு எப்படித் தெரியும்?' அதைக் கேட்டாள். அதற்குத் தகப்பன் 'நான்தான் அந்தச் சிறுவன். என்னென் பிரேதத்துக்குப் பயப்படவில்லை, சொல்பார்ப்போம்?' என்றார். 'அது, நீங்கள் அதிகமாய் நேசித்த உங்கள் தகப்பனாருடைய பிரேதமாயிருந்தபடியால் நீங்கள் பயப்பட்டிருக்கமாட்டீர்கள்' என்றாள். ஆம், அதினாலேதான் நான் பயப்படவில்லை, நீ மிகவும் அருமையாய் நேசிக்கிற ஒருவர் மரித்தபோது அவர் சரீரம் கல்லறையில் இருந்ததினாலும், அவருடைய ஆத்துமா பாதாளத்துக்குப் போனதினாலும், உனக்குப் பிரேதத்தைப்பற்றியாவது, மரணத்தைப்பற்றியாவது, பயம் இருக்க வேண்டியதில்லையல்லவா?' என்று தகப்பனார் சொன்னார்.

---

## ஜேம்ஸ் என்னும் சிறுவன்

ஸ்காட்லாந்து தேசத்திலுள்ள ஓர் ஆஸ்பத்திரியில் இயேசுவை அறியாத ஒரு டாக்டர் இருந்தார். அவர் வியாதியஸ்தரைப் பார்த்துவரும்போது, இரண்டு கால்களும் அறுக்கப்பட்டுக் கிடந்த ஒரு சிறுவனைக் கண்டார் 'ஜேம்ஸ், நான் உனக்குச் சொல்லவேண்டிய ஒரு செய்தியிருக்கிறது. அதைக் கேட்க உனக்கு மனமா?' என்று டாக்டர் அச்சிறுவனைக் கேட்டார். 'துரையே, இன்று நான் மெத்தச் சந்தோஷமாயிருக்கிறேன். நீர் எதைச் சொன்னாலும் கேட்கப் பிரியம்தான்' என்று பையன் சொன்னான். 'ஜேம்ஸ், உனக்கு இனி பூமியிலே ஓட்டமுமில்லை. சாட்டமுமில்லை. இதுதான் உன் கடைசிநாள், இன்றைக்கு நீ மரித்துப் போவாய்' என்றார். 'அது மெய்தானா? ஐயா, அப்படியானால் எனக்கு அதிக சந்தோஷம். நான் ஆண்டவரிடத்தில் போகிறேன்' என்றான் பையன். டாக்டர்துரை அவிசுவாசியானபடியால் அவர் அவனைப் பார்த்து, 'நீ செத்தவுடனே உன்னைக்கொண்டுபோய் புதைத்துவிடுவார்கள். அதோடே எல்லாம் முடிந்துபோம்' என்றார். பையனோ 'அப்படியல்ல என் சரீரம் அடக்கப்பண்ணப்படும், என் ஆத்துமாவோ பரதீசின் பாக்கியங்களை அனுபவிக்க இயேசுவினண்டைக்குப் போகும். ஆகையால் நான் மரிக்கப் பயப்படுகிறதில்லை' என்று சொன்னான். துரை அவனைப் பார்த்து 'நீ என்னைவிட ஞானமுள்ளவனா? பரதீஸ் எங்கே இருக்கிறது? என்று கேட்டார். பையன் அதிக தைரியமாய் "இயேசு சுவாமி இருக்கிற இடம் தான் மீட்கப்பட்ட ஆத்துமாவுக்குப் பரதீஸ்" என்றான். டாக்டர் துரை அவனைவிட்டுப் போய்விட்டார். பையனும் மரித்துப் போனான். அடுத்தநாள் டாக்டர், அந்தப் பையனுக்கு உதவி செய்து வந்த ஆயாளிடம் இந்த அறிவெல்லாம் அந்தப் பையனுக்கு எப்படி வந்தது? என்று கேட்டார். "இதெல்லாம் பரிசுத்த வேதாகமத்தை அவன் ஒழுங்காய் வாசித்து வந்ததினாலே கற்றுக்கொண்டான் என்று நினைக்கிறேன்" என்று அவள் பதில் சொன்னாள். அது முதல் அந்த துரை பரிசுத்த வேதாகமத்தை ஒழுங்காய் வாசிக்க ஆரம்பித்தார். கடைசியாய் குணப்பட்டு மெய்விசுவாசியானார்.

Printed at the Darling Printing Press, Palamcottah
for th Tinnevolly S. P. G. Children's Mission.

✠

The

# Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XII. ஜூன், 1917. No. 6.

THE REGISTRAR ... 26 JUN 1917

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்.

### 5-வது சத்தியம் (தொடர்ச்சி).

"மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்."

தங்கவாக்கியம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரையடைந்தவர்களின் முதற்பலனானார். "(1 கொரி. 15: 20).

நமதாண்டவர் சிலுவையிலறையுண்டு மரித்தபோது அவருடைய சரீரம் யோசேப்பின் புதிய கல்லறையில் அடக்கப்பண்ணப்பட்டதென்றும், அவருடைய ஆத்துமா மரித்துப்போனவர்களுடைய ஆத்துமா போகிற இடமாகிய பாதாளத்துக்குப்போனது என்றும் இதற்கு முன் நாம் படித்திருக்கிறோம். அவருடைய ஆத்துமாவும் சரீரமும் திரும்பவும் ஒன்றுகூடி உயிரோடெழுந்திருந்ததைப்பற்றி இப்பொழுது படிக்கப்போகிறோம்.

i. இயேசு சுவாமி எப்போது உயிரோடே எழுந்தருளினார்? இயேசு சுவாமி மரித்து அடக்கம்பண்ணப்பட்ட மூன்றாம் நாளிலே உயிரோடெழுந்தருளினார். அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டது வெள்ளிக்கிழமை; அவர் உயிரோடெழுந்தது வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமை. அது கர்த்தருடைய நாளென்றும் சொல்லப்படுகிறது. நமதாண்டவர் ஞாயிற்றுக்கிழமையில் உயிரோடெழுந்ததினால் திருச்சபை ஞாயிற்றுக்கிழமைகளைத் திருநாட்களாக ஆசரித்து வருகிறது. 'மரித்தோரிடத்திலிருந்து எழுந்தரு

ளினார்' என்பது, மரித்தோரின் ஆத்துமாக்கள் இருக்கும் இடமாகிய பாதாளத்திலிருந்து அவருடைய ஆத்துமாவும் மரித்தோரின் சரீரம் வைக்கப்படும் இடமாகிய கல்லறையிலிருந்து அவருடைய சரீரமும் ஒன்றாய் சேர்ந்து உயிரோடு எழுந்ததைக் குறிக்கும்.

ii. இயேசு சுவாமி உயிரோடேழுந்தாரென்பதற்கு நிச்சயமென்ன? அவர் உயிரோடெழுந்ததற்கு மூன்றுவிதமான சாட்சிகளுண்டு. 1-வது தேவதூதர் சாட்சி. சுகந்தவர்க்கமிடப்போன ஸ்திரிகளுக்கு அவர் உயிர்த்தெழுந்தாரென்று தேவதூதர் சொன்னார்கள். (பரி. லூக். 24: 6). 2-வது சத்துருக்கள் சாட்சி. அவருடைய கல்லறையைக் காத்திருந்த காவலாளர் அவர் உயிரோடெழுந்தாரென்று பிரதான ஆசாரியருக்குச் சொன்னார்கள். (பரி மத். 28: 11). 3-வது சிநேகிதர் சாட்சி. நமதாண்டவர் உயிரோடெழுந்த பின் அவருடைய பிள்ளைகள் அநேகசமயங்களில் அவரைத் தரிசித்திருக்கிறார்கள். (1) மகதலேனா மரியாள் (பரி. யோவா. 20: 14). 2. கல்லறையண்டை வந்த மற்ற ஸ்திரிகள் (பரி. மத். 28: 9, 10). 3. பரி. பேதுரு (பரி. லூக். 24: 34). 4. எம்மாவூருக்குப்போன இரண்டு சீஷர்கள் (பரி. லூக் 24: 31) 5. தோமா தவிர மற்ற அப்போஸ்தலர் (பரி. யோவா. 20: 19). 6. தோமாவோடுகூட அப்போஸ்தலருக்கு (பரி. யோவா. 20: 26). 7. கலிலேயாக் கடலோரமாய் எழுபேருக்கு (பரி. யோவா. 21: 4). 8. கலிலேயாவிலுள்ள ஒரு மலையின்மேல் அப்போஸ்தலருக்கு (பரி. மத். 28: 16). 9. ஐஞ்ஞூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கு ஒரே நேரத்தில் (1 கொரி. 15: 6). 10. பரி. யாக்கோபுக்கு (1 கொரி. 15: 7). 11. ஒலிவமலையின்மேல் 11 அப்போஸ்தலருக்கும் (அப். 1: 9). 12. பரி. பவுலுக்கு (1 கொரி. 15: 8). இது தவிர இன்னும் பலதடவைகளில் தமது சீஷர்களுக்குத் தரிசனமானாரென்றும், அவைகள் பரி. வேதாகமத்தில் எழுதப்படவில்லை என்றும் நாம் அனுமானிக்கலாம் (அப். 1: 3). ஆகவே நமதாண்டவர் உயிரோடெழுந்தது நிச்சயமென்பதை இவைகளால் நாம் அறிந்துகொள்ளலாம்.

iii. நமது ஆண்டவரின் உயிர்த்தெழுதல் நமக்குப் போதிக்கிறதென்ன? 1. அவர் தமது சொந்த வல்லமையினால் உயிரோடெழுந்தபடியால் அவர் தேவகுமாரன் என்று நாம் அறிந்துகொள்ளுகிறோம் (ரோம. 1: 5). 2. மரணத்துக்குப்பின் நமது ஜீவனைப்பற்றிய நம்பிக்கையை அது நமக்குக் கொடுக்கிறது. கிறிஸ்துவானவர் உயிரோடு எழுந்தார்; அப்படியே நாமும் கடைசிநாளில் உயிரோடெழுப்பப்படுவோம் என்பதே அந்த நம்பிக்கை (1 கொரி. 16: 20). 3. உயிரோடெழுந்த கிறிஸ்து தமது ஜீவனை நமக்குத் தந்து நம்மைக் காப்பாற்றி வருகிறாரென்று அது நமக்குப் போதிக்கிறது. அதாவது பாவத்தினால் மரித்த நம்மை உயிர்ப்பித்து தமது ஆவியின் ஜீவனை நமக்குத் தந்து நம்மைப் பரிசுத்த ஜீவியத்தில் நடத்தி வருகிறார். இந்த ஜீவன் பரிசுத்த ஞானஸ்நானத்தில் முதலாவது நம்மில் ஆரம்பிக்கிறது (1 பேது. 3: 21).



"நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால்......மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல; மேலானவைகளையே நாடுங்கள்" (கொலோ. 3: 1; 2).

## தன் தம்பியை இரட்சித்தான்.

அமெரிக்காகண்டத்திலே ஒருநாள் சாயுந்தரத்தில் இரண்டு சகோதரர் ஒரு வாய்க்காலில் உட்கார்ந்து தூண்டில் போட்டு மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் மூத்தவனுக்கு அதிக மீன்கள் அகப்பட்டிருந்தது. இளையவன் கொஞ்ச மீன்கள் தான் பிடித்திருந்தான். மூத்தவன் இளையவனைப் பார்த்து, "நாம் வந்து வெகு நேரமாயிற்று; தாயார் கோபிப்பார்கள்; வீட்டுக்குப் போவோம் வா" என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டான். இளையவனோ மூத்தவனோடு புறப்படாமல் இன்னும் தாமதித்திருந்தான். ஒரு பெரிய மீன் அகப்பட்டுக்கொள்ளாதா என்று எண்ணினான். அவசரமாய் தூண்டிலை வீசினான்; கம்பு நழுவித் தண்ணீரில் விழுந்தது. தூண்டில் கம்பை எடுக்கப்பிரயாசப்பட்டான்; தானும் நழுவித் தண்ணீரில் விழுந்தான். எவ்வளவு பிரயாசப்பட்டும் கரையேற முடியவில்லை. உடனே சத்தமிட்டான். அந்தச் சத்தத்தைக்கேட்ட தமையன் அதிவேகமாய் ஓடி வந்தான். தண்ணீருக்குள் குதித்தான்; மரணத்தருவாயிலிருந்த தன் தம்பியைச் சுகமாய் கரைகொண்டு வந்து சேர்த்தான். இந்தச் சரித்திரமானது பாவமாகிய சமுத்திரத்தில் விழுந்து கெட்டுப்போன நம்மைக் காப்பாற்றும்படி தேவகுமாரன் இந்த உலகத்தில் வந்து மரித்து உயிரோடே எழுந்தருளினதை நமக்குக் காட்டுகிறது. எப்படியெனில், தண்ணீருக்குள் விழுந்த தம்பியை ரட்சிக்க தமையன் தண்ணீருக்குள் குதித்தது மட்டுமல்ல, தண்ணீரிலிருந்து மறுபடியும் அவனைத் தூக்கிக்கொண்டு வெளியே வரவேண்டியதாயிருந்தது. அப்படியே நமது ஆண்டவரும் பாவிகளாகிய நம்மை ரட்சிக்க பாவத்தின் தண்டனையாகிய மரணத்தை அடைந்து மறுபடியும் வெற்றி வேந்தராய் உயிரோடே எழுந்தருளினார். தமையன் தண்ணீரில் குதித்ததினாலே மட்டும் அல்ல, தன் தம்பியைத் தூக்கிக்கொண்டு திரும்பவும் வெளியே வந்ததினாலேயே தம்பி ரட்சிக்கப்பட்டான்,

## அநேகரைக் காப்பாற்றின ஒரு மனிதன்.

அமெரிக்காக் கண்டத்தில் பிலதெல்பியா என்ற ஒரு பெரிய துறைமுகப் பட்டணம் உண்டு. சில வருஷங்களுக்கு முன்னே, அத்துறைமுகத்திலிருந்து ஒரு கப்பல் மேல் இந்திய தீவுகளுக்குப் புறப்பட்டுப்போனது. அத்தீவுகளிலொன்றுக்குச் சமீபமாய் அது போய்க்கொண்டிருக்கையில் கப்

வில் சிதைவு நேரிட்டு அங்குள்ள ஒரு மண்மேட்டில் சிக்கிக்கொண்டது. கடல் கோஷ்டத்தினால் அலைகள் உக்கிரமாய் கப்பலின்மேல் மோதிக்கொண்டிருந்தன. தீவிலுள்ள ஜனங்கள் கரையில் கூடிநின்று இந்த அவஸ்தையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் கப்பலில் உள்ளவர்களுக்கு எவ்வித உதவியும் செய்ய அவர்களால் கூடாதிருந்தது. கப்பலைச் சேர்ந்த தோணிகளெல்லாம் அலைகளினால் நொறுங்கிப்போய்விட்டன. கரையிலும் தோணிகளில்லை. இப்படிப்பட்ட சமயத்தில் கப்பலிலுள்ளவர்கள் எப்படித் தப்பக்கூடும்! இன்னம் சில நிமிஷங்களுக்குள்ளாக அலைகளின் கோஷ்டத்தினால் கப்பல் சுக்கல் சுக்கலாய் நொறுங்கிப்போம். அதற்குள்ளாகக் கப்பலிலிருந்தவர்கள் கரைபோய் சேரவேண்டும். இவைகளை எல்லாம் அறிந்த கப்பல் தளகர்த்தன் ஒரு நூல்கயிற்றை எடுத்து அதின் ஒரு பாகத்தைக் கப்பலில் கட்டிவிட்டு அடுத்த பாகத்தைத் தன் கையில் பிடித்துக்கொண்டு கடலில் குதித்தார். இதைப் பார்த்தவர்களெல்லாரும், அவர் அப்படியே கடலில் அமிழ்ந்திப்போனாரென்றே நினைத்தார்கள். ஆனால் அவரோ சீக்கிரமாய் தண்ணீருக்கு மேலே காணப்பட்டுக் கரைக்கு நேரே நீந்திப் போய்க்கொண்டிருந்தார். கடைசியாக ஒரு பெரிய அலையின் உதவியினால், கையில் பிடித்திருந்த நூல் கயிற்றோடு கரை வந்துசேர்ந்தார். உடனே கப்பலில் இருந்தவர்கள் இன்னொரு பெரிய கயிற்றை அந்த நூல்கயிற்றின் நுனியிலே கட்டிவிட்டார்கள். அந்தக் கயிறு கரைக்கு இழுக்கப்பட்டது. இவ்விதமாய் கப்பலுக்கும் கரைக்கும் ஒரு கயிற்றுப் பாலம் சில நிமிஷங்களுக்குள் செய்யப்பட்டு முடிந்தது. கப்பலில் இருந்தவர்களெல்லாரும் அந்தக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு சுகமாய் கரைவந்து சேர்ந்தார்கள். அந்த தளகர்த்தன் தன் பிராணனைப் பெரிதென்று பாராமல் கடலில் குதித்துக் கரைசேராவிட்டால் கப்பலில் இருந்தவர்களெல்லாரும் மாண்டுபோயிருப்பார்களல்லவா?

---

## பரீட்சைப் பாடங்கள்.

ஆதியாகமம்.

1. சிருஷ்டிப்பு.
2. ஏதேன் தோட்டம்.
3. காயீன் ஆபேல்.
4. ஜலப்பிரளயம்.
5. பாபேல் கோபுரம்.
6. ஆபிரகாம் அழைக்கப்பட்டது.
7. ஈசாக்கைப் பலியிடப்போனது.
8. எலியேசர் பெண் தேடிப்போனது.
9. ஏசா, யாக்கோபு இளமைச் சரித்திரம்
10. யோசேப்பின் சரித்திரம்.

Printed at the Darling Printing Press, Palamcottah
for th Tinnevelly S. P. G. Children's Mission.

The

# Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XII. ஜூலை, 1917. No. 7.

OFFICE OF THE REGISTRAR 22 AUG 1917 MADRAS

## அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம்

### ஆறாவது சத்தியம்.

"அவர்...பரலோகத்துக்கு எழுந்தருளி, சர்வ வல்லமையுள்ள பிதா வாகிய தேவனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார்".

**தங்கவாக்கியம்:**—"*பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்*". *பரி. மாற்.* 16: 19.

*குமாரனாகிய தேவன் மனுஷனாகப் பிறந்தார், பாடுபட்டார், மரித்தார், உயிரோடெழுந்தார் என்ற கடந்தகால விஷயங்களை முந்தின சத்தியங்க ளிலே படித்தோம். இந்தச் சத்தியத்திலே இப்பொழுது நடந்துகொண் டிருக்கும் விஷயத்தைப் படிக்கப்போகிறோம். இயேசுசுவாமி பரலோகத் துக்குப் போய் 'தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்' என்ப தே அந்த விஷயம்.*

1. இயேசுசுவாமி எப்போது பரலோகத்துக்குப் போனார்? இயே *சுவாமி தாம் உயிரோடெழுந்த நாற்பதாம் நாளில் பரலோகத்துக்குப் போனார். நமதாண்டவர் உயிரோடெழுந்தபின் 40 நாள் இந்த உலகத் தில் இருந்தார். அந்த நாட்களில் அடிக்கடி தமது சீஷர்களுக்குத் தரிச னமானார். தம்மை உயிரோடிருக்கிறவராக அவர்களுக்குக் காண்பித்தார், தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி அவர்களுடனே பேசினார். பரிசுத்த ஆவியைப் பெறுமளவும் அவர்களை எருசலேமில் காத்திருக்கச் சொன்னார்*

17-7-17

அப்பால் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி கட்டளையிட்டார். நாற்பதாம் நாளில் அவர்களை ஒலிவ மலைக்கு அழைத்துக் கொண்டு போய் அவர்களை ஆசீர்வதித்தார். ஆசீர்வதிக்கும்போதே ஒரு மேகம் வந்து அவரை எடுத்தது. அந்த மேகத்தின்மேல் அவர் பரலோகத்துக்கு எழுந்தருளிப் போனார்.

2. இயேசுசுவாமி இப்போது எங்கேயிருக்கிறார்? இயேசுசுவாமி இப்போது பரலோகத்தில் பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவர் பரலோகத்தில் இருக்கிறார் என்று சொல்வதினால் பூலோகத்தில் அவர் இல்லை என்று நாம் நினைக்கக்கூடாது. ஆவியின் பிரகாரமாக அவர் எங்கும் இருக்கிறார், சரீரப் பிரகாரமாக பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார். பரி. ஸ்தேவான் பிதாவின் வலது பாரிசத்தில் அவரைக் கண்டார். (அப். 7: 55.) சங். 110: 1-லும் இது சொல்லப்பட்டிருக்கிறது. வலதுபாரிசம் என்பது நமதாண்டவர் உயர்த்தப்பட்டிருக்கும் மேலான நிலைமையைக் காட்டும் ஒரு வார்த்தை. (பிலி. 2: 9). வீற்றிருக்கிறார் என்பதினால் குமாரனும் பிதாவைப்போல 'சமமகிமையும் சமநித்திய மகத்துவமும் உள்ளவர்' என்று அறிந்துகொள்ளுகிறோம்.

3. பரலோகத்தில் இயேசுசுவாமி என்னசெய்துகொண்டிருக்கிறார்? பரலோகத்தில் இயேசுசுவாமி ராஜாவாக திருச்சபையைத் தமது பரிசுத்த ஆவியினாலே ஆண்டு நடத்திக்கொண்டிருக்கிறார். (1 கொரி. 15: 25). மேலும் நமக்கு ஒரு ஸ்தலத்தை அங்கே ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார் (பரி. யோவா. 14: 2.) ஆசாரியராக தமது பலியை நினைப்பூட்டி, பிதாவின் சமுகத்திலே நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். (எபி. 7: 25).

போதனை. 1. நமதாண்டவரின் ஆளுகைக்கு நாம் கீழடங்கி நடக்க வேண்டும். 2. அவர் ஆயத்தம்பண்ணும் பொன்னுலகத்துக்கு தகுதியுள்ளவர்களாகும்படி பரிசுத்த ஜீவியம் செய்யவேண்டும். 3. அவர் நமக்காகப் பரிந்துபேசுகிறவரானபடியால் நமது பலவீனங்களில் அவரைப்பற்றிப் பிடிக்கவேண்டும்.

“நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்”.

---

## இளவரசனைவிட.

ஒரு ஊரில் ஒரு சிறுவன் இருந்தான். ஒருநாள் அதிகாலையில் வழக்கம்போல் அவன் தன் ஆடுகளை மேய்க்கப் போனான். அது வசந்தகாலமாயிருந்தது. அவனுடைய ஆடுகள் மரங்களால் நிறைந்த இரண்டு மலைகளுக்கு நடுவேயிருந்த செழிப்பான பள்ளத்தாக்கில் மேய்ந்துகொண்டிருந்தது. சிறுவன் சந்தோஷத்தினால் ஆடிப்பாடிக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் அத்தேசத்தின் இளவரசன் வேட்டையாடிக்கொண்டு அங்கு வந்தார். பையனுடைய ஆனந்த சந்தோஷத்தை அவர் சற்றுநேரம் கவனித்து, மெதுவாய் அவன் கிட்டப்போய் “நல்லபையனே, நீ இவ்வளவு சந்தோஷமாயிருப்பதற்குக் காரணம் என்ன?” என்று கேட்டார். அவர் இளவரசன் என்பது அவனுக்குத் தெரியாது. அவன் அவரைப் பார்த்து “நமது இளவரசனைவிட நான் அதிக ஐசுவரியம் உடையவனாயிருக்கும்போது ஏன் சந்தோஷமாயிருக்கக்கூடாது!” என்றான். “நீ அவ்வளவு ஆஸ்தியுள்ளவன் என்று கேள்விப்படுவது சந்தோஷமான காரியம். ஆனால் இளவரசனைவிட உனக்கு அதிக ஆஸ்தியிருப்பது கூடிய காரியமல்ல” என்றார் ராஜகுமாரன். “ஏன், அதோ, பாரும், அந்த சூரியன் இளவரசனுக்குப் பிரகாசிக்கிறது போலவே எனக்கும் பிரகாசிக்கிறது. இந்த மலைகளும் பள்ளத்தாக்குகளும் தங்கள் அழகினால் இளவரசனைச் சந்தோஷப்படுத்துகிறது போலவே என்னையும் சந்தோஷப்படுத்துகிறது. ராஜகுமாரனுக்கு வேண்டியதெல்லாம் கிடைக்கிறதுபோல எனக்கும் நான் வேண்டும் என்று விரும்புவதெல்லாம் கிடைக்கிறது. தினமும் திருப்தியான உணவு, உடை யாவும் கிடைத்து வருகிறது. இதுதவிர ராஜகுமாரனுக்கு நமது அரசன் இந்த உலகத்தில் ஒரு சிங்காசனத்தையும் கிரீடத்தையும் சம்பாதித்து வைத்திருக்கிறார். ஆனால் எனக்கு ராஜாதிராஜாவாகிய இயேசு பரலோகத்திலே ஒரு நல்ல ஸ்தலத்தையும் ஜீவகிரீடத்தையும் ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிறார். ராஜகுமாரனுக்குக் கிடைக்கப்போகும் சுதந்தரம் நெடுநாள் நிலைநிற்காமல் அழிந்துவிடக்கூடியது. எனக்குக் கிடைக்கும் சுதந்தரம் என்றைக்கும் அழியாதது. ஆகையால் நான் இளவரசனைவிட அதிக ஐசுவரியவான் இல்லையா, ஐயா! என்றான் சிறுவன். “நிச்சயமாகவே நீ இளவரசனைவிட மேலானவன்தான்” என்றார் ராஜகுமாரன்.



---

## உனக்காகப் பரிந்து பேசுகிறார்.

ஒரு காலத்தில் ஒரு நல்ல அரசன் இருந்தார். அவருடைய பட்டத்துக்குமாரன் 16 வயதாயிருக்கும்போது, தமது குடிகளை நேரில் பார்த்து, அவர்களுடைய கஷ்டங்களைத் தீர்க்க விரும்பினார். ராஜகோலத்துடன் போனால் ஜனங்களுடைய சரியான நிலைமையை அறிந்துகொள்வது கஷ்டமென்று நினைத்து, ஏழையைப்போல் வேஷமாறிப் புறப்பட்டார். அநேக ஊர்களைச் சுற்றிப்பார்த்தார். ஜனங்களுடைய அறைகுறைகளை திட்டவட்டமாய் அறிந்தார். அநேகருக்குத் தன்னால் கூடிய உதவிகளைச் செய்தார். ஆயினும் அவரைத் தங்கள் இளவரசன் என்று ஒருவரும் அறிந்துகொள்ளவில்லை. கடைசியாக அவர் ஒருநாள் ஒரு சிறு ஊருக்கு வந்தார். நேரம் இருட்டிவிட்டது. அந்த ஊராருக்கு நன்மைசெய்யும்

படியாகவே அவர் அங்கே வந்தார். ஆயினும் அவ்வூரில் அவரை ஏற்றுக் கொள்வார் யாருமில்லை. வீடு வீடாய் அவர் தங்குவதற்கு இடம் கேட்கும் ஒருவரும் சம்மதிக்கவில்லை. அது மட்டுமல்ல, அவரை ஊருக்கு வெளியே துரத்தியும் விட்டார்கள். அந்தக் கிராமத்துக்கு வெளியே சற்றுதூரத்தில் ஒரு சிறு வெளிச்சம் தெரிந்தது, அங்கே போனார். அது ஒரு ஏழைக்குடியானவனுடைய வீடு. அவ்வீட்டுக்காரன் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு, உபசரித்தான். இரவு நெடுநேரம் அந்தக் குடியானவனோடு அவர் பேசிக்கொண்டிருந்தார். அந்த ஊர் ஜனங்களால் அந்தக் குடியானவனுக்கு இருக்கும் துன்பங்களையும் கஷ்டங்களையும் இளவரசன் திட்டமாய் அறிந்துகொண்டார்.

மறுநாள் காலையில் அவர் அவ்விடத்தை விட்டுப் புறப்படும்போது வீட்டுக்காரனை நோக்கி, "உன் கஷ்டங்களை எல்லாம் நீ ராஜாவினிடத்தில் போய்ச் சொல்லு, நிச்சயமாகவே உனக்கு உதவி கிடைக்கும்" என்று சொல்லிவிட்டுப்போனார். உடனே குடியானவன் தன் வருத்தங்களை எல்லாம் ராஜாவினிடம் சொல்லி உதவி கேட்கும்படி போனான். அவன் ராஜ சமுகத்தில் பிரவேசித்தவுடனே சந்தோஷமான ஒரு காரியத்தைக் கண்டான். தன் வீட்டுக்கு வந்தவர் இளவரசன் என்று அறிந்தான். அவர் ராஜாவின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறதைப் பார்த்தான். தன் காரியங்களை எல்லாம் அவர் ராஜாவுக்குச் சொல்லி, தனக்காக ராஜாவினிடத்தில் பரிந்து பேசுகிறதைக் கண்டான். அவன் மனம் சந்தோஷத்தினால் நிறைந்தது. தனக்கு எப்படியும் சகாயம் கிடைக்கும் என்று நம்பினான், தைரியமாய் ராஜ சமுகத்தில் போய் தனக்கு வேண்டிய உதவிகளைக் கேட்டான். தாமதமின்றி அவனுக்கு வேண்டிய உதவிகளை ராஜா கட்டளையிட்டார். என் அருமையான பிள்ளையே, உன்னை நேசித்து, உனக்காக இப்பூவுலகில் ஏழைக்கோலமாய் வந்த உன் ஆண்டவர், இப்பொழுது பரலோகத்தில் உனக்காக தமது பிதாவின் சமுகத்தில் பரிந்துபேசுகிறார் என்று நீ அறிந்துகொள்வது, உனக்கு எவ்வளவு சந்தோஷமான செய்தி. உனக்கு வேண்டிய ஒவ்வொரு காரியத்தையும் தைரியமாய் ஆண்டவரிடம் கேள். இயேசுசுவாமியினிமித்தம் நிச்சயமாகவே அது உனக்குக் கிடைக்கும். ஏனென்றால் இயேசுசுவாமி உனக்காகப் பரிந்து பேசுகிறார்.

Printed at the Darling Printing Press, Palamcottah
for th Tinnevelly S. P. G. Children's Mission.

# The Children's Herald.

# பாலர் தூதன்.

11 SEP 19

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 33.

Vol. XII ஆகஸ்ற்று, செப்ற்றெம்பர், 1917. No. 8, 9.

## அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணம்.

### ஏழாவது சத்தியம்.

'அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந் தீர்க்க வருவார்.'

தங்கவாக்கியம்:—'கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்.' 1. தெச. 4: 16.

நமதாண்டவர் இப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று முந்தின சத்தியத்தில் கவனித்திருக்கிறோம். இந்த சத்தியத்தில் அவர் அவ்விடத்திலிருந்து திரும்பவும் இந்த பூலோகத்துக்கு வருவார் என்பதை திருச்சபை நமக்குப் போதிக்கிறது.

1. நமதாண்டவர் ஏன் வருவார்? உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க நமதாண்டவர் வருவார். உயிருள்ளோர் என்பது நமதாண்டவர் வரும் சமயத்தில் இவ்வுலகில் உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தோர் என்பது ஆதாம் முதல் அதுவரையும் மரித்துப்போன எல்லா மனுஷரையும் குறிக்கும். ஆகவே ஒரு மனுஷனும் அவருடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பமுடியாது. எல்லாரையும் அவர் நியாயந்தீர்ப்பார். ஒவ்வொருவருடைய நினைவுகளைக் குறித்தும் (ரோம. 2: 16), வார்த்தைகளைக் குறித்து

(பரி. மத். 12: 36), செய்கைகளைக் குறித்தும் (பரி. யோவா. 5: 29) நியாயந்தீர்ப்பார். பொல்லாதவர்களை நித்திய நரக அக்கினியில் தள்ளி, நீதிமான்களுக்கு நித்திய ஜீவனைக்கொடுக்க அவர் வருவார்.

2. நமதாண்டவர் எப்போ வருவார்? நமதாண்டவர் நினையாத நேரத்திலே திடீரென்று வருவார். அவர் வரும் நாளையாவது, நாழிகையையாவது பிதா ஒருவர் தவிர வேறொருவரும் அறியார்கள். நோவாவின் காலத்தில் நினையாத நேரம் ஜலப்பிரளயம் வந்தது போலவும், லோத்தின் நாட்களில் திடீரென்று சோதோம், கொமோரா அழிந்தது போலவும், அவர் வரும் நாளும் இருக்கும். ஆகையால் நீ எச்சரிக்கையாயிரு. 'நீங்கள் நினையாத நாழிகையில் மனுஷ குமாரன் வருவார்.' பரி. மத். 24. 44.

3. நமதாண்டவர் எப்படி வருவார்? நமதாண்டவர் ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வருவார் (த. வா). முன்னே அவர் தாழ்வான நிலைமையில் இங்கு வந்தார். இனி அப்படியல்ல, மகா மேன்மையோடும், மகிமையோடும் வருவார். வல்லமையின் தூதரோடும், சுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படுவார். முன் எவ்விதமாய் மேகங்களின்மேல் எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மேகங்களின்மேல் வருவார். அப். 1: 11; வெளி. 1: 7. 'உன் கண்கள் ராஜாவை மகிமை பொருந்தினவராகக் காணும்'.

போதனை. 1. உன் ஆண்டவர் உன்னை நியாயந்தீர்க்க வருகிறார். ஆகையால் உன் நினைவு, வார்த்தை, செய்கைகளைக் குறித்து எப்போதும் கவலையாயிரு. 2. அவர் நினையாத நேரத்தில் வருவார்; ஆகையால் எப்போதும் ஆயத்தமாயிரு.

'நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷ குமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்'.

---

## மேலே நோக்கிப்பார்.

ஒரு சிறு பிள்ளை ஒருநாள் செங்குத்தான ஓர் மலையுச்சியில் விளையாடிக்கொண்டிருந்தது. அவள் அந்த மலையின் சரிவில் வந்தபோது அவள் நின்றுகொண்டிருந்த இடம் இடிந்துவிட்டது. உடனே அவள் கீழேவிழ ஆரம்பித்தாள். மலைச்சரிவிலே அவள் விழுந்துகொண்டிருக்கும்போதே தன் கைக்கெட்டின ஒரு கொடியை எட்டிப் பிடித்தாள். அந்தக்கொடி அவளைத் தாங்கக்கூடியதாகவே இருந்தது. அவள் அந்தப் பயங்கரமான பாறையின் உச்சியில் அந்தக் கொடியைப் பிடித்துக்கொண்டு ஆகாயத்திலே தொங்கினாள். அவள் நெடுநேரம் அப்படித் தொங்கிக்கொண்டிருக்க முடியாது. கைவலித்து, சீக்கிரம் கீழேவிழுந்து சாக நேரிடும்.



ஆனால் இரண்டொரு நிமிஷங்களுக்குள் தூரத்திலே ஒரு சத்தம் கேட்டது. 'நான் வருகிறேன்; மேலே பார்த்துக்கொண்டிரு' என்பதே அந்தச் சத்தம். அவள் அப்படியே செய்தாள். கீழே பாராமல், கொடியைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டு தொங்கினாள். வர, வர சத்தம் சமீபத்தில் கேட்டது. சில நிமிஷங்களுக்குள் அவளுடைய தகப்பன் அவளைப் பத்திரமாகப் பிடித்துத் தூக்கி எடுத்தார். அவள் உயர வந்தவுடனே அவளைத் தூக்கித் தன் தோள்மேல் போட்டுக்கொண்டார்.

பிரியமான பிள்ளைகளே, கர்த்தராகிய இயேசு சுவாமி பரலோகத்திலிருந்து 'இதோ சீக்கிரமாய் வருகிறேன்' என்று சொல்லுகிறார். அவர் வருமளவும் நாம் மேலே பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். அதாவது நமது எண்ணமும் சிந்தையும் பரலோகத்தைப்பற்றினதாயிருக்கவேண்டும். அவர் வந்து இந்த உலகத்தின் துன்பத்திலும், மோசத்திலுமிருந்து நம்மை விடுவித்து, மோட்ச இன்பத்திலும், பாக்கியத்திலும் நம்மை வாழ்விப்பார்.

---

## நினையாத நேரத்தில்.

மலையோரமாயுள்ள பள்ளத்தாக்கில் ஒரு பெரிய குளமும் பள்ளத்தாக்கு
நெடுக அநேக சிறு கிராமங்களும் இருந்தன. அக்குளத்தில் தண்ணீர் அதிக
மாய்ப் பெருகிவிட்டால் அதை வெளியேற்றிவிடத்தக்கதாக குளத்துக்கு
மதகுகளும் உண்டு. ஆனால் ஒரு வருஷத்தில் மலையில் புதிதாய் ஓர்
வெடிப்பு உண்டாகி, அதிலிருந்து தண்ணீர் வெள்ளமாய்ப் பாய்ந்துகொண்
டே இருந்தது. அதினால் வழக்கமாய் வெள்ளம்வரும் என்று எதிர்பாராத
காலத்தில் குளம் நிரம்பிவிட்டது. மேலும், மேலும் தண்ணீர் வந்துகொண்
டும் இருந்தது. குளத்தை மேல்பார்க்கும் உத்தியோகஸ்தன் குளம் உடைந்
துவிடும் என்று பயந்து மதகுகளையெல்லாம் திறந்துவிட்டார். அப்படி
யிருந்தும் மலைவெள்ளம் ஏராளமாய் வந்துகொண்டிருந்தபடியால் குளம்
உடையப்போகிற நிலைமைக்கு வந்துவிட்டது. அப்பொழுது நடு
ராத்திரியாகவும் இருந்தது. உத்தியோகஸ்தனும், மற்ற வேலையாட்க
ளும் என்னசெய்கிறதென்று தெரியாமல் திகைத்துக்கொண்டு நின்றார்
கள். இன்னமும் இரண்டொரு மணிநேரங்களுக்குள் குளம் உடைந்
துவிடும். பக்கத்துக் கிராமங்களிலுள்ள ஜனங்களும் வெள்ளத்தினால்
வாரிக்கொண்டுபோகப்படுவார்கள். ஆகையால் உடனே ஒருவனைக் குதிரை
மேலேறிக்கொண்டு நெடுகிலுமுள்ள கிராமங்களில் போய் அறிவிக்கும்படி
அனுப்பினார்கள். அந்த நடு ராத்திரியில் அவன் வேகமாய்க் குதிரையை
ஓட்டிக்கொண்டு தெருத்தெருவாய் நின்று, சத்தமிட்டு "குளம் உடையப்போ
கிறது, ஜீவன் தப்ப ஓடிப்போங்கள்" என்று கூவினான். நடு ராத்திரியில்
வேகமாய் ஓடிவருகிற குதிரையின் காலடிச் சத்தத்தையும், குதிரைமேலிருந்

தவன் கூவிச்சொன்ன வார்த்தைகளையும் கேட்ட ஜனங்கள் நடுநடுங்கி, படுக்கையைவிட்டு எழுந்து, ஜீவன் தப்ப ஓடிப்போனார்கள். ஒரு கிழவன் மாத்திரம் "இந்தக் குளம் உடையக்கூடியதல்ல, இது வெள்ளம் வருகிற காலமும் அல்ல, யாரோ ஒரு பைத்தியக்காரன் சொல்லைக் கேட்டு இந்த ஜனங்கள் ஓடுகிறார்கள். நானும் இவர்களைப்போல் மதியீனன் அல்ல" என்று சொல்லிக்கொண்டு படுக்கையைவிட்டு, எழுந்திராமல், அப்படியே படுத்துக்கொண்டான். கொஞ்சநேரத்திற்குள்ளாக குளம் உடைந்து வெள்ளம் திடீரெனப் பாய்ந்துவந்து, பள்ளத்தாக்கு முழுவதையும் நிரப்பிற்று. எச்சரிப்பைக் கவனிக்காத கிழவன்தவிர மற்றயாவரும் தப்பிக்கொண்டார்கள். நமதாண்டவர் வரும் நாளும் இப்படியே இருக்கும், ஆகையால் எச்சரிக்கை.

---

## பரி. லூக்கா சுவிசேஷம்.

இப்பொழுது நாம் வாசித்துவருகிற பரி. லூக்கா சுவிசேஷத்துக்கு மாத்திரம் உரிய சில விசேஷங்களை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நாலு சுவிசேஷங்களும் அருமை ரட்சகரின் அன்பை மொத்தமாய்க் காட்டினாலும், அவைகள் ஒவ்வொன்றும் அருமை ரட்சகரின் ஒவ்வொரு விசேஷத்தை முக்கியப்படுத்திக் காட்டுகிறது.

| | |
|---|---|
| பரி. மத்தேயு. | "இதோ, உங்கள் ராஜா" என்றும் |
| பரி. மாற்கு. | "இதோ, என் தாசன்" என்றும் |
| பரி. லூக்கா. | "இதோ, இந்த மனுஷன்" என்றும் |
| பரி. யோவான் | 'இதோ, உங்கள் தேவன்" என்றும் அருமை |

ரட்சகனை நமக்குக் காட்டுகிறார்கள். ஆம், பரி. லூக்கா சுவிசேஷம் நமதாண்டவரை மெய்யான மனுஷனாக, அவருடைய பிறப்பு, வளர்ச்சி, பன்னிரண்டாம் வயதுச் சரித்திரம், அவருடைய வேலை இவைகளை வெகு தெளிவாய் நமக்குக் காட்டுகிறது. ஆகையால் இந்தச் சுவிசேஷத்துக்குமாத்திரம் உரிய மூன்று விசேஷங்களை உங்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். முதலாவது இதை துதியின் சுவிசேஷம் என்று சொல்லலாம். நமதாண்டவரின் பிறப்பில் பலதுதியின் கீதங்களை இதில் பார்க்கிறோம். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்று ஒவ்வொரு காலை ஆராதனையிலும் நாம் பாடுகிற சகரியாவின் ஸ்தோத்திர கீதம் இந்தச் சுவிசேஷத்தில்மட்டும் எழுதப்பட்டிருக்கிறது. நமது மாலை ஆராதனைகளில் நாம் பாடுகிற பரி. கன்னிமரியம்மாளின் கீதம், சிமியோனின் கீதம் இவைகளும் இந்தச் சுவிசேஷத்தில்மட்டும் இருக்கிறது. 'உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக' என்ற தேவதூதரின் மங்கள கீதமும் இந்த ஒரே சுவிசேஷகனால்மட்டும் எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே ஸ்தோத்திரக்கீதங்கள் நிறைந்த



சுவிசேஷத்தை வாசித்துவருகிற நாமும் எப்போதும் கர்த்தரைத் துதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

இரண்டாவது இதை ஜெபத்தின் சுவிசேஷம் என்றும் சொல்லலாம். அடிக்கடி ஜெபம் செய்வதில் அருமை ரட்சகர் நமக்கு நல்ல முன்மாதிரியாயிருக்கிறார். அவர் ஜெபம்பண்ணினார் என்று எத்தனையோமுறை திரும்பத் திரும்ப இந்தச் சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். 1. அவர் ஞானஸ்நானம் பெற்றபோது ஜெபம்பண்ணினார் என்பதை இந்த ஒரு சுவிசேஷகன்மட்டும் சொல்லுகிறார். "அவர் ஞானஸ்நானம்பெற்று, ஜெபம்பண்ணுகையில், பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் இறங்கினார்" என்று 3: 21, 22ல் வாசிக்கிறோம். 2. அவருடைய ஊழியத்தின் துவக்கத்திலே ஒருநாள் கப்பர்நகூமில் மகிமையான வேலைகளைச் செய்துமுடித்த பின்பு வனாந்தரத்திலே தனித்துப்போய் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார் என்று (5: 16) இந்தச் சுவிசேஷம்மட்டும் காட்டுகிறது. 3. நமதாண்டவர் 12 அப்போஸ்தலரைத் தெரிந்துகொள்ளு முன்னே ஒரு ராத்திரி முழுவதையும் ஜெபத்தில் செலவிட்டார் என்பதை (6: 12) இந்தச் சுவிசேஷத்தில்மட்டும் நாம் வாசிக்கக்கூடும். 4. நமது ரட்சகர் மறுரூபமானபோது ஜெபம்பண்ணுவதற்காக அந்த மலையின்மேல் ஏறினார் என்றும், அங்கே ஜெபம்பண்ணுகையில் அவர் மறுரூபமானார் என்றும் (9: 28, 29) இந்தச் சுவிசேஷகன்மட்டும் காட்டுகிறார். 5. நமதாண்டவரின் முன்மாதிரி சீஷர்களையும் ஜெபம்பண்ணுவதற்கு ஏவிவிட்டது. எப்படியெனில் அவர் ஓரிடத்தில் ஜெபம்பண்ணி முடிந்தவுடனே சீஷர்கள் வந்து எங்களுக்கும் ஜெபம்செய்யப் போதிக்கவேண்டும் என்று கேட்டார்கள் என்பதை (11: 1) இந்தச் சுவிசேஷத்தில்மட்டும் வாசிக்கிறோம். 6. இயேசுவானவர் தமது மனதிலும் ஜெபித்துவந்தார் என்பதை இந்தச் சுவிசேஷகன் மட்டும் சொல்லுகிறார். (22: 32) அதாவது பரி. பேதுருவோடு பேசிக்கொண்டிருக்கும்போதே, அவருக்காக அவருடைய விசுவாசம் ஒழிந்துபோகாதபடி தமது மனதில் பிதாவைக் கேட்டுக்கொண்டார். 7. கடைசியாக அவர் சிலுவையிலிருந்து செய்த ஜெபங்களையும் இந்தச் சுவிசேஷகன்மட்டும் எடுத்துக் காட்டியிருக்கிறார். முதலாவதாக "பிதாவே இவர்களுக்கு மன்னியும்," என்று தம்மைக் கொன்ற பாதகர்களுக்காகவும், கடைசியாக "பிதாவே, உமது கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று பிதாவின் பாதுகாவலுக்குத் தம்மையும் ஒப்புக்கொடுத்து ஜெபித்தார்.

நமதாண்டவரின் ஜெபஜீவியம் இதில் சொல்லப்பட்டிருப்பதுமட்டுமல்ல, நாம் ஜெபம்பண்ணவேண்டும் என்பதை வற்புறுத்தும்படி நமதாண்டவர் சொன்ன மூன்று உவமைகளும் இந்தச் சுவிசேஷத்தில்தான் சொல்லியிருக்கிறது. 1 ஒருவன் பாதி ராத்திரியிலே தனக்கு அவசியமாயிருந்த அப்பம் கிடைக்கும்வரைக்கும் தன் சிநேகிதனை விடாமல் வருந்திக் கேட்டுக்கொண்டதுபோல் நீங்களும் "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" (11: 9) என்றும், 2. ஒருத்தி தனக்கு நியாயங்கிடைக்கிறவரையில்

நியாயாதிபதியை ஓயாமல் அலட்டி உதவிபெற்றுக்கொண்டாள்; உங்களுக்கு உதவிகிடைப்பது அதிக நிச்சயம் (18: 5) என்றும், 3. ஆயக்காரன் நொறுங்குண்ட இருதயத்தோடு வந்து "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று ஜெபித்து நீதிமானாக்கப்பட்டான் (18: 14) என்றும், ஜெபத்தைப்பற்றி காட்டிய இந்த மூன்று உவமைகளும் இந்த ஒரு சுவிசேஷத்தில்மட்டும் எழுதப்பட்டிருக்கிறது.

கடைசியாக, அருமைரட்சகர் இந்த உலகத்திலிருந்த காலத்தில் அப்போஸ்தலன்மார் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காக அவரிடம் கேட்ட ஜெபம் ஒன்றே ஒன்றுதான். "ஆண்டவரே, எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ண வேண்டும்" என்பதே அந்த ஜெபம். (17: 5) அதுவும் இந்த ஒரு சுவிசேஷத்தில் மட்டும் சொல்லியிருக்கிறது. இப்படிப்பட்ட ஜெபசுவிசேஷத்தை வாசித்து வருகிற நீ ஜெபம் செய்யும் பழக்கத்தில் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறாய்!.

(இன்னும் வரும்)

## ஜெபத்தைங் கேட்கிறவர்

சில வருஷங்களுக்கு முன்னே, ஒருநாள் மாலைப்பொழுதில் ஓர் ஏழை விதவை தன் வீட்டு ஜன்னல் ஓரமாய் கவலையோடு உட்கார்ந்திருந்தாள். அவளுடைய சின்ன, ஒரே மகனும் அவளண்டையில் நின்றுகொண்டிருந்தான். இந்த ஏழை விதவை அந்த வீட்டை அதிகமாய் நேசித்தாள். ஏனென்றால் சில மாதங்களுக்கு முன்னே மரித்துப்போன அவளுடைய கணவனால் அது விலைக்கு வாங்கப்பட்டது. அவ்வீட்டுத் தோட்டத்தில் பூவும் கனியுமாய் நிறைந்திருந்த மரங்கள் எல்லாம் அவனால் நடப்பட்டவைதான்.

அவள் ஏன் அவ்வளவு கவலையாய் உட்கார்ந்திருந்தாள். தன் புருஷனோடு, அவள் அந்த வீட்டையும் இழக்கவேண்டியதாயிருந்தது. அவன் அதை ஆயிரம் ரூபாய் விலைக்கு வாங்கியிருந்தான். அந்தத்தொகையை வருஷத்துக்கு நூறு ரூபாய் வீதமாக பத்துவருஷத்தில் கொடுத்து விடுகிறதாக ஒப்பந்தம் செய்து, அவ்வீட்டுக்காரனுக்கு ஒரு கடன் பத்திரமும் எழுதிக்கொடுத்திருந்தான். அப்படியே ஒவ்வொரு வருஷத்திலும் தொகையைச் செலுத்தி ரசீது வாங்கி வந்தான். கடைசி நூறு ரூபாய் மட்டும் செலுத்தவேண்டியதாயிருக்கையில் அவன் இறந்துபோனான். சில நாள்களுக்குள் அவனுக்கு கடன் கொடுத்திருந்தவனும் இறந்துபோனான். அவனுக்கு வாலிபனான ஒரு மகன் இருந்தான். அந்த வாலிபன் தன் தகப்பனுடைய பெட்டியில் இந்த விதவையின் புருஷன் எழுதிக்கொடுத்த பத்திரத்தைக் கண்டான். ஆயிரம் ரூபாய் கடன் வாங்கின விபரத்தைத் தவிர, அது திரும்பச் செலுத்தப்பட்ட விபரம் ஒன்றுமில்லை, ஆகையால் அந்த விதவையிடம் கடன் ரூபாய் ஆயிரத்தையும் கேட்டான். அவள் 900 ரூபாய் செலுத்தியாயிற்று என்றும் 100 ரூபாய் மாத்திரம் பாக்கியிருக்கிறது என்றும் சொன்னாள். அப்படியானால் அதற்கு ஆதாரம் கொண்டுவா என்றான். அவள் தன் புருஷன் வாங்கியிருந்த ரசீது புஸ்தகத்தை வீடு முழுவதும் தேடிப் பார்த்தாள். காணவில்லை. ஐயோ, பாவம்! அவ்வாலிபன் அவளை உடனே வீட்டைவிட்டுப் போகும்படி கட்டளையிட்டான். அடுத்தநாள் அதிகாலையில் அந்த வீட்டைவிட்டுப் போகவேண்டியதாயிருந்தது. அதுதான் அவள் கவலையோடு இருந்ததின் காரணம்.

பிரெடி என்ற அவளுடைய மகன், அவளைப் பார்த்து 'அம்மா, நமது கஷ்டத்தில் இயேசுசுவாமியை நோக்கி ஜெபம் செய்தால் அவர் நமக்கு உதவி செய்யமாட்டாரா?' என்று கேட்டான். 'ஆம்! மகனே, உதவிசெய்வார்' என்றாள் தாய். உடனே இருவரும் முழங்கால் படியிட்டார்கள். பிரெடி அருமையான ஓர் ஜெபம்பண்ணினான். அந்த வீட்டில் தாங்கள் குடியிருக்கும்படி சுவாமி உதவிசெய்யவேண்டும் என்றும் அல்லது தங்களுக்குக் குடியிருக்க இன்னொரு குடிசையாவது கிடைக்கவேண்டுமென்றும் ஆண்டவரிடம் கேட்டான். முழங்காலிலிருந்து எழும்பினவுடனே, வீட்டு ஜன்னல் வழியாய் உள்ளே பறந்துவந்த ஒரு மின்மினிப் பூச்சியை பிரெடி கண்டான். அதைப் பிடிக்கப்பிரயாசப்பட்டான். அது அவனை வீடு முழுவதும் அலைத்து, கடைசியாக சுவர் ஓரமாயிருந்த ஒரு பெரிய புஸ்தகப் பெட்டியின் கீழ்போய் புகுந்துகொண்டது. பிரெடி உள்ளே கையை நீட்டிப்பார்த்தான். கை நுழையவில்லை. பெட்டியைச் சற்றுத்தூரத் தள்ளும்படி தன் தாயைக் கேட்டான். அப்படியே அவள் பெட்டியைத் தள்ளினாள். பெட்டியின் கீழ் ஒரு சிறு புஸ்தகம் கிடந்தது. அது என்ன புஸ்தகம்? ஆ! அதுதான் காணமற்போன ரசீதுப்புஸ்தகம். என்ன சந்தோஷம்! என்ன மகிழ்ச்சி! ரசீதுப்புஸ்தகம் இருக்கும் இடத்தைக் காட்ட பரலோகத்திலிருந்து ஒரு தேவதூதனையல்ல, உலகத்திலுள்ள ஒரு சிறு மின்மினிப்பூச்சியை தேவன் அனுப்பினார். உடனே ரசீதுப் புஸ்தகத்தைக் கொண்டு அந்த வாலிபனிடம் காட்டினார்கள். அது அகப்பட்ட சரித்திரத்தை அவன் கேட்டபோது மிகவும் சந்தோஷப்பட்டு, பாக்கியாயிருந்த நூறு ரூபாயையும் மன்னித்து, கடன்பத்திரத்திலும் செல் எழுதிக்கொடுத்தான். ஆம் தேவன் 'ஜெபத்தைக் கேட்கிறவர்'.

## ஜெபமனிதன்

அனேக வருஷங்களுக்கு முன்னே, இங்கிலாந்து தேசத்தில் ரோலாண்ட ஹில் என்னப்பட்ட ஒரு நல்ல குருவானவர் இருந்தார். அவருக்கு ஒரு தோட்டக்காரன் இருந்தான். அவனை மகா யோக்கியன் என்று எண்ணியிருந்தார். ஆனால் பக்கத்தில் நடந்த அநேக திருட்டுகளில் அவன் சம்மந்தப்பட்டான், என்று குற்றம் சாட்டப்பட்டு, சிறைச்சாலையில் வைக்கப்பட்டான். சிறைச்சாலையில் அந்த குருவானவர் போய் அவனை அடிக்கடி சந்தித்து அவனோடு பேசிவந்தார். ஒருசமயத்தில், அவன் செய்த களவுகளையும் விபரமாய் அவரிடம் மனம் கசந்து அறிக்கையிட்டான். ‘நீ என் வேலைக்காரனாயிருந்தபோது, என் வீட்டில் களவு செய்ய உனக்கு நல்ல சமயம் கிடைத்திருக்குமே; அப்படியிருந்தும் என் பொருள்களில் ஒன்றையும் நீ திருடவில்லையே! காரணம் என்ன?’ என்று குருவானவர் அவனைக் கேட்டார். ‘ஐயா, உங்கள் பொருளையும் களவுசெய்ய நான் பல சமயங்களில் பிரயாசப்பட்டதுண்டு. உங்கள் வீட்டு ஜன்னல் ஓரமாயிருக்கும் செடி மறைவில் ஒளித்திருந்து, நீங்கள் தூங்கும் சமயம் பார்த்து, ஜன்னல் வழியாய் வீட்டுக்குள் நுழைய அநேக சமயங்களில் பிரயாசப்பட்டேன். அப்படிப்பட்ட சமயங்களில் எல்லாம் என்னுடைய மனதில் பேசும் ஒரு சத்தத்தைக் கேட்டு உங்கள் வீட்டில் நான் நுழையவில்லை. அந்தச்சத்தம் என்னவென்றால், இவர் தேவனுடைய மனிதன், இவருடைய வீடு ஜெபத்தின் வீடு, ஆகையால் இதில் நுழையாதே என்பதுதான் என்றான் தோட்டக்காரன். பிள்ளைகளே, உங்களை அறிந்தவர்கள் இப்படி உங்களைப் பற்றி நினைக்கக்கூடுமோ?

Printed at the Darling Printing Press, Palamcottah
for the Tinnevelly S. P. G. Children's Mission.

The
# Children's Herald

# பாலர் தூதன்

‘பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.’ நீதி. 8: 32.

Vol. XII. அக்றோபர், 1917. No. 10.

28 OCT 19

## பரி. லூக்கா சுவிசேஷம்.

(தொடர்ச்சி).

மூன்றாவது இதைப் பொதுவான சுவிசேஷம் என்றும் சொல்லலாம்
அதாவது எல்லா ஜனத்துக்கும் பொதுவான சுவிசேஷம். ஆம், அருமை
இரட்சகரின் பிறப்பு எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டா
கும் நற்செய்தியாக இதில் அறிவிக்கப்படுகிறது. (2: 10). அக்காலத்து யூ
ரால் புறக்கணிக்கப்பட்டிருந்த சமாரியர், ஆயக்காரர், பாவிகள், ஸ்திரிகள்
முதலிய எல்லா வகுப்பாரோடும் நமதாண்டவர் நெருங்கி ஜீவித்து, அவ
களுக்கு உதவிசெய்து, அவர்களைப் புகழ்ந்துகூறி, தேவனுடைய ராஜ்யத்தி
அவர்களுக்கும் பங்குண்டென்பதைத் தெளிவாய்க் காட்டியிருக்கிறார்.

1. சமாரியர். யூதர் சமாரியரைப் பகைத்தார்கள். ஆனால் நமதாண்
டவர் அவர்களை நேசித்தார் என்பதை இந்த சுவிசேஷம் நமக்குத் தெளிவாய்
காட்டுகிறது. 1-வது, அருமை இரட்சகரை ஏற்றுக்கொள்ளாத சமாரியரை
அழிக்க வகைதேடின சீஷரை ஆண்டவர் கடிந்துகொண்டார் என்றும், (9: 54
2-வது, கள்ளர் கையில் அகப்பட்ட பிரயாணிக்காகப் பரிதபித்து, அவ
காயங்களைக்கட்டி அவனுக்கு உதவிசெய்தவன் ஒரு சமாரியனாயிருந்தானெ
றும் (அதி. 10), 3-வது, சுத்தமான பத்துகுஷ்டரோகிகளில் நன்றியறிதலோ
திரும்பிவந்து தேவனை மகிமைப்படுத்தினவன் ஒரு சமாரியன் என்று
(அதி. 17); இந்த சுவிசேஷகன் மட்டும் நமக்குச் சொல்லுகிறார்.

2. ஆயக்காரர். இயேசு, ஆயக்காரனாகிய மத்தேயுவை ஒரு அ
போஸ்தலனாகச் சேர்த்துக்கொண்டாரென்பதை இந்த சுவிசேஷம் நமக்கு

காட்டுகிறதுமட்டுமல்ல; "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று தேவாலயத்தில்போய், தன் மார்பிலடித்து ஜெபம்செய்து, நீதிமானாக்கப்பட்டவனாய், தன்வீட்டுக்குத் திரும்பிப்போனவன் ஒரு ஆயக்காரனென்றும் (அதி. 18); நமதாண்டவர் எருசலேமுக்குப்போன கடைசிப்பிரயாணத்தில் எரிகோவின் பிரதான ஆயக்காரன் வீட்டில் தங்கி அவ்வீட்டுக்கு இரட்சிப்பை அருளி அவ்விடத்திலிருந்து புறப்பட்டுப்போனதையும் (அதி. 19) இந்த ஒரு சுவிசேஷத்தில்மட்டும் நாம் வாசிக்கிறோம்.

3. பாவிகள். பாவி மனந்திரும்பும் விஷயத்தில் தேவஅன்பு எவ்வளவு பெரிதாயிருக்கிறது என்பதைக் காட்டுகிற கெட்டகுமாரன் உவமையும், (அதி. 15); படுபாதகம்செய்து பாவத்தில் நிலைத்திருந்த கள்ளன் சில நிமிஷங்களுக்குள் மனந்திரும்பிப் பரதீசுக்காளானானென்பதையும் (அதி. 23) இந்த ஒரு சுவிசேஷகன்மட்டும் நமக்குக் காட்டுகிறார்.

4. ஸ்திரீகள். நாயீனூர் கைம்பெண்ணுக்காக நமதாண்டவர் பரிதபித்து, அவள் மகனை உயிரோடெழுப்பினாரென்றும், (அதி. 7); பட்டணத்துப் பாவியான ஸ்திரீ தம் பாதத்தருகே உட்கார்ந்து, தம்மைத்தொட இடங்கொடுத்தாரென்றும், (7: 34) ஒரு கூட்டம் ஸ்திரீகள் தங்களுடைய பொருளினாலும் நடக்கையினாலும் அவருக்கு ஊழியஞ்செய்து வந்தார்களென்பதையும் (8: 3); மார்த்தாளின் சகோதரியாகிய மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்காரும் நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாளென்பதையும், (10: 39) பதினெட்டு வருஷமாய் கூனியாயிருந்த ஸ்திரி ஆபிரகாமின் குமாரத்தி என்பதையும் (13: 14) இந்த ஒரு சுவிசேஷத்தில்மட்டும் வாசிக்கிறோம். கடைசியாக, நமதாண்டவர் சிலுவை சுமந்தவராய் தெருவழியே நடந்துபோகையில் எருசலேமின் ஸ்திரீகள் அழுதுகொண்டு வந்தார்களென்பதையும் இந்த ஒரு சுவிசேஷகன்மட்டும் சொல்லுகிறார்.

இந்த சுவிசேஷத்தை வாசித்து வருகிற நீ, கடைசியாய் கற்றுக்கொள்ள வேண்டியதென்ன? யாரையும் அவமதிக்காதே, புறக்கணியாதே, ஜாதிவித்தியாசம் பாராட்டாதே.

## உங்களைப்பற்றிச் சொல்லுவேன்.

தென்சமுத்திரத்தீவுகளொன்றில், ஒரு ஓய்வுநாள் சாயந்தரம் ஒரு மிஷனெரி மரணப்படுக்கையிலிருந்த ஒரு கிறிஸ்தவனைப் பார்க்கப்போனார். அந்த வியாதிக்காரன் அவரைக் கண்டவுடனே, "ஐயா, இன்று காலையில் நீங்கள் பரதீசைப்பற்றிப் பிரசங்கம் செய்தீர்களென்று கேள்விப்பட்டேன். நாளைக்கு நான் அவ்விடத்திலிருப்பேனென்று நம்புகிறேன். நான் அங்கு போனவுடனே நேராக இயேசுசுவாமியினிடத்தில்போய், நீங்கள் உங்கள் வீட்டையும், கிறிஸ்தவர்களால் நிறைந்த உங்கள் தேசத்தையும்விட்டு, அறிவீனரும், ஏழைகளும், அஞ்ஞானிகளுமாகிய எங்களிடம் வந்து, அவர் எங்களுக்காக மரித்த அதிசய அன்பைச் சொல்லும்படி உங்கள் இருதயத்தை அவர் எழுப்பினதற்காக அவருக்கு நன்றியறிதல் சொல்லுவேன். அப்புறம் நீங்கள் பரதீசுக்கு வருமட்டும் அதின் வாசலில் உங்களுக்காக காத்துக்கொண்டிருப்பேன். நீங்கள் அங்கு வந்தவுடன் நேராக அருமை இரட்சகரிடம் உங்களை அழைத்துக்கொண்டுபோய், இந்தப்பாக்கியமான உலகத்துக்கு வரும் வழியை எனக்குப் போதித்தவர் இவர்தானென்று அருமை இரட்சகரிடம் "உங்களைப்பற்றிச் சொல்லுவேன்" என்றான்.



பிள்ளைகளே! நீங்கள் ஒருவரையும் அவமதிக்காமல், எல்லாருக்கும், அருமை இரட்சகரின் அன்பை, உங்கள் வார்த்தையினாலும் செய்கையினாலும் காட்டி வருவீர்களானால் பரலோகத்தில் உங்களுக்குக் கனம் கிடைக்கும்.

## உல்லியம் ரீட்.

கொஞ்சக்காலத்துக்கு முன்னே இங்கிலாந்திலுள்ள பாத் பட்டணத்தில் ஒரு நாவிதன் இருந்தான். வெகுகாலமாய் அவன் ஞாயிற்றுகிழமைகளிலும் வேலை நடப்பித்து வந்தான். சிலகாலம் சென்றபின், அவன் கிறிஸ்தவனானான். கிறிஸ்தவனானபின், ஓய்வுநாள் வேலையை நிறுத்திவிடுவது தன் கடமை என்று உணர்ந்தான். அப்படி நிறுத்திவிட்டால் அவனிடத்தில் வழக்கமாய் வேலைசெய்கிறவர்கள் நின்றுபோவார்கள் அதினால் தன் பிழைப்பு கெட்டுப்போகும் என்று பயந்தான். கடைசியாய்க் குருவானவரிடம் போய் ஆலோசித்தான். அவர் தேவனை நம்பி ஓய்வுநாள் வேலையைக் கட்டோடே நிறுத்திவிடும்படி ஆலோசனை சொன்னார். அவன் அப்படியே செய்தான். எற்கனவே, அவன் நினைத்தபடி அவனுடைய வாடிக்கைக்காரரெல்லாரும் நின்றுபோனார்கள். கடைசியாக அவன் சாப்பாட்டுக்கும் திண்டாட்டம் ஆகிவிட்டது.

இப்படியிருக்கையில் ஒரு சனிக்கிழமை சாயந்தரம் இருட்டுகிற நேரத்தில் ஒரு துரைமகன் அந்த பட்டணத்தில் வந்து இறங்கினார். அவசரமாய், சவரம் செய்ய ஒரு நாவிதனைத் தேடினார். பக்கத்தில் நின்றவர்கள் இவனைக் காட்டினார்கள். அந்தத் துரை அவனைப்பார்த்து ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கு முன் தான் அடுத்தப் பட்டணத்துக்குப் போகவேண்டியதாயிருக்கிறபடியால் உடனே சவரஞ்செய்யும்படி கேட்டார். அவன் தன் நிர்ப்பந்த நிலைமையை அவரிடம் சொல்லி சவரஞ்செய்வதற்கு வெளிச்சத்திற்காக ஓர் மெழுகுவர்த்திக்குக் காசு வாங்கி அவருக்குச் சவரஞ் செய்தான். வேலை செய்து முடிந்தவுடன் அவர் அவனிடம் அரைப்பவுண் கொடுத்து "உன் நிலைமைக்காக நான் மிகவும் பரிதபிக்கிறேன். இப்பொழுது எனக்கு நேரமில்லை. நான் திரும்பி வரும்பொழுது உன் காரியங்களைப்பற்றி விவரமாய்க் கேட்பேன். உன் பெயர் என்ன?" என்றார். "உல்லியம் ரீட்" என்றான் நாவிதன். அவர் உடனே ஆச்சரியப்பட்டு, "நீ, இங்கிலாந்தின் மேல்பாகத்திலிருந்து வந்தவனா?" என்று கேட்டார். "ஆம், ஐயா;

கிங்ஸ்டன் பட்டணம்தான் என் சொந்த ஊர்" என்றான். உன் தகப்பன் பெயரென்ன?" என்று துரை கேட்க, "தாமஸ்" என்று சொன்னான் "அவனுக்கு சகோதரனுண்டா?" என்று கேட்டார் துரை. அதற்கு நாவிதன், "ஆம், ஐயா, ஒரு சகோதரனுண்டு. அவர் பெயர் உல்லியம். அவர் வெகு நாட்களுக்கு முன் கீழ் இந்தியத் தீவுகளுக்குப் போனார். அப்புறம் அவரைப் பற்றி நாங்கள் ஒன்றும் கேள்விப்படவில்லை, அவர் மரித்துப்போனாரென்று நம்புகிறேன்" என்றான்.

துரை மிகவும் சந்தோஷப்பட்டு "நான் கிங்ஸ்டன் பட்டணத்து உல்லியம் ரீட் என்பவனைத் தேடிப்போகிறேன்; நீ அவ்விடத்துக்கு வந்து நீதான் அந்த மனுஷன் என்று ரூபிப்பாயானால் நான் உனக்குச் சொல்லவேண்டிய சந்தோஷசெய்தி ஒன்றுண்டு. அதாவது உன் சிறியதகப்பன் திரண்ட ஆஸ்தியை உனக்காக வைத்து மரித்துப்போனான்" என்றார். உல்லியம் ரீட் அவரோடுகூடப்போனான். அவன்தான் அந்த மனுஷனென்று ரூபிக்கப்பட்டபோது தன் சிறியதகப்பனின் திரண்ட ஆஸ்திக்குப் பங்காளியானான். "தேவன் தம்மை நம்புகிற பிள்ளைகளை ஒருபோதும் கைவிடமாட்டார்".

## பரீட்சைப் பாடங்கள்.

பரி. லூக்கா சுவிசேஷம்.

1. நமதாண்டவரின் பிறப்பு.
2. பரி. யோவான்ஸ்நானகன் பிறப்பு.
3. நமதாண்டவரின் 12-ம் வயது சரித்திரம்.
4. இதில் வரும் எல்லா அற்புதங்களும் உவமைகளும்.

### கவனிப்பு.

கர்த்தருக்குச் சித்தமானால் நமது வருஷாந்தரப் பரீட்சை வழக்கம்போல் நவம்பர், டிசம்பர் மாசங்களில் நடத்தப்படும். எல்லாரும் ஏற்கனவே பரீட்சைக்கு ஆயத்தப்படக் கேட்கிறோம்.

பாடங்கள்:—1. பரீட்சைப் பாடமாக பாலர் தூதனில் குறிப்பிட்டிருக்கும் வேதாகமப் பாகங்கள்.

2. தங்கவாக்கியங்களும் அவைகளின் சந்தர்ப்பங்களும்.
3. பாலர் தூதனிலுள்ள போதனைகளும், சரித்திரங்களும்.
4. திருச்சபை ஞானோபதேச வினாவிடை.

Printed at the Darling Printing Press, Palamcottah,
for the Tinnevelly S. P. G. Children's Mission.

The
# Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8:

Vol. XII. நவம்பர், 1917. No. 11.

## பரி. அந்திரேயா.

தங்க வாக்கியம்:—"யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற . . . . . அந்திரேயா." (பரி. யோவா. 1: 40).

இந்த மாதம் 30உ பரி. அந்திரேயாவின் திருநாளைக் கொண்டாடுகிறோம். ஆகையால் அவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய சில போதனைகளை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

1. கீழ்ப்படிதல். இவர் ஒரு செம்படவன். பெத்சாயிதாப் பட்டணத்தில் உள்ளவர். இவருடைய தகப்பன் பேர் யோனா. பரி. பேதுரு என்று சொல்லப்பட்ட சீமோன் இவருடைய சகோதரன். இவர் பரி. யோவான் ஸ்நானகனிடம் போய் அவருடைய போதனைகளைக் கேட்டுவந்தார். அவர் இவருக்கு இயேசு சுவாமியைப்பற்றி அதிகமாய்ப் போதித்திருந்தார். ஒருநாள் இவர் இன்னொரு சீஷனோடு நிற்கும்போது, இயேசுவானவர் அவ்வழியே போனார். பரி. யோவான்ஸ்நானகன் அவரைக் காட்டி, நான் உனக்குச் சொல்லியிருந்த தேவ ஆட்டுக்குட்டி இவர்தான் என்று பரி. அந்திரேயாவுக்கும் மற்ற சீஷனுக்கும் சொன்னார். உடனே அவர்கள் இருவரும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள் (பரி. யோவா. 1: 37). இவர் பரி. யோவான்ஸ்நானகனுடைய போதனையைக் கேட்டு இயேசுவுக்குப் பின்சென்றபடியினால் இவர் கீழ்ப்படிதலுள்ளவர் என்று அறிகிறோம். பிள்ளையே, உனக்குப் போதிக்கப்படுகிறதின்படி நீ கீழ்ப்படிந்து நடக்கிறாயா?

2. இயேசுவோடு தங்கியிருத்தல். இயேசுரட்சகரைப் பின்சென்ற இவர் "ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?" என்று அவரிடம் கேட்டு, அவருடன்கூடப் போய் ஏறக்குறைய ஒருநாள் முழுவதும் அவரோடு தங்கியிருந்தார் (பரி. யோவா. 1: 38, 39). முதல் தடவையாக இயேசுவைக் கண்டு அவரோடு நெருங்கி ஐக்கியப்பட்டு அவருடைய தெய்வீக லட்சணங்களை அனுபவத்தால் அறிந்துகொண்டபோது, பரி. அந்திரேயாவுக்கு எவ்வளவு ஆனந்தம் உண்டாகியிருக்கும்! நீ நாள்தோறும் இயேசுவோடு தங்கி அவரோடு ஜீவித்துவருகிறாயா?

3. வீட்டில் ஊழியம். இயேசுவோடு தங்கி அவருடைய அன்பை அனுபவத்தில் உணர்ந்த அவர் உடனே தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு "மேசியாவைக் கண்டோம்" என்று சொல்லி, அவனை இயேசுவினிடம் கூட்டிக்கொண்டுவந்தார் (பரி. யோவா. 1: 41). ஆம், இயேசுவின் அன்பு இருதயத்தில் பட்டவுடன் முதலாவது வீட்டுக்குள் ஊழியத்தை ஆரம்பித்தார். நீ இயேசுவின் அன்பை ருசித்துப்பார்த்ததுண்டா? உன் சகோதரர், சகோதரிகளுக்கு அதைப்பற்றிச் சொல்லு.

4. பிரதிஷ்டை. மேலே சொன்ன காரியங்கள் நடந்து சில நாட்களுக்குப்பின், இவர் தன் சகோதரனோடு கடலில் மீன் பிடித்துக்கொண்டிருக்கும்போது நமதாண்டவர் வந்து "என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்று தம்முடைய ஊழியத்திற்கு அவரை அழைத்தார். உடனே அந்த மகத்துவமான ஊழியத்திற்குத் தம்மை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்துப் பிரதிஷ்டை பண்ணினார் (பரி. மத். 4. 18—20). உனக்கும் இந்த அழைப்பு வந்தால் உன்னை முழுவதும் தேவ பணிவிடைக்கென்று பிரதிஷ்டை செய்வாயா?

5. விசாரித்தறியும் மனது. பாடுபட்ட வாரம் செவ்வாய்க்கிழமையன்று, நமதாண்டவர் எருசலேமின் அழிவைப்பற்றிக் கொஞ்சம் சொன்னார். அதைப்பற்றித் திட்டமாய் அறிய விரும்பி, பரி. அந்திரேயாவும் வேறு இரண்டு சீஷரும் அருமை ரட்சகரிடம் தனித்துவந்து "இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்" என்று கேட்டு, அருமை ரட்சகரிடம் தன் ஜீவியத்திற்குப் பிரயோஜனமாக அநேக போதனைகளைப் பெற்றுக்கொண்டார் (பரி. மாற். 13: 3). தினந்தினம் பரிசுத்த வேதாகமத்தை உனக்குமுன் விரித்துவைத்து "ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர்" என்று கேட்டு அருமை ரட்சகரின் ஆலோசனையைப் பெற்று ஜீவிப்பாயா?

## அவர் தேவனுடைய குமாரன்.

தென் ஆப்பிரிக்காவில் ஒரு அஞ்ஞானியிருந்தான். அவனுக்கு எட்டு வயதுள்ள ஒரு பையனும், ஆறு வயதுள்ள ஒரு பெண்ணும் ஆக இரண்டுபிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் இருவரையும்



தன் ஊருக்குக் கொஞ்சத் தூரத்திலிருந்த ஒரு மிஷன் பாடசாலைக்கு அனுப்பினான். சில மாதங்களுக்குப் பிற்பாடு வீட்டு வேலையில் தனக்கு உதவிசெய்யும்படி தன் மகனைக் கூட்டிக்கொண்டு வருவதற்காகப் பள்ளிக்கூடத்திற்குப் போனான். அந்தச் சிறுவன் பள்ளிக்கூடத்தில், தன் உபாத்திமாரை நேசிக்கப் படித்திருந்தான். படிப்பின்மேல் அவனுக்கு அதிகப் பிரியம் இருந்தது. எல்லாவற்றிற்குமேலாக அவன் இருதயம் இயேசு ரட்சகரண்டை இழுக்கப்பட்டு அவரை நேசிக்கத் தொடங்கியிருந்தான். ஆகையால் தன் தகப்பனோடு வீட்டுக்குப் போக அவனுக்குப் பிரியமில்லை. தன்னைப் பள்ளிக்கூடத்திலேயே விட்டு வைக்கும்படி தகப்பனைக் கெஞ்சினான். "ஏன், நீ இங்கே இருக்க விரும்புகிறாய்?" என்று தகப்பன் கேட்டதற்கு, "வீட்டில் நான் ஒரு நல்ல காரியத்தையும் கற்றுக்கொள்ளமுடியாது" என்று பையன் சொன்னான். "சிறுபையனாகிய நீ இங்கே என்ன நல்ல காரியத்தைக் கற்றுக்கொள்ளப்போகிறாய்?" என்று தகப்பன் கேட்டான். "நான் இதற்குள்ளாகவே சில நற்காரியங்களைக் கற்றுக்கொண்டேன்" என்றான், பையன். "நீ கற்றுக்கொண்ட நல்ல காரியம் என்ன?" என்று தகப்பன் திரும்பவும் கேட்டான். அதற்கு மகன் "ஐயா, நான் ஒரு அருமையான வேதவாக்கியம் படித்திருக்கிறேன். 'பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்துஇயேசு உலகத்தில் வந்தார்' என்பதே அந்த வாக்கியம். கிறிஸ்து இயேசு யார் என்று எனக்குத் தெரியும். அவர் தேவனுடைய குமாரன். பாவிகள் யார் என்பதையும் நான் அறிந்திருக்கிறேன். நாம்தான் பாவிகள்" என்று சொன்னான்.

இந்த வார்த்தைகள் தகப்பனுடைய இருதயத்தில் அம்புபோல் பாய்ந்தபடியினால், தன் மகனைப் பள்ளிக்கூடத்திலேயே விட்டுவிட்டு வீட்டுக்குப் போனான். சில வாரங்கள் பொறுத்து மனமாறுதலடைந்தவனாய்ப் பள்ளிக்கூடத்திற்கு வந்தான். அங்கே தன்னைக் கிறிஸ்தவனாக அறிக்கையிட்டு தன் பிள்ளைகளோடு ஞானஸ்நானம் பெற்றான். பிள்ளையே, நீ இயேசுசுவாமியை அறிந்திருக்கிறாயா? அப்படியானால், உன் இனத்தாருக்கும் மற்றவர்களுக்கும் அவரைப்பற்றிச் சொல்லு.

## இயேசு இங்கே இருக்கிறாரா?

சில வருஷங்களுக்குமுன்னே ஒருநாள் சாயந்திரம் பர்மா நாட்டில் ஒரு மிஷனெரி துரைசானி தன் பங்களா விராந்தாவில் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது ஒரு சிறு பையன் அந்த அம்மாளிடம் வந்து, "இயேசு ரட்சகர் இங்கே இருக்கிறாரா?" என்று கேட்டான். அவனுக்கு உத்தேசம் பன்னிரண்டு வயது இருக்கும். அவன் தலைமயிர் ஒழுங்கின்றி அங்குமிங்கும் சிலிர்த்துக்கொண்டுநின்றன. அவனுடைய உடை கந்தையும் அழுக்குமாயிருந்தது. "இயேசுரட்சகரை ஏன் தேடுகிறாய்?" என்று அந்த அம்மாள்

ட்டார்கள். அவன் திரும்பவும் ஆத்திரத்தோடு "அம்மா இயேசு இங்கே ருக்கிறாரா? அதை எனக்குச் சொல்லுங்கள், ஏனென்றால் நான் பொய் சால்லுகிறேன், களவுசெய்கிறேன், இன்னும் அநேக கெட்ட காரியங்கள் ன்னிடம் இருக்கின்றன. நரகத்திற்குப் போக எனக்குப் பயமாயிருக் றது. ஏழைப் பாவிகளை நரகத்திற்குப் போகாமல் காப்பாற்ற இயேசு வாமி வல்லமை உள்ளவர் என்று கேள்விப்பட்டேன். ஆகையால் நான் வரைப் பார்க்க விரும்புகிறேன். அவர் இங்கேயிருக்கிறாரா? தயவுசெய்து சால்லுங்கள்" என்று கேட்டான். அதற்கு அந்த அம்மாள், "கெட்ட ாரியங்களை விட்டுவிட மனம் இல்லாதவர்களை அவர் இரட்சிக்கமாட்டார்" ன்று சொன்னார்கள். "கெட்ட செய்கைகளை விட்டுவிட எனக்கு அதிக ஆசை; ஆனால் அவைகளை விட்டுவிட என்னால் முடியவில்லை; ஏனென் றால் கெட்ட எண்ணங்கள் என் மனதில் இருந்துகொண்டு கெட்ட செய்கை ளை என்னில் உண்டாக்குகின்றன. ஐயோ நான் என்னசெய்வேன்! என்றான் பையன், அப்பொழுது அந்த அம்மாள், "பையனே, நீ இயேசு ரட்சகரைக் காணமுடியாது. அவருக்காகப் பேசும்படி நான் அவருடைய ஊழியக்காரியாய் இங்கேயிருக்கிறேன்" என்று சொல்லி, அவர் பாவிகளை இரட்சிக்கும்படியாக மரித்ததையும், தமது பரிசுத்தாவியின் கிருபையினாலே அவர்களைக் காப்பாற்றுகிறதையும் அவனுக்கு விவரித்துச் சொன்னார்கள். அந்த அம்மாளுடைய போதனை, தாகத்தினால் சாகப்போகிறவனுக்குக் கொஞ்சம் தண்ணீர் கிடைத்தால் எப்படி இருக்குமோ அப்படியிருந்தது. அடுத்த நாள் அவன் மிஷன் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டான். சீக் கிரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று பாவ மன்னிப்பாகிய சமாதானத் தையும், பரிசுத்த ஜீவியம் செய்ய பெலனையும் தன் உள்ளத்தில் அடைந்து அனுபவித்துவந்தான்.

கவனிப்பு.

1918-ம் வருஷத்துக்குரிய வேதவாசிப்புக் கார்டு வேண்டியவர்கள் நமது சங்கத்தின் காரியதரிசியாகிய நாசரேத் கனம். S. D. லாசரஸ் உபாத்தியாயரவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். விலை அரையணா.

**Printed at the Darling Printing Press, Palamcottah,**
**for the Tinnevelly S. P. G. Children's Mission.**

JAN 1918



# The Children's Herald.

# பாலர் தூதன்.

'பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்.' நீதி. 8: 32.

Vol. XII. டிசம்பர், 1917. No. 12.



## கிறிஸ்மஸ்.

அருமையான பாலிய சிநேகிதரே, நீங்கள் எல்லாரும் ஒரு சந்தோஷ தினத்துக்காக எதிர்பார்த்து, அதைக் கொண்டாட பல ஆயத்தங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். அது இந்த மாசம் 25ட வருகிற கிறிஸ்மஸ் பண்டிகையே. அந்த நாளில் நடக்கும் ஆராதனையைப்பற்றியும், அனுபவிக்கும் சந்தோஷத்தைப்பற்றியும், உடுத்தும் அலங்கார உடையைப்பற்றியும் நீங்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளுகிறீர்கள். சில பிள்ளைகள் விரல் மடித்து, நாளை எண்ணிக்கொண்டு, அன்றைக்கு நன்றாய் விளையாடுவேன். தலையில் சூட எங்கள் அம்மா பூ வாங்கித்தருவார்கள், அந்த நாள் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். நீங்கள் அந்த நாளை இவ்வளவு ஆவலோடு எதிர்நோக்கிக்கொண்டிருப்பது மிகவும் நல்ல காரியமே. ஏனென்றால் பாலரின் நேசன் அன்றுபோல் ஒருநாளில் பாலகனாய்ப் பிறந்தார். அந்த நாளில் அநேக கோவில்களிலும், வீடுகளிலும் "நமக்கொரு பாலகன் பிறந்தார்" என்று எழுதியிருக்கக் காணலாம். ஆகையால் அந்த வாக்கியத்தைக்கொண்டு உங்களுக்குச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவது: இயேசு அதிசய பாலகன். இந்த உலகத்தில் பிறக்கிற எல்லாப் பிள்ளைகளும், அவர்கள் பிறக்கிறதற்குமுன் இந்த உலகத்தில் இருந்ததில்லை. இவரோ, தாம் பிறக்கிறதற்கு முன்னமே இருந்தார். அநாதி

காலங்களாய் பிதாவின் மடியில் செல்லப்பிள்ளையாய் இருந்தவர்; சகலமும் இவர் மூலமாகவே உண்டாயிற்று. அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர் என்று பிறப்பதற்கு 700 வருஷங்களுக்கு முன்னமே பேர்பெற்றவர். மேய்ப்பனைப்போல தமது மந்தையை மேய்த்து, ஆட்டுக்குட்டிகளாகிய உங்களை தமது புயத்தினால் சேர்ப்பேன் என்று முன்னமே வாக்களித்தவர் இப்போது பாலகனாய்ப் பிறந்திருக்கிறார். ஓர் பரிசுத்த கன்னிகையினிடத்தில் அற்புதமாய் உற்பவித்துப் பிறந்திருக்கிறார். பரிசுத்த ஆவியினால் பிறந்திருக்கிறார். தேவன் மனுஷ வடிவாய் வந்து பிறந்திருக்கிறார். ரூபம் இல்லாதவர் ஒரு ரூபத்தோடு காணப்படுகிறார். இது அதிசயமே! ஆம், இவர் அதிசய பாலகன்.

இரண்டாவது: இயேசு பொதுப் பாலகன். இவ்வுலகத்தில் பிறக்கும் பிள்ளைகள் ஒவ்வொருவரும் சிலருக்கு மாத்திரம் சொந்தமானவர்களும் சிலரால் மாத்திரம் நேசிக்கப்படுகிறவர்களுமாயிருப்பார்கள். இவரோ எல்லாருக்கும் சொந்தமானவர். சகல தேசத்தாரும், சகல ஜாதியாரும், சகல பாஷைக்காரரும் நேசித்துப் போற்றவேண்டிய ஒரே பாலகன். ஆம், உன் சின்னத்தம்பி, தங்கையைவிட இயேசு பாலகன் உனக்கு அதிக அருமையானவர். உனக்கும் இவ்வுலகத்திலுள்ள எல்லாருக்கும் அவர் பொதுப் பாலகன்.

மூன்றாவது இயேசு இரட்சண்ய பாலகன். புத்திரன் என்றால் நரகத்தினின்று காப்பாற்றுகிறவன் என்று அர்த்தமாம். இந்துக்கள் தங்களுக்குப் பிள்ளைகளில்லாவிட்டால் தாங்கள் நரகத்துக்குப் போவோம் என்று நினைக்கிறார்கள். அது பிசகு. ஆனால் ஒன்று நிச்சயம்; இயேசு பாலகன் எனக்காகப் பிறந்தார் என்று ஒருவன் அவரை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவன் நரகத்துக்குப் போவான். இயேசுபாலகன் எல்லாரையும் நரக தண்டனையினின்று இரட்சிக்கும்படி பிறந்தார். பிள்ளையே, உன்னையும், என்னையும் இரட்சிக்கும்படி பிறந்த இயேசுபாலகனைப் பார். அவர் பிறந்த இடத்தையும், கோலத்தையும் சற்று கவனி. கந்தையால் சுற்றப்பட்டு, சத்திரத்தின் அடிவாரத்திலுள்ள மாட்டுத்தொழுவில் முன்னணையிலே கிடத்தப்பட்டார். உனக்கு அழகான உடுப்புகள் உண்டு; உன் ஆண்டவருக்கோ கந்தை. ஏன்? உன்னை இரட்சிக்க.

இதை வாசிக்கிற என் பிரியமான பாலிய சிநேகிதனே, சிநேகிதியே! இந்த நாள் உன் சரீரத்துக்குமட்டுமல்ல, உன் ஆத்துமாவுக்கும் சந்தோஷமாயிருக்கப் பார்த்துக்கொள். அவருடைய அதிசய பிறப்பைத் தியானித்துப்பார். அவரை உனக்குச் சொந்தமானவராக நினைத்து அவரை ஏற்றுக்கொள். மெய்யாய் அவர் உன்னைப் பாவத்திலிருந்தும், அதின் தண்டனையிலிருந்தும் மீட்டு ரட்சிப்பார்.



# அலைகளை எட்டிப் பாராதே.

நாலு பிள்ளைகள் ஒன்றாய் ஒரு பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தார்கள். கிறிஸ்மஸ் ரஜா வந்தபோது, அவர்கள் நால்வரும் சுகத்துக்காகவும் சந்தோஷத்துக்காகவும் கடல்யாத்திரை செய்ய யோசித்து ஒரு கப்பலில் பிரயாணம் செய்தார்கள். அந்தப்பிரயாணம் அவர்கள் எதிர்பார்த்தபடி சந்தோஷமாயிருக்கவில்லை. கப்பலில் ஏறினவுடனே, அங்கும் இங்கும் ஓடி, கப்பலின் நாலா பக்கத்தையும் சுற்றிப்பார்த்தார்கள். பிற்பாடு கப்பலின் மேல்தட்டில் உட்கார்ந்து சமுத்திர அலைகளையும், அங்குமிங்கும் ஓடும் சிறு படவுகளையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் கடல் அதிக கோஷ்டமாகி பெரிய அலைகள் எழும்பி, கப்பலை அங்கும் இங்கும் அசைத்தது. மின்னி என்ற பிள்ளையின் தொப்பியை காற்றுப் அடித்துக்கொண்டு போய் கடலில் போட்டுவிட்டது. அந்தப் பிள்ளைகளின் சந்தோஷம் எல்லாம் போய்விட்டது. கடல்பிரயாணத்தில் இயற்கையாய் உண்டாகிற வாந்தி அந்தப் பிள்ளைகளுக்கு உண்டாயிற்று. சின்னமின்னி மயக்கம் எடுத்து விழுந்துவிட்டாள். அப்பொழுது மாலுமி வந்து அந்தச் சிறு பிள்ளையை கப்பலின் அடித்தட்டுக்குக் கொண்டுபோய் சுகமாய்ப் படுக்கவைத்தான். பிற்பாடு அவன் மற்ற மூன்று பிள்ளைகளையும் தைரியப்படுத்தும்படி மேல்தட்டுக்கு வந்தான். அப்பொழுது ஒரு பையன் மாலுமியைப் பார்த்து, "எங்களுக்கும் தலை சுற்றுகிறது. உமக்கு ஒருநாளும் கப்பலில் வாந்தி உண்டாகாதுபோல் தெரிகிறது. நாங்களும் வாந்தி எடுக்காதபடி என்ன செய்யலாம்?" என்று கேட்டான். அதற்கு மாலுமி "இப்போது எனக்கு வாந்தி எடுக்கிறதில்லை. ஆனால் முதல் தடவையாக நான் பிரயாணம் செய்தபோது அநேக நாளாய் வாந்தியினாலும், மயக்கத்தினாலும் சங்கடப்பட்டேன். அதன்பின் நாங்கள் அநேகர் அமெரிக்காவுக்குப் பிரயாணம் செய்தோம். நாங்கள் கப்பலின்மேல் தட்டில் உட்கார்ந்து அலைகளைப்பார்த்துக்கொண்டே இருந்தோம். எங்கள் எல்லாருக்கும் வாந்தியும் தலைச்சுற்றும் உண்டாயிற்று. சிலர் மயக்கத்தினால் கப்பலின் மேல்தட்டில் விழுந்து கிடந்தார்கள். அப்பொழுது கப்பல் தலைவன் வந்து, எங்களைப் பார்த்து, "மனுஷரே, அந்தப்பெரிய அலைகளைப் பாராதேயுங்கள். அவைகளைப் பார்ப்பதினால்தான் உங்களுக்கு இந்த மயக்கம் உண்டாகிறது என்று சொன்னார். அப்படியே அநேகர் செய்து நல்ல சுகமடைந்தார்கள். இது என் மனதில் நன்றாய்ப் பதிந்துவிட்டது. நான் அலைகளை எட்டிப்பார்க்கிறதுமில்லை, மயக்கம் எனக்கு உண்டாகிறதுமில்லை. சில வருஷங்களுக்குப் பின் நான் இயேசுசுவாமியை நேசிக்கவும், அவருடைய பிள்ளையாய் நடக்கவும் ஆரம்பித்தேன். துன்பமாகிய அலைகளும் பாவ சோதனையாகிய அலைகளும் அடிக்கடி என்னைச் சூழ்ந்துகொண்டது. எனக்கு நேரிட்ட சோதனைகளையும் துன்பத்தையும் பார்த்துப் பார்த்து மயங்கினேன். என் ஆத்துமாவிலே

160965


கலக்கம் உண்டாயிற்று. அப்பொழுது அலைகளைப் பாராதே என்ற வார்த்தைகள் என் ஞாபகத்தில் வந்தது. உடனே அந்த உபத்திரவங்களையும், பாவ சோதனைகளையும் என் மனதிலே சுமந்துகொண்டிராமல் இயேசுவை நோக்கிப் பார்த்தேன். என் இருதயக் கலக்கம் எல்லாம் போய்விட்டது. நீங்களும் அலைகளை எட்டிப் பாராதேயுங்கள்" என்றான்.

பிள்ளைகளே. நீங்களும் பாவ சோதனைகள் நேரிடும்போது அவைகளைப் பாராமல் இயேசுவைநோக்கிப் பாருங்கள்.

## ஜெபத்தை விடாத சிறுவன்.

இரண்டு குடும்பத்தார் ஒரே வீட்டில் வசித்தார்கள். ஏறக்குறைய ஒரே வயதுள்ள இரண்டு பையன்கள் அவர்களுக்கு இருந்தார்கள். அவர்களில் ஒருவன் பேர் யோவான்; மற்றவன் பேர் உல்லி. இருவரும் எப்பொழுதும் ஒன்றாய்ப் படுத்துக்கொள்வார்கள். உல்லியின் தாய் ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவள். அவள் தன் மகனுக்கு ஒரு ஜெபத்தையும் சில வேத வாக்கியங்களையும் படித்துக்கொடுத்து, ஒவ்வொருநாளும் அவன் படுக்கப் போகுமுன் அவைகளைச் சொல்லிவரவேண்டுமென்று போதித்திருந்தாள். யோவானுக்கு ஒருவரும் ஜெபம் படித்துக்கொடுக்கவில்லை. ஒருநாள் உல்லி யோவானோடு படுத்துக்கொள்ளப்போனபொழுது, யோவானைப்போல தானும் ஜெபம்பண்ணாமல் படுத்துக்கொள்ளவேண்டும் என்ற சோதனை அவனுக்கு உண்டாயிற்று. ஆனால் அவன் தன் தாய்க்குக் கீழ்ப்படியப் படித்திருந்தான். ஆகையால் ஜெபம்பண்ணி, வேதவாக்கியத்தையும் சொல்லிவிட்டுப் படுத்தான். இப்படியே ஒவ்வொருநாளும் நடந்துவந்தது. யோவான் இந்த ஜெபத்தையும் வேதவாக்கியங்களையும் தினமும் கேட்டுவந்தபடியினால், அவனும் நாளடைவில் ஒரு நல்ல கிறிஸ்தவனானான். இருவரும் பெரியவர்களாக வளர்ந்து, வயதுசென்றவர்களாகுமட்டும் உயிரோடிருந்து, மெய்க்கிறிஸ்தவர்களாய் ஜீவித்து, சர்க்காரில் உயர்ந்த உத்தியோகம் செய்துவந்தார்கள்.

யோவானுக்கு அந்தியகாலம் சமீபித்தபோது, தன் மரணப்படுக்கையிலிருந்து தன் பழைய சிநேகிதனாகிய உல்லியை வரவழைத்தான். தாங்கள் சிறுவராயிருந்த காலத்தில் உல்லி ஒவ்வொருநாளும் படுக்கப்போகுமுன் செய்த ஜெபமும் சொன்ன வேதவாக்கியங்களும் தான் நல்ல கிறிஸ்தவனாகிறதற்கு ஏதுவாயிருந்தது என்று அறிக்கையிட்டு, உல்லிக்கு நன்றிசெலுத்தி மரித்தான்.

உல்லி சோதனைக்கு இடங்கொடுத்து ஜெபம் செய்வதை விட்டிருப்பானானால் இருவரும் கெட்டுப்போயிருப்பார்கள்.

Printed at the Darling Printing Press, Palamcottah,
for the Tinnevelly S. P. G. Children's Mission.